

மின்னலை
மேய்க்கும்
மானே!
ரேவதி அசோக்
மின்னலை மேய்க்கும் மானே! ★ ரேவதி அசோக் ★
மின்னலை
மேய்க்கும்
மானே!
ரேவதி அசோக்

# மின்னலை மேய்க்கும் மானே!

## 1

"ஓம் நமசிவாய... ஓம் நமசிவாய...
ஓம் நமசிவாய... ஓம் நமசிவாய..."

என்ற மந்திரம் ஒலிக்க அடி அண்ணாமலை கோயில் வெளிப் பிராகாரத்தின் தூணில் தலையைச் சாய்த்து எதையும் யோசிக்கப் பிடிக்காமல் ஒரு யோகி மாதிரி கண்மூடிச் சிவ மந்திரத்தை உள்வாங்கியபடி அமர்ந்திருந்த சுஜிதாவின் செல்போன் சிணுங்கி அவளின் தவக் கோலத்தைக் கலைத்தது.

மோன நிலை கலைந்த எரிச்சலில் கண்ணைத் திறந்து செல்போனில் டிஸ்ப்ளே ஆன அப்பாவின்

நபரைப் பார்த்ததும், முகத்தில் இருந்த எரிச்சல் ரேகை மறைந்து ஆச்சர்ய ரேகை குடி கொண்டது.

கிளி மாதிரி பொண்டாட்டி இருந்தாலும் குரங்கு மாதிரி வைப்பாட்டி கேட்குமாம் என்ற பழமொழியை உண்மையாக்கிக் காட்டிய புண்ணியவான் சுஜியைப் பெற்றவர்.

அழகான மனைவி வீட்டில் இருக்கும்போதே தன்னுடன் வேலை செய்த இன்னொரு பெண்ணின் மேல் சபலம் பிறந்தது ரங்கனுக்கு. மனைவிக்குத் தெரியாமல் இரட்டைக் குதிரையில் சவாரி செய்து விடலாம் என்று கோட்டை கட்டினார்.

ஆனால் விதி அவர் கோட்டையைப் புல்டோசர் இல்லாமலே தகர்க்க, கணவர் இரட்டை வால் குருவியாக மாறிய செய்தியை ஒரு தோழியின் மூலம் கேள்விப்பட்ட சாவித்திரி மனம் உடைந்து போனாள்.

கணவரிடம் அவள் யார் என்று கேட்கலாமா... வேண்டாமா... என்ற குழப்பத்திலேயே சில நாட்கள் நகர, ஒரு முடிவுடன் ஒரு காலை நேரத்தில் மகளைப் பள்ளிக்கு அனுப்பி விட்டுக் கணவரின் ஆபீசுக்குக் கிளம்பினாள்.

சாவித்திரியின் நல்ல நேரம் என்று சொல்வதா அல்லது கெட்ட நேரம் என்று சொல்வதா என்று தெரியவில்லை... இவள் சென்ற நேரம் இருவரும் காதல் ஜோடியாகக் கை கோத்துக் கொண்டு வெளியில் செல்வதைப் பார்த்து அதிர்ச்சியின் உச்சத்திற்குச்



சென்றவளுக்கு, அவளின் பெயர் ராணி என்பது கணவர் கொஞ்சி அழைத்ததில் தெரிந்து கொண்டாள்.

கலிகாலச் சாவித்திரியாகப் பிறந்திருந்தாலாவது புருஷனைத் தாசி வீட்டுக்குக் கூடையில் வைத்துத் தலையில் சுமந்து கொண்டு சென்றிருப்பாளோ என்னவோ? ஆனால் அவள் இக்காலச் சாவித்திரியாச்சே! அதுதான் வேறு மாதிரி முடிவெடுத்து விட்டாள்.

பள்ளியிலிருந்து திரும்பி வந்த பத்து வயதுச் சிறுமி அம்மாவைக் காணாமல் அழ, அப்போதுதான் ரங்கனுக்கு உறைத்தது மனைவி வீட்டில் இல்லாத விஷயம். அவள் போகும் இடங்கள் எல்லாம் விசாரித்து, அங்கேயெல்லாம் மனைவி இல்லை என்றதும், கொஞ்சம் கூட அலட்டிக் கொள்ளாமல் மனைவிக்கு ஓடுகாலி என்ற பட்டத்தைத் தாராள மனதோடு வழங்கி விட்டுத் தான் ஆசைப்பட்ட ராணியை இரண்டாம் தாரமாக மணந்து கொண்டார்.

ஆரம்பத்தில் ராணியும் தன் வேலையை விட்டு விட்டு மூத்தாளின் பெண்ணைத் தன் பெண்ணாக அன்பாகக் கவனித்துக் கொள்ள, உச்சி குளிர்ந்து போனார். மனதில் மறு கல்யாணம் செய்து கொண்டு விட்டோமே என்றிருந்த கொஞ்ச நஞ்சக் குற்ற உணர்ச்சியும் மறைந்து போக, சொந்த பந்தங்களின் முன்னால் தலை நிமிர்ந்து நடக்கலானார்.

ஆனால் இதெல்லாம் அவருக்கு ராணியின் மூலம் அஷ்வினி, நந்தினி என்ற இரட்டையர் பிறக்கும் வரைதான். அதன் பிறகு ராணியின் போக்கே சுத்தமாக

மாறிப் போக, சுஜிதாவின் மேலிருந்த அக்கறையும் அன்பும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தது.

இரட்டையர் பிறந்த சந்தோஷத்தில் இப்படி இருக்கிறாள்... நாளடைவில் இதெல்லாம் சரியாகிப் பழையபடி அன்பாக இருப்பாள் என்று தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டார். ஆனால் பரிதாபம், அவரின் மனச் சமாதானம் வெறும் கானல் நீராகவே போனது. இதைப் பற்றிக் கேட்கவும் முடியாமல் மனைவியை அதட்டவும் முடியாமல் மகள் படும் கஷ்டங்களைப் பார்க்கச் சகிக்காமல் ஆபீசிலிருந்து நேரம் கழித்தே வருவதை வழக்கமாக்கிக் கொண்டார்.

காலங்கள் யாருக்காகவும் காத்திருக்காமல் அதன் போக்கில் செல்ல, சுஜிதாவின் வனப்பும், பருவ எழிலும் அளவில்லாமல் கூடிக்கொண்டே போனது. ராணியின் பெண்களும் பருவ வயதை எட்டினர். சுஜியை விட அவர்கள் அழகிலும், கலரிலும் ஒரு படி குறைவு என்பது வேறு ராணிக்குப் பொறாமைத் தீயை எண்ணெய் ஊற்றி வளர்த்தது. அதைச் சில சமயங்களில் வார்த்தையால் குத்திக் கிழிக்கும் போது சுஜிக்கு இப்படி ஒரு வாழ்க்கை தேவையா என்று தோன்றும்.

அம்மாவின் குணத்திற்கு எதிர்மாறாக இரட்டையர்களுக்கு அக்காவின் மேல் அளவில்லாத பாசம். அவர்களுக்குச் சுஜி ஒரு தேவதையாகத் தெரிந்தாள். தாயின் மறைவுக்குப் பிறகு ராணியின் கவனிப்பால் அம்மாவை மறக்காவிட்டாலும் அவளைப் பற்றிய நினைவுகளால் பாதிக்கப்படாமல் வளர்ந்து வந்தவளுக்குத்



தன் சித்திக்கு ட்வின்ஸ் பிறந்ததும் அதிக அளவில் சந்தோஷமே.

ஆனால் நாளாக நாளாகச் சித்தியின் போக்கு கொஞ்சம் கொஞ்சமாக மாறுவதைப் புத்திசாலியான அவளால் புரிந்து கொள்ள முடிந்தது. அதைக் கேட்க வயதோ, தைரியமோ அந்தச் சிறு பெண்ணிடம் இல்லாததால், இதுதான் தன் வாழ்க்கை என்ற முடிவுக்கு வந்து தங்கைகளின் பக்கம் கவனத்தைத் திருப்பிக் கொண்டாள்.

பெற்றது ராணிதான் என்றாலும் அவர்களுக்கு எல்லாமுமாகிப் போன சுஜியின் மேல் அவர்கள் பாசத்தை வைத்தது ஆச்சர்யமில்லாத ஒன்று. ஆனால் சுஜிக்கு அவர்களின் அன்பு மட்டுமே வாழ்க்கையின் ஆதாரமாகிப் போக, அவர்களைப் பற்றுக் கோலாகப் பிடித்துக் கொண்டாள்.

வழக்கமாக எல்லாச் சித்திகளும் செய்கிற கொடுமைகளை ராணி செய்யவில்லை என்றாலும் கூட, ராணியின் கடுமை நிறைந்த பார்வைகள் சுஜியை அவ்வப்போது சஞ்சலப்படுத்தும். அப்போதெல்லாம் அடி அண்ணாமலை கோயில்தான் அவளுக்குத் தாயின் மடி. இன்றும் அப்படி அமர்ந்திருந்தபோது உலகின் எட்டாவது அதிசயமாக அப்பாவின் போன்.

ஆச்சர்ய ரேகை மறையாமலே போனை ஆன் செய்து, “அப்பா, நீங்களா...? சொல்லுங்க...” என்றாள் வியப்பு மாறாமலே.

அவளின் அந்தக் குரல் அவரைக் கன்னத்தில் அறைந்தது போல் இருக்க, "நா... நான்தான் மா... உங்கிட்ட கொஞ்சம் பேசணும்மா... எங்கே இருக்கே...?" என்று தயங்கித் தயங்கிக் கேட்டவரிடம்,

"என்கிட்டேயா...? என்னப்பா பேசணும்...? அதுவும் என் கிட்டே பேச என்னப்பா இருக்கு...?" என்றாள் உண்மையிலேயே புரியாமல்.

ஆனால் அவளின் அந்த வார்த்தை அவரின் இதயத்தில் ஈட்டியால் குத்த, அடுத்த வார்த்தை வெளி வராமல் தொண்டை அடைக்க, கண்களை இறுக மூடிக் கொண்டார்.

எதிர்ப்பக்கம் சத்தமே இல்லாததால், "என்னப்பா, பேச்சே காணோம்..." என்று கேட்டவள், ஒரு பெருமூச்சுடன் தொடர்ந்து, "நான் அடி அண்ணாமலை கோயிலில் இருக்கேன்பா... இன்னும் கொஞ்ச நேரத்தில் வீட்டுக்கு வந்திடுவேன்..." என்றபடி புறப்பட ஆயத்தம் செய்தவளைத் தடுத்து நிறுத்தினார்.

"வேண்டாம் சுஜிமா... நானே அங்கு வரேன்... உன்னிடம் நிறையப் பேசணும்..." என்று பேசிக் கொண்டே போனவர், கொஞ்சம் நிறுத்தி, "பேச அனுமதி தருவாயாம்மா...?" என்று பரிதாபமாக யாசித்தார்.

"ஐயோ... என்னப்பா இப்படிக் கேட்கறீங்க... உங்களுக்காகக் காத்திருக்கிறேன், வாங்க..." என்று அனுமதியளித்து விட்டு, அப்பாவின் வருகைக்காகக்



காத்திருந்தவளுக்கு எல்லையில்லாத சந்தோஷம் கரை புரண்டு ஓடியது. பின்னே... பல வருடங்களாகப் பேசாதிருந்த தந்தை, திடீரென்று தனியாகத் தன்னிடம் பேச வேண்டும் என்றால் சந்தோஷம் இருக்கத்தானே செய்யும்.

அதே சமயம் சிறு குறுகுறுப்பும் நெஞ்சுக்குள் ஓடியது. தன்னிடம் பேச என்ன இருக்கிறது... அதுவும் தனியாக... என்று பலவாறு யோசித்துப் பார்த்தும் அவளுக்குள் விடையில்லை, குழப்பமே மிஞ்சியது.

ஆபீசிலிருந்து கிளம்பிய ரங்கத்திற்கு மகளின் குரலில் இருந்த வியப்பு, குழப்பம் எல்லாமே அவரைக் கொல்லாமல் கொன்றது. தன் பெண் இப்படிக் கேட்பதற்கு நான்தானே காரணம். பாவம், சிறு பெண்... அவளை இத்தனை வருடமாக நோகடித்து விட்டேனே... எவ்வளவு பெரிய துரோகத்தைச் செய்து விட்டேன்.

இதை எப்படிச் சரி செய்யப் போகிறேன்... என்று தன்னையே நிந்தித்தபடி பைக்கில் வந்து கொண்டிருந்தவர் எதிரே வந்த நண்பர் கையைக் காட்டியதைக் கூடப் பார்க்கவில்லை. திடீரென்று அவரை இன்னொரு பைக் வந்து வழியை மறிக்க, தன் யோசனையிலிருந்து மீண்டு வண்டியை நிறுத்தினார்.

"என்ன ரங்கம்... நான் கையைக் காட்டியதைக் கூடக் கவனிக்காமல் அப்படி என்ன யோசனை... அதுவும் இந்தக் கிரிவலப் பாதையில்...? என்ன கோயிலுக்குப் போகிறாயா?" என்று கேட்டபடி பைக்கிலிருந்து இறங்கிய

நண்பர் விஸ்வத்தைப் பார்த்துக் கண்களில் எட்டாத புன்னகையுடன் நோக்கினார்.

"இல்லேடா... என் பெண்ணைப் பார்க்கப் போகிறேன். கோயிலில் எனக்காகக் காத்திருக்கிறாள்..." என்று கொஞ்சம் அவஸ்தையாகக் கூறியவரின் முகத்தை உற்று நோக்கிய விஸ்வத்தின் பார்வையைத் தாங்க முடியாமல் தலை குனிந்தவரிடம்,

"என்ன... திடீரென்று பொண்ணு மேல பாசம் பொங்குது... அந்தப் பொண்ணு சுயம்பு மாதிரி தானே வளர்ந்து, படிச்சு, பாங்க்கில் கடன் வாங்கிச் சொந்தமாக ஒரு அழகு நிலையம் தொடங்கி அதிலே வருகிற வருமானத்தை உன் குடும்பத்திற்குத்தானடா கொடுத்துக் கிட்டு இருக்கு... அந்தப் பெண்ணிற்கு உன் குடும்பத்தின் மேல் இருக்கிற பாசமும் அக்கறையும் கூட உனக்கு அவளின் மேல் இல்லை... உன் பொண்டாட்டி பேச்சைக் கேட்டுக்கிட்டு அந்தப் பெண்ணிடம் பேசாமல் திருடன் மாதிரி ஓடி ஒளிந்தவனுக்கு இன்று எங்கேயிருந்து வந்தது தைரியமும் பாசமும்..." என்றார் நக்கலாக.

நண்பரின் பேச்சிலிருந்த உண்மை சுட, அவர் முகத்தைப் பார்த்துப் பேச முடியாமல், "டேய், போதும்டா... நானே ஏற்கெனவே நொந்து போயிருக்கிறேன். இதில் நீ வேறு என்னைக் குத்திக் கிழிக்காதே!" என்று கெஞ்சியவரை நோக்கி,

"இதோ பார் ரங்கம்... உன்னைக் குத்திக் காட்டவோ, அறிவுரை சொல்லவோ உன்னை நிறுத்தவில்லை.



நானும் உன்னைப் பார்க்கத்தான் வந்து கொண் டிருந்தேன். நல்ல வேளை நீயே எதிரில் வந்துட்டே..." என்றவரைப் புரியாமல் பார்த்தார்.

"என்கிட்டே ஒரு வரன் கை வசம் இருக்கு... மாப்பிள்ளைப் பையன் சென்னையில் நல்ல வேலையில் இருக்கிறான். கை நிறையச் சம்பளம். பிக்கல் பிடுங்கல் இல்லாத குடும்பம். அவங்க குடும்பத்தைப் பற்றிக் கேள்விப்பட்டதும் அந்தப் பையனுக்கு நம்ம சுஜி ரொம்பப் பொருத்தமா இருப்பாள் என்று தோன்றியது. அதான் உன்னிடம் கலந்து பேசிவிட்டு அவங்களுக்குப் பொண்ணு பார்க்கத் தகவல் சொல்லலாம் என்றிருந்தேன். சரி, என்ன சொல்றே...?" என்று கேட்டார்.

அவரின் கேள்விக்குப் பதில் சொல்லாமல் மௌனமாக இருந்த ரங்கத்தை உக்கிரமாக முறைத்துக் கொண்டே, "ஏன்... இதுக்குக் கூட உன் பொண்டாட்டியின் சம்மதம் வேண்டுமோ...? உன்னால் முடியவில்லை என்றால் சொல்லிவிடு. நாங்களே பார்த்துக்கிறோம்..." என்று கோபமாகப் பேசிவிட்டு பைக்கை ஸ்டார்ட் செய்தவரைக் கைப்பிடித்துத் தடுத்தார்.

"நான்... நான்... ஏற்கெனவே அவளுக்கு ஒரு பையனைப் பார்த்து வைத்திருக்கிறேன்..." என்று சொல்லி முடிப்பதற்குள் ஆச்சரியத்தில் வாய் பிளந்த விஸ்வம்,

"பரவாயில்லையே... பொண்ணுக்குக் கல்யாணம் செய்யணும் என்ற பொறுப்புக் கூட இருக்கே..." என்று

வியப்புக் காட்டி விட்டு. "சரி. பையன் யாரு? என்ன செய்யறான்?" என்று விசாரித்தார்.

"பையன் பிரான்சில் இருக்கிறான். அவன் அங்கித்திய குடியுரிமை பெற்றவனாம். நல்ல வேலை, சம்பளமும் கூட. பையனுக்குப் பெற்றோர் கிடையாது... ஒரே ஒரு அக்கா மட்டும். அதனால் கல்யாணமானதும் பெண்ணை அங்கேயே அழைச்சிக்கிட்டுப் போயிடுவாங்களாம்..." என்று சொல்லிக் கொண்டே சென்றவரை இடை நிறுத்தி.

"இது யார் மூலமாக வந்த சம்பந்தம்...?" என்றார் கேள்வியாக.

"நம்ம பொன்னுசாமி புரோக்கர்தான் கொண்டு வந்தார். முதலில் அவர் இந்த ஆஃபரைக் கொண்டு வந்த போது எனக்கும் தயக்கமாகத்தான் இருந்தது. ஆனால் யோசித்துப் பார்த்தபோது என் மகள் எல்லோரும் இருந்தும் யாருமில்லாத அநாதை போல் வாழ்வதற்குக் கண் காணாத தேசத்தில் நிம்மதியாக சந்தோஷமாக வாழ்ந்து விட்டுப் போகட்டுமே என்றுதான் ஒத்துக் கொண்டேன்..." என்று விழிகள் பளபளக்கச் சொல்லிக் கொண்டு வந்தவரின் குரல் உள்ளே போய், "இதை ராணியை வைத்துக் கொண்டு பேச முடியாது. அதான்..." என்று ஒரு குற்ற உணர்வுடன் நிறுத்தினார்.

ரங்கத்தின் தோளை ஆதரவாகத் தட்டிக் கொடுத்து, "டேய்... இந்த ஒரு அக்கறை போதும்டா... இதில் தயங்க என்ன இருக்கு? நீ போய் சுஜிதாவிடம் பேசு. எப்படியோ



அவளுக்கும் ஒரு நல்ல எதிர்காலம் அமையணும். சரி, நீ போய்ப் பேசிப் பெண்ணின் சம்மதத்தைக் கேட்டு விட்டுச் சொல். பையன் வீட்டில் நாம போய்ப் பேசலாம்..." என்று விட்டு கிளம்பிச் சென்றவரை ஒரு விநாடிக்கும் குறைவாகப் பார்த்துவிட்டு ஒரு பெருமூச்சுடன் தன் வண்டியை ஸ்டார்ட் செய்தார்.

தந்தையின் வருகைக்காகக் காத்திருந்த சுஜி, அரை மணி நேரமாகியும் அவர் வராததால், கோயிலை விட்டு வெளியே வந்து இரண்டடிதான் எடுத்து வைத்திருப்பாள்... அதற்குள் ரங்கமே எதிரில் வருவதைக் கண்டு ஆவலுடன் அவரை நெருங்கினாள்.

பெண்ணைக் கண்டதும் வண்டியை நிறுத்திவிட்டு இறங்கியவர், "ரொம்ப நேரம் காக்க வெச்சிட்டேனா...? சாரிம்மா... வழியில் விஸ்வம் வந்துட்டான். அதான் லேட்டாயிடுச்சு..." என்று பேசிக் கொண்டே இருவரும் கோயிலுள் நுழைந்தார்கள்.

அண்ணாமலையாருக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு வெளிப் பிராகாரத்தில் வந்து மகளுடன் அமர்ந்தவருக்கு, எப்படிப் பேச்சைத் துவங்குவது என்று தெரியாமல் கைகளைப் பிசைந்தபடி இருந்தார்.

மலைக் காற்று முகத்தில் மோத, காற்றின் உபயத்தால் நெற்றியில் விழுந்த கற்றைக் கூந்தலை நளினமாக ஒரு விரலால் ஒதுக்கிக் கொண்டே, "என்னப்பா... போனில் ஏதோ பேசணும் என்று சொன்னீங்க? ஆனால்

வந்ததிலிருந்து அமைதியா இருக்கீங்க... என்ன விஷயம், சொல்லுங்க...?" என்றவளைத் தயக்கத்துடன் நிமிர்ந்து பார்த்தார்.

ஒரு சிறு பெண்ணின் முன்னால் ஒரு தந்தையாகப் பேச வெட்கியவரை. "என்னிடம் என்னப்பா தயக்கம்? சொல்லுங்க..." என்று ஊக்கம் கொடுத்த மகளின் நெற்றிச் சுருந்தலை வாஞ்சையாக ஒதுக்கி விட்டு.

"என்னை மன்னிச்சுடுடா... இது வரைக்கும் ஒரு அப்பாவா நான் உனக்கு ஒன்றுமே செய்யலை... என் சூழ்நிலை அப்படி அமைஞ்சு போச்சு. இந்த அப்பா மேலே உனக்குக் கோபம் இல்லையே...!" என்று பாதி வார்த்தைகளை மென்று முழுங்கிக் கேட்டவரைப் பார்த்து மென்மையாகப் புன்னகைத்தாள்.

"நிச்சயமாக இல்லைப்பா... என்னால் உங்களைப் புரிந்து கொள்ள முடிகிறது. எனக்கென்ன குறைச்சல்? சித்திக்கு என் மேலே கோபம் இருந்தாலும் என்னை இதுவரை வீட்டை விட்டுப் போகச் சொல்லலையே... அது மட்டுமில்லாமல் அஸ்வினியும், நந்துவும் என் மேலே பாசமாக இருக்கும் போது வேறென்ன வேண்டும்? ம்ம்ம்..." என்று தன் வலிகளை மறைத்துக் கொண்டு அவரைச் சமாதானப்படுத்தி விட்டு, "நீங்க என்ன விஷயமாப் பேசணும் என்று சொன்னீங்க...?" என்று எடுத்துக் கொடுத்தாள்.

"அது வந்தும்மா..." என்று இழுத்தவர், தன் மேல் மோதிய மாசு கலக்காத மலைக் காற்றை அனுபவித்தபடி,



"மதியம் மூன்று மணிக்கு இங்கே எப்படிக் குளுகுளுன்னு இருக்கு பாரு..." என்று பேச்சை மாற்றிச் சிலாகித்தவரைப் பார்த்து, அழகிய பல் வரிசை தெரியச் சிரித்தாள்.

"என்னப்பா புதுசாச் சொல்றீங்க... திருவண்ணா மலை கந்தக பூமி என்றாலும், இந்தக் கிரிவலப் பாதையில் இருக்கிற இந்தக் கோயிலில் என்றைக்கு வெயில் தெரிந்திருக்கு...? எப்போதுமே இப்படித்தானே இருக்கும்..." என்று மீண்டும் சிரித்து விட்டு, "நீங்க வந்த விஷயத்தை இன்னும் சொல்லவே இல்லை..." என்று ஞாபகப்படுத்தினாள்.

இனியும் பேசாமல் இருக்க முடியாது என்று தீர்மானித்தவர், குரலைக் கனைத்துக் கொண்டு, "சுஜி... அப்பா சொல்றதைக் கேட்டு விட்டு அப்புறம் பதில் சொல்லு..." என்று பீடிகை போட்டவர்,

"உனக்கும் கல்யாண வயசு வந்துடுச்சு..." என்றதுமே, சுஜியின் புருவங்கள் கேள்வியாக நெரிய, "அது... அதுதான் உனக்குக் கல்யாணத்திற்கு வரன் பார்த்திருக்கிறேன்..." என்று வரனைப் பற்றி விவரங்களைச் சொல்லி அவளிடம் சம்மதம் கேட்க, இதை எதிர்பார்க்காத சுஜி, இதற்கு என்ன பதில் சொல்வது என்று தடுமாறினாள்.

மகளிடமிருந்து எந்தப் பதிலும் வராததால் துணுக்குற்ற தந்தை, "என்னம்மா... என்ன பதில் சொல்றது என்று யோசிக்கிறாயா?" என்று கேட்டு விட்டுத் தன் சட்டைப் பையில் வைத்திருந்த பாஸ்போர்ட் சைஸ் போட்டோவை எடுத்து மகளிடம் கொடுத்து.

"இவன்தான் உனக்குப் பார்த்திருக்கிற வரன். பையன் பேரு யாதவா... உனக்குப் பிடிச்சிருந்தால் உன் முடிவைச் சொல். நான் உன்னை எந்த விதத்திலும் கட்டாயப்படுத்த மாட்டேன். இது உன் வாழ்க்கை. உன் வாழ்க்கையை முடிவு செய்ய உனக்கு முழுச் சுதந்திரமும் உரிமையும் இருக்கு.

"அதனால் உனக்குத் தேவையான நேரத்தை எடுத்துக்கோ. யோசித்து ஒரு நல்ல பதிலைச் சொல்..." என்று அவள் தலையை அன்பாக வருடியபடி கூறிய வரிடம், வெறுமே தலையை மட்டுமே அசைத்து வைத் தாள்.

"சரிம்மா... எனக்கு ஆபீசில் ஒரு வேலை இருக்கு..." என்றபடி எழ, கூடவே எழுந்த மகளிடம், "இதைப் பற்றி இப்போதைக்கு யாரிடமும் சொல்லாதேம்மா..." என்று உறுதி வாங்கிக் கொண்டு, பைக்கை ஸ்டார்ட் செய்தவர், "நீ வரலையாம்மா...?" என்றார்.

"நான் இப்போ வீட்டுக்கு வரலைப்பா... எனக்குக் கொஞ்சம் பார்லரில் வேலை இருக்கு... முடிச்சுட்டு வரேன். நீங்க போங்க..." என்றவளிடம் விடைபெற்றுக் கொண்டு சென்றார்.

அவர் சென்றதும் கொஞ்ச நேரம் தந்தை கொடுத்த புகைப்படத்தைப் பார்த்தவளுக்கு, மனதில் தனக்கென்று பார்த்த மாப்பிள்ளை என்ற குறுகுறுப்போ, சந்தோஷமோ, ஒரு கிளர்ச்சியோ தோன்றாததால், அலுத்துப் போய் எந்த முடிவுக்கும் வர முடியாமல் ஒரு குழப்பத்தோடு



புகைப்படத்தைக் கைப்பையில் வைத்துக் கொண்டு பார்லருக்குச் செல்ல ஸ்கூட்டியை ஸ்டார்ட் செய்ய, அவளை உரசிக் கொண்டு ஒரு பைக் வந்து நின்றது.

திடுக்கிட்டுத் திரும்பியவள், ஸ்ப்ளெண்டர் பைக் கிலிருந்து படு ஸ்டைலாக இறங்கியவனைக் கண்டதும் புன்னகைப்பதா... வேண்டாமா... என்று குழம்பி நின்றாள்.

சுஜியின் அமைதியான நிலையைக் கண்டு இரண்டு பாக்கெட்டிலும் கையை விட்டுக் கொண்டு லேசாகக் குனிந்து, "ஹலோ சுஜிதா மேடம்... என் பெயர் ப்ரஜித்... ஞாபகம் இருக்கா?" என்று வசீகரப் புன்னகையுடன் கேட்க, அவளையும் அறியாமல் தலையசைத்தாள்.

அவளின் தலையசைப்பை ரசித்து விட்டு, "ம்ம்ம்... பெயர் மட்டும் ஞாபகம் வெச்சிப்பீங்க... ஆனால் பேசத் தான் மாட்டீங்க போலிருக்கு..." என்று புன்னகையுடன் கேலியோடு பேச ஆரம்பித்தவன், குறையோடு முடிக்க, அவனை நோக்கிப் பரிதாபமாக விழித்தாள்.

"பின்னே என்னங்க... உங்களிடம் என் மனதைச் சொல்லி இன்றோடு முன்னூற்று எழுபது நாள் நான்கு மணி நேரம் நாற்பத்திரண்டு விநாடி ஆகுது.

"ஆனால் இதுவரை உங்களிடம் இருந்து எனக்குச் சாதகமான பதில் வரலை. என்றைக்காவது ஒரு நாள் என் மனசைப் புரிஞ்சுப்பீங்க என்ற நம்பிக்கையில்தான் நானும் காத்திருக்கிறேன்..." என்று குற்றப் பத்திரிகை வாசித்தவன்,

"ஏன் மிஸ் சுஜிதா... நான் உங்களுக்குப் பொருத்த மானவனா இல்லையா? அதுதான் என்னை ஏத்துக்க இவ்வளவு குழப்பமா?" என்றான் சஞ்சலத்துடன்.

அவனின் கேள்வி சுஜியை அவன் முகம் நோக்கி நிமிர வைத்தது. ஒரு ஆண் மகனுக்குத் தேவையான அத்தனை அம்சங்களும் நிறைந்த அவனை மிரள மிரளப் பார்த்தாள்.

"ப்ளீஸ்... இந்த மாதிரிப் பார்க்காதீங்க... உங்க பார்வை என் கட்டுப்பாட்டை உடைச்சிடும். பெண்களைப் புகழ்ந்து காதலைச் சொல்வதில் எனக்கு என்றைக்குமே உடன்பாடு இருந்ததில்லை. ஆனால் கருவண்டு போலிருக்கிற உங்க அழகான பெரிய கண்கள் என்னை வசமிழக்க வைக்குது. என்னால் இனியும் உங்களை விட்டுப் பிரிந்து இருக்க முடியும் என்று தோணலை. உங்களுக்குப் பயமாக இருந்தால் சொல்லுங்க... நானே உங்கள் வீட்டில் வந்து பேசறேன்..." என்று அவன் பாட்டுக்குத் தன் மனதில் இருப்பதைக் கொட்டிக் கொண் டிருந்தான்.

## 2

**திருச்சி...**

சுவாமி படத்திற்குப் பூப்போட்டு விளக் கேற்றிக் கற்பூர ஆரத்தி காட்டிக் கொண்டே, "என்னங்க, சங்கீதா எழுந்துட்டாளா என்று கொஞ்சம் பாருங்களேன்..." என்று பேப்பர் படித்துக் கொண்டிருந்த



கணவர் மாணிக்கத்திடம் ஆணையிட்டாள் அவரின் தர்மபத்தினி பானுமதி.

"இவள் ஒருத்தி... நான் பேப்பர் படிக்க உட்கார்ந் தாலே இவளுக்குப் பிடிக்காது. எப்படா இவன் பேப்பர் படிக்க உட்காருவான்... ஏதாவது வேலை சொல்லலாம் என்று சபதமே எடுத்த மாதிரி செய்வாள்..." என்று புலம்பிக் கொண்டே (மனதிற்குள்தான்) மகள் எழுந்து விட்டாளா என்று அவளின் அறையை எட்டிப் பார்த்தார்.

அங்கே தலை முதல் பாதம் வரை இழுத்துப் போர்த்துக் கொண்டு புளி மூட்டை மாதிரி துயில் கொண்டிருந்த மகளைக் கண்டதும் அவருக்குச் சிரிப்புப் பீறிட்டது.

குழந்தை பாவம்... தூங்கட்டும் என்று எழுப்ப மனமில்லாமல் திரும்பி ஹாலுக்கு வந்தவர், மீண்டும் தன் வேலையைத் தொடர்ந்தார்.

"என்னங்க, எழுந்துட்டாளா இல்லையா?" என்ற மனைவியின் குரல் கேட்ட பிறகுதான் அவளுக்குத் தான் பதில் சொல்லவில்லை என்று உணர்ந்து.

"இல்லே பானு... தூங்கிக்கிட்டுத்தான் இருக்கா... பாவம், குழந்தை தூங்கட்டும். விடேன். இன்றைக்கு லீவுதானே...!" என்று மகளுக்காகப் பரிந்து பேசிவிட்டு மீண்டும் பேப்பரில் முகத்தைப் புதைத்துக் கொண்டார்.

"மணி எட்டாகப் போகுது... இன்னும் என்ன இந்தக் கழுதைக்குத் தூக்கம். போய் எழுப்புங்க..." என்று அவரை

நிம்மதியாக அவர் வேலையைச் செய்ய விடாமல் நச்சரிக்க, எரிச்சலுடன் கையிலிருந்த பேப்பரை சோபாவில் போட்டுவிட்டுப் பூஜையறைக்குச் சென்றவர்,

"இங்கே பாரு பானு... ஒன்று சாமி கும்பிடு... இல்லை வெளியே வந்து என்னுடன் பேசு. இப்படி இரண்டையும் சேர்த்துச் செய்து, பாவம் கடவுளைக் குழப்பிடாதே. பூஜை செய்து கொண்டே உன் பெண்ணுக்கு இப்படி அர்ச்சனை செய்தால் கடவுள் குழம்பிட மாட்டாரா?" என்று கேலி செய்ய, பானுவுக்குச் சட்டென்று முகத்தில் சிரிப்பு பூத்தது.

"ஐயோ, போதுமே உங்க ஹாஸ்யம்... பொண்ணை எழுப்பச் சொன்னால் எனக்கும் கடவுளுக்கும் சிண்டு முடியறீங்க..." என்று சிரிப்போடு சொல்லிக் கொண்டே ஆரத்தியைக் கண்ணில் ஒற்றிக் கொண்டு நெற்றியில் சிறு கீற்றாக வைத்துக் கொண்டு, கணவருக்கும் விபுதியை வைத்து விட்டு,

"நீங்க இப்படியே அவளைக் குழந்தை... குழந்தை என்று செல்லம் கொடுங்க... ஏற்கெனவே அவ என் சொல் பேச்சைக் கேட்பதில்லை. இப்படியே போனால் அவ்வளவுதான்..." என்று புலம்பிக் கொண்டே மகளின் அறைக்குச் சென்று அவளை எழுப்பினாள்.

தாயின் அர்ச்சனைகள் எல்லாம் காதில் விழுந் தாலும், எதுவுமே விழாத மாதிரி, தூங்குகிற மாதிரி நடித்துக் கொண்டிருந்த மகளைத் தட்டி, "சங்கீ... எழுந்துருடி... உன் வயசுல எனக்குக் கல்யாணமாகி



நீ எனக்குப் பொறந்திட்டே... நீ என்னடாவென்றால் பொறுப்பே இல்லாமல் வளர்ந்து நிற்கிறே..." என்று சற்று எரிச்சலுடன் குரலை உயர்த்தினாள்.

மார்கழி மாதக் குளிருக்கு இதமாகப் போர்வைக்குள் சுருண்டு கொண்டிருந்த... இவ்வளவு நேரம் பானுமதி செய்து கொண்டிருந்த அர்ச்சனைக்குச் சொந்தக்காரியான சங்கீ என்கிற சங்கீதா போர்வையை விலக்கி,

"அம்மா... உன் சுப்ரபாதத்தைக் கொஞ்சம் நிறுத் தேன். காலையில் சூரியன் உதிக்குதோ இல்லையோ... உன் சுப்ரபாதத்தை ஆரம்பிச்சிடறே... கேட்டுக் கேட்டுக் காது புளிச்சுப் போச்சு, ரிக்கார்டை மாத்து!" என்றபடி கட்டிலிலிருந்து இறங்கியவள், தாயின் தோளில் சலுகை யாகச் சாய்ந்து, "அம்மா, காபி கொடேன்... ப்ளீஸ்..." என்று செல்லம் கொஞ்சியவளைப் பார்த்துத் தலையில் அடித்துக் கொண்டாள் பானுமதி.

"கர்மம்... கர்மம்... பல்லைக் கூட விளக்காம இது என்ன புதுப் பழக்கம். முதலில் போய்க் குளிச்சிட்டு வா... டிபன் எடுத்து வைக்கிறேன்..." என்று விட்டுச் சமையலறைக்குத் திரும்பி நடந்தவளைச் செல்லமாக முறைத்து விட்டு, தந்தையின் அருகில் சென்று அமர்ந்து அவர் தோளில் சாய்ந்து கொண்டாள்.

மகளின் தலையை வருடியபடியே, "ஏன்டா... அம்மா எழுப்புவதற்கு முன்பே எழுந்து விட்டால் அம்மாவும் திட்ட மாட்டாள் இல்லையா?" என்று மென்மையாகச் சொன்னவரிடம்,

"போங்க டாடி... அம்மா ஒரு ஹிட்லர்... வீக் எண்ட்டில் கூட நிம்மதியாத் தூங்க விடமாட்டேங்கறாங்க. எப்படித்தான் இந்த ஹிட்லர் கூட இத்தனை வருடம் குப்பை கொட்டினிங்களோ...?" என்று சிணுங்கியபடியே புகார் வாசித்தாள்.

அவளின் புகாரைக் கேட்டவருக்குச் சிரிப்புப் பொத்துக் கொண்டு வர, "ம்ஹூம்... நீ சொல்லிட்டே... என்னால சொல்ல முடியலை. உங்கம்மா கிட்டே இருபது வருஷமா மாட்டிக்கிட்டு முழிக்கிறேன்..." என்று முகத்தைப் பரிதாபமாக வைத்துக் கொண்டு, அவள் குரலிலேயே ரகசியமாகச் சொல்ல, சட்டென்று சங்கீதாவுக்குச் சிரிப்பு வர, மகளின் சிரிப்பில் தந்தையும் கலந்து கொண்டார்.

இருவரையும் சாப்பிட அழைக்க வந்த பானுமதி, இருவரும் குசுகுசு என்று ரகசியம் பேசியபடி சிரிப்பதைப் பார்த்து, இடுப்பில் கை வைத்து முறைத்து, "என்ன, அப்பாவும் மகளும் காலையிலே என் தலையை உருட்ட ஆரம்பிச்சிட்டீங்களா...?" என்றவள், மகள் இன்னும் குளிக்காமல் இருப்பதைப் பார்த்து,

"ஹே... நீ இன்னும் குளிக்கப் போகலையா?" என்று அதட்டியபடி, அவளைப் பாத்ரூம் பக்கம் தள்ளிக் கொண்டு செல்வதைக் கண்டு மாணிக்கம் புன்னகைத்துக் கொண்டார்.

ஒரு வழியாகக் குளித்து விட்டுப் புத்தம் புது மலராக வந்த மகளை ரசித்துக் கொண்டே, "டிபன் சாப்பிட



வாம்மா..." என்றதும் தரையைக் காலால் உதைத்துக் கொண்டே,

"அம்மா, நீ ரொம்ப மோசம்... எப்பவுமே எழுப்பும் போது வாடி... போடி... என்று திட்டி எழுப்புறே... குளிச்சிட்டு வந்தால் வாம்மா... போம்மா... என்பே. அப்புறம் காலேஜ் போயிட்டு வந்த பிறகு வாடா... போடா... என்று கூப்பிடுவே. அது என்ன இப்படித் தினம் தினம் கூப்பிடணும் என்று அட்டவணை போட்டு வெச்சிருக்கியா?" என்று சிணுங்கினாள்.

அவளின் கொஞ்சலுக்குச் சிரித்துக் கொண்டே அவளை அமர வைத்து, இருவருக்கும் டிபன் பரிமாறியவளிடம், "அம்மா... அடுத்த வாரம் முழுவதும் நான் ஃப்ரீ... அதனால் வெளியூருக்கு ஒரு ட்ரிப் அடிச்சிட்டு வரலாமா?" என்று கேட்டுவிட்டுத் தாயிடமிருந்து பார்வை தந்தையிடம் தாவ, "என்ன டாடி... போகலாமா?" என்று கெஞ்சிக் கொஞ்சிக் கேட்டாள்.

பானுவும் கணவரின் முகத்தை ஆர்வமாய் நோக்க, "நோ ப்ராப்ளம் செல்லம்... உன் ஆசைப்படியே போகலாம்..." என்றதும், "ஓ... தேங்க் யூ டாடி" என்றவள், "அம்மா, எங்கே போகலாம்? நீங்களே சொல்லுங்க..." என்று ஆர்வமாய்க் கேட்டாள்.

மகள் கேட்டதும் கொஞ்ச நேரம் யோசனை செய்து விட்டு, "ஹ்ம்ம்... நானும் ரொம்ப நாளா மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்குப் போகணும் என்று

நினைச்சிக்கிட்டு இருந்தேன். அதனால் மதுரை போயிட்டு அப்படியே பக்கத்திலிருக்கிற திருநெல்வேலி, கன்னியா குமரிக்குப் போய் அங்கிருக்கிற கோயில்களுக்குப் போயிட்டு வரலாம்..." என்று கண்கள் மின்னச் சொல்லிக் கொண்டு வந்தவள், மகள் கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு சோகமாய் அமர்ந்து கொண்டு இருப்பதைக் கண்டு பேச்சை நிறுத்திக் கணவரைக் கேள்வியாக நோக்கினாள்.

மாணிக்கம் மனைவியின் கேள்வியான முக பாவத்திற்குக் கேலியாகச் சிரித்து விட்டு, "பின்னே... குழந்தை ஆசையா ஜாலியா ட்ரிப் அடிக்கலாம் என்று சொன்னா, நீ என்னடாவென்றால் காரைக்கால் அம்மையார் ரேஞ்சுக்கு திருத்தலச் சுற்றுலா போகலாம் என்று சொல்றே? கொஞ்சம் விட்டால் நடந்தே யாத்திரை போகலாம் என்று சொல்வே போலிருக்கு...!" என்று சிரித்து விட்டு மகளிடம், "அவ கிடக்கிறா... நீயே முடிவு பண்ணும்மா, எங்கே போகலாம்?" என்று கேட்டார்.

கண்களை மூடிக் கொஞ்ச நேரம் யோசித்தவள், "டாடி... குற்றாலம் போயிட்டு அப்படியே பாபநாசம் போயிட்டு வரலாமா? அம்மா ஆசைப்படியே மதுரை போய் மீனாட்சியம்மன் கோயிலுக்குப் போய் அப்படியே மதுரையில் அதிசயம் என்ற தீம் பார்க் இருக்கு. அங்கே போயிட்டு வரலாம்..." என்று கடகடவென்று ப்ளான் போட்டவள், "என்னம்மா, உனக்கு ஓகேதானே...!" என்று தாயிடம் சம்மதம் கேட்டாள்.



கொஞ்ச நேரத்திலே யோசித்து அழகாகத் திட்டமிட்ட மகளின் புத்திக்கூர்மையை வியந்து கொண்டே, "உனக்கு ஓகே என்றால் எனக்கும் ஓகேதான்..." என்று சம்மதிக்க, பயணத்திற்கு என்ன என்ன தேவைகள் என்று திட்டமிட லானார்கள்.

அடுத்த நாளே திட்டமிட்டபடியே சுற்றுலாவுக்குச் சந்தோஷமாகக் கிளம்பினார்கள். மகளின் வாழ்க்கை திசை மாறப் போவது தெரியாமல், சங்கீதாவின் ஆசைப்படி முதலில் தென்காசி சென்று குற்றாலத்தை அடைந்து ஏற்கெனவே ரிசர்வ் செய்த விடுதியில் உடைமைகளை வைத்துவிட்டு, ஐந்தருவிக்குச் சென்று ஆசை தீரக் குளித்து மகிழ்ந்தார்கள்.

அன்று முழுவதும் கடைகளைச் சுற்றிப் பார்த்தும் குற்றால நாதர் கோயிலுக்குச் சென்றும் பொழுதைப் போக்கிவிட்டு அறைக்கு வந்தவர்கள் அடுத்த நாள் பாபநாசம் போகலாம் என்று முடிவு செய்து கூட்டம் சேர்வதற்கு முன் மீண்டும் ஒரு தடவை அருவியில் குளித்துவிட்டுச் செல்லலாம் என்று தீர்மானித்தார்கள்.

அதன்படியே அடுத்த நாள் விடியற்காலையிலேயே எழுந்து அருவிக்கு வந்தவர்கள் தன்னை மறந்து நீரில் ஆட்டம் போட்டார்கள். கொஞ்ச நேரம் ஆனதும் கூட்டம் வருவதற்குள் ஈரத் துணியை மாற்றி விடலாம் என்று நினைத்த சங்கீதா, கண்ணுக்கெட்டிய தூரத்தில் வைத்திருந்த துணியை நோக்கி நடந்தவள், அதை

அடையும் முன்னே எங்கிருந்தோ வந்த குரங்கு ஒன்று அவளின் துணியிடம் அமர்ந்து கொண்டது.

குரங்கைக் கண்டதும் வெலவெலத்துப் போனவள், கீழே கிடந்த ஒரு குச்சியை எடுத்து அதை விரட்ட முயற்சி செய்தாள். ஆனால் அது பதிலுக்கு இளித்துக் காட்டி விட்டு, அவளின் உடைமைகளைத் தூக்கிக் கொண்டு ஓட, அதன் செய்கையால் ஒரு நிமிடம் ஸ்தம்பித்து நின்றவள், அடுத்த நிமிடம் ஈரத் துணியோடு அதனை விரட்டிக் கொண்டு சென்றாள்.

ஆனால் அது பாறைகளில் தாவித் தாவி ஓட, அதன் ஓட்டத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் மூச்சு வாங்க ஒரு பாறையின் மேல் சோர்ந்து அமர்ந்தாள்.

அந்தப் பாறையின் கீழ் ஓடிக் கொண்டிருந்த தண்ணீரில் தன் முகத்தைப் பார்த்துக் கொண்டே, 'இப்போது என்ன செய்வது? அப்பா அம்மாவிடம் போய்ச் சொல்லலாமா? ரூம் வரைக்கும் இதே கோலத்தோடுதான் போக வேண்டுமா?' என்ற கேள்வியோடு அமர்ந்திருந் தவளை, "என்னங்க... குரங்கோட போட்டி போட முடியலையா? இங்கேயே உட்கார்ந்துட்டீங்க...!" என்ற ஆண் குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

தன் எதிரே அழகான சிரிப்புடன் கையில் தன்னுடைய துணியை வைத்துக் கொண்டிருந்த புதிய இளைஞனைக் கண்டதும் பதட்டத்துடன் அவசரமாகப் பாறையிலிருந்து எழ எத்தனிக்க, ஈரத் துணியுடன் அமர்ந்ததால் ஏற்பட்ட ஈரத்தில் கால் வழுக்கித் தடுமாறிக்



கீழே விழப் போனவளைக் கொஞ்சம் கூட யோசிக்காமல் சட்டென்று அவள் கையைப் பிடித்து நிறுத்தினான்.

இதயம் படபடவென்று துடிக்கப் பதட்டம் அடங் காமலே மிரட்சியுடன் ஒரு தடவை அந்தப் பாறை இடுக்கைப் பார்த்தவளுக்குப் பயத்தில் உடம்பு சிலிர்த்தது. கண்களில் பயம் நீங்காமலே, "ரொம்... ரொம்ப தேங்க்ஸ். கீழே விழுந்திருந்தால் தண்ணியில் அடிச்சுக்கிட்டுப் போயிருப்பேன்... எனக்கு நீச்சல் வேறு தெரியாது. அது மட்டுமில்லை, நிச்சயமாப் பலமா அடிபட்டிருக்கும். எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியலை..." என்று மீண்டும் மீண்டும் நன்றி சொன்னவளைப் புன்னகையுடன் நோக்கி னான்.

"ரிலாக்ஸ் மேம்... இப்போ என்ன செய்துட்டேன் என்று இப்படி நன்றி சொல்லிக்கிட்டு இருக்கீங்க... இந்தாங்க உங்க டிரஸ்..." என்று அவளிடம் நீட்ட, அதை வாங்கிக் கொண்டே,

"உங்களை என் வாழ்நாளில் மறக்க முடியாது..." என்று வெட்கம் கலந்த புன்னகையுடன் கூறிவிட்டுச் செல்லத் திரும்பியவள், மீண்டும் அவன் பக்கம் திரும்பி, "ஒன்ஸ் அகெய்ன் தேங்க்ஸ்..." என்று புன்னகையுடன் சொல்லிவிட்டு அங்கிருந்து ஓட்டமும் நடையுமாக விரைந்தாள். அவள் ஓடுவதையே உதட்டில் உறைந்த புன்னகையுடன் ரசித்துக் கொண்டிருந்தான், அந்த இளைஞன்.

தண்ணீரில் ஆனந்தமாக நீராடிக் கொண்டிருந்த பானுமதி, பக்கத்தில் மகளைக் காணாததால் அருவியில் இருந்து வெளிவந்து மகளைப் பதட்டத்துடன் தேட ஆரம்பித்தாள். மனைவி எதையோ தேடுவதை உணர்ந்து வேகமாக அவளருகில் வந்தவர், மகளைக் காணவில்லை என்றதும் அவரையும் பதட்டம் தொற்றிக் கொண்டது.

பானு ஒரு பக்கம் தேட, மாணிக்கம் ஒரு பக்கம் தேடிச் சென்றார். பயப் பந்து வயிற்றில் உருள, மகளைத் தேடிச் சென்றவர், கொஞ்ச தூரத்தில் தன் செல்ல மகளே ஓடி வருவதைக் கண்டதும் அவளை வேகமாக நெருங்கினார்.

தந்தையைக் கண்டதும் அவளின் முகம் பூவாய் மலர, "டாடி..." என்று அழைத்தவளிடம், "எங்கேடா போனே... அங்கே உன் அம்மா உன்னைக் காணாமத் தவிச்சுப் போயிட்டா... அப்பாகூட பயந்துட்டேன்டா..." என்று கேட்டவருக்குப் பதில் சொல்லாமல் முகத்தைத் திருப்பித் தூரத்தில் இவளையே பார்த்தபடி நின்று கொண்டிருந்த அந்தப் புதிய இளைஞனைக் கண்ணில் சிரிப்புடன் பார்த்து விட்டு, "வாங்க டாடி, சொல்றேன்..." என்று அவருடன் நடந்தாள்.

மகள் நடந்ததைக் கூறியதும் பானுமதிக்குப் பயத்தில் உடம்பு சிலிர்த்தது. கல்யாணமாகி நாலைந்து வருடங்கள் கழித்துப் பிறந்த மகள் என்பதால் இருவருக்குமே அவள் மீது உயிர். அந்த மகளுக்கு ஒரு ஆபத்து என்றதும் இருவருக்குமே மூச்சடைத்தது.



அவளை ஒரு இளைஞன் காப்பாற்றினான் என்றதும், "யார் அவன்... பெயர் என்ன என்று கேட்டாயா?" என்று விசாரித்தார்.

சங்கீதாவுக்கு அப்போதுதான் அவன் பெயரையே தான் கேட்கவில்லை என்று உணர, உதட்டைப் பிதுக்கி, "நோ டாடி... அவசரத்துல கேட்க மறந்துட்டேன்..." என்று அசடு வழிந்தாள்.

"என்னடி நீ... இவ்ளோ பெரிய உதவி செய்த தம்பியைப் பற்றி விசாரிக்காமல் வந்திருக்கிறாய்...?" என்று குறை கூறிவிட்டு, "சரிங்க, கிளம்பலாம்... இனி இங்கிருக்க வேண்டாம்..." என மூவரும் அவ்விடத்தை விட்டுக் கிளம்பினார்கள்.

ரூமிற்குச் சென்று உடைமைகளைப் பேக் செய்து கொண்டு ரூமைக் காலி செய்து கொண்டு வெளிவர, அங்கே சங்கீதாவுக்கு உதவிய இளைஞன் தன் நண்பனோடு ஆபீஸ் ரூமில் பேசிக் கொண்டிருந்தான்.

அவனைக் கண்டதும் சங்கீயின் முகத்தில் மெர்க்குரி பல்ப் எரிய, பெற்றோரிடம் அவனைக் காட்டியதும், மாணிக்கம் தங்கள் உயிருக்கு உயிரான மகளைக் காப்பாற்றியவனுக்கு நன்றி சொல்லலாம் என்று வேகமாக அவனை நோக்கி நடக்க, மற்ற இரு பெண்களும் அவரைப் பின் தொடர்ந்தனர்.

இவர்களைக் கண்டதும் தன் பேச்சை நிறுத்திய வனிடம்,

"என் பெண்ணை ஆபத்திலிருந்து காப்பாற்றினீங்க என்று சொன்னாள்... ரொம்ப தேங்க்ஸ் தம்பி..." என்று நன்றி சொல்லிக் கை குலுக்கியவரிடம்.

"என்ன சார்... இதுக்கெல்லாம் தேடி வந்து நன்றி சொல்றீங்க... இதெல்லாம் ஒரு மனிதாபிமானத்தில் செய்யறது..." என்று அடக்கத்துடன் கூறிவிட்டு, "பை தி பை ஸார்... ஐ அம் விஜய்... ஹி இஸ் மை ஃபிரெண்ட் முகேஷ்..." என்று சுய அறிமுகம் செய்து கொள்ள, மாணிக்கம் அதைப் புன்னகையுடன் கேட்டுக் கொண்டு,

"நான் மாணிக்கம்... பேங்க் மேனேஜர்... இவ என் மனைவி பானுமதி... இவ எங்க பொண்ணு... பேரு சங்கீதா..." என்று அறிமுகம் செய்து வைத்தார்.

எல்லோருக்கும் வணக்கம் சொல்ல, எல்லோரும் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்தக் கொஞ்ச நேரத்திலேயே அவன் மதுரையைச் சேர்ந்தவன் என்றும், சென்னையில் ஐ.ஐ.டி.யில் வேலை செய்கிறான் என்றும்... யாருமில்லாத அநாதை என்றும் அவனைப் பற்றித் தெரிந்து கொள்ள, மாணிக்கம் தம்பதிக்கு அவன் மேல் மரியாதையும் இரக்கமும் பிறந்தது.

லீவுக்குச் சொந்த ஊருக்கு வந்தவன், நண்பர்களுடன் இங்கே வந்திருக்கிறான் என்று அவன் மூலம் அறிந்தவர், தங்கள் கூடவே பாபநாசம் வருமாறு அழைக்க, முதலில் மறுத்தவன், அவரின் வற்புறுத்தலின் பேரில் அவர்களுடன் வரச் சம்மதித்தான்.



ஒவ்வொரு வார்த்தையையும் நாசூக்காக உச்சரிக்கும் விதத்தையும் அதற்கேற்றாற்போல் மாறும் அவன் முக பாவங்களையும்... அவனுக்குத் தெரியாமல் ரகசியமாக ரசித்துக் கொண்டிருந்தவள், அவன் தங்களுடன் வரப் போகிறான் என்று தெரிந்ததுமே அவளுள் ஒரு பரவசம் ஓடியது.

நண்பனிடம் விடைபெற்றுக் கொண்ட விஜய், சங்கீதாவின் காரில் ஏறி அமர்ந்தவன், கலகலப்பாகப் பேசி அவர்களைச் சிரிக்க வைத்துக் கொண்டிருந்தான்.

அவனின் பண்பட்ட பேச்சும், அதே சமயம் அதில் ததும்பிய நகைச்சுவையும் அவர்களை மயக்கியது எனலாம்.

சங்கீதாவுக்கு அவனைச் சந்தித்ததில் இருந்தே வாய் பூட்டுப் போட்டுக் கொண்டதைக் கண்டு அவளுக்கே சிரிப்பாக இருந்தது.

இதுவரை அவள் பேசிப் பழகிய ஒரே ஆண் மகன் அவளின் தந்தை மட்டுமே. ஆரம்பத்தில் இருந்தே பெண்கள் பள்ளி, கல்லூரி என்றே இருந்ததால், ஆண்களிடம் சகஜமாகப் பழகும் வாய்ப்பு அவளுக்கு இது வரை கிடைத்ததில்லை.

அதனாலோ என்னவோ முதன் முதலில் விஜய்யைச் சந்தித்தபோதே அவளுள் இனம் புரியாத ஒரு சந்தோஷம்.

ஆனால் அதை ரகசியமாக அனுபவிக்க வேண்டும் என்று தோன்றியதுதான் அவளுக்கு அதிசயமாக இருந்தது.

இத்தனை காலமும் எதுவாக இருந்தாலும் பெற்றோரிடம் இருந்து எதையும் மறைக்காதவளுக்கு, இப்போது ஏன் நான் இப்படி மாறிப் போனேன் என்று விளங்கவில்லை. ஆனாலும் அந்த உணர்வும் சுகமாக இருந்ததுதான் வினோதம்.

## 3

பிரஜித் பேசிக்கொண்டே போக, "ஒரு நிமிஷம்..." என்று அவனை நிறுத்தினாள். அவளின் குரலில் பேச்சை நிறுத்தியவனிடம், "உங்களுக்கு என்னைப் பற்றி என்ன தெரியும் என்று நீங்க உங்க இஷ்டத்துக்குப் பேசிக்கிட்டே போறீங்க...?" என்று சற்றுக் கடினமான குரலில் கேட்டாள்.

அவளின் கேள்வி அவனுக்குச் சிரிப்பை வர வழைக்கக் கடகடவென்று சிரிக்க ஆரம்பித்தான். சிரிக்க ஆரம்பித்தவன் நிறுத்தாமல் சிரித்துக் கொண்டே இருக்க, சுஜா பொறுமையிழந்து, "ப்ரஜித் ப்ளீஸ்... முதலில் சிரிப்பதை நிறுத்துங்க. கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் இப்படிச் சிரித்துக் கொண்டே இருந்தால் என்ன அர்த்தம்...?" என்று கேட்டவளைத் தன் சிரிப்பை நிறுத்தி விட்டு அவளை ஊடுருவிப் பார்த்தான்.

அவன் பார்வையில் இருந்த கூர்மையைத் தாங்க முடியாமல் தலை தானாக நிலம் நோக்கிக் குனிய, "நீங்க கேட்ட கேள்விக்குச் சிரிக்காமல் என்ன செய்யறது சுஜிதா...? உங்களின் கேள்வி எப்படி இருக்கு, தெரியுமா?



உங்களை நேற்றுச் சந்தித்து இன்று உங்களிடம் காதலைச் சொல்கிற விடலைப் பையனிடம் கேட்கிற மாதிரி இருக்கு...

"ம்ஹூம்... உங்களைச் சந்தித்து ஒரு வருடத்திற்கு மேலே வேண்டுமென்றால் ஆகியிருக்கலாம். ஆனால் உங்களுடன் மனதளவில் பல காலம் வாழ்ந்த ஒரு உணர்வு எனக்கிருக்கு..." என்றவனின் குரலில் இருந்த ஒரு வித ஏக்கம் சுஜியைச் சுட்டது.

பிரஜித்தே தொடர்ந்து, "உங்களைப் பற்றி எனக்கு என்ன தெரியாது? உங்கள் தாய் உங்களை விட்டுப் போனதிலிருந்து இன்று சுயமாகப் படிச்சு முன்னேறிச் சொந்தமாகத் தொழில் செய்கிற வரைக்கும் தெரியும். வீட்டில் உங்களுக்குச் சந்தோஷம் இல்லை என்றும் தெரியும். எங்கே சென்றாலும் கிடைக்காத சந்தோஷம் வீட்டினுள் நுழைந்தால் கிடைக்கும் என்று சொல்வாங்க. ஆனால் உங்களுக்கு அதுவே இல்லை என்பதும் தெரியும். இப்போ சொல்லுங்க... வேறென்ன தெரியணும் எனக்கு...?" என்றான் சற்று ஆவேசமாக.

அவனின் ஆவேசத்திற்கு விரக்தியாகச் சிரித்துவிட்டு, "இதெல்லாம் தெரிந்து என்ன ஆகிவிடப் போகிறது? உங்கள் நண்பரின் தங்கை என் தோழி என்பதால் அவள் மூலம் தெரிந்திருக்கலாம்.

"சரி, இதை விடுங்க. நீங்கள் என்னைக் காதலிக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறீங்களே... இதை நீங்கள் மட்டுமே முடிவு செய்தால் போதுமா? ம்ம்ம்...

நீங்களோ வசதியான குடும்பத்திலிருந்து வந்தவர்... பல கம்பெனிகளுக்குச் சொந்தக்காரர். நான் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவள்.

"எனக்கு என்ன தகுதியிருக்கு என்று என்னைக் கல்யாணம் செய்து கொள்ள ஆசைப்படுகிறீர்கள்? அழகை வைத்துத்தான் என்ற பதில் உங்களுடையதாக இருந்தால், ஸாரி... உங்கள் காதலின் மேல் எனக்கு நம்பிக்கை இல்லை..." என்று அவனை வெட்டி விட நினைத்துப் பேச, ப்ரஜித் இடையில் புகுந்து, "வில் யூ ஸ்டாப் இட்...?" என்றான் அதட்டலாக.

"நீங்கள் இப்பவும் என்னைத் தவறாகத்தான் புரிந்து கொண்டு இருக்கிறீர்கள். சரியாகச் சொல்லப் போனால் என்னை நீங்கள் புரிந்து கொள்ளக் கொஞ்சம் கூட முயற்சி செய்யவே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்..." என்றதும்,

"இல்லை... நான்... என்ன சொல்ல..." என்று ஏதோ சொல்ல முயற்சித்த சுஜியைக் கையமர்த்தி,

"போதுங்க... ஒன்று மட்டும் நல்லாத் தெரிஞ்சுக் கோங்க சுஜிதா... நான் உங்களின் புற அழகைப் பார்த்துக் காதலிக்கவில்லை... உங்களின் மன அழகுதான் உங்களிடம் என்னை ஈர்த்தது..." என்றதுமே சுஜியின் பார்வையில் கேலி தோன்றி மறைய,

"பெற்ற தந்தை உங்களுக்கு இவ்வளவு பெரிய துரோகம் செய்திருந்தும், அவர் மேலே நீங்கள் வைத்திருக்கிற பாசமும், அவரின் இரண்டாவது மனைவியின் குழந்தைகளை உங்களின் கூடப் பிறந்த தங்கைகள் போலப் பாசமாகப் பார்த்துக் கொள்வதும், உங்கள் வருமானத்தில் பெரும் பகுதியை அந்தக் குடும்பத்திற்குச் செலவிடுவதும், அதை விட உங்கள் குடும்பத்தை யாரிடமும் விட்டுக் கொடுத்துப் பேசாமல் இருக்கிறீர்களே... அந்தப் பக்குவம், பொறுமை, நீங்கள் உங்கள் குடும்பத்தின் மேல் வைத்திருக்கும் பாசம்... இதையெல்லாம் விட வேறென்ன தகுதி வேண்டும்?



"இந்தத் தகுதிதான் என்னை உங்களின் பின்னால் சுற்ற வைத்தது. விடலைப் பருவ வயதில் கூட நான் காதலைப் பற்றி யோசித்துப் பார்த்ததில்லை. பெண்களை ஏறெடுத்தும் பார்த்ததில்லை. உங்களைச் சந்தித்த போதும் கூட உங்கள் மேல் எனக்குப் பெரிய ஈடுபாடு ஏற்பட வில்லை. ஆனால் உங்களைப் பற்றித் தெரிய வந்த போது என் மனசு உங்கள் வசமானது நிஜம்.

"ஆனால் கடந்த ஒரு வருடமாக நீங்கள் என் மனசில் உட்கார்ந்துகிட்டு என்னை அலைக்கழிப்பது எனக்கே ஆச்சர்யமாக இருக்கிறது. இதை உங்களை இம்ப்ரெஸ் செய்யவோ... நீங்கள் என்னை நம்ப வேண்டும் என்றோ சொல்லவில்லை. எனக்குப் பொய் சொல்லத் தெரியாது. பொய் சொல்பவர்களையும் பிடிக்காது..." என்று மிக மிக நிதானமாக அவளுக்குத் தன்னைப் புரிய வைக்கும் நோக்கோடு சொன்னவனை ஒரு பெருமூச்சோடு பார்த்தாள்.

அவள் அமைதியாக இருப்பதைக் கண்டு, "என்ன மேடம்... இன்னும் நான் சொல்வதில் நம்பிக்கை

வரவில்லையா? இல்லை, இவனை எப்படி நம்புவது என்ற பயமா?" என்று சற்று வேதனையோடு கேட்டவனுக்கு அவசரமாக இடைமறித்து,

"ச்சே... ச்சே... உங்களை நம்புவதும், பிடித்திருப்பதும் இரண்டாம் பட்சம். முதலில் எனக்குக் கல்யாணத்தின் மேலேயே நம்பிக்கை இல்லை. அதுவும் காதல் கல்யாணம் என்றால்...?" என்று முழுமையாகச் சொல்ல முடியாமல், தன் அம்மாவின் நிர்கதியான நிலையை நினைத்து அந்த வேதனையை விழுங்கிக் கொண்டு மேலே பேசும் முன்,

"ஸாரிங்க... உங்களுக்கு எப்போ நம்பிக்கை வருதோ, அப்போ சொல்லுங்க. நான் வரேன்... உங்கள் மேலே நான் வைத்திருக்கிற காதல் உண்மையானது என்று ஒரு நாள் உங்களுக்குப் புரியும்..." என்று தொடர்ந்து பேச முடியாமல் வேதனையில் முகம் சுருங்கிவிட பைக்கில் ஏறி கிக்கரை ஸ்டார்ட் செய்தவனை,

"ப்ரஜித், ஒரு நிமிஷம் ப்ளீஸ்..." என்றாள்.

அவள் அழைத்தும் நிமிர்ந்து பார்க்காமல் இருக்க, "உங்கள் கோபம் எனக்குப் புரியுது... ஆனால் என் சூழ்நிலையும் நீங்க புரிஞ்சுக்கணும்..." என்றவள், கொஞ்சம் நிறுத்த, ஆர்வத்துடன் நிமிர்ந்து பார்த்தான்.

"நான் இதுவரைக்கும் நீங்கள் சொன்னதைப் பற்றி யோசித்துப் பார்த்ததே இல்லை. அதனால் எனக்குக் கொஞ்சம் டைம் வேண்டும்..." என்று அவனிடம் பார்வையாலே அனுமதி கேட்க, அவளின் விழிகள்



செய்யும் ஜாலத்தில் தன்னை மறந்து முகத்தில் புன்னகை மலர்ந்தது.

"தாராளமா... எவ்வளவு நாள் வேண்டுமென்றாலும் எடுத்துக்கோங்க. ஆனால் சீக்கிரமே ஒரு நல்ல பதிலைச் சொல்வீங்க என்ற நம்பிக்கையில் காத்திருப்பேன் என்பதை மட்டும் மறந்துடாதீங்க..." என்று சந்தோஷத்துடன் சொல்லி விட்டு, "பை, டேக் கேர்..." என்று பைக்கைக் கிளப்பிக் கொண்டு செல்ல, சுஜிக்கு அப்படியே ஓய்ந்து போய் அங்கேயே உட்காரனும் போல இருந்தது.

"நல்லா யோசித்துச் சீக்கிரமே நல்ல பதிலைச் சொல்..." என்று தந்தை பிரயோகித்த அதே வார்த்தையை ப்ரஜித்தும் சொல்லி விட்டுச் செல்ல, 'எல்லோருக்குமே அவரவர் காரியம்தான் முக்கியமாக இருக்கிறது. என்னைப் பற்றி, என் மனதைப் பற்றி யாருமே யோசிக்க மாட்டார்களா?' என்று அலுப்புத் தட்டியது.

ஸ்கூட்டியை ஸ்டார்ட் செய்து வெளியே கோயில் இருக்கும் தெருவிலிருந்து வெளியில் வந்து ரோட்டைத் தொட, வேகமாக அவளை உரசிக் கொண்டு வந்த ப்ரஜித்தைக் கண்டதும் மீண்டும், 'என்ன...?' என்ற கேள்வியோடு அவனை நோக்கினாள்.

அவள் முகத்திலிருந்த குழப்பத்தைக் கண்டு கவர்ச்சியாகச் சிரித்து விட்டு, "கூல்... கூல்... மேடம்... உங்களுக்குத் தேங்க்ஸ் சொல்ல மறந்துட்டேன் சந்தோஷத்தில்..." என, சுஜியின் முகத்திலிருந்த குழப்பம் அட

"என்னங்க, புரியலையா? இப்போவாவது என் காதலை கன்சிடர் செய்கிறேன் என்று சொன்னீர்களே... அதுக்குத்தான் இந்த தேங்க்ஸ்..." என்று முகம் விகசிக்கச் சொல்லிவிட்டு அவளின் பதிலுக்குக் கூடக் காத்திராமல் விருட்டென்று பைக்கைக் கிளப்பிக் கொண்டு போய் விட்டான்.

அவனின் சந்தோஷத்தையும் துள்ளலையும் கண்ட சுஜிக்கு, சிறிது நேரம் முன்பிருந்த அலுப்பு இருந்த இடம் தெரியாமல் பறந்து போக, மலைக்காற்று முகத்தில் மோத அவளுடைய ஸ்கூட்டி வேகமாகப் பறந்தது.

ஒரு வாரம் சென்றிருக்கும்... அன்று ஞாயிற்றுக் கிழமை... லீவ் என்பதால் சித்திக்குச் சமையலில் உதவி விட்டு, சிறிய தங்கைக்கு முகத்துக்குத் தேங்காய் எண்ணெயும், எலுமிச்சைச் சாறையும் கலந்து மசாஜ் செய்து கொண்டிருந்தவளைத் தேடி வந்தார் தந்தை.

பழைய கால வீடு என்பதால் கூடத்தின் நடுவில் அமைந்திருந்த முற்றத்தில் அமர்ந்திருந்த சுஜியிடம் வந்தவர், "என்னம்மா... நான் சொன்ன விஷயத்தைப் பற்றி யோசிச்சியா...? அதற்கு உன்னுடைய பதில் என்னம்மா...?" என்றார் மிக ஆர்வமாகவும் அதே சமயம் மிகவும் மெதுவான குரலிலும்.

சுஜிக்கு முதலில் அவர் எதைப் பற்றிக் கேட்கிறார் என்று புரியாமல், "எதற்கு என்னுடைய பதில் வேண்டும்...?" என்றாள் நெற்றியைச் சுருக்கி.



அவள் மிகச் சாதாரணமான குரலில் பேசவும், "ஸ்ஸ்ஸ்... மெதுவாப் பேசும்மா... உன் சித்திக்குக் கேட்கப் போகுது..." என்று உதட்டில் விரல் வைத்து எச்சரிக்க, தங்கை நந்தினி தந்தையின் பயத்தைக் கண்டு கலாட்டாவாகச் சிரித்தாள்.

ரங்கனின் முகத்தில் சட்டென்று கடுமையேற, "ஏய்... இப்போ எதுக்கு இப்படிச் சிரிச்சு ஊரைக் கூட்டறே... உங்கம்மா வந்துடப் போறா..." என்று சிறிய பெண்ணைக் கோபித்துக் கொள்ள, அவள் அப்பாவின் கோபத்தைச் சற்றும் சட்டை செய்யாமல்,

"ஐயோ அப்பா...! அம்மா வீட்டில் இல்லை... அவங்க அப்பவே அஸ்வினியை அழைச்சிக்கிட்டு வெளியே போயிட்டாங்க. அதனால் அக்காவிடம் பயம் இல்லாமல் பேசுங்க..." என்ற தகவலைச் சொல்லிவிட்டு,

"அது சரி... எதுக்கு அம்மாவுக்கு இப்படிப் பயப்படறீங்க...? அக்காவிடம் பேசினால் அவங்களுக்கு என்ன? பார்க்கப் போனால் அக்காவுக்குத்தான் நீங்க பயப்படணும்..." என்று தெளிவாய்க் கேட்டவளின் காதை சுஜி புன்னகையுடன் செல்லமாகப் பிடித்துத் திருக, ரங்கன் நிம்மதிப் பெருமூச்செறிந்தார்.

"அதான்மா... அன்றைக்கு மாப்பிள்ளையோட போட்டோ கொடுத்தேனே... அதைப் பற்றித்தான் கேட்கிறேன்... நீ என்ன முடிவு செய்திருக்கே...?" என்று கேட்டதும்தான் சுஜிக்கு ஞாபகமே வந்தது.

அவரைக் கலக்கத்துடன் நிமிர்ந்து பார்த்து, "அப்பா... நான் சொல்றேன்னு தப்பா நினைக்க மாட்டீங்களே...!" என்றவளிடம் முகக் குறிப்பால் அவளை மேலே பேசச் சொல்ல, கையைக் கழுவிக் கொண்டு தந்தையிடம் வந்தமர்ந்து, "அப்பா, எனக்கு வெளிநாட்டு மாப்பிள்ளை வேண்டாம்ப்பா. கஷ்டமோ, நஷ்டமோ... நம்மூரிலோ இல்லை வெளியூரிலோ இருந்தால்கூடப் போதும். என்னால் உங்களை, என் தங்கைகளை, சித்தியை விட்டுப் போக முடியாது..." என்று கண் கலங்கியவளை உலக அதிசயமாகப் பார்த்தார்.

அவரின் பார்வையின் அர்த்தத்தை உணர்ந்து மேலே பேசும் முன், தந்தையிடம் விவரத்தைக் கேட்டுக் கொண்டு, "ஏன் சுஜிக்கா... உன்னைத்தான் அம்மாவுக்குப் பிடிக்கலையே... எப்பவும் திட்டிக்கிட்டே இருக்காங்களே... அப்புறமும் இங்கேயே இருக்கணும் என்று ஆசைப் பட்டால் எப்படிக்கா...? அப்பாதான் பிரான்சில் உனக்கு மாப்பிள்ளை பார்த்திருக்கிறாரே... அந்த மாப்பிள்ளையைக் கல்யாணம் செய்துக்கிட்டு நிம்மதியா சந்தோஷமா இரேன்... வசதியாவும் வாழலாம்..." என்ற தங்கையின் தலையை ஆதரவாக வருடிக் கொடுத்தாள்.

"அதானே... பாரு, சின்னப் பொண்ணாக இருந்தாலும் அவள் சொல்றதும் சரியாத்தானே இருக்கு. உனக்கு இங்கே எந்த விதத்திலும் சந்தோஷம் கிடைக்காத போதே எல்லோரும் வேண்டும் என்று ஏன் நினைக்கிறே? எல்லோரையும் விட்டுக் கண் காணாத



தூரத்தில் சந்தோஷமா இருக்கலாமே...! உன் சித்தி நிச்சயம் திருந்தப் போவதில்லை. இன்னும் எத்தனை காலத்திற்கு இப்படியே கஷ்டங்களை அனுபவிக்கப் போகிறாய்? எதுவுமே தூரத்தில் இருந்தால் அருமை புரியும். ஒருகால் நீ அவள் கண்ணில் படாமல் இருந்தாலாவது உன் மேல் பாசம் வருதா என்று பார்க்கலாமே...!" என்றவரை இடைமறித்தாள்.

"அப்பா... சொந்தங்கள் என்பது கடவுள் கொடுத்த பரிசு... அதை உதறித் தள்ள நமக்கு என்ன அதிகாரம் இருக்குப்பா...? அதுவுமில்லாமல் சொந்தங்களே வேண்டாம், வசதியான வாழ்க்கை மட்டும் போதும் என்று நினைக்க நான் சுயநலவாதி இல்லையே...!

"ஸோ... எனக்கு வெளிநாட்டு மாப்பிள்ளை வேண்டாம்ப்பா... இதோட இந்தப் பேச்சை விட்டுடுங்களேன், ப்ளீஸ்..." என்று வெறுமையான குரலில் கூறி விட்டு அந்த இடத்தை விட்டு அகல, ரங்கம் சிலையாய்ச் சமைந்து விட, நந்தினி அக்காவைப் பெருமையாய்ப் பார்த்தாள்.

அடுத்த நாள் மாலை நேரத்தில் பார்லரில் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்த சுஜி, மிகக் கோபமாக உள்ளே நுழைந்த விஸ்வத்தை ஆச்சர்யத்துடன் வரவேற்றாள். அவளின் அன்பான வரவேற்பு விஸ்வத்திற்கு மேலும் கோபத்தைத் தூண்ட, "உன் வரவேற்பு இருக்கட்டும்... எனக்கு உன்னிடம் கொஞ்சம் பேசணும்..." என்றார் ஆத்திரம் மிக.

அவரின் ஆத்திரத்தின் காரணம் புரியாமல், "என்ன அங்கிள்... ஏன் இவ்வளவு கோபமாப் பேசறீங்க...?" என்று கேட்டவளுக்கு, "எனக்கு உன்னிடம் பேசணும்..." என்றார், கிளிப்பிள்ளை போல் அழுத்தமான அமைதியுடன்.

அதற்கு மேல் அவரைக் கேள்வி கேட்காமல் தன் வேலையை அங்கு வேலை செய்கிற மற்றொரு பெண்ணிடம் ஒப்படைத்து விட்டு, விஸ்வத்திடம் வந்தவள், "சொல்லுங்க அங்கிள்... என்ன பேசணும்...?" என்று கேட்டதும்தான் தாமதம்,

"உன் மனசில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய் சுஜி...? வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியை உடைச்ச மாதிரி, உனக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமையும்போது அதை வேண்டாம் என்று சொன்னியாமே, நேற்று ரங்கனிடம்...! உனக்கு என்ன ஆச்சு?

"நீ அவனிடம் சொன்ன மாதிரி, உறவுகள் வேண்டுமென்றால் கடவுள் கொடுத்த பரிசாக இருக்கலாம். ஆனால் கடவுள் அதன் மதிப்புத் தெரியாத ஆட்களிடம் அல்லவா கொடுத்து விட்டான். நீ மட்டும் அந்தப் பரிசை நல்லபடியாக் காப்பாத்தணும் என்று நினைப்பது எந்த விதத்தில் நியாயம்?

"போதும் சுஜி... உன் அன்பையும், பொறுமையையும் புரிஞ்சுக்க முடியாத ஆட்களுக்காக எதுக்காக உனக்குக் கிடைக்கப் போகிற நல்ல வாழ்க்கையை வேண்டாம் என்று சொல்றே? நீ என்ன பெரிய தியாகியா?



இல்லை, நீ செய்கிற இந்தத் தியாகத்தைப் புரிஞ்சுக்கற அளவுக்கு இவர்களுக்கு மனசு இருக்கும் என்று நினைக்கிறாயா?" என்று படபடவென்று பொரிந்தார்.

அவர் தன் மேல் வைத்திருக்கிற பாசம்தான்... இவ்வளவு கோபத்திற்குக் காரணம் என்று புரிய, அவர் பேசி முடிக்கட்டும் என்று அமைதியாகக் காத்திருந்தாள் சுஜி.

சுஜியின் அமைதி அவருக்குக் கோபத்தை அதிகமாக்க, "சொல்லு சுஜி... நீ என்னதான் உன் சிறிய அன்னைக்காக உன் வாழ்க்கையைத் தியாகம் செய்தாலும், அதனால் ஒரு புண்ணியமும் இல்லை. உன் முட்டாள்தனமான முடிவை மாத்தி, இந்தக் கல்யாணத்திற்குச் சம்மதம் சொல்...!" என்றார் மிகவும் எரிச்சலுடன்.

அவரின் பேச்சுக்கு ஒரு பெருமூச்சை வெளியேற்றியவள், "அங்கிள்... நான் எதுக்கு அப்படிச் சொன்னேன்... தெரியுமா?" கேட்டு விட்டு மேலே தொடர்ந்து அவருக்கு விளக்கம் கொடுக்க முயற்சித்தவள்,

"மே ஐ கமின்..." என்ற ஆண் குரல் கேட்டு, சுஜி பேச்சை நிறுத்திவிட்டு, அனுமதி கொடுக்க, உள்ளே வந்தவன் ப்ரஜித்.

"ஹாய் மேடம்... ஹவ் ஆர் யூ...? என்ன மேடம்... போன வாரம் யோசிக்க கொஞ்சம் டைம் வேண்டும் என்று கேட்டீங்க... ஆனால் இதுவரை உங்க முடிவைச் சொல்லவே இல்லையே...! உங்களின் பதிலுக்காக

ஒவ்வொரு நிமிஷமும் ஆவலுடன் காத்திருக்கிறேன்.... ம்ம்ம்..." என்று துள்ளலுடன் பேசிக் கொண்டே திரும்பிய வனின் பார்வையில் விஸ்வம் விழ, அவனின் பேச்சும் பாதியிலே தடைப்பட்டது.

அதுவரை ப்ரஜித்தைக் குழப்பத்துடன் பார்த்துக் கொண்டிருந்தவர், அவன் பேச்சின் அர்த்தம் புரியாமல் கேள்வியாகச் சுஜியை ஏறிட்டார்.

## 4

**வி**ஜய் தங்களுடன் கழித்த ஒவ்வொரு நிமிடமும் நேரம் இறக்கை கட்டிப் பறக்க, அவர்கள் ஊருக்குத் திரும்பும் நாளும் வர, சங்கீக்கு மனம் சோர்ந்து போனது.

அதற்குள் ஒரு வாரம் ஓடி விட்டதே! இன்னும் கொஞ்ச நாள் இவருடன் விடுமுறையைக் கழிக்க மாட்டோமா என்று ஏக்கம் போட்டு வாட்ட, தந்தையின் முகத்தை ஓர் எதிர்பார்ப்புடன் நோக்கினாள்.

மகளின் மனதில் இருந்த மனப் போராட்டம், ஆசைகள் எதுவும் புரியாத மாணிக்கம், அவளின் பார்வையைத் தவறாகப் புரிந்து கொண்டு,

"என்னடா செல்லம், ரொம்ப டயர்டா இருக்கா? நாளைக்குக் காலையிலே கிளம்பிடலாம்டா... அப்பா வுக்கும் நாளையோட லீவு முடியுது இல்லையா?" என்று வாஞ்சையுடன் அவள் தலையைக் கோத, தன் மனதில்



இருப்பதை எதையும் வெளியில் சொல்ல முடியாமல் மௌனமாக அவர் தோளில் சாய்ந்து கொண்டாள்.

அடுத்த நாள் காலையிலேயே திருச்சிக்குக் கிளம்பிய வர்களைத் தக்க உதவிகள் செய்து, காரில் ஏறும் வரை கூட விஜய்யிடம் தனியாகப் பேசச் சங்கீயின் மனம் துடித்தது. ஆனால் துணிந்து பேச அவளுடைய தைரியம் இடம் கொடுக்கவில்லை. என்னதான் பெற்றோருக்குச் செல்லப் பெண் என்றாலும், தன் மனதில் தோன்றிய காதலை, அவர்களிடம் சொல்ல முடியாமல் புழுப்போலத் துடித்தவள், கார் புறப்படத் தயாரானதும், விஜயின் பிரிவைத் தாங்க முடியாமல் கண்ணில் நீர் கோத்துக் கொள்ள, அவனை நேருக்கு நேர் பார்க்க முடியாமல் தலையைக் குனிந்து கொண்டாள்.

விஜய்க்கும் சங்கீயின் பாராமுகம் சங்கடத்தைக் கொடுக்க, முகம் சுருங்கிப் போனது. அவள் தன்னை நிமிர்ந்து பார்க்க மாட்டாளா என்று மாணிக்கம் தம்பதி யினருக்குத் தெரியாமல் அவளையே பார்த்துக் கொண் டிருக்க, அவளோ அவன் முகத்தைச் சந்திக்கத் திராணி யற்று வேறு எங்கோ பார்த்தவாறு வெறும் தலையை மட்டும் அசைத்து விடைபெற்றுக் கொள்ளவும், விஜயின் முகத்தில் ஏமாற்றம் கூடாரம் போட்டுக் கொள்ள, கை குலுக்கி விடைபெற்ற மாணிக்கத்துக்குச் சுருதியில்லாமல் விடை கொடுத்தான்.

மதுரையில் இருந்து திருச்சிவரை யாரிடமும் பேசாமல் வாய் மூடி மௌனியாகி விட்ட மகளைக் கண்டு

பெற்றவர்கள் கலங்கிப் போக மகளின் சோர்வைப் பார்க்கச் சகிக்காமல், "என்னடா கண்ணா, என்னாச்சு? ஏன் நேற்றிலிருந்து எதையோ பறிகொடுத்த மாதிரி இருக்கே...? இன்னும் கொஞ்ச நாள் ஊர் சுற்றிப் பார்க்கணும்னு ஆசையா இருக்காடா...?" என்று ஆசை மகளிடம் கேட்டுக்கொண்டே கவலையுடன் மனைவியின் முகத்தை ஏறிட்டார்.

பானுமதிக்கும் மகளின் சோர்வுக்குக் காரணம் தெரியாமல், "ஏய் சங்கீதா... இப்போ என்னாச்சு என்று இப்படி முகத்தை முழ நீளத்திற்கும் தொங்கப் போட்டுக் கொண்டு இருக்கிறே...? நீ ஆசைப்பட்டே என்றுதான் இந்தச் சுற்றுலாவே ஏற்பாடு செய்தார் அப்பா.

"இந்த ஒரு வாரமும் நன்றாகத்தானே போச்சு...! நாளைக் கழிச்சு மறுநாள் நீ காலேஜ் போக வேண்டாமா?" என்று தாய்க்கே உரிய கண்டிப்புடன் கேட்டவளை அடக்கினார் கணவர்.

"நிறுத்து பானு... அவளே சோர்ந்து போய் இருக்கிறா... என்னாச்சு கேளு என்றால் இப்படியா பிள்ளையை மிரட்டுவே...? போடி, நானே கேட்டுக்கிறேன்..." என்று தர்மபத்தினியை அடக்கிவிட்டு,

"அவ எப்பவுமே அப்படித்தான்... நீ சொல்லுடா அப்பாகிட்டே..." என்று கொஞ்ச, "ம்க்கும்..." என்று நொடித்தாள் பானு.

தாயின் முகத்தைச் சற்றுக் கலக்கத்துடன் நோக்கியவள், தாய் தன் முக பாவத்தைக் கவனிக்கும் முன்,



தந்தையின் தோளில் சாய்ந்து, "ஒன்றும் இல்லேப்பா... இந்த விடுமுறை ரொம்ப நல்லா இருந்தது. இந்த மாதிரி இதுவரைக்கும் நான் சந்தோஷமாக இருந்ததே இல்லை... அதுதான் ஊருக்குப் போகணும் என்றதும் கொஞ்சம் டல்லா ஆயிட்டேன்..." என்று புன்னகையைப் பூசிக் கொண்டு மனதாரப் பொய் சொன்னவளை நம்பினார் அந்த அப்பாவித் தந்தை.

திடீரென்று ப்ரஜித் வந்து நிற்பான் என்று எதிர்பார்க்காத சுஜி ஒரு நிமிடம் தடுமாறி, இருவரையும் பரஸ்பரம் அறிமுகம் செய்து வைத்தாள். சுஜி அறிமுகம் செய்து வைத்ததும் மரியாதை நிமித்தமாக நாகரிகமாகக் கை குலுக்க, விஸ்வத்திற்கு அவனின் செயல் பூரிப்பைக் கொடுத்தது.

"சாரி சுஜிதா... நீங்க ஏதோ முக்கியமான விஷயமாப் பேசிக்கிட்டு இருக்கீங்க போலிருக்கு... நான் அப்புறம் வந்து உங்களைச் சந்திக்கிறேன்... பை..." என்று இங்கிதத்தோடு அவளிடமும், விஸ்வத்திடமும் விடை பெற்றுக் கொண்டு சென்றவனைப் புன்னகையுடன் பார்த்து விட்டு,

"யாரும்மா இந்தப் பையன்... பார்க்க படு ஸ்மார்ட்டா இருக்கானே...!" என்று சிலாகித்துக் கேட்டதும், இதழின் ஓரம் சிறு முறுவல் தோன்றி மறைந்தது.

"அங்கிள்... உங்களிடம் அவரைப் பற்றிச் சொல்ல நான் நினைத்தேன். அதற்குள் அவரே வந்து விட்டார்..." என்று வெட்கப் புன்னகை முகத்தில் மொட்டாக மலர்ந்த

விதத்தில் விஸ்வத்தின் பார்வையில் ஒரு புதிய ஆர்வம் தோன்ற, அவரின் பார்வை, விஷயத்தை அறிந்து கொள்ளத் துடித்தது.

அவரின் ஆர்வம் அவளின் பூ முகத்தில் சிறு முறுவலைக் கொண்டு வர, ப்ரஜித்தைப் பற்றிக் கூறி, அவன் காதலையும் அதற்காக அவன் காத்திருக்கிற விஷயத்தையும் கூறியதும், விஸ்வத்திற்கு இதெல்லாம் உண்மையா? அப்படி இதெல்லாம் உண்மையாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! இந்த அப்பாவிப் பெண்ணிற்கும் ஒரு நல்ல வாழ்க்கை அமையுமே...! என்ற ஆதங்கமும் ஆசையும் போட்டி போட, "நீ என்னம்மா சொன்னே...?" என்றார் ஆவலுடன்.

"இது வரைக்கும் எதுவும் சொல்லலே அங்கிள்... ஏனென்றால் இதுவரைக்கும் அவருடைய காதலைப் பற்றி நான் கன்சிடர் பண்ணவே இல்லை..." என்றதுமே விஸ்வத்திற்கு எரிச்சல் மிக,

"ஏன்மா... அதான் அந்தப் பிள்ளையே உன்னைக் கல்யாணம் செய்துக்க ஆசைப்பட்டு உன்னை வந்து கேட்டிருக்கே... அப்புறமும் என்ன உனக்குத் தயக்கம்? பார்க்கவும் நல்ல பையனாக இருக்கிறான்... சம்மதம் என்று சொல்லி விட வேண்டியதுதானே!" என்றார்.

அவரின் பேச்சைக் கேட்டுக் கலகலவென்று சிரித்தவளைக் குழப்பத்துடன் பார்த்து, "ஏன்மா... நான் இப்போ என்ன ஜோக் சொல்லிட்டேன் என்று இப்படிச் சிரிக்கிறே...? நீ மனசு விட்டுச் சிரிச்சு நான் பார்த்துப் பல



நாள் ஆச்சு என்றாலும், இந்தச் சமயத்தில் நீ சிரிப்பதற்கான அர்த்தம் புரியலை!" என்றார் நெற்றியைச் சுருக்கி.

"ஸாரி அங்கிள்... எனக்கு நீங்க சொன்னதைக் கேட்டதும் சட்டென்று சிரிப்பு வந்து விட்டது. அதுதான் சிரித்து விட்டேன்... ஸாரி..." என்று மீண்டும் ஒருமுறை மன்னிப்புக் கேட்டு விட்டு,

"சிறிது நேரம் முன்பு அப்பா பார்த்த பிரான்ஸ் மாப்பிள்ளைக்குச் சம்மதம் சொல் என்றீர்கள்... இப்போ ப்ரஜித்தைப் பார்த்து விஷயம் தெரிந்ததும் அவரின் காதலுக்குச் சம்மதம் சொல்லச் சொல்கிறீர்கள். இவரைப் பார்த்ததும் பிரான்ஸ் மாப்பிள்ளையோட இவர் பெட்டர் என்று தோன்றி விட்டதா? வாழ்க்கையில் எப்போதுமே ஒன்றுக்கு ஒன்று உசத்தியாகத்தானே அங்கிள் இருக்கும்... அதற்காக மனசை அடிக்கடி பச்சோந்தி மாதிரி மாத்திக்க முடியாதே!" என்றாள் நிதானமாக.

"ம்ம்ம்... உன்னுடைய இந்தப் பேச்சு நீ எந்தளவிற்குப் பக்குவமான பெண் என்பதைக் காட்டுது. அதே சமயம் நான் யாதவனை விட ப்ரஜித் பெட்டர் சாய்ஸ் என்பதற்காகச் சொல்லலைம்மா... உன் அப்பன்காரன் செய்த செயலுக்கு எந்த நல்ல மாப்பிள்ளை வந்து உன்னை ஏற்றுக் கொள்ளப் போகிறானோ என்ற பயத்தில்தான் பிரான்ஸ் வரனுக்குச் சம்மதம் சொல்லச் சொன்னேன்.

"ஆனால் கடவுள் புண்ணியத்தில் ப்ரஜித்தே முன் வந்து கல்யாணம் செய்து கொள்ள ஆசைப்படும்போது, அதை ஏற்றுக் கொள்வதில் தவறே இல்லையே...! எப்போதுமே நாம் ஆசைப்படுகிறவர்களை விட நம்மைக் காதலிக்கிறவர்களை ஏற்றுக் கொண்டால் வாழ்க்கை சொர்க்கமாக அமையும் என்று சொல்வார்கள்.

"அப்படிப் பார்த்தால் ஒன்றுமே தெரியாத யாதவைத் திருமணம் செய்து கொள்வதை விட, உன் மீது ஆசைப்பட்டு உன்னையே சுற்றி வரும் ப்ரஜித்தைக் கல்யாணம் செய்து கொண்டால் உன் வாழ்வு சுகப்படும் என்பதால்தான் அப்படிச் சொன்னேன்..." என்று தன் செயலுக்கு விளக்கம் கற்பித்தவரை அன்புடன் நோக்கி னாள்.

'இவருக்கு என்ன செய்தோம்...? எப்போதும் என்னைப் பற்றியே யோசிக்கும் இவருக்கு என்ன செய்யப் போகிறேன்?' என்று தனக்குள் கேட்டுக் கொண்டு அவரைப் புன்னகையுடன் நோக்கி, "நானும் அதைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன் அங்கிள். அவரிடம் என் சம்மதத்தைச் சொல்லிவிடலாம் என்று இருக்கிறேன். ஆனால்..." என்று கொஞ்சம் வெட்கத்துடன் தன் முடிவைச் சொல்லிக்கொண்டு வந்தவள், "ஆனால்..." என்று இழுத்து நிறுத்தினாள்.

"ஆனால்... என்ன...?" என்றார் கேள்வியாக விஸ்வம்.

"அப்பாவிடம் அவர் பார்த்த மாப்பிள்ளையை வேண்டாம் என்று சொல்லி விட்டு, இப்போது ப்ரஜித்தைப்



பற்றி எப்படி அங்கிள் பேச முடியும்? அவர் தவறாக நினைக்க மாட்டாரா?" என்று சங்கடத்துடன் கேட்டவளைப் பார்த்துச் சிரித்து விட்டு,

"அடப் போம்மா... பைத்தியக்காரப் பெண்ணா இருக்கியே... அவன் என்ன தவறாக நினைக்கிறது? அந்தத் தகுதி அவனுக்கெங்கே இருக்கிறது? நீ ஒன்றும் கவலைப்படாதே! இந்த விஷயத்தைப் பற்றி நான் ரங்கனிடம் பேசிக் கொள்கிறேன். நீ முதலில் அந்தப் பிள்ளையிடம் உன் சம்மதத்தைச் சொல்..." என்றபடி எழுந்தார்.

"சரிம்மா... நான் கிளம்பறேன். நீ உன் வேலையைக் கவனி..." என்று வெளியில் வந்து செருப்பை மாட்டிய வரிடம், "அங்கிள்... ஒரு சின்ன விண்ணப்பம்..." என்று தயங்க, "சொல்லும்மா..." என்று ஊக்குவித்தார்.

"அப்பாவிடம் இப்போதைக்கு ப்ரஜித்தைப் பற்றிச் சொல்ல வேண்டாம். நேரம் வரும்போது சொல்ல லாமே...!" என்று வேண்ட, ஒரு வினாடிக்குக் குறைவாகக் கேள்வியாகப் பார்த்தவர், என்ன நினைத்தாரோ...

"உன்னிஷ்டம்..." என்ற ஒற்றை வார்த்தையோடு அவளிடம் விடைபெற்றுக் கொண்டு சென்றார்.

சிறிது நேரம் அவர் சென்ற பாதையையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு உள்ளே சென்றவளுக்கு நிறைய வேலைகள் காத்துக் கொண்டிருந்தன. இவள் மட்டுமே செய்யும் ஃபேஸ் ப்ளீச்சிங்கிற்காகக் காத்திருந்த இரண்டு

பெண்களுக்கு அந்த வேலையைச் செய்ய, அதிலேயே மூழ்கிப் போனாள்.

மணி ஏழானதும் பார்லரை மூடிவிட்டுப் பெரிய கோபுரத் தெருவில் இருக்கும் தன் வீட்டிற்குச் செல்ல ஸ்கூட்டியை ஸ்டார்ட் செய்து கொஞ்ச தூரம் சென்ற வளுக்கு, ஏனோ அடி அண்ணாமலை கோயிலுக்குச் செல்ல வேண்டும் என்று எண்ணம் உதிக்க, வண்டியைக் கிரிவலம் ரோட்டில் திருப்பினாள்.

ரமணா ஆஸ்ரமம் அருகே நெருங்கியதும் உள்ளே சென்று விட்டுப் போகலாம் என்று முடிவு செய்து வண்டியை ஆஸ்ரமத்தின் உள்ளே விட்டுப் பூட்டிவிட்டு, ரமண மகரிஷியின் சமாதியைத் தரிசித்து விட்டுக் கோயிலை ஒரு தரம் சுற்றிவிட்டு வண்டியின் அருகே வந்தவளுக்கு, அங்கு நின்று கொண்டிருந்தவனைக் கண்டதும் முகம் அவளையும் அறியாமலே வெட்கத்தில் மலர்ந்தது. அதை ப்ரஜித் பார்த்துவிடக் கூடாதே என்று பிரயத்தனப் பட்டு அவனிடம் மறைத்து,

"என்ன ப்ரஜித்... இங்கே காட்சி கொடுக்கிறீங்க...? உங்க ஆபீஸ் இங்கேதான் இருக்கா?" என்று கண்ணில் சிரிப்புடன் கேட்டவளை நோக்கிக் குறும்புடன் உதட்டைச் சுழித்தான்.

"என் மனம் கவர்ந்த தேவதை இங்கே அருள் பாலிக்கும் போது அந்த இடத்தில் என்னைத் தவிர வேறு யார் காட்சி கொடுக்க முடியும்? ம்ம்ம்..." என்று ஒற்றைப் புருவத்தைத் தூக்கி அவள் பாணியிலே கேட்ட விதத்தில்



சுஜிக்கு அதுவரை உள்ளத்தில் துடித்துக் கொண்டிருந்த சிரிப்பு வெளியே வெடித்துச் சிதறியது.

அவளின் சிரிப்பை மனம் முழுவதும் நிரப்பிக் கொண்டு, அப்படியும் ஆசை தீராமல் அவள் சிரிப்பை ரசித்துக் கொண்டே, "ஸாரி... மதியம் உங்களைத் தொந்தரவு செய்திட்டேன். ஒன்ஸ் அகெய்ன் ஸாரி..." என்று உண்மையாக வருத்தப்பட்டவனை மலர்ந்த முகத்தோடு ஏறெடுத்துப் பார்த்து,

"ச்சே... ச்சே... அப்படியெல்லாம் ஒன்றுமில்லை... இதுக்கு எதுக்கு ஸாரி...? நோ பார்மாலிட்டீஸ்...!" என்றவளை ஆழமாக நோக்கினான்.

அவனின் பார்வை சுஜியின் இதயத்தில் ஆயிரம் இசைக் கருவிகள் ஒன்றாக இசைக்க, அவனிடம் பேச நிறைய இருந்தாலும், பேச ஒன்றுமே இல்லாத மாதிரித் தோன்ற, ஓர் இனிய அவஸ்தையோடு அங்கு வந்த பக்தர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவளிடம், "அப்புறம்..." என்றான் எதையோ எதிர்பார்த்து.

அவனின் கேள்வியில் அவளின் பார்வை அவன் முகத்தை நோக்கி ஒரு குழந்தை மாதிரி தாவ, அவனின் முகத்தில் தெரிந்த ஒருவித எதிர்பார்ப்பு அவளுக்குள் இனிய சிலிர்ப்பை ஏற்படுத்தினாலும், தன் முடிவைச் சொல்ல முடியாமல் பாழாய்ப் போன வெட்கம் அவளைத் தடுத்தது.

இனியும் இங்கு நின்றால் சரி வராது என்று நினைத்து வண்டியை ஸ்டார்ட் செய்து, "நான்

கிளம்பறேன்..." என்று அவனின் முகத்தைப் பார்க்காமலேயே விடை பெற்றவளை, "ஒரு நிமிஷம்..." நிறுத்தினான்.

திரும்பியவளிடம், "எதையோ சொல்ல நினைத்துச் சொல்லாமலே போறீங்க...!" என்ற ப்ரஜித்தின் ஆழ் குரல் அவளை என்னவோ செய்ய, வண்டியை நிறுத்தினாள்.

அவனை நிமிர்ந்து பார்க்காமலே, "நான்தான் ஏற்கெனவே சொன்னேனே, நோ பார்மாலிட்டீஸ்னு..." என்று குரலே வெளியே வராமல் சொன்னவளை ஒரு நிமிடம் புரியாமல் தலையைச் சரித்துக் கண்களைச் சுருக்கிப் பார்த்தவனுக்குச் சட்டென்று அதனுடைய அர்த்தம் மண்டைக்குள் உறைக்க, அவனின் கண்ணுக்குள் ஆயிரம் மத்தாப்பூ ஒளிர்ந்தது.

"ஹேய்... யூ மீன்... யூ... லவ்... மீ..." என, சுஜிக்கு வெட்கத்தில் முகம் சிவந்து விட, தலையைக் குனிந்தபடி வெறுமே, "ம்ம்ம்..." என்று தலையை அசைக்க, அவளின் பதில் சம்மதம் அவனுள் ஆயிரம் மின்னல்களை உருவாக்க, "யாஹூ..." என்று சற்றுக் குரல் உயர்த்திக் கத்த, அங்கிருந்த மரங்களில் இருந்த மயில் திடீரென்று வந்த சத்தத்தில் பயந்து சடசட என்று பறந்து வேறு மரத்திற்குத் தாவியது.

"ஹேய்... ஷ்ஷ்ஷ்...! என்னாச்சு உங்களுக்கு...? சின்னப் பையன் மாதிரிக் கத்திக் கூப்பாடு போடறீங்க...! பாருங்க... எல்லோரும் நம்மையே பார்க்கிறாங்க. இங்கே சத்தம் போட்டுப் பேசக் கூடாதுன்னு உங்களுக்குத்



தெரியாதா?" என்று வெட்கச் சிரிப்புடன் கேட்டவளின் அருகில் குனிந்து, ஒரு கண்ணை லேசாகச் சுருக்கி,

"எனக்கு... தெரியுது... ஆனால்... என்... மனசுக்குத் தெரியலையே...!" என்று தலையைக் கோதி நிமிர்ந்து சிரித்தவனை விழி அகலப் பார்த்தாள்.

அதன் பிறகு இருவருக்கும் என்ன பேசுவது என்று தெரியாமல், இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு நிற்க, சுஜிதான் முதலில் சுதாரித்து, "சரி... நான் கிளம்பறேன், நேரமாச்சு..." என்றபடி ஸ்கூட்டியைக் கிளப்பியவளை,

"சுஜி...!" என்றழைக்க, என்ன என்று நிமிர்ந்தவளிடம், "தேங்க்ஸ்... தேங்க்ஸ் எ லாட்..." என்றான் மென்மையான புன்னகையுடன்.

அவளும் அதே புன்னகையுடன், "நோ ஃபார்மாலிட்டீஸ்..." என்று உதட்டைச் சுழித்துச் சொன்னதும், ப்ரஜித்தின் முகம் புன்னகையில் விரிந்தது.

**கா**லேஜுக்குக் கிளம்பி வெளியே வந்த மகளைக் கண்டதும் பானுமதி குழப்பமாகத் தலையிலிருந்து கால் வரை அளந்தவள், அவளைக் கேள்வியாக நோக்கினாள். தாயின் பார்வையிலிருந்த கேள்விக் குறிக்கு அர்த்தம் புரியாமல், "என்னம்மா, காலேஜுக்கு நேரமாகுது... டிபன் எடுத்து வைக்காம என்னை இப்போதான் புதுசாப் பார்க்கிற மாதிரி பார்க்கறீங்க..." என்றாள் சற்று எரிச்சலாக.

"நான் பார்க்கிறது இருக்கட்டும்... நீ ஏன் எப்போது பார்த்தாலும் சிடுசிடுவென்று பேசறே...? குற்றாலத்துக்குப்

போயிட்டுத் திரும்பி வந்ததில் இருந்து நீ என்னமோ மாதிரிதான் இருக்கே! புத்தி சரியில்லாதவங்க குற்றாலத் திற்குப் போயிட்டு வந்தா புத்தி தெளியும்...

"ஆனா உனக்கு நேர் எதிரா புத்தி கெட்டுப் போயில்லே இருக்கு! என்னடி ஆச்சு உனக்கு? உன் மனசில் இருக்கிறதை எதுவா இருந்தாலும் வெளியில் சொன்னாத்தானே தீர்வு கிடைக்கும்...?" என்ற தாயின் ஆதங்கம் மகளுக்கு எரிச்சலைக் கிளப்பியது.

"அம்மா... கொஞ்சம் நிறுத்தறியா...! இப்போ என்ன ஆயிடுச்சுன்னு இப்படிப் புலம்பிக்கிட்டு இருக்கே!" என்று அலட்சியமாகக் கேட்டவளைக் கவலையாகப் பார்த்தாள்.

"என்ன சொன்னே... நான் புலம்பறனா...? நீ வந்து நிற்கிற கோலத்தைப் பார்த்துதான் புலம்ப வேண்டிய தாக இருக்கு..." என்றதும், தன்னைக் கண்ணாடியில் பார்த்தவள், "ச்சே..." என்று தலையில் அடித்துக் கொண்டு,

"இப்போ என்ன... நெற்றியில் பொட்டு வைக்க வில்லை. கையில் வளையல் போடவில்லை, வாட்ச் கட்டவில்லை... இது ஒரு பெரிய விஷயமா? எப்போ பார்த்தாலும் அட்வைஸ் மழைதான்..." என்று முணு முணுத்தபடி, பொட்டை வைத்துக் கொண்டு, வளை யலையும், வாட்ச்சையும் கட்டிக் கொண்டு, சொல்லாமல் கொள்ளாமல் வெளியில் செல்ல, பானுமதி சோர்ந்து போய்த் தொப்பென்று சோபாவில் அமர்ந்தாள்.

எவ்வளவு நேரம் சென்றதோ, மதியம் சாப்பிட வந்த மாணிக்கம் தோளைத் தட்டியபிறகு தன்னிலைக்கு



வந்தவரிடம், "என்ன பானு... ஏன் ஒரு மாதிரி இருக்கே...? நான் வந்தது கூடத் தெரியாம அமர்ந்திருக்கே...?" என்று கேட்டதும்தான் தாமதம், முகம் அழுகையில் கசங்க, கணவரின் நெஞ்சில் சாய்ந்து அழ ஆரம்பித்தாள்.

எதற்குமே கலங்காத மனைவி திடீரென்று உடைந்து போய் அழுவதைத் தாங்க முடியாமல், அவளைத் தன்னிடமிருந்து விலக்கி, "பானு, என்னாச்சு...? ஏன் அழறே...? என்ன விஷயம் என்று சொல்லிவிட்டு அழும்மா..." என்று பதற, அவருக்குப் பதில் சொல்ல முடியாமல், மேலும் அழுகை அதிகரிக்க, மீண்டும் அவர் நெஞ்சிலே சாய்ந்து கொண்டாள்.

## 5

"காதல் வைபோகமே... காணும் நன்னாளிலே..." என்ற பாட்டை முணு முணுத்தபடியே வீட்டைச் சுத்தம் செய்து கொண்டிருந்த சுஜியை இடுப்பில் கை வைத்தபடி கண்ணில் குறும்புடன் ரசித்துக் கொண் டிருந்தாள் அஷ்வினி என்கிற அஷ்வி.

தங்கையின் முகத்தில் விளையாடிய குறும்புத் தனத்தைக் கண்டு ஹம்மிங்கை நிறுத்தி விட்டு, என்ன என்று வேண்டுமென்றே புருவத்தைத் தூக்கிக் கேட்க, புன்னகையுடன்,

"அக்கா... நானும் உன்னைக் கொஞ்ச நாளாக் கவனிச்சிக்கிட்டுதான் இருக்கேன். உன் முகத்தில் சந்தோஷமும், அதே சமயம் நிறையக் கனவும்

மிதக்குதே...! என்ன விஷயம்?" என்று அவளும் சுஜி மாதிரியே குறும்புடன் புருவத்தைத் தூக்கினாள்.

தங்கையின் கேள்வி சுஜியைத் தூக்கி வாரிப் போட, "ச்சே... ச்சே... என்ன உளர்றே அஷ்வி...? கனவும் இல்லை... நினைவும் இல்லை... நான் எப்போதும் போலத்தான் இருக்கிறேன். நீ கண்டதையும் உளறாதே! அடுத்த வாரம் உனக்கு முழுப் பரிட்சை வருதே... அதுக்குத் தயார் செய்தியா...?" என்று பேச்சை மாற்றிச் சற்றுக் கறாராகக் கேட்டாள்.

"நான் ஒன்றும் உளறவில்லை... நீதான் என்னிடம் ஏதோ மறைக்கிறே...?" என்று மனத் தாங்கலுடன் கூறி விட்டு,

"நந்தினி சொன்னா... உனக்கு அப்பா வெளிநாட்டு மாப்பிள்ளை பார்த்திருக்கிறார் என்று. சொல்லுக்கா... மாப்பிள்ளை எப்படிக்கா இருக்கிறார்? உனக்குப் பிடித் திருக்கிறதா அவரை...?" என்று மீண்டும் குழந்தையின் ஆர்வத்தோடு கேட்டவளின் அருகில் வந்து வாஞ்சையுடன் அவள் தலையை வருடினாள்.

"அக்கா உன்னிடம் ஒன்றும் மறைக்கவில்லை செல்லம்... என் மீது இவ்வளவு அன்பு வைத்திருக்கிற உங்களிடம் நான் எதற்கும்மா மறைக்கப் போகிறேன்...? அப்பா மாப்பிள்ளை பார்த்திருக்கிறது உண்மைதான்... ஆனால் இன்னும் நான் என் முடிவைச் சொல்லவில்லை. அப்படிக் கல்யாணம் முடிவானால் உன்னிடம் சொல் லாமல் வேறு யாரிடம் சொல்லப் போகிறேன்... ம்ம்ம்..."



என்று மிகவும் பொறுமையாக அந்தப் பதினாறு வயதுக் குழந்தைக்கு எடுத்துச் சொன்னவள்,

"சரி, நீ போய்ப் படி. இப்படி நீ என்னிடம் அரட்டை அடிக்கிறது சித்திக்குத் தெரிந்தால் உன்னைத்தான் கோபித்துக் கொள்வார்கள்..." என்று அவளைச் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்து விட்டு, மொட்டை மாடிக்குச் சென்று அமர்ந்தவளின் பார்வை

வானத்திலேயே நிலைத்தது.

அவளின் மனம் முழுவதும் ப்ரஜித்துதான் நிறைந் திருந்தான். சுஜி அவனிடம் தன் மனதைச் சொல்லி ஒரு மாதம் ஆகிறது. ஆனால் இன்றுவரை ஒரு தவறான பார்வையோ... பேச்சில் விரசமோ இருந்ததில்லை. சுண்டு விரலைக் கூடத் தொடாமல் பேசும் நாகரிகமும், வசதியானவனாக இருந்தும் பேச்சில் துளி பந்தாக்கூட இல்லாமலிருந்ததும் அவளுக்குத் தன் மனம் கவர்ந்த வனின் மீது மரியாதையை வளர்த்தது.

அவனிடம் பழகும் ஒவ்வொரு வினாடியும் சுஜிக்கு அவளின் வாழ்க்கையின் அர்த்தத்தைப் புரிய வைக்க, இவரையா ஒரு வருடம் புரிந்து கொள்ளாமல் இருந்தோம் என்று தன் மீதே கோபம் வந்தது.

அடுத்த வாரம் வீட்டில் தங்கள் காதலைச் சொல்லிய பிறகு வீட்டிற்குக் கூட்டிட்டுப் போகிறேன் என்றிருக் கிறார். அதுவரை அப்பாவிடமோ, வேறு யாரிடமோ இப்போதைக்குச் சொல்லாமல் இருப்பதுதான் நல்லது... என்று யோசித்தபடியே இருந்தவளை ராணியின் கட்டைக்

குரல் அழைக்க, அரக்கப் பறக்க மாடியை விட்டுக் கீழே இறங்கிச் சென்றாள்.

மனைவியின் அழுகையை எதைச் சொல்லியும் நிறுத்த முடியாமல் போனவர், அவள் அழட்டும் என்று காத்திருக்க, கொஞ்ச நேரம் கழித்துப் பானுமதியின் கண்ணீர் நின்று விசும்பல் மட்டுமே வர, அவரைத் தன்னிடமிருந்து விலக்கி, "இப்போ சொல்லு பானு... என்னாச்சு என்று அழறே... சங்கீதா காலேஜ் போயிட்டாளா? அவளுக்கு ஏதாவது...?" என்று மேலே தொடர முடியாமல் ஒரு பதைபதைப்புடன் நிறுத்தினார்.

கலங்கிய கண்களுடன் சங்கீதாவின் மாற்றங்களையும், அவள் பேசிய பேச்சுக்களையும் கூறியவள், "எனக்கென்னமோ பயமா இருக்குங்க, இப்படியெல்லாம் பேச மாட்டாளே... என்னங்க ஆச்சு நம்ம பொண்ணுக்கு... நாம சுற்றுலா போயிட்டு வந்ததில் இருந்து என்னமோ மாதிரிதான் இருக்காங்க அவ..." என்று விசும்பலுக்கிடையே சொல்லி முடிக்க, மாணிக்கத்திற்கு அப்போதுதான் பெண்ணின் மாற்றங்கள் புரிய ஆரம்பித்தன.

பானுவை ஒரு வழியாகச் சமாதானப்படுத்தி அழுகையை நிறுத்தியவர், முகவாயைத் தடவிக் கொண்டு யோசனையில் ஆழ்ந்தார். நாம் நம் பெண்ணிற்கு எந்தக் குறையுமே வைத்ததில்லையே... அப்படியிருக்க ஏன் இந்த மாதிரி நடக்கணும்...? எதுக்காக எரிஞ்சு எரிஞ்சு



விழனும்...? அவளுக்கு என்னதான் பிரச்னை...? ம்ம்ம்...! ஒரு தாயிடம் சொல்ல முடியாத அளவிற்குச் சங்கீதாவிற்கு என்ன பிரச்சினை...? என்று தனக்குள்ளே கேள்விகளில் நீந்திக் கொண்டிருந்தவரை,

"என்னங்க, ஒரு வேளை... நம் பெண் காதலிக்கிறாளோ...?" என்று குரல் நடுங்கக் கேட்ட தர்ம பத்தினியைக் கண்ணாலே எரித்து விடுபவர் போல் பார்த்தார் மாணிக்கம்.

அவரின் பார்வையை அலட்சியம் செய்து, "ஆமாங்க... நீங்க என் மேல கோபப்பட்டாலும் உண்மை அதுதான் என்று நினைக்கிறேன். காதல் வந்தால்தான் ஒரு பெண் தனிமையை நாடுவாள். என்னதான் பேரண்ட்ஸ் நண்பர்களாகப் பழகினாலும் இந்தப் பாழாய்ப் போன காதல் அவர்களை நம்மிடமிருந்து தனிமைப்படுத்தத்தான் செய்யும்..." என்ற மனைவியின் பேச்சை எரிச்சலோடு கேட்டுக் கொண்டிருந்தவர்,

"சரி... உன் வாதப்படியே வெச்சுக்குவோம்... அப்படின்னா அவளின் காதலன் யாராக இருக்கும் என்று நினைக்கிறாய்?" என்றார் அதே எரிச்சலோடு.

"உங்க கேள்விக்குச் சரியாப் பதில் தெரியலை... யாராக இருக்குமென்று நானும் யோசித்துக் கொண்டிருக்கிறேன்...!" என்றவள், ஏதோ முடிவு செய்தவளாகக் கண்ணை முந்தானையால் துடைத்துக் கொண்டு,

"கொஞ்சம் இருங்க வரேன்..." என்று மகளின் அறையை நோக்கிச் செல்ல, மாணிக்கமும் என்ன, எதற்கு என்று புரியாமலே மனைவியின் பின்னால் சென்றார்.

எதைத் தேடுகிறோம்...? எதற்காகத் தேடுகிறோம்...? என்ன கிடைக்கும்...? என்று தெரியாமலே மகளின் அறையைத் தலை கீழாகப் புரட்டியவளின் கண்கள், மகளின் அலமாரியில் அவளின் துணிகளின் கீழ் கிடைத்த ஒரு புகைப்படத்தில் அதிர்ச்சியுடன் நிலைத்தன.

அந்தப் புகைப்படத்தைக் கைகள் நடுங்க எடுத்துக் கணவரிடம் நீட்ட, என்னவென்று குழப்பத்தோடு பார்த்த வரின் கண்களும் அதிர்ச்சியில் நிலைகுத்தின.

மகளும், குற்றாலத்தில் சந்தித்த விஜய்யும் மிக நெருக்கமாகப் புகைப்படத்தில் போஸ் கொடுத்துக் கொண் டிருக்க, கணவனும் மனைவியும் அதிர்ச்சியுடன் பார்வைப் பரிமாற்றம் செய்து கொண்டார்கள்.

அவர் பார்வையில், தங்கள் பெண் தங்களுக்குத் தெரியாமல் இப்படி யெல்லாம் கூடச் செய்வாளா என்ற அதிர்ச்சி அப்பட்டமாகத் தெரிந்தது.

பானு மேலும் எதையோ எதிர்பார்த்து அவளின் அலமாரியை நோண்ட, சில கடிதங்களும் வாழ்த்து அட்டைகளும் கிடைத்தன. ஒவ்வொன்றாகப் படிக்கப் படிக்கப் பானுவின் வயிற்றில் கத்தியைப் பாய்ச்சியது போலிருக்க, "என்னங்க... நாம மோசம் போயிட்டோமே...!" என்று மீண்டும் அழ ஆரம்பித்தாள்.



மாணிக்கத்திற்கு இதை யெல்லாம் பார்த்தது அதிர்ச்சியாக இருந்தாலும்... ஏனோ தன் செல்ல மகளைத் தவறாக நினைக்கத் தோன்றவில்லை. அதனால் மனைவியின் எல்லாமே முடிந்து போன மாதிரியான அழுகை அவருக்குச் சற்றுக் கோபத்தையே கொடுத்தது.

"பானு... இப்போ என்ன நடந்திடுச்சு என்று இப்படி ஒப்பாரி வைக்கிறே...? முதலில் இப்படி அழுவதை நிறுத்து. இப்போ என்ன, நம்ம பொண்ணு ஒருத்தனைக் காதலிக்கிறா... அவ்வளவுதானே...? இது என்ன ஊர் உலகத்திலே நடக்காததா?" என்றதும், சீற்றத்துடன் நிமிர்ந்தாள் பானு.

"என்னங்க பேசுறீங்க...? ரொம்ப சாதாரணமா, காதலிக்கிறா அப்படித்தானே... என்று சொல்றீங்க... அது சரி, உங்களுக்குச் செல்லப் பொண்ணாச்சே...! அதுதான் பெண் என்ன செய்தாலும் தவறாகவே தோன்றவில்லை போலிருக்கு...! எவன் கூடவோ நெருக்கமா போஸ் கொடுக்கிறாளே... அது உங்களுக்குத் தவறாத் தெரிய வில்லையா?" என்றாள் கணவரிடம் கோபமாக.

"பானு... உன் வாயைக் கழுவு..." என்று மனைவியை அதட்டியவர், "எப்படிடி உன்னால் நம் பெண்ணை இப்படிக் கேவலமாக நினைக்க முடியுது? நான் இப்போ சொல்றேன்... என்னால் என் பெண்ணை உன்னை மாதிரிக் கேவலமா எடைபோட முடியாது... கள்ளம் கபடம் இல்லாத குழந்தை அவள். அவளைப் போய் எதிரியின் பெண் போல நினைத்துப் பேசுகிறாய்?

"நாம ஒன்றும் காதலுக்கு எதிரிகள் இல்லையே... காலேஜ் விட்டு வரட்டும். நானே கேட்கிறேன். அப்ப... அவள் காதலிப்பது உண்மையாக இருந்தால், நாமே அந்தப் பையனிடம் பேசிக் கல்யாணம் வெச்சிட்டா... போச்சு. இதுக்கு எதுக்கு கத்திக் கூப்பாடு போடறே...?" என்று மிகச் சாதாரணமாகக் கூற, பானு அவரை ஆத்திரத்துடன் முறைத்தாள்.

"ஓ...! அந்தளவுக்குப் பொண்ணு மேல நம்பிக்கை... ம்ஹூம்... அந்த நம்பிக்கையை உங்க பொண்ணு எந்தளவிற்குக் காப்பாத்துவா என்று எனக்குத் தெரிய வில்லை... உங்க பொண்ணுக்குக் கள்ளம் கபடு இல்லை என்று சொல்கிறீர்களே... அப்படின்னா, இவ்வளவு நெருக்கமா இரண்டு பேரும் சேர்ந்து போட்டோ எடுத்துக் கிட்டு இருக்காங்களே... இது எப்போது எடுத்ததாம்...? ம்ம்ம்...!" என்று எதிர்க் கேள்வி கேட்ட மனைவியை நிதானமாகப் பார்த்தார்.

"இதென்ன கேள்வி பானு...? அந்தப் பையன் நம்முடன் பாபநாசம் வந்திருந்த போது எடுத்திருப்பான். இதைப் போய்ப் பெரிசுபடுத்துறே...!" என்ற அலட்சியமான பதிலைக் கேட்டுத் தலையில் அடித்துக் கொண்டாள்.

"அப்படியா...?" என்று ஆத்திரத்துடன் கேட்டு விட்டு, "நல்லா கேட்டுக்குங்க... அவள் சுற்றுலா வரும்போது புடவையே கொண்டு வரலை. வெறும் சுடிதார்கள்தான் கொண்டு வந்தா... இதிலே அவள் புடவையில் இருக் கிறாள்... அப்படி என்றால் இது அநேகமா அவன் இங்கு



வந்திருக்கிற போது எடுத்திருக்கணும்..." என்றாள் ஆவேசமும் ஆத்திரமுமாக.

மனைவியின் ஆணித்தரமான பேச்சு சற்றுக் கோபத்தையும், எரிச்சலையும் கொண்டு வந்தாலும், "சரி, நீ சொல்றபடியே வெச்சிப்போம். இப்போ அதுக்கு என்ன?" என்று மீண்டும் அலட்சியமாகக் கேட்டவரைக் கண்கள் சிவக்க முறைத்து,

"கொஞ்ச நேரம் முன்னே உங்கள் பெண் கள்ளம் கபடு இல்லை என்றீர்களே... அப்படி இருந்திருந்தால் அந்தப் பையன் இங்கு வந்து அவளைச் சந்திப்பதை உங்கள் பெண் உங்களிடம் ஏன் சொல்லவில்லை? எதற்கு மறைக்கணும்? சரி, என்னிடம்தான் சொல்லப் பயம்... நீங்கள்தான் உங்கள் பெண்ணிற்கு ஒரு ஃபிரெண்ட் ஆச்சே! உங்களிடம் சொல்ல வேண்டியது தானே...!" என்றாள் குத்தலாக.

மனைவியின் பேச்சு மாணிக்கத்தின் உள்ளத்தில் முதன் முதலாகக் கொஞ்சம் பயத்தையும், சந்தேகத்தையும் விளைவித்தது. ஆனால் உடனே அதை ரப்பரால் அழித்து, 'ச்சே... ச்சே... இவள் கண்டதையும் நினைத்துக் குழம்பி என்னையும் குழப்புகிறாள். பெற்ற பெண்ணை நாமே நம்பவில்லை என்றால் வேறு யார் நம்புவார்?' என்று மீண்டும் வேதாளம் முருங்கை மரம் ஏறின கதையாய் மனைவியின் மீது கோபத்தை வளர்த்துக் கொண்டார்.

இனிக் கணவரை நம்பிப் பிரயோஜனமில்லை என்று உணர்ந்தவள், விடுவிடுவென்று ஹாலுக்குச்

சென்று டெலிபோனை எடுத்துப் பெண்ணின் கைபேசிக்கு அழைத்தாள்.

மனைவியின் செய்கைக்கு அர்த்தம் புரியாமல் "என்ன செய்யறே பானு... சொல்லிட்டுச் செய்...!" என்று சற்றுக் குரல் உயர்த்திக் கேட்டதும், அவரை உக்கிரமாக பார்த்து விட்டுப் பதிலைச் சொல்லாமல் மீண்டும் பல முறை பெண்ணின் கைபேசிக்கு அழைக்க முயன்றும் நாட் ரீச்சபிள் என்றே வர, சோர்வுடன் வைத்து விட்டு,

"சங்கீயின் போன் நாட் ரீச்சபிள் என்று வருது. அப்படின்னா அவள் அழைக்கும் தூரத்தில் இல்லை என்றுதானே அர்த்தம்?" என்றாள் கடுமையாக.

"ஹே... முட்டாள் மாதிரி உளறாதே! நாட் ரீச்சபிள் என்று வந்தால், அவள் போனை ஆஃப் செய்து வைத்திருக்கிறாள் என்று கூடத்தான் அர்த்தம். இது கிளாஸ் டைம்... அதனால் சுவிட்ச் ஆஃப் செய்து வைத்திருக்கலாம். இதை யெல்லாம் ஏன்தான் பெரிசுபடுத்துகிறாய் என்று தெரியவில்லை! அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்கிற மாதிரி இருக்கு உன் நினைப்பு பேச்சு எல்லாம்..." என்று கேலி செய்தவரை ஓய்ந்து போய்ப் பார்த்தாள் பானு.

"சரிங்க... உங்க ஆசைப்படியே நான் முட்டாள், லூசு, இன்னும் என்னெல்லாம் இருக்கோ அத்தனையுமாக இருந்து விட்டுப் போகிறேன். ஆனால் எனக்கு இப்பவே சங்கீதாவைப் பார்த்தாகணும். எனக்கு என்னவோ அவளுக்கு ஆபத்து என்று தோணுது! உடனே அவளை



எனக்குப் பார்த்தாகணும்..." என்று கிட்டத்தட்ட கெஞ்சிய மனைவியின் நிலை பரிதாபமாக இருந்தது.

அவளைத் தன்னோடு அணைத்து, "பானு... இப்போ ஒன்றும் பயப்படற மாதிரி நடக்கவில்லை. இப்போ உடனேயே அவளைப் பார்க்கவும் முடியாது. இது கிளாஸ் நடக்கிற டைம்... இப்போ போய் நாம அவளைத் தொந்தரவு செய்யணுமா? ம்ம்ம்... இன்னும் ஒரு இரண்டு மணி நேரம் காத்திருக்கக் கூடாதா?" என்று கனிவுடன் கேட்டவரிடம், 'ப்ளீஸ்... எனக்காக...' என்று பார்வையாலே கெஞ்ச, வேறு வழியில்லாமல் மகளின் கல்லூரிக்கு அழைத்துச் சென்றார்.

எச்.ஓ.டி.யைச் சந்தித்து கம்ப்யூட்டர் டிபார்ட்மெண்ட்டில் படிக்கும் தன் மகளைச் சந்திக்க வேண்டும் என்று கூறியதும், பியூனை விட்டு அவளை அழைத்து வரச் சொல்லியனுப்ப, அவனோ சுவரில் அடித்த பந்து போலத் திரும்பியவன்... சங்கீதா ஒரு வாரமாகக் கல்லூரிக்கே வரவில்லை என்ற குண்டைத் தூக்கிப் போட்டான்.

அன்று சனிக்கிழமை என்பதால் பெண்கள் கூட்டம் சற்று அதிகமாக வந்திருக்க, பம்பரம் போல் சுழன்று கொண்டிருந்த சுஜியை அவளின் உதவியாளினி அழைத்து, "உங்களைத் தேடி ப்ரஜித் சார் வந்திருக்கிறார்..." என, அவளிடம் வேலையை ஒப்படைத்து விட்டு, ப்ரஜித்தைத் தேடி விசிட்டர் ஹால் பக்கம் வந்தாள்.

அவள் வரும்வரை அங்கிருந்த புத்தகத்தை படித்துக் கொண்டிருந்த ப்ரஜித், சுஜியைக் கண்டதும் புன்னகையுடன் நிமிர, அவனை வரவேற்கும் முகமாக சிரித்து, "எப்போ வந்தீங்க ப்ரஜித்?" என்று கேட்டாள்.

"ஜஸ்ட் இப்போதான்..." என்றவன், "சுஜி... ஒரு கு[ட்] நியூஸ்... அம்மாவிடம் நம்மைப் பற்றிச் சொன்னேன்... உடனே உங்களைப் பார்க்கணும் என்று சொன்னாங்க... போகலாமா?" என்று கேட்டான்.

திடீரென்று வந்து அம்மா பார்க்கணும்னு சொல்றாங்க... வர்றீங்களா என்று அழைத்ததும் சுஜிக்கு ஒன்றும் புரியாமல், "என்ன ப்ரஜித்... இப்படித் திடீரென்று சொன்னால் எப்படி?" என்று தயங்க, "ஏன்...? இதில் தயங்க என்ன இருக்கு...?" என்றான் புரியாமல்.

"இல்லை... நான் ரொம்ப சாதாரணமான சேலையில் இருக்கிறேன். முதலிலேயே சொல்லியிருந்தால் அதற்கேற்ற மாதிரி உடுத்தி வந்திருப்பேன்..." என்றாள் சிறு தயக்கத்துடன்.

"ஓ...! இதுதான் உங்க தயக்கத்திற்குக் காரணமா...?" என்று அழகிய பல் வரிசை தெரியச் சிரித்து விட்டு,

"நீங்க எந்தப் புடவையில் இருந்தாலும் தேவதை மாதிரிதான் இருக்கீங்க... அதனால் தயங்காமல் வாங்க!" என்றதும், வெட்கத்தில் முகம் சிவக்க,

"ஒரு நிமிஷம் ப்ரஜித்..." என்றபடி உள்ளே சென்றாள்.



சில நிமிஷங்கள் கழித்து வெளியே வந்தவள், ப்ரஜித்துடன் அவன் காரில் கிளம்பினாள். முதல் முறையாக அவனுடன் ஒன்றாகக் காரில் செல்வதால் ஏற்பட்ட நெர்வெஸ்நெஸ் அவளை அலைக்கழிக்க, ப்ரஜித்தின் பக்கம் திரும்பக் கூச்சப்பட்டு வெளியிலே வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்தவளைக் கண்டு புன்னகைத்தவன், "என்ன சுஜி... என் கூட காரில் வருவதற்கு அவ்வளவு பயமா?" என்றான் குறும்புடன் கூடிய கேலியுடன்.

அவனின் குறும்பிற்கு லேசான முறுவலுடன், "ச்சே... ச்சே... அப்படியெல்லாம் இல்லை..." என்று மென்மையாகச் சொல்லிவிட்டு மீண்டும் வெளியே வேடிக்கை பார்க்க ஆரம்பித்தவள், சில வினாடிகள் கழித்து,

"ப்ரஜித்... உங்க வீட்டில் நம் கல்யாணத்திற்குச் சம்மதம் சொல்வாங்களா?" என்றாள் சிறு பயத்துடன்.

காதலைச் சொன்ன நாளிலிருந்து இன்றுவரை அவள் இந்தக் கேள்வியைப் பலமுறை கேட்டிருந்தாலும் இன்று அதே கேள்வி சற்றுப் பயம் கலந்து வருவதைப் புரிந்து கொண்டவன், வண்டியை ஓர் ஓரமாக நிறுத்தி, அவள் பக்கம் திரும்பி, அவளின் அனுமதியுடன் அவளின் கையைத் தன் கையில் உள்ளடக்கி, "சுஜி... என் அம்மா அப்பாவிற்கு என் ஆசைகள் தவிர வேறு எதுவுமே பெரிசு அல்ல... அந்தஸ்தை விடக் குணத்தைத்தான் விரும்புவார்கள்.

"அவர்களுக்கு நிச்சயம் உன்னைப் பிடிக்கும். அதனால் இதில் பயப்படத் தேவையே இல்லை. இருந்தாலும் உன் பயத்தை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. சப்போஸ் என் பெற்றோர் நம் கல்யாணத்திற்குச் சம்மதிக்கவில்லை என்றாலும் கூட நான் உன்னைத்தான் திருமணம் செய்து கொள்வேன். இது நிச்சயம். அதனால் வீணான பயம் வேண்டாம்... பீ ரிலாக்ஸ்ட் சுஜி..." என்ற அவன் பேச்சில் அவளுக்கு நம்பிக்கை மலர, சுஜியின் மனதிலிருந்த சஞ்சலம் மறைய, சிரிப்புக் கூட வந்தது.

அவளின் சிரிப்பைக் கண்டதும், "தட்ஸ் குட்..." என்றபடி புன்னகையுடன் வண்டியை எடுத்தவன், அவளுடன் தன் கம்பெனி விஷயங்களைப் பேசியபடி சிட்டியை விட்டுக் கொஞ்சம் தள்ளியிருந்த தன் பங்களாவிற்கு அழைத்துச் சென்றான்.

## 6

**பி**யூன் சொன்ன விஷயத்தைக் கேட்டதும், பானுமதியின் முகம் இருண்டு கணவரின் முகத்தைக் கலவரமாக நோக்க, பெண்ணின் மேல் அசையாத நம்பிக்கை வைத்திருந்த மாணிக்கத்திற்கு இந்தச் செய்தி தலையில் இடி விழுந்தது போல இருந்தது.

ஆனாலும் மனதிற்குள் நடக்கும் கலவரத்தை வெளியில் காட்டாமல் இருக்க மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தவர் மனைவியின் முகத்தைச் சந்திக்க



முடியாமல் தவிர்த்து விட்டு, எச்.ஓ.டி.யை எப்படிச் சமாளிப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தார்.

கணவன் மனைவி இருவரும் திருதிருவென்று முழிப்பதைக் கண்ட எச்.ஓ.டி., "என்ன சார்... சங்கீதா ஒரு வாரமா காலேஜுக்கு வரலை. ஆனால் நீங்கள் அவள் காலேஜுக்கு வந்த மாதிரி பார்க்கணும், கூப்பிடுங்க என்று சொல்றீங்க. வாட்ஸ் ஹாப்பெனிங் ஹியர்..." என்று கண்ணாடியைத் தூக்கி விட்டுக் கொண்டு கடுமையாகக் கேட்டார்.

தன் பெண் ஏதோ தவறு செய்கிறாள் என்று வினாடியில் புரிந்து கொண்டவர், காலேஜில் அவள் பெயர் கெட்டுவிடக் கூடாதே என்பதற்காக, "ஐ அம் ஸாரி... நாங்கதான் தவறா இங்கே வந்துட்டோம். என் பொண்ணு ஒரு மாசத்திற்கு ஏதோ முழு நேர கிளாஸாக பிரெஞ்சு கற்றுக் கொள்ளப் போகிறேன் என்று சொல்லியிருந்தாள். அதை மறந்து போய் அவளைத் தேடிக் காலேஜுக்கு வந்திருக்கிறேன்..." என்று அவரிடம் மன்னிப்புக் கோரி விட்டு, "வாம்மா பானு... போகலாம்..." என்றழைக்க, என்ன நடக்கிறது என்று புரிந்து கொள்ள முடியாமலும், கணவரின் பேச்சைத் தட்ட முடியாமலும் எச்.ஓ.டி.யிடம் விடைபெற்றுக்கொண்டு கணவரைப் பின்தொடர்ந்தாள்.

எதுவும் பேசாமல் காரில் ஏறிய கணவரைக் காளி போல் முறைத்து, "நான்..." என்று ஆத்திரத்தில் குரல் உயர்த்திப் பேச ஆரம்பித்த மனைவியை ஒரு கையாலே அடக்கி, "முதலில் வீட்டுக்குப் போகலாம்..." என்று இறுகிய

முகத்துடன் கூற, பானுவுக்கே அவரின் முகபாவனையைக் கண்டு, சர்வமும் அடங்க, மௌனமாகக் காரில் ஏறி அமர்ந்தாள்.

வீட்டை அடைகிற வரைக்கும் இருவரும் அவரவர் கவலையில் மூழ்கி மௌனமாக வந்தவர்கள் வீட்டுக்குள் வந்ததும், பானு அறைக்குள் ஓடிக் கட்டிலில் விழுந்து அழ, மாணிக்கம் சோபாவில் சோர்ந்து போய்ச் சரிந்தார்.

ஆசையையும், பாசத்தையும் கொட்டி வளர்த்த தங்கள் செல்ல மகள் இப்படிப் பெற்றவர்களின் முகத்தில் கரியைப் பூசுவாள் என்று எதிர்பார்க்காத அந்த அப்பாவித் தந்தையின் கண்கள் கண்ணீரில் நனைந்தன.

எவ்வளவு நேரம் இப்படியே கழிந்ததோ... கண்கள் சுவரில் மாட்டியிருந்த கடிகாரத்தில் பதிய, மணி இரண்டரை எனக் காட்ட, ஒரு பெருமூச்சை எடுத்து, மனைவியைத் தேடிச் சென்றார்.

கட்டிலில் படுத்து இன்னும் அழுது கொண்டிருந்த மனைவியைக் காண மிகவும் வேதனையாக இருக்க, மெதுவாகத் தொட்டதும், அழுது வீங்கிய முகத்தோடு கட்டிலிலிருந்து எழுந்தாள் பானு.

அவளின் கண்களைத் துடைத்து, "ஸாரி பானு... பெண்ணுக்கு அளவுக்கதிகமாகச் செல்லம் கொடுக்காதே என்று நீ எச்சரிக்கும் போதெல்லாம் நான் புரிஞ்சுக்கவே இல்லை. கொஞ்ச நேரத்திற்கு முன்னால் கூட உன்னைச் சமாதானப்படுத்த நினைச்சேனே தவிர, நீ சொன்னது



உண்மையாக இருக்கும்னு நான் நினைக்கவே இல்லை. நடந்தது நடந்து போச்சு. இனி எதைப் பற்றியும் பேசிப் பிரயோஜனமில்லை..." என்றதும், ஒரு நெடிய பெருமூச்சு எழுந்தது.

"அழாதே பானு... சங்கீதா வரட்டும், அவளிடம் கேட்கலாம். அதன் பிறகு என்ன செய்யலாம் என்று முடிவு செய்யறதுதான் நல்லது..." என்ற கணவரை ஆழ நோக்கி,

"ஏங்க... அவள் வருவாள் என்று இன்னும் நம்பறீங்களா...?" என்று கரைந்த குரலில் கேட்ட மனைவியைக் கேள்வியாக நோக்கினார்.

"ஏன் பானு இப்படிக் கேட்கிறே...? ஒரு வாரமா காலேஜுக்குப் போகலை என்றாலும், மாலை ஆனதும் வீட்டுக்குத்தானே வந்தாள்! அதே மாதிரி அந்தப் பையனுடன் சுற்றிவிட்டு இன்றும் வீட்டுக்கு வரத்தான் போகிறாள்!" என்றவரின் பக்கம் ஒரு பரிதாபப் பார்வையை வீசிவிட்டு,

"இல்லைங்க... எனக்கென்னமோ நம்பிக்கையில்லை... உங்க நம்பிக்கையை வீணாக்காமல் இருந்தால் ரொம்ப சந்தோஷம்..." என்றாள் விரக்தியுடன்.

மனைவியின் பேச்சு புரியாமல், "நல்லதே நினைப்போம் பானு. அழுகிறவனுக்குக் கண்ணீர்தான் நஷ்டம். ஆனால் கஷ்டப்படுகிறவனுக்கு வாழ்க்கையே நஷ்டம்!" சஞ்சலத்தோடு சொன்னவரைக் கண்ணிமைக்காமல் பார்த்தாள் பானு.

ப்ரஜித்தின் காரைக் கண்டதும் வாசலில் அமர்ந்திருந்த கூர்க்கா உடலில் ஒரு விரைப்புடன் சிறிய முதலாளிக்கு ஒரு சல்யூட் அடித்துவிட்டு, வேகமாகப் பெரிய கேட்டைத் திறக்க முடியாமல் திறக்க, கார் வெண்ணெய் போல் வழுக்கிக் கொண்டு போர்டிகோவில் நின்றது.

காரிலிருந்து இறங்கிய ப்ரஜித், சுஜி இருந்த பக்கம் வந்து, கதவைத் திறந்து, "யூ ஆர் மோஸ்ட் வெல்கம் மேடம்..." என்று இடைவரை குனிந்து சிரிப்புடன் வரவேற்க, சுஜியின் முகம் வெட்கத்தில் குங்குமச் சிவப்பானது.

"போதும் ப்ரஜித்..." என்று வெட்கத்தில் புன்னகைத்தவளை ரசித்துக் கொண்டே, "ஓகே... ஓகே... உள்ளே வா சுஜி..." என்று அழைத்து விட்டு முன்னால் நடக்க, மிரட்சியான பார்வையுடன் பங்களாவை அளவிட்டுக் கொண்டே அவனைப் பின்தொடர்ந்தவளை அமரச் சொல்லிவிட்டுத் தாயைத் தேடி மாடியேற, அவனின் தாய் ஷ்யாமளா தேவியே மாடியிறங்க, அவளின் லக்ஷ்மிகரமான தோற்றத்தைக் கண்டதும் சுஜி தானாக எழுந்து கை குவித்தாள்.

தாய்க்கும் சுஜிக்கும் பரஸ்பரம் அறிமுகம் செய்து வைக்க, சுஜி மீண்டும் கை குவித்து, "வணக்கம்மா...!" என்றாள்.

அவளின் கையை அன்புடன் பிடித்து, "பரவாயில்லைம்மா... உட்கார்..." என்று உபசரித்து விட்டு,





வேலையாளை அழைத்து ஜூஸ் கொண்டு வரச் சொல்லி விட்டு, எதிர் சோபாவில் அமர்ந்து அவளையே புன்னகையுடன் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளின் பார்வையில் நெளிந்து, "என்னம்மா அப்படிப் பார்க்கிறீங்க..." என்று வெட்கக் குரலில் கேட்டவளை மலர்ந்த முகத்துடன் நோக்கி, அவள் கையைத் தன் கைக்குள் அடக்கி, "என் மகன் உன்னைப் பற்றிச் சொன்னதை விட ரொம்பவே அழகா இருக்கேம்மா..." என்று பாராட்ட, சுஜிக்குக் கன்னங்கள் சூடாகி முகம் சிவக்க, தாயின் பக்கத்தில் சோபாவில் கைப்பிடியில் அமர்ந்து கொண்டிருந்த ப்ரஜித் பெருமையுடன் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டான்.

"உன்னைப் பற்றிக் கொஞ்சம் சொல்லேம்மா..." என்றதும், ப்ரஜித் முந்திக்கொண்டு, "அம்மா... நான்தான் ஏற்கெனவே சொன்னேனே...!" என்றான்.

அவனைச் செல்லமாக முறைத்து, "ஏம்பா... நான் சுஜியைப் பற்றிக் கேட்கக் கூடாதா?" என்று சிரிப்புடன் கேட்டு விட்டு,

"சரி, நீ போய் ஏதாவது வேலை இருந்தா பாரு... நான் கூப்பிடும் போது வந்தால் போதும்..." என அன்புக் கட்டளையிட, சுஜியிடம் கண்ணாலே விடைபெற்றுக் கொண்டு மாடிக்குச் சென்றான்.

**மா**டிக்குச் சென்று லேப்டாப்பில் ஆபீஸ் வேலையில் மூழ்கியிருந்தவன், இண்டர்காம் மூலம் தாய்

அழைத்ததும் கீழே இறங்கி வந்தவனுக்குத் தோட்டத்தில் தாயும், தன் மனதைக் கவர்ந்தவளும் சிரித்துப் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்ததும் அவன் முகமும் பூவாய் மலர்ந்தது.

அவர்கள் அருகில் நெருங்கி, தாயின் தோள் வளைவில் முகம் புதைத்து, "என்னம்மா... சுஜி என்ன சொல்றாங்க...?" என்று அவளையே பார்த்துக் கொண்டு கேட்டதும்,

"ம்ம்ம்... என் மருமகளுக்கு என்னப்பா குறை...! லக்ஷ்மிகரமா இருக்கா... புத்திசாலியா இருக்கா... குணவதியாவும் இருக்கா... இதைவிட ஒரு பெண்ணுக்கு வேறென்ன வேண்டும்...?" என்றாள் நிறைவாக.

"அப்போ சுஜியை உங்களுக்குப் பிடிச்சிருக்கு என்று சொல்லுங்க... என் செலக்ஷன் ஓகேதானே! உங்களுக்குச் சம்மதம்தானே...?" என்று சிரிப்புடன் கேட்டதும்,

"போடா போக்கிரி... உன் ஆசைக்கு நான் என்றைக்குத் தடை சொல்லப் போகிறேன். நீ எந்த முடிவு செய்தாலும் அது என்றைக்கும் சரியாகத்தான் இருக்கும். அதே மாதிரி சுஜி விஷயத்திலும் சரியாகத்தான் இருக்கும். ஸோ... சீக்கிரமே உங்க கல்யாணத்தைப் பற்றி அப்பாவிடம் பேசுகிறேன்..." என்றாள் சம்மதமாக.

அவளின் சம்மதம் சந்தோஷத்தை வாரியிறைக்க, "தேங்க்ஸ்ம்மா..." என்று அவளின் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டான்.





அவனின் குழந்தைத்தனமான செயல் சுஜிக்கு ஆச்சர்யத்தை அளிக்க, அவனையே புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தவளிடம், "இவன் எப்போதுமே இப்படித்தான்மா... இவன் இம்சை தாங்கலை..." என்று அவன் தலையை அன்புடன் கலைத்துச் செல்லமாக அலுத்துக் கொள்ள, சுஜி அவர்களின் பாசப் பிணைப்பைச் சந்தோஷமாக ரசித்துக் கொண்டிருந்தாள்.

அதன் பிறகு மூவரும் ஒன்றாகப் பேசிக் கொண்டே சாப்பிட்டு முடித்ததும், "ப்ரஜித், சுஜிக்கு வீட்டைச் சுற்றிக் காட்டுப்பா..." என்றதும், சுஜியிடம் தனிமையாகப் பேசணும் என்று துடித்துக் கொண்டிருந்தவன், தாயின் பேச்சில் உச்சி குளிர்ந்து போனான்.

அந்தப் பெரிய வீட்டை ஒவ்வொரு இடமாகச் சுற்றிக் காட்ட, ஆர்வமும், ஆச்சரியமும் போட்டி போடப் பார்த்துக் கொண்டு வந்தவள், ப்ரஜித்தின் அறைக்குள் நுழைந்ததும் எங்கிருந்தோ ஓடி வந்து வெட்கம் அவளைச் சூழ்ந்து கொள்ள, அவனின் அறையைச் சரிவரப் பார்க்காமல், "போதும், வாங்க வேற இடத்திற்குப் போகலாம்..." என்று குரலே எழும்பாமல் கூற, ப்ரஜித் அவளின் கண்களை ஊடுருவிப் பார்த்தான்.

"ஏன் சுஜி... பயமா இருக்கா? என் மேல் நம்பிக்கையில்லையா?" என்று வருத்தமான குரலில் கேட்டதும் பதறிப் போனவள்,

"ச்சே... ச்சே... அப்படியெல்லாம் இல்லை ப்ரஜித்... இது ஜஸ்ட் பெட் ரூம்தானே... இங்கு பார்க்க என்ன இருக்கு என்றுதான் சொன்னேன்..." என்றாள் தன் செயலுக்கு விளக்கமளிக்கும் முகமாக.

"ஏன் ஒன்றுமே இல்லை...? இது நீங்க சொன்ன மாதிரி ஜஸ்ட் பெட் ரூம் இல்லை... நம் கல்யாணத்திற்குப் பிறகு நம் வாழ்க்கையைச் சந்தோஷமாக வைத்திருக்கப் போகிற இடம். சரி, இந்த ரூம் உங்களுக்குப் பிடிச்சிருக்கா...? இல்லை, வேறு ஏதாவது மாற்றம் செய்யலாமா?" என்றான் ஆர்வத்துடன்.

அவன் கேட்டதும்தான் அந்த அறையை அவளின் கண்கள் அலசின. மிக அழகாக, அதே சமயம் அதிகமான பொருட்களே இல்லாமல் மிகவும் சிம்பிளாக அலங்கரிக்கப்பட்டிருந்த அந்த அறையில் குறையே கண்டுபிடிக்காத வகையில் இருக்க, "ரொம்ப அழகாக இருக்கு. இதை ஏன் அநாவசியமா மாத்தணும்..." என்று கூறிக்கொண்டே டி.வி.யின் மேல் வைக்கப்பட்டிருந்த ஒரு போட்டோவில் கண்கள் நிலைக்க, அதனருகில் சென்றாள்.

அதைக் கையில் எடுத்து ரசித்துக் கொண்டே, "ப்ரஜித்... யார் இந்தப் பையன்...? ரொம்ப ஸ்மார்ட்டா இருக்கான்...?" என்று கூறிக் கொண்டே அந்தப் போட்டோவில் தன் இதழ்களைப் பதித்தாள்.

ப்ரஜித் கலாட்டாவாகச் சிரித்து, "ஹே...! சுஜி. அந்த ஸ்மார்ட் பையன் நான்தான். ம்ம்ம்...! அந்த போட்டோவுக்குக் கொடுத்து வெச்சது எனக்குக் கொடுத்து



வைக்கலையே...!" என்று போலியாக வருத்தப்பட, சுஜி திருதிருவென்று விழித்துவிட்டு, வெட்கத்துடன், "நான் போறேன்..." என்று அறையை விட்டு வெளியில் செல்ல முயன்றாள்.

அவளின் கையைப் பிடித்துச் சோபாவில் அமர்ந்து, "ஹே...! இப்போ என்ன ஆயிடுச்சு என்று இப்படி ஓடறே...? ம்ம்ம்...! இந்த ஸ்மார்ட் பையனோட மற்ற போட்டோஸ் எல்லாம் பார்க்க வேண்டாமா...?" என்று கேட்டுக் கொண்டே, பெரிய ஆல்பத்தை எடுத்துக் கொடுக்க, அதை ஆர்வமாகப் புரட்டிப் பார்க்கப் பார்க்க, எப்போது எடுத்தது என்று அவள் பக்கத்தில் அமர்ந்து சொல்லிக் கொண்டிருந்தான்.

குழந்தையிலிருந்து இப்போது வரைக்கும் ஒவ்வொரு வருஷத்தையும் அழகாக ஆல்பம் செய்து நீங்காத நினைவுகளைப் புதைத்து வைத்துக் கொண்டிருந்த அந்தப் புகைப்பட ஆல்பம் அவளின் மனதைக் கொள்ளை கொண்டது.

பார்ன் வித் சில்வர் ஸ்பூன் என்பதால் என்னவோ குழந்தையில் அமுல் பேபி மாதிரிக் கொழுகொழு என்றிருந்த ப்ரஜித்தைப் பார்க்கப் பார்க்க, அவனை மாதிரியே தனக்கும் ஒரு குழந்தை வேண்டும் என்ற ஆசை அவளையுமறியாமலே எழுந்தது.

ஆனால் அடுத்த வினாடியே அவளின் ஆசை போகும் அபாயகரமான பாதையை அறிந்து, 'ச்சே... என்னாச்சு... நானா இப்படியெல்லாம் நினைக்கிறேன்...!'

என்று மனதிற்குள் குட்டிக் கொண்டவள் பக்கத்தில் அமர்ந்து ஆல்பத்தைக் காட்டிப் பேசிக் கொண்டிருந்தவனை அவனுக்குத் தெரியாமல் கொஞ்ச நேரம் ரசித்து விட்டு, ஆல்பத்தை மூடி அவன் கையில் கொடுத்து, "வாங்க, கீழே போகலாம் ப்ரஜித்..." என்றழைக்க அவளுடன் கீழே இறங்கினான்.

கீழே ஷ்யாமளா தேவி யாரிடமோ போனில் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்து விட்டு அவளைத் தோட்டத்திற்கு அழைத்துச் சென்று, "அப்புறம் சுஜி... உங்களுக்கு இந்த வீடு பிடிச்சிருக்கா...? ஏன் கேட்கிறேன் என்றால், எதிர்கால எஜமானியாச்சே நீங்க? உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால் மாத்திடலாம் பாருங்க..." என்று கேலி இழையோடச் சொன்னவனைப் பார்த்துச் சிரித்தாள்.

அவள் முகத்தில் தெரிந்த மலர்ச்சியைக் கண்டு கொண்டே, "சரி சுஜி... அம்மா என்ன சொன்னாங்க... இல்லை, கேட்டாங்க...?" என்றான் ஆர்வம் கலந்த எதிர்பார்ப்புடன்.

"அது தெரிஞ்சு நீ என்ன பண்ணப் போறே ப்ரஜித். பெண்கள் எங்களுக்குள் பேச நிறைய விஷயம் இருக்கும். அதையெல்லாம் எப்படி உன்னிடம் சொல்வோம்...?" என்று அவர்களைத் தேடி வந்து கொண்டிருந்த ஷ்யாமளா அவனை வேண்டுமென்றே சீண்ட, அவனின் கேள்விக்குப் பதில் சொல்ல வாய் திறந்த சுஜி, அவளின் கலாட்டாவான பதிலில் சிரிப்பை அடக்க முடியாமல் வாய் விட்டுச் சிரித்தாள்.



"அதுசரி... மாமியாரும் மருமகளும் இன்னும் கூட்டணியே அமைக்கவில்லை. அதற்குள் என்னை ஓட்டறீங்களா? நடக்கட்டும், நடக்கட்டும்..." என்றான் அதே கேலியோடு.

அதன் பிறகு கொஞ்ச நேரம் அரட்டையும் கேலியுமாகக் கழிய, மணி நான்கைத் தொட்டதும், "சரிம்மா... நான் கிளம்பறேன்... பார்லரில் வேலை இருக்கு..." என்று புறப்பட, அவளுக்கு ஒரு தட்டில் ஒரு பட்டுப் புடவை, வெற்றிலை, பூ, பாக்கு, பழம் என்று வைத்துக் கொடுக்க, சுஜிக்கு அதை வாங்கிக் கொள்வதற்குத் தயக்கமாக இருந்தது.

அவளின் பார்வை ப்ரஜித்தின் பக்கம் தயக்கத்துடன் பாய, "வாங்கிக்க சுஜி..." என்றான் பார்வையாலே.

"புடவை, பூ, குங்குமம் இவை மூன்றையும் கொடுத்தால், ஒரு சுமங்கலி கொடுத்தால் பெண்கள் வேண்டாம் என்று சொல்லக் கூடாதும்மா. அதுவும் கல்யாணமாகாத பெண்கள் கண்டிப்பாக வாங்கிக்கணும். வாங்கிக்கம்மா..." என்ற அந்தத் தாயின் கனிவான பேச்சில் மேலும் தயங்கி, அவளைச் சங்கடப்படுத்தாமல் அவள் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கிக் கொண்டு தட்டை வாங்கியவளை மனசார வாழ்த்தினாள்.

அவளிடம் விடைபெற்றுக் கிளம்பியவளிடம் தட்டில் வைத்துக் கொடுத்த புடவையை ஒரு பையில் போட்டுக் கொடுத்து, "இன்றைக்கு நீ வரப் போறே என்று தெரிந்திருந்தால் ப்ரஜித்தின் அப்பா வெளியூருக்குப்

போயிருக்க மாட்டாரு. அவர் இல்லையே என்று தவறாக நினைக்காதே சுஜி. அவர் நைட்தான் வருவார். அவரிடம் கலந்து பேசிவிட்டு, உங்க வீட்டுக்கு எப்போ முறைப்படி பேச வருகிறோம் என்று ப்ரஜித்திடம் சொல்லி அனுப்புகிறேன்மா..." என்று கூறி அன்புடன் வழியனுப்பி வைத்தாள்.

சுஜிக்கு முதலில் வீட்டிற்குள் நுழையும்போது இருந்த மிரட்சி, பயம், தயக்கம் எல்லாம் மறைந்து, அன்பும், நேசமுமே நிறைந்திருந்தது. எவ்வளவு பெரிய மனுஷங்க... இவர்களுக்கு நாம் என்ன செய்தோம்...? மகன் ஆசைப்பட்டான் என்பதற்காகத் தங்கள் நிலைமையை மறந்து அன்பாகப் பேசி உபசரித்ததும் இல்லாமல், வீட்டின் தலைவர் இல்லை என்று வருத்தப் படாதே என்கிற அந்த அற்புத மனுஷியை நோக்கிக் கை தானாகக் குவிந்தது.

காரில் ஏறி அமர்ந்ததும் அந்தத் தாயை விட்டுப் பிரிய மனமில்லாமல் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு வந்த சுஜியிடம், "அப்பா டார்ஜிலிங் வரைக்கும் போயிருக்காரு. இன்றைக்கு நைட் வந்திடுவாரு. நீ வரும் சமயத்தில் அவர் இல்லையே என்றுதான் எனக்கும் வருத்தமா இருக்கு. இட்ஸ் ஓகே! இன்னொரு நாள் அப்பாவுக்கு உன்னை அறிமுகப்படுத்தி வைக்கிறேன்..." என்று தன்னையே சமாதானப்படுத்திக் கொண்டான்.

அவளிடம் பேசிக்கொண்டே வந்தவன், சிக்னல் விழ, வண்டியை நிறுத்தி விட்டு சிக்னலுக்காகக் காத்திருந்த



சமயத்தில், ஐந்து வயதுச் சிறுவன் ஒருவன் ப்ரஜித்தின் காரின் கதவைத் தட்டி யாசகம் கேட்க, சுஜியிடம் சுவாரசியமாகப் பேசிக் கொண்டிருந்தவன், அந்தப் பையனின் குரலில் கவனம் கலைந்து திரும்பிப் பார்த்தான்.

அழுக்கான உடையில் இருந்தாலும் கண்கள் துருதுருவென்று அழகாக இருந்த அந்தப் பையனின் நிலை இருவருக்குமே வருத்தத்தைக் கொடுக்க, அவனை அருகே அழைத்து, "யார் உன் பெற்றோர்? ஸ்கூலுக்குப் போகாமல் எதற்காக இப்படி நடு ரோட்டில் யாசகம் கேட்கிறாய்?" என்று விசாரித்தான்.

"எனக்கு அப்பா இல்லை, அம்மா மட்டம்தான் சார்... படிக்க வசதி இல்லை..." என்று இப்படி எத்தனை பேரிடம் சொல்லியிருப்பானோ, அதில் ஒரு அலுப்பும் சலிப்பும் இருக்க, "சார், காசு கொடுங்க... சாப்பிட்டு நாலு நாளாச்சு..." என்று பரிதாபமாகக் கெஞ்சியவனைப் பார்க்க சுஜிக்குப் பாவமாக, அதே சமயம் கஷ்டமாக இருந்தது.

அவள் அந்தப் பையனுக்குப் போடுவதற்குத் தன் கைப்பையில் இருந்து பணம் எடுக்க, ப்ரஜித் அவளைத் தடுத்து, "வெயிட் சுஜி..." என்று கூறிவிட்டு, அவன் எங்கே இருக்கிறான் என்று கேட்டுக் கொண்டிருக்கும் போதே சிக்னல் விழுந்து விட, அவனிடம் கொஞ்சம் அங்கேயே காத்திருக்கச் சொல்லிவிட்டுக் காரை ஓர் ஓரமாக நிறுத்தி விட்டு, அந்தப் பையனை நோக்கிச் சென்றான்.

சுஜிக்கு அவன் எங்கே போகிறான் என்று புரிந்து கொள்ள முடியாததால் காரிலே காத்திருக்க, கொஞ்ச நேரம் கழித்து வந்து வண்டியை எடுத்த ப்ரஜித்திடம், "எங்கே போனீங்க...? ஏன் அவனுக்குக் காசு கொடுக்க வேண்டாம் என்று சொன்னீங்க ப்ரஜித்...? அவன் பாவமில்லையா?" என்றாள் ஆதங்கத்தோடு.

அவளின் ஆதங்கம் புரிந்தவனாக, "காசு கொடுப்பதினால் என்ன ஆகும் என்று நினைக்கிறீங்க...? இன்றைய பசி வேண்டுமென்றால் தீரும். அடுத்த வேளைக்கு அவன் மீண்டும் இப்படித்தான் ஆபத்தான இடத்தில் யாசகம் கேட்பான்.

"பசிக்கிறவனுக்கு மீனை வாங்கிக் கொடுப்பதை விட மீன் பிடிக்கக் கற்றுக் கொடுப்பதுதான் அவன் பிரச்சினையைத் தீர்க்கும் வழி. அதுதான் அவனையும், அவனுடைய அம்மாவையும் கம்பெனிக்கு வரச் சொல்லியிருக்கிறேன்..." என்று அவன் சொன்னது ஆச்சர்யமாக இருந்தாலும், கம்பெனிக்கு எதுக்கு வரச் சொல்லணும் என்று புரியவில்லை.

அவள் மனதிலிருப்பதை அப்படியே ப்ரஜித்திடம் கேட்க, "சிறுவர்களை வேலைக்கு வைத்தால் என்னைக் கைது செய்திடுவாங்கம்மா..." என்ற சிரித்தவன்,

"அவன் அம்மாவுக்குத் தகுந்த வேலை கொடுத்தால் அப்புறம் இந்த மாதிரி ஏன் மற்றவர்களிடம் யாசிக்கப் போகிறார்கள்? எங்கள் கம்பெனியில் ஏழை மாணவர்களுக்குப் படிப்புக் கொடுப்பதற்காக ஒரு ட்ரஸ்ட் இருக்கு.



அதன் மூலம் அந்தப் பையனை ஸ்கூலில் சேர்த்து விடலாம்..." என்று யதார்த்தமாகச் சொல்லிக் கொண்டு வந்தவனைப் பிரமிப்பாகப் பார்த்தாள்.

வீட்டின் வாசலில் வண்டிச் சத்தம் கேட்க, சோர்ந்து போய் ஒரு மூலையில் அமர்ந்திருந்த பானு, உடலில் சுறுசுறுப்பு வந்த மாதிரி வேகமாக வாசலுக்கு ஓட, சோபாவில் கண் மூடிச் சாய்ந்து கொண்டிருந்த மாணிக்கமும் சத்தம் கேட்டு வாசலுக்கு வேகமாக விரைந்தார்.

## 7

**வ**ண்டிச் சத்தம் கேட்டு வாசலுக்கு வந்த தம்பதியர், ஏதோ ஒரு பெண் வந்து ஸ்கூட்டியில் இறங்குவதைக் கண்டு கேள்வியாகப் பார்வைப் பரிமாற்றம் செய்து கொண்டு, "யாரம்மா நீ...?" என்று கேட்ட பானுமதிக்கு,

"ஆன்ட்டி... நான் சங்கீதாவோட தோழி. என் பெயர் ப்ரியா. இன்றைக்கு நீங்க அவளைத் தேடிக் காலேஜுக்கு வந்தது தெரிந்துதான்... உங்களைப் பார்த்து ஒரு விஷயத்தைச் சொல்லிவிட்டுப் போகலாம் என்று வந்தேன்..." என்று கூற,

"உள்ளே வாம்மா..." என்று அழைத்தாள்.

"சொல்லும்மா... என்ன விஷயமா எங்களைப் பார்க்க வந்தே?" என்று கேட்ட மாணிக்கத்துக்கு இன்னொரு சந்தேகமும் வர, "ஏம்மா... நீ காலேஜ் முடிஞ்ச

பிறகுதானே வர்றே. அப்படின்னா எங்க பொண்ணு எங்கே?" என்றார், கலவரமாக.

"அங்கிள்! அதைப் பத்தித்தான் சொல்ல வந்தேன்..." என்றவள், தன் கைப்பையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்துக் கொடுக்க... மாணிக்கம் அதை வாங்காமலே மனைவியின் முகத்தைக் கேள்வியோடு பார்த்தார்.

"அங்கிள்... சங்கீதா கொஞ்ச நாளா சரியா காலேஜுக்கு வருவதில்லை. அப்படியே வந்தாலும் கொஞ்ச நேரத்திலே ஒரு போன் வரும். உடனேயே கிளாசைக் கட் அடிச்சிட்டுக் கிளம்பிடுவா. அதே மாதிரி இன்றைக்குக் காலையில் வந்தவள் இந்தக் கடிதத்தைக் கொடுத்து உங்களிடம் கொடுக்கச் சொல்லிவிட்டு... என்ன ஏது என்று சரியாகச் சொல்லாமல் வேகமாகக் கிளம்பிட்டா..." என்று ஒருவாறாகத் தயங்கித் தயங்கி விஷயத்தைச் சொல்லி முடிக்க... மாணிக்கத்தின் முகம் இருண்டு போனது.

பானுவுக்கு ஏதோ புரிந்தது போலக் கைகள் நடுங்க... பிரியா நீட்டின கடிதத்தை வாங்கிப் படித்த வளின் முகம் முத்து முத்தாக வேர்த்து நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சரிய... பிரியா ஓடிப் போய் அவளைத் தாங்கினாள்.

மாணிக்கம் பதறிப் போய்க் கீழே விழுந்த மனைவியை ஒரு கையால் தாங்கிக் கொண்டு, ஒரு கையால் கடிதத்தை எடுத்து அவசரமாகப் படித்தவரின் முகம் பேயறைந்தது போல மாற... அப்படியே மனைவி யுடன் கீழே சரிந்தார்.



அதற்குள் தண்ணீர் எடுத்து வந்து அவர் முகத்தில் தெளித்த ப்ரியா, பானுவின் நெஞ்சை நீவி விட, கொஞ்சம் தெளிந்த பானு, கணவரின் மடியிலிருந்து எழுந்து கண்ணீருடன், "ஏம்மா... இந்தக் கடிதத்தில் இருக்கிறது உண்மையா? எங்கள் பொண்ணு உண்மையாகவே அந்தப் பையனுடன் போய் விட்டாளா? எப்போம்மா கல்யாணம்?" என்று அந்தத் தாய் உள்ளம் பாசத்தில் கசிந்துருகிக் கேட்டாள்.

அதுவரை சிலையாய்ச் சமைந்திருந்த மாணிக்கம், "ஏன் அவள் ஓடிப் போய்ச் செய்துக்கிற கல்யாணத்திற்கு நீ போய் அட்சதை போட்டு ஆசிர்வாதம் செய்யப் போறியா? போ... போயிட்டுத் திரும்ப வீட்டுக்கு வராதே..." என்று ஆவேசம் வந்தாற் போல இரைந்தார்.

அவரின் கோபத்தைக் கண்டு ப்ரியாவே அரண்டு போக... இதுவரை கணவரை இப்படி ஒரு கோபத்தோடு பார்க்காததால் அவரின் ரௌத்திரம் பானுவை அதிரச் செய்தது.

அங்கிருந்த சூழ்நிலையைக் கண்டு ப்ரியா அவர்களிட மிருந்து, வந்த வேலை முடிந்து விட்டு, விடை பெற்றுக் கொண்டு செல்ல... பானு மெதுவாக, "என்னங்க, எது எப்படி இருந்தாலும் அவள் நம்ம பெண். அவள் இப்படி யாருமில்லாத அநாதை மாதிரி கல்யாணம் செய்துக் கிறதை எப்படிங்க தாங்கிக்க முடியும்...

"அதுவுமில்லாமல் அவள் சின்னப் பெண்ணுங்க. உலக அனுபவமே இல்லாதவ. போலீசில் ஒரு

கம்ப்ளைண்ட் கொடுக்கலாங்க..." என்று பரிதாபமாகக் கெஞ்சியவளை உக்கிரமாக முறைத்தார்.

"யாரைச் சின்னப் பெண்... உலக அனுபவம் இல்லாதவள் என்று சொல்கிறாய்? ம்ம்ம்... போன மாதம் வரை தன் உடையையே செலக்ட் பண்ணத் தெரியாதவள் இன்று தன்னுடைய புருஷனையே... பெத்தவங்களை மறந்துவிட்டு செலக்ட் செய்யும் அளவிற்கு வளர்ந்திருக்கிறாள். அவளையா சின்னப் பெண் என்கிறாய்?" என்று எகத்தாளமாகவும், ஆத்திரமாகவும் கேட்டவரின் கோபம் நியாயமானதாக இருந்தாலும், தாய் உள்ளத்திற்கு அதெல்லாம் புரியாதே.

"என்னங்க..." என்று மீண்டும் பரிதாபமாகக் கெஞ்சிய மனைவியின் கெஞ்சலைக் காது கொடுத்துக் கேட்காமல்...

"இதோடு நமக்கு ஒரு பெண் இருந்தாள் என்பதை மறந்துவிடு. நமக்குக் குழந்தையே பிறக்கவில்லை என்று நினைத்துக் கொள். நான் தலை முழுகணும்..." என்று கடுமையாகக் கூறிவிட்டு விடுவிடு என்று உள்ளே செல்ல, பானுவுக்கு அவரின் வார்த்தைகள் வாயடைக்க... அதிர்ச்சியில் அப்படியே சரிந்து அமர்ந்தாள்.

**வெ**யிலில் வேர்க்க விறுவிறுக்க... அழகு நிலையத்தின் உள்ளே நுழைந்தவரைக் கண்டதும், "வாங்க அங்கிள்... எப்படி இருக்கீங்க? ரொம்ப பிசி போலிருக்கு.... ரொம்ப நாளா இந்தப் பக்கம் உங்களைக் காணவில்லை..." என்று விஸ்வத்தை வரவேற்றாள் சுஜி.



"அப்பா...! என்னமா வெயில் கொளுத்துது..." என்றவாறே அங்கிருந்த சோபாவில் அமர... அவருக்காக ஏ.சி.யை அதிகமாக்கி வைத்துவிட்டுக் குடிப்பதற்கு கூல் டிரிங்க்ஸ் வாங்கி வரச் சொன்னாள்.

கொஞ்சம் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்ட விஸ்வம், "என்னம்மா... என்னை உடனேயே பார்க்கணும் என்று நேற்று போன் செய்தாய். ஏதாவது பிரச்சனையாம்மா..." என்று கேட்டுவிட்டு, "கோயம்புத்தூரில் படிக்கும் என் பையனுக்கு எக்ஸாம் ஃபீஸ் கட்டுவதற்காக அவசரமாக அங்கே போய் விட்டேன். அதான்மா... நீ அழைத்தவுடன் என்னால் வர முடியவில்லை. சொல்லும்மா... என்ன விஷயம்? உங்கப்பன் ஏதாவது அவன் பொண்டாட்டி பேச்சைக் கேட்டுக்கிட்டு உன்னிடம் பிரச்சனை செய்தானா?" என்று சற்றுக் கோபமாகக் கேட்டார்.

சுஜி அவசரமாக, "ஐயோ... அங்கிள்! ஒரு பிரச்சனையுமில்லை. ஒரு நல்ல விஷயத்தைப் பத்திச் சொல்லத்தான் உங்களை அழைத்தேன்..." என்று கூற, என்ன என்று கேள்வியாகப் பார்த்த அந்த அன்பு மனிதரிடம் விஷயத்தைச் சொல்ல முடியாமல் தடுமாறி முகத்தில் நாணம் வந்து சூழ்ந்து கொள்ள... அனுபவஸ்தரான அந்த மனிதருக்குச் சுஜி சொல்லப் போகும் விஷயம் என்னவாக இருக்கும் என்று புரிந்து கொள்ள முடிந்தது.

அவளின் வெட்கத்தைக் கண்டு சந்தோஷமாகச் சிரித்து, "என்ன சுஜிம்மா... இப்பவே உன் முகத்தில்

கல்யாணக் களை தெரியுதே... அப்படின்னா உன் விஷயம் ப்ரஜித்திடம் ஓகே ஆயிடுச்சு என்று சொல்லு..." என்று அவளை நையாண்டி செய்ய... சுஜிக்கு அவரின் கேலியில் மேலும் ரத்தமென முகம் சிவந்தது.

"அங்கிள்... ப்ளீஸ் கிண்டல் செய்யாதீங்க..." என்று சிணுங்கிவிட்டு, "ப்ரஜித் அவர் வீட்டுக்கு அழைத்துப் போய் அவர் அம்மாவுக்கு அறிமுகம் செய்து வைத்தார் அங்கிள். கோடீஸ்வரங்க என்ற எந்தப் பந்தாவுமில்லாமல் அவங்க என்னிடம் காட்டிய அன்பும், அவங்களுடைய எளிமையும் எனக்கு ரொம்ப ஆச்சரியமாக இருந்தது. ஷீ இஸ் எ ஜெம் ஆஃப் எ பெர்சன் அங்கிள். அதுமட்டுமில்லை. ப்ரஜித்தின் அப்பா அந்தச் சமயத்தில் இல்லை என்ப தற்காக என்னிடம் அவங்க மன்னிப்புக் கேட்ட விதம்... இதெல்லாம் இன்னும் கூட எனக்கு ஆச்சரியமாக இருக்கு அங்கிள். நான் சந்திச்சது ஒரு மனுஷியை இல்லை... ஒரு தேவதையை..." என்று கண்கள் விரிய ஆர்வமாகச் சொல்லிக் கொண்டு வந்தவள், விஸ்வத்தின் கண்களில் தெரிந்த சிரிப்பைக் கண்டு பேச்சை நிறுத்தி, "என்ன அங்கிள்?" என்று வெட்கத்துடன் கேட்டாள்.

"ஒன்றுமில்லைம்மா... உன்னை இந்த மாதிரிப் பார்க்கணும் என்று எத்தனை நாள் ஆசைப்பட்டிருக்கேன் தெரியுமா? அது இன்றைக்கு நடக்கும்போது எனக்கும் உன் சிரிப்பு தொத்திக்கிச்சு சுஜிம்மா..." என்று மீண்டும் வாய் விட்டுச் சிரித்தார்.



"சரிம்மா... ப்ரஜித்தின் அம்மா உங்க கல்யாணத் திற்குச் சம்மதம் சொன்னாங்களா?" என்று விஷயத்திற்கு மீண்டும் வர,

"ஆமாம் அங்கிள். அவங்களுக்கு என்னை ரொம்பப் பிடிச்சுப் போச்சு. ப்ரஜித் அப்பாவிடம் பேசிவிட்டு ப்ரஜித்திடம் எப்போது முறைப்படி பெண் பார்க்க வருகிறோம் என்று சொல்லி அனுப்புகிறேன் என்று சொன்னார்கள்..." என்று வெட்கமும், பெருமையும் கண்களில் மின்னச் சொன்னவளை, வாஞ்சையுடன் அவளின் தலையைத் தடவினார்.

"உன்னை யாருக்காவது பிடிக்காது போகுமா? அப்படி உன்னைப் பிடிக்கவில்லை என்றால்... அவர்களுக்குக் கண்ணில்லை என்றுதான் அர்த்தம்..." என்ற அவரின் வார்த்தைகள் அதுவரை சிரித்த முகத்துடன் இருந்த சுஜியை வாடிப் போக வைத்தது.

அந்தப் பேதைப் பெண்ணின் முக வாட்டத்தைக் கண்டு பதட்டத்துடன், "என்னம்மா?" என்று விசாரிக்க,

"அப்புறம் ஏன் அங்கிள்... என் சித்திக்கு என்னைப் பிடிக்காமல் போச்சு? அவங்களுக்குத்தான் நன்றாகக் கண் தெரியுமே..." என்று மிகவும் இன்னோசென்ட்டாகக் கேட்ட பெண்ணின் கண்ணில் கண்ணீர் கசிவதைக் காணச் சகிக்காமல், "ம்ஹூம்... நான் சொன்னது மனிதர் களைப் பற்றி... மிருகங்களைப் பற்றி அல்ல..." என்றார் காட்டமாக.

"சரிம்மா... நீ ஏதோ என்னிடம் சொல்ல வந்தியே... அதைச் சொல்லு!" என்று ஞாபகப்படுத்த... கண்களைத் துடைத்துக் கொண்டு,

"ப்ரஜித்தைப் பற்றி அப்பாவிடம் சொல்லணும் அங்கிள்..." என்று அவர் முகத்தைப் பார்க்க, அவள் சொன்ன விஷயத்தை உள்வாங்கிக் கொண்டு யோசனையாக முகவாயைத் தேய்த்தார்.

"சுஜி, எனக்கு என்ன யோசனை என்றால் இப்போதைக்கு ரங்கனிடம் எதுவும் சொல்ல வேண்டாம் என்று நினைக்கிறேன். முதலில் பரஜித்தின் வீட்டிலிருந்து எப்போது பெண் பார்க்க வருகிறார்கள் என்று சொல்லட்டும். அந்த நெருக்கடியில் சொல்லிக்கலாம்..." என்று தன் கருத்தைச் சொல்லிக் கொண்டு வந்தவர், சுஜியின் புரியாத பார்வையைக் கண்டு, "என்னம்மா... எதுக்குன்னு புரியலையா?" என்று கனிவாகக் கேட்டார்.

ஆமாம் என்ற அவளின் தலையாட்டலைத் தொடர்ந்து, "சுஜிம்மா... இப்போ நாம உன் கல்யாண விஷயத்தை அவனிடம் பேசினால் அவன் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் அந்த ராட்சசியிடம் உளறி வைத்து விடுவான். அவள்தான் கூனியாச்சே... ஏதாவது செய்து உன் கல்யாணத்தை நிறுத்திவிடுவாள்.

"அதனால் முதலில் ப்ரஜித்திடமிருந்து நல்ல விஷயம் வரட்டும். அப்புறம் நான் பார்த்துக் கொள்கிறேன். இதைப் பற்றி நீ கவலைப்படாதே..." என்று அவளுக்கு



மிகவும் மென்மையாக எடுத்துக் கூற... புன்னகையுடன் சம்மதித்தாள்.

சிறிது நேரம் அவளிடம் மற்ற விஷயங்களைப் பேசிவிட்டுக் கிளம்பிய விஸ்வம் வெளியே செல்வதற்கு முன், "உன்னை ஆன்ட்டி பார்க்கணும் என்று சொன்னாள். நேரம் கிடைத்தால் வந்துவிட்டுப் போம்மா..." என்று விடைபெற்றுச் செல்ல... மெல்லிய தலையசைப்பில் விடை கொடுத்தாள்.

**தான்** கொண்ட காதலால் சுயநலத்துடன் பெற்றவர்களை மறந்து... பெண் ஓடிப் போனதால் கடவுளால் ஆசிர்வதிக்கப்பட்ட அந்த இனிய குடும்பம் சிதைந்து போனது. மகள் போனதிலிருந்து வீட்டிலிருந்த சந்தோஷமும் அவளுடன் சென்ற மாதிரியே வீட்டைச் சூன்யம் சூழ்ந்து கொண்டது.

மாணிக்கம் வெளியே தலை காட்ட முடியாமல், அவமானத்தில் யாரையும் சந்திக்க முடியாமல், நேருக்கு நேர் நின்று பேச முடியாமல், ஓடி ஒளிய, அப்படியும் வம்பு பேசுவதற்கென்றே பிறந்த சில நல்ல உள்ளங்கள் அவரை வேண்டுமென்றே தேடி வந்து அக்கறையாகத் துக்கம் விசாரிப்பது போல, காக்கை எருதுவின் புண்ணை அலகால் கொத்திக் காயப்படுத்துவது போல, அவர்கள் மாணிக்கம் தம்பதியைக் காயப்படுத்தி எள்ளி நகையாட, இருவரும் ஓய்ந்து போனார்கள்.

என்னதான் கம்பீரமான ஆம்பிளையாக இருந்தாலும், விதியின் திருவிளையாடல்களால் மாணிக்கம்

மனம் ஒடிந்து போக, பானுவோ பெண்ணின் அருமை பெருமையான செயலால் உடலால் நலிந்து போனாள்.

சரியாகச் சாப்பிடாமல், சிரிப்பு என்பதையே மறந்து, எப்போதும் விட்டத்தையே வெறித்துக் கொண்டிருந்த மனைவியின் நிலையைக் கண்டு பயந்து, இனியும் இங்கேயே இருந்தால் தன் துணையையும் இழந்து விடுவோமோ என்ற பயம் அவரை ஆட்கொள்ள... திருச்சியை விட்டுச் சென்னை போவதென முடிவெடுத்தார்.

அதன்படி எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டு, சென்னையிலிருந்த ஒரு நண்பருக்கு எப்போது வருகிறோம் என்று போனில் சொல்லிக் கொண்டிருந்தவர், வாசலில் நிழலாடுவதைக் கண்டு, போனை வைத்து விட்டு, யாரென்று பார்த்ததும் கோபத்தில் ரத்தம் ஜிவ்வென்று தலைக்கேறியது.

"பானு... பானு..." என்ற கணவரின் கோபக் குரல் கேட்டுப் பூஜையறையில் இருந்து வெளியில் வந்தவள், வாசலில் தன் அருமை மகளைக் கண்டதும் அவளையும் அறியாமல் பாசத்தில் கண்கள் ஊற்றெடுக்க... "சங்கீதா..." என்று அவளை நோக்கிச் சென்ற மனைவியைக் கை நீட்டித் தடுத்தார்.

"யார் இவங்க? எதுக்காக இங்கே வந்தாங்க என்று கேள். இன்னும் உயிரோடு இருக்காங்களா... இல்லை, செத்தாங்களா என்று பார்க்க வந்தார்களா?" என்ற கணவரின் கோபமான வார்த்தைகள் பானுவை நிலை குலைய வைத்தன.



"என்னங்க... என்னென்னமோ பேசறீங்க? என்ன இருந்தாலும் அவ நம்முடைய பெண். நம்ம ரத்தம். இப்படி வீட்டுக்கு வந்த பெண்ணை வாசலிலேயே நிற்க வைச்சுப் பேசறீங்களே..." என்று அழுகையுடன் கெஞ்சியவளைத் தீயாய் உறுத்து விழித்தார்.

"என்ன பானு இவள்... என்னமோ நம் ஆசிர்வாதத்துடன் சந்தோஷமாகக் கல்யாணம் செய்து கொண்டு போன மாதிரியும், நான் என்னமோ இவளை வெளியில் நிற்க வைச்சுக் கேள்வி கேட்ட மாதிரியுமல்லவா இருக்கு உன் பேச்சு..." என்று மிக மிக நக்கலாகக் கேட்டவர்,

"இவள் செய்தது எல்லாம் மறந்துட்டியா? இல்லை, நீயும் நானும் அனுபவித்த அவமானங்கள் எல்லாம் உனக்கு மறந்து போச்சா? எங்கே போனாலும், அவ்வளவு ஏன், வீட்டிலே அடைந்து கிடந்தாலும்... தேடி வந்து உன் பொண்ணு ஓடிப் போயிட்டாளாமே... என்று எள்ளி நகையாடறாங்களே... அதை மறந்திட்டியா? இதோ உருக்குலைந்து போய்க் கிடக்கிறியே... இதற்கு என்ன காரணம் என்பது மறந்து போச்சா?" என்ற அவரின் ஆவேசமான கேள்விகளுக்குத் தகுந்த பதில் சொல்ல முடியாமல் வாயடைத்துப் போனாள்.

அதுவரை எதுவும் பேசாமல் விஜய்யுடன் தலை குனிந்து நின்றிருந்த சங்கீதா முன் வந்து, "டாடி, நாங்க செய்தது தவறுதான். உங்களின் கோபத்தை எங்களால் புரிந்து கொள்ள முடிகிறது. நீங்கள் எங்களை வெட்டிப்

போட்டாலும் தகும். அதற்காக எங்களைத் தயவு செய்து ஒதுக்கிடாதீங்க ப்ளீஸ்..." என்று அவர் காலில் விழுந்து அழுதவள், தாயைக் கண்ணீருடன் நிமிர்ந்து பார்த்து,

"அம்மா... என்னை மன்னிச்சிடும்மா... நான் வேண்டுமென்றே இப்படிச் செய்யவில்லை. என் மேலே அசாத்திய நம்பிக்கை வைத்திருந்த உங்களிடம் என் காதலைச் சொல்லத் தைரியம் வரவில்லை. அதுதான் இப்படி ஒரு தவறைச் செய்துட்டேன்..." என்று அழுதவளை, அவள் செய்த தவறுகளை எல்லாம் மறந்து நெஞ்சோடு தூக்கி அணைத்துக் கொள்ள அந்தப் பேதை உள்ளம் துடித்தது.

ஆனால் கணவரின் உக்கிரமான கோலத்தைக் கண்டு பயந்து, எதையும் செய்ய முடியாத இயலாமையுடன் பரிதாபமாகக் கணவரின் முகத்தைப் பார்க்க... "யாரும் எங்களைப் புரிஞ்சிக்க வேண்டாம். மன்னிப்பும் கேட்க வேண்டாம்..." என்று வெறுப்பாகக் கூறிவிட்டு,

"ம்ஹூம்... பிறந்ததிலிருந்து தாவணி போடும் பருவம் வரும்வரை பெத்தவங்க வேண்டும். தேவையானதைச் செய்து கொடுக்கவும் வாங்கிக் கொடுக்கவும் தாயும் தகப்பனும் வேண்டும். உங்களுக்கு ஒரு வயசு வந்த பிறகு யார் எப்படி ஒழிஞ்சு போனால் நமக்கென்ன... என்று காதல் என்ற பெயரில் பெத்தவங்களுக்குக் கொள்ளி வைச்சிட்டு எவன் கூடவோ ஓடிட வேண்டியது...

"அப்புறம் திடீர்னு ஒரு நாள் வந்து நாங்க செய்த தவறை யெல்லாம் மன்னிச்சிடுங்க... என்று காலில்



விழுந்தால் செய்தது எல்லாம் இல்லை என்றாகிவிடுமா? இல்லை, பெற்றவர்கள்தான் என்ன இளிச்சவாயர்களா? உங்களை உடனேயே எல்லாவற்றையும் மறந்து ஏற்றுக் கொள்வதற்கு...

"உங்களை மாதிரிச் செய்யறத எல்லாம் செய்துவிட்டு எல்லாவற்றையும் மறந்து ஈஸியா மன்னிப்புக் கேட்கிற மாதிரி எங்களால் முடியாது. அப்படி மன்னிக்கிறதுக்கு நாங்கள் மகாத்மா இல்லை. வெறும் ஆத்மாக்கள்..." என்று ஆத்திரமும் கேலியுமாகப் பேசப் பேச... பானுவுக்குக் கணவரின் வலியை நினைத்து அழுவதா... அருமை பெருமையாயப் பெற்றுச் சீராட்டி வளர்த்த மகளை ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் இருப்பதை நினைத்து அழுவதா... என்று தெரியாமல் பரிதவித்துப் போனாள்.

அதுவரை அவர் பேசுவதைத் தலை குனிந்து நின்று கேட்டுக் கொண்டிருந்த விஜய், கீழே விழுந்து அழுது கொண்டிருந்த மனைவியைத் தூக்கியபடி, "சாரி அங்கிள். உங்க கோபம் நியாயமானதுதான். நாங்க செய்த தவறு சாதாரணமானது அல்ல... நான் குற்றாலத்தில் உங்க குடும்பத்தைப் பார்த்துப் பழகிய போதே, நீங்க காட்டின அன்பும், அக்கறையும் என்னை நெகிழ வைத்தது. அனாதையான எனக்கு இப்படி ஒரு குடும்பம் உறவாக இருந்தால் அதுவும் நெருங்கின உறவாக இருந்தால்... எவ்வளவு நன்றாக இருக்கும் என்ற ஆசையும் வந்தது.

"அதனால் என்னவோ... அதுவரை கல்யாணம் என்ற நினைவே இல்லாமல் இருந்த எனக்கு உங்க மகள்

சங்கீதாவைப் பார்த்ததும், அவளைக் கல்யாணம் செய்து இந்தக் குடும்பத்தில் நானும் ஒருத்தனாக மாறணும் என்ற ஆசை வந்தது. நீங்கள் ஊர் திரும்பிய பிறகு உங்களின் ஞாபகம் எனக்கு அதிகமாக... நீங்க கொடுத்த முகவரியை வைத்து இங்கே வந்து சங்கீதாவைச் சந்தித்தேன்..." என்றதும், மாணிக்கத்தின் முகத்தில் வெறுப்பு தாண்டவமாடியது.

"அஃப்கோர்ஸ்... நான் செய்தது தவறுதான். முறைப்படி உங்களைத்தான் சந்திச்சிருக்கணும். ஆனால் என் மனசு சங்கீதாவைத் தேடிப் போயிடுச்சு. நானும் பலமுறை சங்கீதாவிடம் சொல்லியிருக்கிறேன். அம்மா, அப்பாவிடம் காதலைப் பற்றிச் சொல் என்று. ஆனால் அவளுக்கு உங்களிடம் தன் காதலைப் பற்றிச் சொல்லப் பயம். அதனால் அப்புறம் சொல்கிறேன் என்று தள்ளிப் போட்டுக் கொண்டு வந்தாள்..." என்றதும், பெரியவரின் பார்வை... நீ அவ்வளவு நல்லவனா என்று கேலியாக நோக்க... கண்களோ குளம் கட்டின.

அவன் தொடர்ந்து, "உங்களிடம் எங்கள் காதலைப் பற்றிச் சொல்லிக் கல்யாணத்திற்குச் சம்மதம் கேட்கலாம் என்றிருந்த சமயத்தில்..." என்று தயங்கி நிறுத்த... அதுவரை எரிச்சலாக அவன் பேசுவதைக் கேட்கப் பிடிக்காமல்... பார்வையை எங்கேயோ பதித்தபடி அசுவாரசியமாகக் கேட்டுக் கொண்டிருந்தவர் விஜய்யின் முகத்தைக் கேள்வியாக நோக்கினார்.



அவர் பார்வையின் தீர்க்கத்தைத் தாங்க முடியாமல் தலையைக் குனிந்தபடி, "இரண்டு பேரும் நெருங்கிப் பழகினதால்..." என்று தடுமாறியவன்,

"சங்கீதா கன்சீவ் ஆனதால் உடனேயே கல்யாணம் செய்யச் சொல்லிச் சங்கீதான் என்னை நெருக்கி விட்டாள். நாங்க செய்தது தப்புதான். ஆனால் அது ஒரு வேகத்தில் நடந்துவிட்டது. இப்போதான் புரியுது. நாங்க செய்தது இமாலயத் தவறு என்று. இப்போ கூட சங்கீ உங்களைப் பார்க்கப் பயந்தாள். நான்தான் எது நடந்தாலும் அதை ஏற்றுக்கொண்டுதான் ஆகணும் என்று தைரியம் சொல்லி அழைத்து வந்தேன்..." என்று ஒரு வழியாகச் சொல்லி முடிக்க...

பானுவுக்குத் தன் மகள் கருவுற்றிருக்கிறாள் என்ற செய்தியைக் கேட்டதும், அதுவரை ஜீவனே இல்லாத கண்ணில் உயிர் வர... ஆர்வமாக மகளின் முகத்தை நோக்கினாள்.

## 8

**கா**லிங் பெல் சத்தம் கேட்டு மதியச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு, தன் இரட்டைச் சரீர உடம்பை அப்போதுதான் கட்டிலில் சாய்த்த ராணி, "ச்சே... யாரது? இந்த வேளை கெட்ட வேளையில். நிம்மதியாத் தூங்கக் கூட விட மாட்டேங்கிறாங்களே..." என்று புலம்பியபடி கதவைத் திறந்து, "யார்யா நீ... உனக்கு என்ன வேண்டும்?" என்று யாரென்று தெரியாத அந்தப் புதியவரிடம் பாய்ந்தாள்.

"அம்மா... நான் புரோக்கர்ம்மா... ரங்கன் சார் என்னிடம் பெண்ணுக்கு நல்ல வரன் கொண்டு வரச் சொல்லியிருந்தார். நானும் ஒரு பிரான்ஸ் மாப்பிள்ளையைக் கொண்டு வந்தேன்.

"ஆனால் இதுவரைக்கும் அவரிடமிருந்து எந்தப் பதிலும் இல்லை. மாப்பிள்ளை வீட்டில் என்னை நச்சரிக்கிறாங்க.... அதான் சாரைப் பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன்..." என்று ஒரே மூச்சில் தான் வந்த விஷயத்தைச் சொல்லச் சொல்ல...

ராணியின் வயிறு தீயணைப்புப் படையே வந்தாலும் அணைக்க முடியாத அளவிற்குப் பொறாமையில் எரிந்தது.

'என்னிடம் சொல்லாமல் மூத்தாளுடைய பெண்ணுக்கு மாப்பிள்ளை... அதுவும் பிரான்ஸ் மாப்பிள்ளை பார்க்கிறாரா? எவ்வளவு நெஞ்சழுத்தம் அந்தாளுக்கு... வரட்டும். அவனை ஒரு கை பார்க்கிறேன்...' என்று கணவரை மிகவும் மரியாதையாக விளித்து மனதினுள் கறுவினாள், அவருடைய ஆசை மனைவி.

தன் நல்ல எண்ண ஓட்டங்களை வெளிப்படுத்தாமல், புரோக்கரிடம் மிகவும் நல்ல பெண்மணி போல...

"ஓ! ஆமாமா... என்னிடம் கூட சொல்லிக்கிட்டு இருந்தார். நான்தான் மறந்தே போய்விட்டேன். அவர் இன்னும் ஆபீசிலிருந்து வரலை. நீங்க உள்ளே வாங்க..." என்று அழைத்து அமர வைத்து, அவரை உபசரித்தாள்.

"ஐயா, நீங்க கொண்டு வந்த வரன் நல்ல வரன்தான். ஆனால் என்ன செய்வது... எங்கள் பெண்ணுக்குப் பிடிக்கவில்லையே! அவளுக்கு உள்ளூரிலேயே மாப்பிள்ளை வேண்டுமாம். அதனால் நீங்க இங்கேயே ஏதாவது நடுத்தரக் குடும்பமாக இருந்தாலும் போதும். கொண்டு வாங்களேன்..." எனப் பச்சைச் சிரிப்பு சிரித்துக் கொண்டு சொன்னவளை... யோசனையாக ஏறிட்டுப் பார்த்தார் புரோக்கர்.

"என்னம்மா நீங்க... எல்லோரும் தங்கள் பெண்ணுக்கு வெளிநாட்டு மாப்பிள்ளை அமையாதா என்று ஆசைப்படுவாங்க. நீங்க என்னடாவென்றால் வலிய வர சீதேவியை வேண்டாம் என்று சொல்றீங்க..." என்று சொல்லி முடிப்பதற்குள்,

"யோவ்! என் பெண்ணுக்குத்தான் பிடிக்கவில்லை என்று சொன்னேனே... அப்புறமும் என்ன? கிளிப்பிள்ளைக்குச் சொல்ற மாதிரி... சொன்ன விஷயத்தையே கீறல் விழுந்த ரெகார்ட் மாதிரிச் சொல்லிக்கிட்ட இருக்கே..." என்று புரோக்கர் மேலே பாய... அந்த மனிதர் சற்று அரண்டுதான் போனார்.

இதுவரை கிடைத்த மரியாதையே போதும் என்று நினைத்தாரோ என்னவோ... "சரிம்மா, உங்கள் இஷ்டம்..." என்று எழுந்து சென்றவரை அழைத்தாள்.

'இப்ப என்ன சொல்லப் போகுதோ...' என்ற பயத்துடன் திரும்பியவரைச் சமாதானப்படுத்தி, கையில் ஒரு நூறு ரூபாயை அழுத்தி, "எங்க சொந்தத்திலே

மாப்பிள்ளை இருக்கு. நீ எதுவும் கொண்டு வர வேண்டாம்..." என்று அவரை அனுப்பி வைத்துவிட்டு, கணவரின் வருகைக்காக ஆத்திரத்துடன் காத்திருந்தாள்.

'இந்த இடம் அமைஞ்சிருந்தா இரண்டு இடத்திலிருந்தும் கொஞ்சம் காசு பார்த்திருக்கலாம். ம்ம்ம்... கொண்டு வந்த மாப்பிள்ளையைப் பற்றிப் பேசினாலே அந்தம்மா இப்படி பத்ரகாளி மாதிரி ஆடுது...' என்று முனகிக் கொண்டே சைக்கிளை மிதித்துக் கொண்டு சென்று கொண்டிருந்தவர், எதிரே விஸ்வத்தைக் கண்டு சைக்கிளிலிருந்து இறங்கினார்.

"என்னய்யா பொன்னுசாமி... உனக்குள்ளே புலம்பிக்கிட்டே வர்றே... வீட்ல சாப்பாடு போட மாட்டேன் என்று சொல்லிட்டாளா, உன் பொஞ்சாதி?" என்று சிரிப்புடன் கேட்டவரை நோக்கி,

"அட... நீங்க வேறங்க... நேரம் காலம் தெரியாமல் கேலி பண்றீங்க..." என்று அலுத்துக் கொண்டார் புரோக்கர்.

"என்னய்யா புரோக்கர்... இன்றைக்குச் சலிப்பு ஜாஸ்தியா இருக்கு? என்ன யாராவது கமிஷன் தராமல் ஏமாத்திட்டாங்களா?" என்று மீண்டும் கேலி செய்தார் சிரிப்புடன்.

"பின்னே என்னங்க... உங்க நண்பர் ரங்கன் தன் பெண்ணுக்கு நல்ல வரனா கொண்டு வா என்கிறார். அவர் மனைவி வரனே தேவையில்லை. எங்கள்



சொந்தத்திலே பையன் இருக்கிறான் என்று சொல்றாங்க. இவங்க ரெண்டு பேர் அடிக்கிற கூத்திலே எனக்கு ரெண்டு பக்கமும் கமிஷன் போச்சே என்ற கவலைதான்..." என்று அவருடைய பிரச்னையைக் கூற, விஸ்வத்திற்குச் சகலமும் புரிந்து போனது.

'சோ... சுஜிக்கு மாப்பிள்ளை பார்க்கிற விஷயம் பத்ரகாளிக்குத் தெரிந்துவிட்டதா? அதைத் தடுக்க இப்படிச் சகுனி வேலை பார்க்கிறாளா? இருக்கட்டும்... இருக்கட்டும். இதுவும் நல்லதிற்குத்தான். நான் கவனிச்சுக்கிறேன்...' என்ற அவரின் யோசனையில் குறுக்கிட்டார் புரோக்கர்.

"என்ன சார்... நான் பாட்டுக்குப் பேசிக்கிட்டு இருக்கேன். நீங்க ஏதோ யோசனையிலே இருக்கீங்க. சரி, நான் கிளம்பறேன். மேலும் இரண்டு இடம் போனால்தான் என் பொழப்பு ஓடும்..." என்று சைக்கிளில் ஏற...

"சரி, நீ போ. நான் அப்புறமா உன்னிடம் பேசுகிறேன்," என்று தன் பைக்கைச் சீற விட்டார்.

மணி எட்டாகியும் இன்னும் இழுத்துப் போர்த்துக் கொண்டு தூங்கிக் கொண்டிருந்த கணவனை... தன்னை மறந்து புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்த சங்கீதாவின் கையைப் பிடித்து இழுக்க... தன் மீது சரிந்தவளை இறுக அணைத்து "என்ன சங்கீ... இன்றைக்கு ரொம்பச் சந்தோஷமா இருக்கே போல் இருக்கே..." என்று அவள் மூக்கோடு மூக்கை வைத்துத் தேய்த்தபடி கேட்டவனின் தலைமுடியைக் கையால் அளைந்தாள்.

"ஆமாம் விஜய்... நான் உங்களைக் காதலிச்ச நேரத்தில் அது சந்தோஷமாக இருந்தாலும்... அம்மா, அப்பாவிடம் மறைக்கிறேனே என்று உறுத்தலாக இருந்தது. அதுவும் அவங்களுக்குத் தெரியாமல் கல்யாணம் செய்து கிட்ட எனக்கு நீங்க சொர்க்கத்தையே காட்டினாலும் பெற்றவர்களை நோகடித்து விட்டேனே... என்ற கஷ்டம் அதிகமாகவே இருந்தது.

"ஆனால் அவர்களிடம் நேரடியாகப் போய்ப் பேசவும் பயமாக இருந்தது. நீங்க கொடுத்த தைரியத்தில்தான் அம்மா அப்பாவையே பார்க்க வந்தேன். இப்போ அப்பா இன்னும் நம் மேல் கோபமாக இருந்தாலும் அம்மா பரிபூரணமாக நம்மை ஏற்றுக் கொண்டார்கள். எனக்கு இப்போதான் மனசுக்கு நிம்மதியா இருக்கு..." என்றபடி கண்மூடி அவன் மார்பில் நிம்மதியாகச் சாய்ந்தவளை... ஒரு கோணல் சிரிப்புடன் அணைத்துக் கொண்டான்.

"சங்கீ... மாப்பிள்ளை எழுந்துட்டாரா?" என்ற தாயின் குரல் கேட்டு அவசரமாக அவனிடமிருந்து விலகியவள்,

"சரிங்க. நேரமாச்சு... எழுந்திருங்க. ஏதோ இன்றைக்கு ஒரு இண்டர்வியூ இருக்குன்னு சொன்னீங் களே..." என்று அக்கறையாகக் கேட்டவளின் கையைப் பிடித்துத் தடவிக் கொண்டே,

"ம்ப்ச்... இன்றைக்குக் காலையிலே இப்படி ஒரு தரிசனம் தந்து வெளியில் போற மூடைக் கெடுத்துட்டே. எனக்கு இப்போது ரொமான்ஸ் மூடுதான் இருக்கு..." என்று கண்ணடித்தவனின் கன்னத்தில் மென்மையாகத் தட்டினாள்.



"அதெல்லாம் அப்புறம் பார்த்துக்கலாம். நீங்க இப்போ கிளம்புங்க..." என்று அவனை எழுப்பி முதுகில் கை வைத்துத் தள்ள... சிணுங்கினான்.

"சங்கீ... அவசியம் நான் இப்போ இண்டர்வியூக்குப் போய்த்தான் ஆகணுமா?" என்று கொஞ்ச...

"என்ன விஜய்... இப்படிக் கேட்கறீங்க? என்னால்தான் நீங்க முதலில் பார்த்துக்கிட்டிருந்த வேலையை விட்டீங்க. இந்த வீட்டுக்கு வந்து ஒரு மாசம் ஆகப் போகுது. இன்னும் நீங்க எந்த வேலையும் எடுக்காமல் இருந்தால் நல்லாவா இருக்கும்...

"இதோ என் வயித்திலே வளர்ந்துகிட்டு இருக்கிற குழந்தை நாளைக்கு வெளியில் வந்தால் அதை நல்லபடியா நாம வளர்க்க வேண்டாமா? அதற்குப் பணம் வேண்டாமா? என்னதான் அம்மா, அப்பா கொடுத்தாலும் நம்ம கையிலே பணம் இல்லாமல் இருந்தால் நன்றாக இருக்குமா? அதனால் மூச்..." என்று வாயில் ஒரு விரலை வைத்து அவனை அடக்க....

"ஓ.கே. உன் ஆசையை ஏன் கெடுப்பானேன்... நான் இண்டர்வியூக்குப் போறேன்..." என்றபடி டவலைத் தோளில் தூக்கிப் போட்டபடி பாத்ரூம் நோக்கிச் சென்ற கணவனைப் பெருமையாகப் பார்த்தாள் சங்கீதா.

டைனிங் டேபிளில் ஆபீசுக்குக் கிளம்பிச் சாப்பிட வந்தமர்ந்த கணவருக்கு டிபனைப் பரிமாறிக் கொண்டே பானு, "என்னங்க... நீங்க ஆபீசுக்குப் பைக்கில்

போறீங்களா? இல்லை, காரில் போறீங்களா...?" என்று விசாரித்தாள்.

ஒரு விள்ளல் இட்லியை எடுத்து வாய்க்கு எடுத்துக் கொண்டு போனவர், மனைவியின் கேள்வியின் அர்த்தம் புரியாமல், "இது என்ன புதுக் கேள்வி பானு? எப்போதுமே காரில்தானே போவேன். அது சரி, இப்போ என்ன அக்கறையா நான் எதில் போகிறேன் என்று விசாரித்துக் கொண்டிருக்கிறாய்?" என்றார் சாப்பிட்டுக் கொண்டே.

"அதில்லைங்க... மாப்பிள்ளைக்கு இன்றைக்கு இண்டர்வியூ. அதனால உங்க காரை இன்றைக்கு அவருக்குக் கொடுத்தால்... கொஞ்சம் வசதியாக இருக்கும். அதான் கேட்டேன்..." என்று தயங்கித் தயங்கி விஷயத்தைச் சொல்லி முடிக்கவில்லை.

அதற்குள் சாப்பிட்டுக் கொண்டிருந்த மாணிக்கம் தட்டிலிருந்து கையை உதறி விட்டு எழுந்து, பாக்கெட்டிலிருந்து கார் சாவியை எடுத்து டேபிளில் விசிறி அடித்து, "இந்தா... கொண்டு போய்க் கொடு, உன் மருமகனுக்கு..." என்று கோபமாக வாஷ்பேசினை நோக்கிச் சென்றவரின் பின்னாலே ஓடினாள் அவரின் தர்மபத்தினி.

"என்னங்க... நான் இப்போ என்ன சொல்லிட்டேன் என்று இப்படிக் கோபப்படறீங்க? உன் மருமகன் என்று வேறு பிரிச்சிப் பேசறீங்க...? ஏன் அவர் உங்களுக்கு மட்டும் மருமகன் இல்லையா?" என்று ஆதங்கமாகக் கேட்டவளை எரிச்சலாகப் பார்த்து...



"ஆமாண்டி... நல்ல நேரம் பார்த்து ஊரைக் கூட்டி மேளம் கொட்டி நம்ம ஆசிர்வாதத்தோடு இந்தக் கல்யாணம் நடந்தது. அதான் இந்தக் குதி குதிக்கிறே... பெரிசா மருமகனாம்... மருமகன். நீயே அவனைத் தலையில் தூக்கி வைச்சு ஆடு. என்னை எதற்கும் கூப்பிடாதே..." என்று கடுப்புடன் கையைக் கழுவிக் கொண்டு ஆபீஸ் பேகைத் தூக்கிக் கொண்டு வேகமாக வெளியில் சென்றார்.

கணவரின் கோபத்தில் முகம் சிறுத்துவிட... 'கடவுளே, இவர் மனசைச் சீக்கிரமே நீதான் மாற்றணும்...' என்று முனகியபடி திரும்ப...

அறையின் வாசலில் கண்ணீரோடு நின்றிருந்த மகளைக் கண்டதும் வேதனையாக இருந்தது.

ஒரு பெருமூச்சுடன் அவளருகில் சென்று, "நீ ஒன்றும் தவறா -நினைக்காதே சங்கீ... உனக்கு அப்பாவைப் பற்றித் தெரியாதா? ஏதோ கோபத்தில் இருக்கிறார். உன் மேலே உயிரை வைத்திருந்தவர். இந்தக் கோபம் எல்லாம் எத்தனை நாளைக்கு? நீ கவலைப் படாதே..." என்று அவளைச் சமாதானப்படுத்தி விட்டு,

"சரி. நீ போய் மாப்பிள்ளைக்கு டிபன் எடுத்து வை..." என்று கூறி அவள் கையில் கார் சாவியைக் கொடுத்துவிட்டு, சமையலறைக்குச் செல்ல... தன் மீது உயிரையே வைத்திருந்த தந்தைக்குத் தான் செய்த துரோகத்திற்கு இது தேவையான ஒன்றுதான்... என்று தன்னையே நொந்தபடி தாயைப் பின் தொடர்ந்து சென்றாள்.

அன்று வெள்ளிக் கிழமை என்பதால் பெரிய கோவிலுக்கு வந்திருந்த விஸ்வம் நுழைவாயிலில் இருந்த நந்தியைக் கும்பிட்டு விட்டு, உள்ளே சென்று விநாயகருக்கு நெய் விளக்குப் போட்டுவிட்டு அண்ணா மலையார் சன்னதிக்குச் செல்ல உள்ளே சென்றவர்...

அண்ணாமலையாரைத் தரிசித்துவிட்டுச் சன்னதி யிலிருந்து தங்கை நந்தினியுடன் வெளியே வந்த சுஜியைக் கண்டதும் முகத்தில் புன்னகை மலர, அவளை நோக்கிச் சென்றார்.

ஆனால் சுஜி அவரைக் கவனிக்காமல் பிராகாரத்தைச் சுற்றி வந்து உண்ணாமலை சன்னதியில் நுழைய... சரி, கோவிலைச் சுற்றி வரட்டும் என்று தன் வேலையைக் கவனிக்கச் சென்றவர், வேண்டுதலை முடித்துவிட்டுப் பிராகாரத்தில் வந்தமர்ந்த பிறகும் கூட... சுஜி வரவில்லை என்பதால் அவளுக்காகக் காத்திருந்தார்.

பத்து நிமிடம் கழித்து வந்த சுஜி விஸ்வத்தைக் கண்டதும், புன்னகையுடன் நெருங்கி, "எப்போ அங்கிள் வந்தீங்க? ஆன்ட்டி வரலையா?" என்று விசாரித்தாள்.

அவளின் கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டு, "நான் கோவிலுக்கு வந்துட்டு... அப்படியே உன்னைப் பார்க்க வரணும் என்றுதான் இருந்தேன். நல்ல வேளை... நீயே இங்கே இருக்கிறாய்..." என்றவர் நந்தினியை நலம் விசாரித்து அவளிடம் பணத்தைக் கொடுத்துக் கோவில் பிரசாதம் வாங்கி வரச் சொல்லி அனுப்பினார்.



கேள்வியாக நோக்கிய சுஜியிடம், "உன்னிடம் தனியாப் பேசணும் என்றுதான் அவளை அனுப்பினேன். ப்ரஜித்திடம் இருந்து கல்யாண விஷயமா நியூஸ் வந்ததா சுஜிம்மா...?" என்றார் ஆவலுடன்.

அவரின் கேள்விக்கு இல்லை என்று தலை அசைத்துவிட்டு, "நேற்று கூட ப்ரஜித் என்னைப் பார்க்க வந்திருந்தார் அங்கிள். ஆனால் எதுவும் சொல்ல வில்லையே? நானாக எப்படி அங்கிள் இதைப் பற்றி அவரிடம் கேட்பது...?" என்று அவரிடம் பரிதாபமாகக் கேட்ட சுஜியின் நிலைமை அவருக்குப் புரிய யோச னையில் ஆழ்ந்தார்.

'ஓ!' என்று ஆழமாக யோசித்தவரைப் புரியாமல் பார்த்து, "என்ன அங்கிள்... அதுக்கு எதுக்கு இப்படி யோசிக்கிறீங்க? இப்போ என் கல்யாணத்திற்கு என்ன அவசரம்... மெதுவாகவே சொல்லட்டுமே..." என்று மிக இயல்பாகச் சொன்னவளைக் கூர்ந்து பார்த்தார்.

"என்னம்மா இப்படிச் சொல்றே? உன் கல்யாணத்திற்கு உனக்கு வேண்டுமானால் அவசரம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் எனக்கு இருக்கு..." என்று கூறிவிட்டு, "சரிம்மா... ஒரு வாரம் வெயிட் பண்ணுவோம். அப்படியும் எந்தப் பதிலும் இல்லை என்றால் நானே ப்ரஜித்திடம் கேட்கிறேன்..." என்றவரை அவசரமாக இடைமறித்தாள்.

"அங்கிள் அவர் ஊரில் இல்லை. பிசினஸ் விஷயமாகச் சிங்கப்பூர் போவதாகச் சொல்லி விட்டுத்தான் சென்றார். வர ஒரு மாசமாகும்..." என்ற தகவலைக் கூற...

"ஓ! சரிம்மா... ப்ரஜித் வந்த பிறகே பேசிக்கலாம்..." என்னும் போதே. நந்தினி பிரசாதம் வாங்கிக் கொண்டு வர... சட்டென்று பேச்சை முடித்துக் கொண்டு விடை பெற்றுக் கொண்டு செல்ல... எதுக்காக இப்படி அங்கிள் அவசரப்படறாங்க என்று புரியாமல் பார்த்துக் கொண்டு நின்றவளின் யோசனையைத் தங்கையின் குரல் கலைத்தது.

ஆனால் அடுத்த நாளே. ப்ரஜித்தின் தாய் சியாமளாவே வரப் போகிறேன்... என்ற எந்த அறிவிப்பும் இல்லாமல் சுஜியை நேரில் பார்க்க வர... சுஜியை ஒரு இனிய பரபரப்பு தொற்றிக் கொண்டது.

## 9

திடீரென்று வந்து நின்ற சியாமளா தேவியைக் கண்டதும் சுஜிக்குக் கைகால் புரியாமல் ஒரு நிமிடம் இனிமையாக அதிர்ந்தவள். "வாங்க ஆன்ட்டி... என்ன இது திடீர் சர்ப்ரைஸ் விசிட்..." என்று அன்பாக வரவேற்று. அவரை அமரச் செய்து கூல்டிரிங்க்ஸ் கொடுத்து உபசரித்து. "சொல்லியிருந்தா... நானே வந்திருப்பேனே..." என்றவளைக் கனிவாகப் பார்த்தாள்.

"ஏன் சுஜி... நானெல்லாம் உன் பியூட்டி பார்லருக்கு வரக் கூடாதா?" என்று ஒரு சின்னச் சிரிப்புடன் கேட்டவளைப் புன்னகையுடன் பார்த்தாள்.



"அப்படியெல்லாம் இல்லை ஆன்ட்டி..." என்று அவள் எதிரில் அமர்ந்தவளைச் சங்கடமான பார்வையால் அளந்தவள்... வந்த விஷயத்தை எப்படி ஆரம்பிப்பது என்று புரியாமல் கையில் இருந்த குளிர்பானத்தைத் துளித் துளியாய்ப் பருகிக் கொண்டிருந்தாள்.

சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு சுஜியே. "என்ன ஆன்ட்டி... வந்ததிலிருந்து எதுவும் பேசாம இருக்கீங்க? ப்ரஜித் போன் செய்தாரா? நீங்க என்ன விஷயமா வந்தீங்க என்று சொல்லவே இல்லையே...?" என்று மென்மையாக. அதே சமயம் வெட்கத்துடன் பேசினவளின் பார்வையைச் சந்திக்கத் திராணியில்லாமல் அந்தப் பார்லரை நோட்டமிட்டாள்.

"ஏன் ஆன்ட்டி ஒரு மாதிரி நெர்வஸ்ஸா இருக்கீங்க...?" என்று மீண்டும் அவளின் மௌனத்தைக் கலைக்க... ஒரு அவஸ்தையான புன்னகையுடன். "உன்னைப் போலவே உன் பார்லரும் மிகவும் அழகா. எளிமையா இருக்கும்மா..." என்று பேச்சை மாற்றி அவளைப் பாராட்ட... அவளின் பாராட்டை ஒரு சிறிய புன்னகையில் ஏற்றுக் கொண்டாள்.

அவளின் களங்கமில்லாத அந்த அழகிய புன்னகை... சியாமளாவை எப்படி இவளிடம் இந்த விஷயத்தைச் சொல்வது என்று தவியாய்த் தவிக்க வைத்தது.

அவளின் தவிப்பு சுஜிக்கு லேசு பாசாகப் புரிய. அவளின் அருகில் வந்தமர்ந்து. "என்னாச்சு ஆன்ட்டி...

ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க? உங்க முகத்தில் ஏதோ குழப்பம் இருக்கு..." என்று கேட்டுக் கொண்டு வந்தவள், ஏதோ யோசித்தவளாகக் குரல் நடுங்க...

"ஆன்ட்டி... ப்ரஜித்திற்கு ஏதாவது..." என்று கேட்கும்போதே அவள் கண்ணில் கண்ணீர் பூத்துவிட... சியாமளா அவசரமாக மறுத்து அவளைத் தன்னோடு அணைத்துக் கொண்டாள்.

"ப்ரஜித்திற்கு ஒன்றுமில்லேம்மா... அவன் நல்லா இருக்கிறான்..." என்றபடி அவள் கண்ணீரைத் துடைத்து விட்டு...

"ப்ரஜித் மேலே உயிரை வைத்திருக்கிற உன்னிடம் நான் எப்படி இந்த விஷயத்தைச் சொல்லுவேன்... என்னால முடியலைம்மா... என்னை மன்னிச்சிடு..." என்று கண்கள் கலங்க எழுந்து வெளியே செல்ல முயன்ற வளைக் கைப்பிடித்துத் தடுத்தாள்.

"ஆன்ட்டி... நீங்க என்ன சொல்றீங்க என்று எனக்குப் புரியலை... ப்ளீஸ் எதுவாக இருந்தாலும் கொஞ்சம் புரியும்படி சொல்லுங்களேன்..." என்றவளைப் பரிதாபமாகப் பார்த்து,

"நான் சொல்றதைக் கேட்டு நீ மனசு ஒடிஞ்சு போயிடாதே சுஜி... உன்னை முதன் முதலாப் பார்க்க வரும்போது இப்படி ஒரு விஷயத்தைச் சொல்ல வேண்டி வரும் என்று நான் நினைக்கவே இல்லைம்மா..." என்று மீண்டும் விஷயத்தைச் சொல்லாமலே வருத்தப்பட... சுஜி



அவளைச் சலனமே இல்லாமல் நேர்பார்வையாகப் பார்த்தாள்.

"ஏம்மா அப்படிப் பார்க்கிறே?" என்று லேசான குற்ற உணர்ச்சியுடன் கேட்டவளை நிதானமாகப் பார்த்து, "ஏன் ஆன்ட்டி எங்க கல்யாணத்திற்குச் சம்மதம் இல்லை என்று அங்கிள் சொல்லிட்டாரா?" என்று கேட்கும்போதே அழுகையில் துடிக்க... அதை உதட்டைக் கடித்துக் கட்டுப்படுத்திக் கொண்டு கேட்டவளைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

தன் முக பாவனையிலே விஷயத்தைப் புரிந்து கொண்டு கேட்ட அந்த அப்பாவிப் பெண்ணிடம் இனி மறைச்சுப் பிரயோஜனமில்லை என்று நினைத்தவள்...

"என்னை மன்னிச்சிடும்மா... நான் இப்படியெல்லாம் ஆகும் என்று கனவிலும் நினைக்கவில்லை. என் கணவரின் தங்கை குடும்பத்திற்கும் எங்கள் குடும்பத் திற்கும் பல வருடங்களுக்கு முன் ஏற்பட்ட பிரச்னையில் இரண்டு குடும்பமும் பிரிந்து விட்டது.

"ஆனால் இன்று அவர்களே முன்வந்து ப்ரஜித் திற்குத் தங்கள் பெண்ணைக் கொடுக்க ஆசைப்படுவ தாகச் சொல்லவும்... ப்ரஜித்தின் அப்பா கொஞ்சம் கூட யோசிக்காமல் சம்மதம் சொல்லிவிட்டார். நானும் எவ்வளவோ பேசிப் பார்த்து விட்டேன். எதற்கும் என்னைக் கேட்காமல் முடிவெடுக்க மாட்டார்.

"ஆனால் இந்த விஷயத்தில் அவர் ரொம்பப் பிடிவாதமாக இருக்கிறதை நினைத்தால் கஷ்டமாக

இருக்கிறது..." என்று வேதனையோடு சொல்லி முடிக்க... முகத்தில் எந்தவித உணர்ச்சிகளையும் காட்டாமல் ஜடம் மாதிரி அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்தவளைப் பார்க்க, சொல்ல முடியாத வேதனை நெஞ்சை அழுத்தியது.

"இந்த விஷயம் ப்ரஜித்துக்குத் தெரியுமா?" என்று மரத்துப் போன குரலில் கேட்டவளுக்கு இல்லை என்று ஒரே வார்த்தையில் பதிலளிக்க... முகத்தை இரு கைகளாலும் தாங்கியபடி குனிந்து அமர்ந்தாள்.

சிறிது நேரம் கழித்துச் சியாமளாவே "சுஜி..." என்றழைக்க... கலங்கிய கண்களுடன் நிமிர்ந்தவளிடம், "சாரிம்மா... உங்கள் கல்யாணத்திற்கு என்னால் எந்த வகையிலும் உதவ முடியவில்லை. ஐயாம் ஹெல்ப்லெஸ்... என்னை மன்னிச்சிடு!" என்று மீண்டும் மீண்டும் மன்னிப்புக் கேட்க, சுஜி ஒரு முடிவோடு அவசரமாக விழிகளைத் துடைத்துக் கொண்டாள்.

"லீவ் இட் ஆன்ட்டி. எனக்கு எது விதிச்சிருக்கோ அதுதான் நடக்கும். இதற்காக நீங்க வருத்தப்பட்டு என்ன ஆகப் போகிறது? அங்கிளின் ஆசையும் நியாயமானதுதானே? உறவுகள் பிரிந்து போனால் அதனுடைய வலி என்னவென்று எனக்கு நல்லாவே தெரியும். அதனால் அங்கிள் எடுத்த முடிவுதான் சரி..." என்று கரைந்த குரலில் அவளுக்குச் சமாதானம் கூறியவளை மிகவும் ஆச்சரியமாகப் பார்த்தாள்.

அடுத்து என்ன பேசுவது என்று தெரியாமல், மௌனமாக அமர்ந்திருந்தவள், அவளின் பெருந்தன்மை



முன் தான் மிகவும் சிறியதாகிவிட்ட மாதிரி மனம் கூனிக் குறுகிவிட, "சரிம்மா... நான் கிளம்பறேன்..." என்று வாசற்படிவரை வந்தவள் திரும்பி நின்று சற்றுத் தயங்கி, "சுஜி, நீ எனக்கு ஒரு உதவி செய்வியா?" என்று கேட்டவளைப் புரியாமல் பார்த்தாள்.

"ப்ரஜித் கண்டிப்பாக இந்தக் கல்யாணத்திற்கு ஒத்துக் கொள்ள மாட்டான். உன்னை ஒருபோதும் அவன் விட்டுக் கொடுக்க மாட்டான். ஆனால் அவனின் அப்பாவோ இந்தக் கல்யாணத்தை நடத்தாமல் விடமாட்டார். இதனால் பெரிய பிரச்னை ஆகிவிடுமோ என்று பயமா இருக்கும்மா... அதனால்..." என்று தயங்கிப் பேச்சை நிறுத்தினாள்.

"அதனால் என்னம்மா..." என்று கரைந்து போய்க் கேட்டவளின் கையைப் பிடித்துக் கொண்டு, "ஐயாம் சாரிம்மா... இந்த மாதிரி கேட்கிறது எனக்கே அநியாயமாகத்தான் இருக்கு. ஆனால் வேற வழி தெரியலை..." என்று தயங்கிவிட்டு,

"நீ அவனைச் சந்திக்கக் கூடாது. இது என் மகனுக்குக் கொடுமையாக இருக்கும்தான். ஆனால் அவன் அப்பா அவனை எப்படியும் கல்யாணத்திற்குச் சம்மதிக்க வைத்து விடுவார்..." என்று தன் கோரிக்கையை வைக்க... அவள் கேட்ட உதவி அவளின் நெஞ்சில் ஈட்டியைப் பாய்ச்சியது போல இருந்தாலும், அந்தத் தாயின் தவிப்பையும் புரிந்து கொள்ள முடிந்தது.

கொஞ்ச நேர யோசனைக்குப் பிறகு, "ஓ.கே. ஆன்ட்டி..." என்று தன் வேதனையையும் மீறி உறுதி கொடுத்தவளின் கையைப் பிடித்துக் கண்ணில் ஒற்றிக் கொள்ள, சுஜியின் இதழ்க்கடையில் கசப்பான புன்னகை ஒன்று தோன்றி மறைந்தது.

அவள் பார்லரின் வெளியே வந்து, தன் காரில் ஏற... அப்போதுதான் சுஜியைப் பார்க்க வந்த விஸ்வம், பார்லரின் முன் பைக்கை நிறுத்திவிட்டு, 'யார் இந்தப் பெண்மணி...?' என்று பார்த்துக் கொண்டே உள்ளே சென்றார்.

விஸ்வத்தைக் கண்டதும் சோர்வாக வரவேற்றவளிடம், "யாரும்மா அவங்க... எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கு. ஆனால் ஞாபகம் வரமாட்டேங்குது. அவங்க உன்னோட க்ளையண்ட்டா?" என்று விசாரித்தார்.

அவரை வெறுமையாக நிமிர்ந்து பார்த்து, "அவங்கதான் சியாமளா தேவி. ப்ரஜித்தின் அம்மா..." என்று சுரத்தே இல்லாமல் சொன்னதும்...

"ஓ! ப்ரஜித் ஜாடையாக இருப்பதினால்தான் பார்த்த மாதிரி இருக்கா..." என்று புன்னகையுடன் சொல்லிக் கொண்டு வந்தவருக்கு சுஜியின் பேச்சில் தெரிந்த ஒருவித வெறுமை அவருக்கு உறைக்க... அவளை விநோதமாகப் பார்த்து, "என்னம்மா... அன்று இவங்களைப் பற்றிப் பேசும்போதே உன் முகத்தில் அவ்வளவு சந்தோஷம் தெரிந்தது. ஆனால் இன்றைக்கு



ஏதோ கடமையே என்று சொல்ற மாதிரி இருக்கு. சரி, எதுக்கு வந்தாங்க? உங்க கல்யாண விஷயமாகவா? என்ன சொன்னாங்க?" என்று ஆர்வம் கொப்புளிக்க விசாரிக்க... சுஜிக்கு இதயம் வலித்தது.

அவர் முகத்தை நேருக்கு நேர் பார்க்கத் திராணியில்லாமல் தன் கை நகங்களை ஆராய்ந்து கொண்டே, "அங்கிள், எனக்கு வேறு மாப்பிள்ளையைப் பாருங்கள். அதுவும் சீக்கிரமே பாருங்கள்..." என்று மெல்லிய குரலில் சொன்னவளை வித்தியாசமாகப் பார்த்தார்.

"என்னம்மா சொல்றே? நீ சொல்றது புரியலை. ப்ரஜித்தின் அம்மா என்ன சொன்னாங்க? சொல்லு..." என்று கடினமான குரலில் கேட்டவரை நிமிர்ந்து பார்த்து,

"ப்ரஜித்துக்கு அவருடைய அத்தை மகளை முடிவு செய்து விட்டார்களாம்..." என்று சொல்லி முடிப்பதற்குள், அவளின் கண்களில் இருந்து ஒரு கண்ணீர்த் துளி அவளின் கன்னத்தில் உருண்டோடியது.

அதைக் கேட்டதும் ஆவேசமாக, "என்னது ஒரு வருடத்திற்கு மேலாக உன்னைச் சுற்றிச் சுற்றி வந்து காதலித்து விட்டு... கல்யாணம் என்று வரும்போது, அவங்க அத்தை பெண்ணையே கல்யாணம் செய்து கொள்ள அவன் என்ன அயோக்கியனா? இதைக் கேட்டுகிட்டு நீ சும்மாவா இருந்தே? இது அவங்களுக்கே நல்லா இருக்கா?" என்று கடுகாய்ப் பொரிந்தவர் தொடர்ந்து,

"சரி, அவனுக்குத்தான் அறிவில்லை என்றால்... அவனுடைய தாய்க்குக் கூடவா புத்தியில்லை. இதைச் சொல்லத்தான் இங்கே வந்தார்களா? உன் வாழ்க்கையில் விளையாட அவர்களுக்கு என்ன உரிமை இருக்கு? இல்லை... எது செய்தாலும் கேட்க நாதியில்லை என்று நினைத்துக் கொண்டார்களா?" நெஞ்சம் எரிமலையாய்க் கொதிக்கக் கேட்டுவிட்டு,

"இரும்மா... நானே போய் அவங்களிடம் இரண்டில் ஒன்று கேட்கிறேன்..." என்று வேகத்தோடு கிளம்பியவரைத் தடுத்து நிறுத்தினாள்.

"வேண்டாம் அங்கிள்! என் வாழ்க்கையில் அவர்கள் விளையாடவில்லை. விதிதான் விளையாடுது..." என்று ஒரு நெடிய பெருமூச்சை எடுத்தவள், கண்களை அழுந்தத் துடைத்துக் கொண்டு,

"இந்த விஷயம் இன்னும் ப்ரஜித்துக்குத் தெரியாது அங்கிள்... இந்தக் கல்யாணத்தை முடிவு செய்தது அவரின் அப்பாதான். பாவம், அவரைச் சொல்லியும் குற்றமில்லை..." என்னும்போதே விஸ்வம் இடையிட்டு,

"இதை நீ நம்பறியா சுஜிம்மா..." என்று ஆத்திரத்துடன் கேட்டவரை நிதானமாகப் பார்த்தாள்.

"ம்ஹூம்... அங்கிள்! இதில் பொய் சொல்ல என்ன இருக்கு?" ஒருவித விரக்தியுடன் கேட்டுவிட்டு,

"இது அவங்க பையனோட வாழ்க்கை. ப்ரஜித்தின் அப்பதான் எங்களின் காதல் விவகாரம் தெரியாமல்,



அவரின் தங்கைக்கு வாக்குக் கொடுத்து விட்டார். ஏற்கெனவே இரண்டு குடும்பத்திற்கும் பிரச்னை. இப்போது இந்தக் கல்யாணம் வேண்டாம் என்று கூறிவிட்டால்... மீண்டும் பிரச்னை பெரிதாகி விடுமோ என்று அவர் பயப்படுவதில் தவறில்லை அங்கிள்..." என்று அவங்களுக்காக வக்காலத்து வாங்கியவளை எரிச்சலோடு பார்த்தார்.

"நீ இப்படியே போறவங்க வர்றவங்களுக்கு எல்லாம் வக்காலத்து வாங்கிகிட்டு இரு. கடைசியில் உனக்கு என்று ஒரு வாழ்க்கை இல்லாமல் போகப் போகுது..." என்று திட்டிவிட்டு, "எதுக்கும் ப்ரஜித் ஊரிலிருந்து திரும்பி வந்ததும் பேசிப் பாரேன்ம்மா..." என்று கடைசி நம்பிக்கையில் சொன்னவரைக் கூர்மையாகப் பார்த்தாள்.

"வேண்டாம் அங்கிள்! இனி எனக்கும் அவருக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை. என்னால் அந்தக் குடும்பத்திற்குள் பிரச்னை வரக் கூடாது..." என்று உறுதியாகச் சொன்னவளைப் பாவமாகப் பார்த்தபடி, அடுத்து என்ன செய்வது என்று யோசனையில் ஆழ்ந்தார்.

கொஞ்ச நேரம் அங்கு மௌனம் நிலவ, "அடுத்து என்ன செய்யலாம் என்று முடிவு செய்திருக்கே?" என்று மௌனத்தைக் கலைத்துக் கேட்டவருக்கு... உடனே பதில் சொல்லாமல் அமைதி காத்தவளிடம்...

"உன்னிடம்தான் கேட்கிறேன், சுஜிம்மா... சொல்லு!" என்று மீண்டும் கேட்டவரைத் தீர்க்கமாக நிமிர்ந்து பார்த்தாள்.

"அப்பா சொன்ன மாப்பிள்ளையையே கல்யாணம் செய்துக்கிறதைவிட எனக்கு வேறு வழி தெரியலை அங்கிள்... அதுதான் இப்போதைக்கு எல்லோருக்குமே நல்லது..." என்று ஒரு முடிவோடு பேச, விஸ்வம் ஒய்ந்து போய் அமர்ந்தார்.

அவரின் முகபாவனையில் தெரிந்த மாற்றத்தைப் புரிந்து கொண்டு, "என்ன அங்கிள்... நான் சொல்றது சரிதானே?" என்று மீண்டும் கேட்க.. "என்ன சரி... உன்கிட்ட நான் என்னத்தைச் சொல்வேன்..." என்றார் அலுப்பாக.

அவரே தொடர்ந்து, "அந்த வரனை உன் சித்தி விரட்டியடிச்சிட்டா... உன்னைக் காதலித்தவனோ வேறு எவளையோ கல்யாணம் செய்து கொள்ளப் போகிறான். கடைசியில் நீ தனி ஆளா நின்னுட்டே. எல்லாம் உன் தலையெழுத்து.

"பிரம்மன் உன்னை அழகாப் படைச்சானே தவிர, உன் தலையெழுத்தை அழகா எழுத மறந்துட்டான் போலிருக்கு... அதுதான் இப்படிக் கிடந்து அல்லாடுறே..." என்று கண்களில் நீர் துளிர்க்கப் பேசப் பேச... சுஜிக்குக் கழிவிரக்கத்தில் தன்னையும் மீறிக் கண்கள் உடைப் பெடுத்தன.

அவள் அழுவதைத் தாங்க முடியாமல், தன் கண்களைத் துடைத்துக் கொண்டு, "விடும்மா. யாரோ எப்படியோ போகட்டும். உன்னை மனைவியா அடைய அவனுக்குக் கொடுப்பினை இல்லை என்று நினைத்துக் கொள். கவலைப் படாதே. அந்த ப்ரஜித்தின் திருமணத்



திற்கு முன் உன் திருமணத்தை நான் நடத்திக் காட்டுகிறேன்..." என்று சமாதானப்படுத்தி அவளின் கண்களைத் துடைத்துவிட்டு,

"அழாதேம்மா... உனக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைச்சிக் கொடுக்காமல் எனக்குத் தூக்கம் கிடையாது..." என்றபடி கிளம்பினார்.

அவளிடம் சொல்லி விட்டாரே தவிர, 'உடனேயே ஒரு நல்ல மாப்பிள்ளைக்கு எங்கே போவது? யார் கல்யாண வயதில் பையன்கள் வைத்திருக்கிறார்கள்... இல்லை, பொன்னுசாமியிடமே வேறு ஒரு வரன் பார்க்கச் சொல்லலாமா?' என்று யோசித்தபடியே வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்.

ஆபீஸ் முடிந்து வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த ரங்கன், எதிரில் நண்பனைக் கண்டதும் பெயர் சொல்லி அழைத்தும்... அவர் கவனிக்காமல் சென்று கொண்டிருந்ததால் வேகமாக அவரை முந்திக் கொண்டு சென்று தன் பைக்கைக் குறுக்கே நிறுத்திக் கையைக் காட்டினார்.

யோசனையிலே உழன்று கொண்டு வந்தவர், எதிரே சுஜியின் தந்தையைக் கண்டதும், அதுவரை அடக்கி வைக்கப்பட்டிருந்த கோபம் சடாரென்று அவர் மேலே திரும்ப... பைக்கை சடன் பிரேக் போட்டு நிறுத்தினார்.

விஸ்வத்தின் கோபம் தெரியாமல் எப்போதும் போல், "என்னடா... நான் கூப்பிட்டுக் கொண்டே இருக்கிறேன். நீ பாட்டுக்குப் போய்க் கொண்டே இருக்கிறே... அப்படி என்ன

பலமான யோசனை? எந்தக் கோட்டையைப் பிடிக்கத் திட்டம் போடுகிறாய்?" என்று கேலியாகக் கேட்டதுதான் தாமதம்... விஸ்வத்திற்குக் கோபம் தலைக்கேறியது.

"ம்ம்ம்... செஞ்சிக் கோட்டையை எந்த விலைக்குக் கேட்கலாம் என்று யோசித்துக் கொண்டு வருகிறேன். நீயும் வர்றியா விலை பேச..." என்று நக்கலாகப் பதில் சொல்ல... ரங்கன் இவன் ஏன் இவ்வளவு கோபமாகப் பேசுகிறான் என்று நண்பனைப் புரியாமல் பார்த்தார்.

"பெரிசா கேட்க வந்துட்டான். இதில் கேலி ஒரு கேடு. நீயெல்லாம் ஒரு தகப்பன். அம்மா இல்லாத அந்தப் பெண் என்ன செய்யுது? எப்படி இருக்கிறது? வீட்டில் என்ன நடக்குது என்று தெரிந்து கொள்ளாமல் இருக்கிற உன்னை என்ன செய்தால் தகும்... உனக்கெல்லாம் போய் இப்படி தங்க விக்ரஹம் மாதிரிக் குணவதியான பெண்ணை ஆண்டவன் கொடுத்தான் பாரு. அவனைச் சொல்லணும்..." என்று பொருமினார்.

அப்போது ரங்கனுக்கு நண்பனின் கோபத்தின் காரணம் தெரியாமல், "டேய், விஷயத்தைச் சொல்லாமல் நீ பேசிக்கிட்டே போனால் என்ன அர்த்தம்..." என்றார்.

விஸ்வம் அவரை முறைத்தார். "சுஜிக்கு வரன் பார்த்தியே, அது என்னாச்சு?" என்றார் எரிச்சல் நிறைந்த குரலில்.

"அதுதான் சுஜி பிடிக்கவில்லை. உள்ளூரிலே வரன் பார்க்கச் சொல்லிடுச்சே.... அப்புறம் நான் என்ன பண்ண முடியும்?" என்று பரிதாபமாகக் கேட்டார்.



விஸ்வம் அவரை முறைத்து, "நீ ஒன்றும் பெரிசா செய்ய வேண்டாம். அந்தப் பொண்ணு வேற வரன்தானே பார்க்கச் சொல்லிச்சு. கல்யாணமே வேண்டாம் என்று சொல்லவில்லையே? அப்புறம் என்ன... வேறு நல்ல வரன் பார்க்க வேண்டியதுதானே?

"இல்லை... ஊரார் எதுவும் சொல்லிவிடக் கூடாது என்று கண் துடைப்புக்கு மாப்பிள்ளை பார்த்து விட்டு, அந்தப் பெண் வேண்டாம் என்றதும்... தொல்லை விட்டது என்று ஹாயாக இருக்கிறாயாக்கும். இதெல்லாம் உன் தர்ம பத்தினியின் கைங்கர்யமா?" என்று காட்டமாகக் கேட்டவருக்குப் பதில் சொல்ல முடியாமல் மென்று முழுங்கினார்.

நண்பன் கேட்ட கேள்வியில் இருந்த நியாயம் அவர் நாவைக் கட்டிப் போட... குற்ற உணர்வோடு தலை குனிய, விஸ்வம் அதற்கும், "ஆமாம். ஆ... ஊன்னா... இப்படிப் பொம்பளைப் பிள்ளை மாதிரி தலைகுனிந்து நில்லு. இதை விட்டா... வேற என்ன தெரியும் உனக்கு...?" என்று டோஸ் விட்டார்.

அதையும் வாங்கிக் கொண்டு பொறுமையாக நின்றவரிடம், "உன் பைக்கை இங்கே இருக்கிற கடையில் விட்டு விட்டு என் பைக்கில் ஏறு. நாம் உடனே போய்ப் பொன்னுசாமியைப் பார்க்கிறோம்..." என்று அதிரடியாகப் பேச, ரங்கனுக்கு நண்பனின் பேச்சை மீறிப் பேசப் பயமாக இருந்தது.

'காலையில் ஆபீஸ் கிளம்பும்போதே... ராணி அவரைச் சீக்கிரமாக வீட்டுக்கு வரச் சொல்லியிருந்தாள், அவளின் தங்கை வீட்டுக்குச் செல்வதற்காக. இப்போது போகவில்லையென்றால் வீட்டில் பெரிய சுனாமியே வர வாய்ப்புண்டு.

ஆனால் இதையெல்லாம் இவனிடம் சொன்னால் பொண்டாட்டிக்கு ஜால்ரா அடிக்கிறியா என்று பிரிச்சி மேய்ஞ்சிடுவான்... என்று தனக்குள் யோசித்தவர், நண்பனின் சொல்படி தன் வண்டியைப் பக்கத்துக் கடையில் பார்க் செய்து விட்டு அவரின் வண்டியில் ஏறி அமர்ந்தார்.

விஸ்வத்திற்கு இருக்கிற கோபத்திற்கு... வண்டி சீறிப் பாய, ரங்கனுக்கு எதுவும் கேட்கவும் பயமாக இருந்தது. பொன்னுசாமியின் வீட்டை அடையும்வரை அமைதியாக இருந்த ரங்கன் வண்டியை விட்டு இறங்கியதும், "இப்போ இவனிடம் போய் என்ன கேட்கப் போறே விஸ்வம்...?" என்று கேட்டவரைக் கண்ணாலே எரித்து,

"ம்ம்ம்... ஒரு எருமை மாடு இருந்தால் கொடேன் என்று கேட்கப் போறேன். அப்போதான் உனக்கு ஜோடியா அதை வீட்டில் கட்ட முடியும்..." என்று எரிந்து விழ, ரங்கன் கப்பென்று வாயை மூடிக் கொண்டார்.

"கேட்கிறான் பார் கேள்வி? புரோக்கர் வீட்டில் வந்து என்ன கேட்பாங்க என்றுகூடத் தெரியாத முட்டாள்..." என்று முணகிக் கொண்டே காலிங் பெல்லை அழுத்த... ஒல்லியான தேகத்துடன் ஒரு பெண்மணி வந்து கதவைத் திறக்க... அவளிடம், "அம்மா, நாங்க புரோக்கர் பொன்னுசாமியைப் பார்க்க வந்திருக்கிறோம். இருந்தால் கூப்பிடுங்களேன்..." என்றார் பணிவாக.



அந்தப் பெண்மணி விஸ்வத்தை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "நீங்க யாருன்னு சொல்லலையே?" என்று இழுக்க... அவரிடம் தங்கள் பெயரைச் சொல்லி அறிமுகப்படுத்திக் கொள்ள,

"ஓ! நீங்கதானா அவர்... உங்க பெண்ணிற்கு ஒரு வெளிநாட்டு வரன் வந்தது. அதை உங்கள் வீட்டிலே கூட வேண்டாம் என்று சொல்லிட்டாங்க என்று இவர் வருத்தப் பட்டுக்கிட்டு இருந்தார். மாப்பிள்ளை வீட்டிலும் போய்ச் சொல்லிவிட்டார். ஆனால் அவர்கள் இன்று வீட்டிற்கு வந்து, நீங்கள் சொன்ன பெண்தான் வேண்டும். எப்படி யாவது முடித்துக் கொடுங்களேன்... என்று பிடிவாதம் பிடித்தார்கள்.

"எவ்வளவோ சொல்லியும் அவர்கள் கேட்கிற மாதிரி இல்லை. அதனால் அந்த வரனைப் பற்றிப் பேசுவ தற்காக உங்கள் வீட்டிற்குத்தான் போயிருக்கிறார்..." என்றதும்,

இருவருக்கும் இந்த விஷயம் சந்தோஷமாக இருந்தாலும்... வீட்டில் ராணி இருப்பதால் மறுபடியும் இந்தாளைக் குழப்பி விடுவாளோ என்ற பயத்தில் அவசரமாக நன்றியைச் சொல்லி விட்டுப் பைக்கில் பறந்தார்கள்.

# 10

புரோக்கரின் மனைவி சொன்ன விஷயம் ஒரு விதத்தில் நிம்மதியைக் கொடுத்தாலும்... மறுபடியும் ராணி இருக்கும் நேரத்திலே சென்றால்... அவள் ஏதாவது சகுனி வேலை செய்து விடுவாளோ என்ற எண்ணம் இருவரின் மனதிலும் ஓடிக் கொண்டிருந்தது.

இருவரும் எதிரெதிர்த் துருவங்களாக இருந்தாலும் இந்த விஷயத்தில் இருவருமே ஒரே மாதிரி நினைவைத் தான் கொண்டிருந்தார்கள்.

அதன் விளைவோ என்னவோ இருவருக்குமே வண்டியை வேகமாகச் சென்றாலும், மனதின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல்... இறங்கி ஓடினால் வேகமாகப் போய்ச் சேர்ந்து விடலாமோ என்று முட்டாள்தனமாக நினைக்குமளவிற்கு மனது பதைபதைத்தது.

யாருடைய நல்ல நேரமோ அல்லது சுஜியின் கெட்ட நேரமோ இவர்கள் வீட்டை அடைய நேரும் பொழுதுதான் பொன்னுசாமி வீட்டின் வாசற்படியில் சைக்கிளை நிறுத்தி ஸ்டாண்ட் போட்டுக் கொண்டிருந்தார்.

அவரைக் கண்டதுமே இருவருக்குமே நிம்மதிப் பெருமூச்செழ... அவரருகில் வண்டியை நிறுத்தி இறங்கிக் கொண்டே, " இப்போதான் வருகிறாயா பொன்னு... உன் வீட்டில் நீ எப்பொழுதோ இங்கு வருவதற்குக் கிளம்பினாய் என்று சொன்னார்களே..." என்று கேட்கும்பொழுதே அவர் பேச்சில் சந்தேகம் தொனித்தது.



புரோக்கர் சிரித்துக் கொண்டே, "உண்மைதாங்க... ஆனால் வழியில் ஒரு நண்பர் அவர் பெண்ணிற்கு வரன் வேண்டும் என்று பேசிக் கொண்டிருந்தார். அதான் இங்கு வர லேட்டாயிடுச்சு..." என்று வெள்ளந்தியாகப் பேசிய மனுஷனிடம், பிரான்ஸ் வரனைப் பெண் பார்க்க வரச் சொல்லி அனுப்பி விட்டு, ரங்கனிடமிருந்து விடைபெற்றார் விஸ்வம்.

அதன்படியே அந்த வாரத்திலேயே சுஜியைப் பார்க்க வருவதாக மாப்பிள்ளை வீட்டிலிருந்து சொல்லி அனுப்ப... ரங்கனும், விஸ்வமும் அதற்குண்டான வேலைகளில் இறங்கினார்கள்.

பெண் பார்க்க வருகிற விஷயம் தெரிந்து, ராணி கையில் வேப்பிலை இல்லாத குறையாகப் பேயாட்டம் போட..... ரங்கன் சிறிதும் அலட்டிக் கொள்ளாமல், "இதோ பார். சுஜி என்னுடைய பெண். அவளுக்குத் திருமணம் செய்து வைப்பது என் கடமை. பொறுப்பும்கூட. அதைச் செய்ய விடாமல் தடுத்தால் உனக்கு மரியாதை கிடைக்காது.

"அவள் கல்யாணம் முடிந்து இங்கிருந்து போகிற வரைக்கும் உன் வாயை மூடிக் கொண்டிருந்தால் இரு. இல்லையென்றால் உன் அம்மா வீட்டிற்குக் கிளம்பு. நான் பார்த்துக்கிறேன். ஆனால் திரும்ப வீட்டிற்கு வராதே..." என்று மிக அழுத்தம் திருத்தமாகச் சொன்ன விதத்திலே... ராணிக்குச் சர்வமும் ஒடுங்கிப் போக வாயை மூடிக் கொண்டு சமையல் அறைக்குச் சென்றவளைச் சொடக்குப் போட்டு அழைத்தார்.

கணவரின் மரியாதையான அழைப்பிற்குத் திரும்பியவளிடம், "ஒழுங்கு மரியாதையாகக் கல்யாண வேலைகளை நீதான் செய்கிறாய். இதில் கோக்கு மாக்கு ஏதாவது செய்யணும் என்று நினைச்சே... உயிரோடு இருக்கமாட்டே..." என்று ஒரு விரல் காட்டி எச்சரித்தவரின் குரலிலிருந்த கொலை வெறி ராணியை ஆட்டம் காண வைத்தது.

இதுவரை தான் என்ன சொன்னாலும் தஞ்சாவூர்த் தலையாட்டிப் பொம்மை மாதிரிக் கேட்டுகிட்டிருந்த கணவரா இவர்... என்று அவளுக்குள்ளே ஆயிரம் கேள்விகள். ஆனால் பாவம். அதெல்லாம் விஸ்வத்தின் கைங்கர்யம் என்று அவளுக்குத் தெரியாதே.

கிரைண்டரில் மாவரைத்துக் கொண்டிருந்த சுஜியிடம்... மாப்பிள்ளையின் விவரம் கூறி, ரெடியாக இருக்கச் சொன்னதும், மறுப்பு ஏதும் கூறாமல், ஒரு மெல்லிய தலையசைப்பில் ஏற்றுக் கொண்டவளின் முகத்தில் கல்யாணத்திற்குண்டான வெட்கமோ, சந்தோஷத்தின் அறிகுறியோ இல்லாமல் தேமே என்றிருந்தது.

அதைக் கவனித்தவர், அதை அவளிடமே கேட்க, கண்ணில் வலியுடன் நிமிர்ந்து பார்த்துவிட்டுப் பதிலே சொல்லாமல்... கையை கழுவிக்கொண்டு அடுத்த வேலையைக் கவனிக்கச் சென்றாள்.

விஸ்வத்திடம் மகளின் சந்தோஷமின்மையைக் கூறிக் கவலைப்பட, அவரிடம் ப்ரஜித்தின் விஷயத்தைப்



பற்றிச் சொல்லாமல் ஏதேதோ சொல்லிச் சமாதானப் படுத்துவதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது.

மாடியில் அமர்ந்து வெறுமையான பார்வையோடு வானத்தை வெறித்துக் கொண்டிருந்தவளின் அருகில் சென்று, "சுஜி!" என்றழைக்க... கண்களில் ஜீவனே இல்லாமல் விஸ்வத்தின் பக்கம் பார்வையைத் திருப்பினாள்.

அவளின் நிலமையைக் கண்டு மனம் வலிக்க, "என்னம்மா நீ... இப்படி எதிலும் ஈடுபாடில்லாமல் இருந்தால் பார்க்கிறவங்களுக்குச் சந்தேகம் தோன்றாதா..? நீயே இப்படியிருந்து உன் காதலை மேளம் கொட்டித் தெரியப் படுத்திடுவே போலிருக்கே?" என்றார் வேதனையோடு.

"என்னால் முடியலை அங்கிள்... நானும் ப்ரஜித்தை மறக்க முயற்சி செய்கிறேன். பட் முடியலை. மனசில் ஒருத்தனையும், நெஞ்சில் ஒருத்தனையும் எப்படி அங்கிள் சுமந்துகிட்டு வாழ முடியும்...?

"அப்படி வாழ்ந்தால் அவளுக்கு இந்தச் சமூகத்தில் வேறு ஒரு பெயர் இருக்கே அங்கிள்..." என்று சொல்லி முடிப்பதற்குள், அழுகை வெடிக்க...

முகத்தை இரு கைகளாலும் மூடிக்கொண்டு அழுதவளைப் பார்க்கும் பொழுது விஸ்வத்திற்கு அவளைப் படைத்த கடவுளின் மேல்தான் ஆத்திரம் பொங்கியது.

ஒரு பெருமூச்சை வெளியேற்றி, அவளின் தலையை ஆதரவாக வருடி, "சுஜி... நீ சொல்றது எனக்குப் புரியுது. ஆனால் அந்த மாதிரிப் பெயரெல்லாம் கண்டிப்பாக உனக்குக் கிடைக்காது. அப்படி உன்னைச் சொன்னால் அவங்க நாக்கு அழுகிடும். நீ ஏன்மா இப்படிக் கண்டதையும் நினைத்துக் குழப்பிக்கிறே...? ப்ரஜித் வீட்டில்தான் அவங்க பணக்காரப் புத்தியைக் காட்டிட்டாங்களே... அதற்கும் மேலே நாம என்னதான் பண்ண முடியும் என்று நினைக்கிறே...?" என்று அவளைச் சமாதானப்படுத்திய விதத்திலே அவரின் கோபம் வெளிப்பட... பரிதாபமாக நோக்கினாள்.

அவளின் பார்வை அவரின் கோபத்தைக் குறைக்க... அவளின் கையைப் பிடித்து வாஞ்சையுடன் வருடி, "உன் வருத்தம் எனக்குப் புரியாமலில்லை. ஆனால் எதுவுமே நடக்கிற காரியமாக இல்லை. அதுதான் இங்கே பிரச்னையே.

"அதனால் அங்கிள் சொல்றதைத் தயவு செய்து கேளும்மா..." என்றவர், அவளின் முகம் கசங்குவதைக் காணச் சகியாமல், "கேட்பியாடா செல்லம்...?" என்று கெஞ்சினார்.

சம்மதமாக நிமிர்ந்தவளிடம், "உனக்கு இங்கிருந்தால் இப்படிப்பட்ட நினைவுகள்தான் உன்னை வாட்டி எடுக்கும். கல்யாணமாகி வெளிநாட்டுக்குப் போய்விட்டால் அந்த நாட்டின் சூழல், உன் எதிர்காலக் கணவரின் அன்பு, உனக்கென்று ஒரு குடும்பம்... இதெல்லாம் உன் பழைய நினைவுகளை மறக்கடிக்க நிச்சயம் உதவி செய்யும்.



"சில விஷயங்களுக்கு உன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டால்தான் உன் வாழ்க்கையும் நல்லபடியா அமையும்..." என்றவரின் ஆறுதலான பேச்சு, அவளின் வலியைப் போக்கியதோ இல்லையோ... தனக்கு எந்த விதத்திலும் சொந்தமில்லாத அவர், தன் கவலைகளைத் தீர்க்கப் படும் பாட்டை எண்ணி அவரின் வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுக்கத் தோன்றியது.

அதன் விளைவாக... அவளின் பூ முகத்தில் மெல்லிய புன்னகை ஒன்று மலர, அவளின் கன்னத்தைத் தட்டி, "குட் கேர்ள்...." என்று பாராட்டியவர், "உன் ஆன்ட்டி உன்னை வெளியே அழைத்துப் போக வரேன் என்று சொல்லியிருக்கிறாள். அதனால் நல்ல பெண்ணாக முகத்தைக் கழுவிக்கிட்டு கீழே வா..." என்றார் புன்னகையுடன்.

விஸ்வத்தின் பேச்சிற்கு மதிப்புக் கொடுத்துக் கீழே சென்று, அவரின் மனைவி மைதிலியுடன் வெளியே கிளம்பியவளைப் பார்த்து, "ம்க்கும்... இதுக்கொன்றும் குறைச்சலில்லை. எத்தனை நாளைக்கு இப்படிப் பூனைப்படை மாதிரிப் பாதுகாக்க இவங்கெல்லாம் வரப் போறாங்க என்று பார்க்கிறேன்..." என்று கறுவியவளிடம்,

"அம்மா... அங்கே பால் பொங்கித் தீயுது... இங்கே நீ தீயறே..." என்று நேரம் காலம் தெரியாமல் வேண்டுமென்றே கேலி செய்த மகளைக் கண்ணாலே எரித்துவிட்டு அந்த இடத்தைக் காலி செய்தாள்.

சித்தியின் பேச்சைக் கேட்டுக் கொஞ்சம் மறைந்திருந்த சஞ்சலம் மீண்டும் வந்து குடியேற, கலக்கத்துடன் மைதிலியைப் பார்க்க... அவள் சுஜியின் கையை மென்மையாக அழுத்தி, "அவ கிடக்கிறா. இவளுக்கு நீ கொடுக்கிற மரியாதையே அதிகம். வா நீ..." என்று அவளின் தோள் மீது கையைப் போட்டு அழைத்துச் சென்றாள்.

அந்த வாரமே மாப்பிள்ளை வீட்டார் சொன்னபடி சுஜியைப் பெண் பார்க்க... சகோதரியுடன் வந்த மாப்பிள்ளையைக் காட்டி, "இவர்தான் யாதவ். பிரான்சில் ஒரு டிபார்ட்மெண்ட் ஸ்டோர் வைத்திருக்கிறார். ஒரு கம்பெனியில் வேலையும் செய்கிறார். சொந்தமாக வீடு இருக்கிறது. இங்கேயும் சொந்தமாக வீடு ஒன்றும் இருக்கிறது. அதனால் பணத்திற்குப் பஞ்சமே இல்லை. இவங்க இவருடைய அக்கா..." என்று அவரை அறிமுகப் படுத்த முயன்ற தரகரை இடைமறித்தார், மாப்பிள்ளையின் சகோதரி.

"இருங்க பொன்னுசாமி... நானே என்னைப் பற்றிச் சொல்லிவிடுகிறேன்," எனறவர், "என் பெயர் தாமரை. நானும் என் தம்பி வீட்டில்தான் தங்கியிருக்கிறேன். அவன் வேலைக்குப் போகும் சமயத்தில் என் கணவர்தான் டிபார்ட்மெண்டல் ஸ்டோரைக் கவனித்துக் கொள்வார்..." என்று சொல்லிக் கொண்டு வந்தவள்,

ராணி "ம்ம்க்கும்... இந்தக் கழுதைக்கு இப்படியொரு அதிர்ஷ்டம்..." என்று முனக, அதைத் தவறாகப் புரிந்து கொண்ட தாமரை, "சாரி... நீங்க தவறா



நினைக்காதீங்க. உங்க பெண் கல்யாணமாகி வந்து விட்டால்... நாங்கள் வேறு வீடு பார்த்துக் கொண்டு சென்று விடுவோம். உங்கள் பெண்ணின் சுதந்திரத்தில் நாங்கள் தலையிட மாட்டோம்..." என்று கூற, இரு ஆண்களுக்கும் திருப்தியாக இருந்தது.

யாதவ்வுக்குப் பெண்ணை மிகவும் பிடித்துப் போக... லீவில்லாத காரணத்தினால் அன்றே நிச்சயத்தை வைத்துக் கொண்டு கல்யாணத்தை ஒரு வாரம் கழித்து வைத்துக் கொள்ளலாம் என்று பேசி முடிவு செய்ய... விஸ்வத்திற்கும், ரங்கனுக்கும் சந்தோஷம் நிலைகொள்ள வில்லை.

சுஜிக்குக் கல்யாணம் நிச்சயமான விஷயம் அங்கே இருக்கிற எல்லோருக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்க... ராணிக்கு மட்டும் கொதிப்பை உண்டாக்கியது.

ஆனால் கணவரின் முடிவை நினைத்து, தன் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு செய்ய வேண்டிய வேலைகளைக் கவனிக்க அஷ்விக்கும், நந்துவுக்கும் தாயின் முகம் போன போக்கை கண்டு அடக்க முடியாமல் சிரிப்பு வர... தமக்கையிடம் சொல்லிச் சிரித்தார்கள். ஆனால் அவளோ அங்கு நடக்கிற எதிலும் மனம் பதியாமல் கடனே... என்று அமர்ந்திருந்தாள்.

நிச்சயத்திற்கு முன்... பெண்ணிடம் விருப்பத்தைக் கண்டிப்பாகக் கேட்க வேண்டும் என்ற யாதவ்வின் தமக்கையின் விருப்பத்தை உணர்ந்து சுஜியிடம் பேச அனுமதியளித்தார் ரங்கன்.

கட்டிலில் குத்துக்காலிட்டு, அதில் தலையைச் சாய்த்து அமர்ந்திருந்தவள்... ஆன்ட்டியுடன் மாப்பிள்ளையின் சகோதரி வருவதைக் கண்டு மரியாதைக்கு எழுந்து நின்று செயற்கைச் சிரிப்பை முகத்தில் ஒட்டிக் கொண்டு வரவேற்றாள்.

"உனக்கு என் தம்பியைப் பிடித்திருக்கிறதா, சொல்லும்மா... எங்கள் எல்லோருக்கும் உன்னை மிகவும் பிடித்திருக்கிறது என்றாலும் உன் விருப்பம் இல்லாமல் நாங்கள் எதையும் செய்ய முடியாதே..." என்று மிகவும் கனிவாகச் சொன்னவள், "சொல்லும்மா... உனக்கு என் தம்பி யாதவ்வைப் பிடித்திருக்கிறதா...?" என்றாள் மீண்டும்.

அவளின் கேள்விக்குப் பதில் சொல்லாமல், மைதிலியைப் பார்க்க, "உன் விருப்பத்தைத்தானே கேட்கிறாங்க சுஜி... சொல்லு..." என்று ஊக்க, அவளின் பக்கம் திரும்பித் தன் சம்மதத்தைத் தலையசைப்பிலே தெரிவித்தாள்.

"இவ்வளவு அழகும், குணமும், அடக்கமும் நிறைந்த பெண் எங்க வீட்டு மருமகளாக வருவதற்கு நாங்கள் கொடுத்து வைச்சிருக்கணும்..." என்று அவள் கன்னத்தை வழித்து நெட்டி முறித்து, தன் கழுத்திலிருந்த நெக்லஸைக் கழட்டி, அவள் கழுத்திலே போட்டு அழகு பார்க்க... மைதிலிக்கு உச்சி குளிர்ந்து போனது.

சுஜியின் விருப்பத்தை எல்லோரிடமும் தெரிவிக்க... அன்று சாயங்காலமே நிச்சயத்தை வைத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்தவர்கள்... உடனேயே சாப்பிட்டு விட்டுப் புடவை எடுக்கக் கிளம்பினார்கள்.



ராணி வெறுப்பாகத் தான் வரவில்லை என்றதும், சுஜியைத் தவிர மற்ற எல்லோரும் கிளம்பினார்கள். கிளம்புவதற்கு முன் யாதவ் சுஜியிடம் பேசுவதற்கு ரங்கனிடம் அனுமதி பெற்றுக் கொண்டு அவளின் ரூமிற்குச் செல்ல, ஜன்னலின் வழியே எதையோ யோசித்தபடி கண்கள் அலைபாய்ந்து கொண்டிருக்க, "சுஜிதா..." என்ற புதிய குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

அவளின் திடுக்கிட்ட பார்வை கண்டு புன்னகையுடன், "என்னங்க பயந்துட்டிங்களா...?" என்று கேட்டவன், "என்னைப் பிடிச்சிருக்கு என்று அக்காவிடம் சொன்னதற்கு மிகவும் தேங்க்ஸ். இன்று மாலை நம்மிருவருக்கும் நிச்சயம் செய்யப் போகிறார்கள், அதற்குத்தான் புடவை எடுக்கச் செல்கிறோம். உங்களுக்கு என்ன கலர் பிடிக்கும் என்று சொன்னால் அதையே எடுத்து வருவேன்..." என்று ஆர்வம் வழியக் கேட்டவனை... நேருக்கு நேர் பார்க்கப் பிடிக்காமல் தலை குனிந்தபடியே,

"உங்களிஷ்டம்..." என்றாள் ஒற்றை வார்த்தையில்.

அவளின் உங்களிஷ்டம் என்ற வார்த்தையில் பெருமகிழ்ச்சி அடைந்தவனின் புன்னகை பெரிதாக விரிய, "தேங்க்ஸ் சுஜி..." என்று உரிமையுடன் நன்றி சொல்லிவிட்டு ஒரு துள்ளலுடன் சென்றவனைப் பார்க்க... அவளுள் எந்தவிதமான உணர்வும் ஆட்கொள்ளாதது நினைத்து எரிச்சலாக இருக்கக் கதவை மூடிக்கொண்டு கட்டிலில் படுத்துக் கொண்டாள்.

அதன் பிறகு கல்யாண வேலைகள் மளமளவென்று நடக்க... சுஜிக்கு மறுக்கவும் முடியாமல், சந்தோஷமாக ஏற்றுக் கொள்ளவும் முடியாமல் இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவிக்க, கல்யாண நாளும் நெருங்கியது.

ஈடுபாடில்லாமல் நடக்கிற கல்யாணம் என்பதாலோ என்னவோ, பெண்ணழைப்பின் போதே தலைவலி மண்டையைப் பிளக்க... எப்பொழுது இந்தச் சடங்கெல்லாம் முடியும்... நிம்மதியாகப் போய் ஒரு மூலையில் அமருவோம் என்றாகிவிட... ஜானவாசக் கார் கல்யாண மண்டபத்தை அடைந்ததுமே வேக வேகமாகத் தன் அறையில் போய் அடைந்து கொண்டாள்.

சாப்பிடுவதற்காக அழைக்க வந்த மைதிலியிடம், "இப்போ எதுவும் வேண்டாம் ஆன்ட்டி... இங்கே நடக்கிற எதுவும் எனக்குப் பிடிக்கலை. என்னைக் கொஞ்ச நேரம் தனியா விடுங்களேன்..." என்றாள், மனம் வெறுத்துப் போனவளாக.

அவளின் விஷயங்கள் எதுவும் தெரியாத அவள், "உன் சித்தி கல்யாண வீட்டில் வேண்டா வெறுப்பாக நடந்து கொள்கிறாளே... அதை நினைத்துக் கவலைப் படுகிறாயா? அவள் ஒரு குப்பை. விட்டுத் தள்ளு. உன்னோட அருமை அவளுக்கு இப்போ தெரியாது. நீ இந்த ஊரை விட்டுப் போன பிறகுதான் உணருவாள். அந்த அறிவுகெட்டவள்..." என்றாள் கோபத்துடன்.

சுஜிக்கு அவளின் பேச்சு மேலும் முகச் சிணுக்கத்தை ஏற்படுத்த... அதைக் கவனித்த மைதிலி, "சரிம்மா.



நீ ரொம்பக் களைப்பா இருப்பே. கொஞ்சம் ரெஸ்ட் எடு. நான் அப்புறம் வரேன்..." என்று கதவைச் சாத்திவிட்டுச் செல்ல... மீண்டும் கட்டிலில் அசதியுடன் சாய்ந்து அமர்ந்தாள்.

சில விநாடிகளிலே மீண்டும் அவள் அறையின் கதவு தட்டும் ஒலி கேட்டதும்... எரிச்சல் தொனிக்கக் கதவைத் திறந்தவள், வெளியே தந்தையைக் கண்டதும்... தன் எரிச்சலை மறைத்து, 'என்ன?'வென்றாள் பார்வையாலே.

"இவர் உன்னைப் பார்த்து வாழ்த்துச் சொல்லணும் என்று சொன்னாரும்மா... அதான் இங்கே அழைச்சிக்கிட்டு வந்தேன். நீ பேசிவிட்டுச் சாப்பிட அனுப்பும்மா..." என்று சொல்லிவிட்டுத் திரும்பிச் செல்ல, அதுவரை அவரின் பின்னால் கையைக் கட்டிக்கொண்டு நின்றிருந்த ப்ரஜித்தைக் கண்டதும் தூக்கிவாரிப் போட்டது சுஜிக்கு.

## 11

ப்ரஜித்தை அங்கு, அந்த நேரத்தில் எதிர்பார்க்காததால் தூக்கி வாரிப்போட... அதிர்ச்சியுடன் பார்த்தவளை, "என்னை இங்கு எதிர்பார்க்கலை இல்லையா? பாவம்... உன் தந்தையா அவர்? அவருக்கு நான் யார் என்பது தெரியாதில்லையா? அதுதான் நேரம் காலம் தெரியாமல் என்னை உன்னிடம் அழைத்து வந்துவிட்டார்..." என்று ஒரு ஏளனமான இதழ் வளைவுடன் கூறிவிட்டு,

"மனசாரக் காதலித்தவனைத் தூக்கி எறிந்துவிட்டு... இன்னொருத்தனுக்குக் கழுத்து நீட்ட ரெடியாகிவிட்ட உங்களுக்கு நான் திடீரென்று வந்து நிற்பது எல்லாம் பெரிய அதிர்ச்சியாக இருக்காது... அப்படித்தானே மிஸ் சுஜிதா?" என்று கண்களில் தீயுடன் சொன்னவனைப் பார்க்கச் சுஜிக்கு ஆயாசமாக இருந்தது.

திடீரென்று வந்து நிற்பான் என்று எதிர்பார்க்கா விட்டாலும்... அவன் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் நெஞ்சில் முள் மாதிரிக் குத்தி வலியை உண்டாக்கியது. ஆனால் இப்போதைக்கு முகத்தில் தன் வேதனைகளைக் காட்டினால் நாம் இந்தக் கல்யாணத்திற்குச் சம்மதித்ததற்கு அர்த்தமே இல்லாமல் போய்விடும் என்று தோன்றியதால் தன் வலிகளை உள்ளடக்கி கொண்டு சுதாரித்து.

"எப்போ ஊரிலிருந்து வந்தீங்க? உங்க வேலை யெல்லாம் வெற்றிகரமாக முடிந்ததா?" என்றாள் மிகவும் நிதானமாக. தான் பேசிய எதுவும் அவளைச் சிறிதளவும் கூடப் பாதிக்காமல் நலம் விசாரித்தவளைத் தீயாய் உறுத்து விழித்துவிட்டு,

"ஹ்ம்ம்... உலகத்திலே மிகவும் சந்தோஷமான மனிதன் யார் என்று கேட்டால்... என்னைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்...? அந்த அளவிற்குச் சந்தோஷத்தை அள்ளிக் கொடுத்திருக்கிறீர்களே. அதற் காக நன்றி சொல்ல வேண்டாமா?" என்று மீண்டும் எகத்தாளமாகப் பேசியவளைச் சற்றும் தளர்ந்து போகாமல் அவனை நேருக்கு நேர் பார்த்தாள்.



"பேசி முடிச்சிட்டிங்களா ப்ரஜித்...? இல்லை, இன்னும் திட்டுவதற்குப் பாக்கி ஏதும் இருக்கா? இருந்தால் மொத்தமாகத் திட்டிவிடுங்கள். ஏனென்றால் இப்போ நான் என்ன சொன்னாலும் உங்களுக்குப் புரியாது. அப்படிப் புரிந்திருந்தால்... இப்போ நீங்கள் என்னிடம் இந்த மாதிரிப் பேச மாட்டீர்கள்..." என்று ஒவ்வொரு வார்த்தையும் நிறுத்தி நிதானமாகப் பேசியவளை அனல் தெறிக்கப் பார்த்தான்.

"உன்னால் எப்படி இந்த நேரத்திலும் இவ்வளவு நிதானமாகப் பேச முடிகிறது? அப்படியென்றால் நீ என்னை உண்மையாக விரும்பவில்லையா? இல்லை, நான் உன் பின்னால் சுற்றினேன் என்பதற்காக அரை மனதோடு என்னைக் காதலிப்பதாகச் சொன்னியா?

"சொல்லு சுஜி... உன்னால் இதெல்லாம் ஏற்றுக்கொள்ள எப்படி முடிகிறது? ஆனால் என்னால் முடியவில்லையே... ஊரிலிருந்து வந்ததும் உனக்குக் கல்யாணம் என்று கேள்விப்பட்டவுடன்... என் உயிரே ஒரு நிமிடம் போய்த் திரும்பிய மாதிரி இருந்தது. அப்பாவின் முடிவை நான் ஏற்றுக் கொள்வேன் என்று நீ எப்படி நினைக்கிறாய்?" என்று கோபமாக ஆரம்பித்தவன்... பேசப் பேச அவன் குரல் கரகரத்துப் போக... மேலே பேச முடியாமல் வார்த்தைகள் தொண்டையில் சிக்கிக் கொண்டன.

சுஜிக்கு அவனின் உணர்வுகளும் கஷ்டங்களும் புரிந்து கொள்ள முடிந்தாலும்... தான் எதையுமே சரி

செய்ய முடியாது. தானும் அதே நிலையில் இருக்கும் போது அவருக்கு என்ன ஆறுதலைச் சொல்ல முடியும்... என்று மனதிற்குள்ளே ஓய்ந்து போனது.

ஆனால் பெண்களுக்கே உண்டான பிரச்னைகளை எதிர் நோக்கும் வில் பவர் சுஜியை அதிலிருந்து வெளியே வரச் செய்ய, தொண்டையைக் கனைத்துக் கொண்டு,

"ப்ரஜித்... உங்கள் அப்பாவின் முடிவை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று சொல்ல எனக்கு எந்த அதிகாரமும் இல்லை. ஆனால் ஒன்று மட்டும் என்னால் சொல்ல முடியும். சொந்தங்கள்தான் நம் வாழ்வின் ஆதாரங்கள். யாராலும் உறவுகளே வேண்டாம் என்று தனிமையாக வாழ்ந்துவிட முடியாது.

"அப்படியே வீராப்பாக வாழ்ந்தாலும், இளமைக் காலம் போன பிறகு முதுமையில் உறவுகளை மனம் நிச்சயம் தேடும். உங்கள் அப்பாவிற்கும் இப்போதைய மனநிலை இதுவாகத்தான் இருக்கும். அதனால்தான் அவர் இப்படி ஒரு முடிவை எடுத்திருக்கிறார்.

"அதைத் தடுக்கவோ... அவரின் கனவை உருக்குலைக்கவோ எனக்கு என்ன உரிமை இருக்கு...? சொந்தங்களே சரியாக அமையாத நான் அதற்காக எந்தளவிற்கு ஏங்கி இருக்கிறேன் என்று உங்களுக்குத் தெரியாதா? அதுதான் ஆன்ட்டி சொன்னதும்... உங்களை இழக்கக் கஷ்டமாக இருந்தாலும், என் மனதைத் திடப் படுத்திக் கொண்டேன். நீங்களும் அப்படியே ஏற்றுக்



கொண்டால் யாருக்குமே எந்தப் பிரச்னையும் இல்லை ப்ரஜித். அதன் பிறகு உங்கள் இஷ்டம்..." என்று உலர்ந்த குரலில் சொல்லிக் கொண்டிருந்தவள்,

"சாரி ப்ரஜித்... நான் இந்த நேரத்தில் உங்களுடன் பேசிக் கொண்டிருப்பதை யாராவது பார்த்தால் நன்றாக இருக்காது. தயவுசெய்து சென்று விடுங்கள் ப்ளீஸ்..." என்று கையெடுத்துக் கெஞ்சியவளைக் கண்ணில் வலியுடன் பார்த்தான்.

"நீயா இப்படிப் பேசறே சுஜி. உன் ஆசையை மத்தவங்களுக்காக அழிச்சிக்கிட்டு செய்து கொள்கிறாயே இந்த கல்யாணத்தால் உனக்குச் சந்தோஷம் கிடைக்கும் என்று நினைக்கிறாயா?" என்று கண்ணில் வைரத் துளியாய்க் கண்ணீர் மின்னக் கேட்டவனைப் பார்க்க சுஜிக்கு வருத்தமாக இருந்தது.

அவன் தோளில் சாய்ந்து, 'எனக்கு உன்னைவிட சந்தோஷம் வேறு எதுவும் இல்லை ப்ரஜித்... என் வாழ்நாள் முழுவதும் நீ வேணும்டா...' என்று கத்தி அழ வேண்டும் போலத் தோன்றியது.

தன் மனசிலிருப்பதை வெளியே சொல்ல முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று உள்ளுக்குள் அழுது கொண்டே, "சந்தோஷம் கிடைக்கிறதோ இல்லையோ... என்னால் யாருக்கும் எந்தப் பிரச்னையும் உண்டாவதை நான் விரும்பவில்லை. உங்களை நான் சந்திக்கவே இல்லை. உங்களிடம் நான் பேசிப் பழகவே இல்லை என்று நினைத்துக் கொள்கிறேன். நீங்களும்

அப்படியே நினைத்தால் இதெல்லாம் சாத்தியம்தான்..." என்று கூறிவிட்டு, விடுவிடுவென்று அறையின் உள்ளே செல்ல முயன்றவளை ப்ரஜித் அழைக்க... அப்படியே நின்றாள் திரும்பாமலே.

"இதற்கும் மேலே நமக்குள்ளே பேச ஒன்றுமில்லை. என்னைச் சங்கடப்படுத்தி, நீங்களும் சங்கடப்படாதீர்கள். ப்ளீஸ்..." என்று அழுத்திச் சொல்லிவிட்டு உள்ளே சென்று கதவைச் சாத்திக் கொள்ள, ப்ரஜித்திற்கு முகத்தில் அறைந்தது போலிருக்க, சிலையாய் நின்றுவிட்டான்.

உள்ளே சென்றவள் கட்டிலில் படுத்து ப்ரஜித்துடன் பேசும்போது அடக்கி வைத்த அழுகையை வாய் விட்டு அழுதாள். தன் உயிருக்கு உயிரானவனைக் கதவுக்கு வெளியேயே நிறுத்தித் தூக்கி எறிந்து பேசியதற்காகத் தன் மேலே வெறுப்பு வந்தது. இப்படி ஒரு வாழ்க்கையைத் தான் வாழ்ந்துதான் ஆக வேண்டுமா என்று தோன்ற ஆங்காரத்துடன் எழுந்தவள்... கண்களைத் துடைத்துக் கொண்டு, தன் வாழ்க்கையை முடித்துக் கொள்ள ஏதாவது கிடைக்கிறதா என்று அலமாரியைக் குடைந்தாள்.

துரதிர்ஷ்டவசமாக அவள் கையில் ரங்கனுக்காக ஒரு முறை வாங்கி வந்த தூக்க மாத்திரைகள் கிடைக்க... நேரம் கெட்ட நேரத்தில் முகம் சந்தோஷத்தில் ஒளிர்ந்தது.

கொஞ்சம் கூட யோசிக்காமல் தண்ணீருடன் மாத்திரையை விழுங்கும் நேரத்தில் எதேச்சையாக எதற்காகவோ சுஜியைத் தேடி வந்த விஸ்வம் கதவைத் தட்டினார்.



ஆனால் வெளியே நடந்த லைட் மியூசிக்கின் சத்தத்தில் சுஜிக்கு எதுவும் கேட்காததால் கதவு திறக்கவில்லை யென்றதும் சற்று வேகமாகத் தட்ட... வெறுமனே சாத்தி வைத்திருந்த கதவு உள்வாங்கிக் கொள்ள... அங்கே அவர் கண்ட காட்சியில் அதிர்ந்து போனார்.

வேகமாக அவளருகில் ஓடி, அவள் கையில் இருந்த மாத்திரைகளைப் பிடுங்கியவர், மீதி மாத்திரைகள் அவள் வாயில் இருந்ததால், அவளை உலுக்கி, "கீழே துப்பும்மா..." என்று பதறினார்.

சுஜி முரண்டு பிடித்தாலும் விடாமல்... அவள் வாயில் இருந்த எல்லா மாத்திரைகளையும் துப்பிய பிறகே நிம்மதிப் பெருமூச்சு எடுத்தவர், அடுத்த விநாடியே, "உனக்கென்ன பைத்தியம் பிடிச்சிருக்கா? நீ என்ன செய்யறே என்று தெரிஞ்சுதான் செய்யறியா? கல்யாணம் பேசி முடிச்சு நிச்சயம் முடிஞ்சு... இதோ பெண்ணழைப்பும் முடிஞ்சு போச்சு.

"இன்னும் எட்டு மணி நேரத்தில் உன் கழுத்தில் தாலியேறப் போகிற சமயத்தில் நீ இந்த மாதிரிச் செய்தால் உன் குடும்பத்திற்கு ஏற்படப் போகிற அவமானங்களைப் பற்றி நினைத்துப் பார்த்தாயா?" என்று படபடவென்று பொரிந்தார்.

கண்களிலிருந்து கண்ணீர் அருவியாகக் கொட்ட... "என்னை என்ன செய்யச் சொல்றீங்க, அங்கிள்? என்னால் இந்தக் கல்யாணத்தை ஏற்றுக் கொள்ள

முடியலையே? ப்ரஜித்தையும் கஷ்டப்படுத்தி என்னையும் ஏமாத்திக் கொண்டு, தேவையில்லாமல் யாதவ்வையும் ஏமாற்றி..." என்று மேலே பேச முடியாமல் தொண்டை வறண்டு பேச முடியாமல் திணற... அவளுக்குக் குடிக்கத் தண்ணீர் கொடுத்தார்.

தண்ணீர் கொஞ்சம் உள்ளே சென்றதும் கண்ணீர் கூடக் கொஞ்சம் வற்ற... கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, "நான் செய்யறது துரோகம் என்று என் மனச்சாட்சி என்னை அணு அணுவாகக் கொல்லுது அங்கிள். அதுதான் யாருக்கும் எந்தத் தொல்லையும் வேண்டாமே என்றுதான் என் வாழ்க்கையை முடிச்சிக்கலாம் என்று நினைத்தேன்..." என்று சொல்லும்போதே, மீண்டும் அழுகை உயிர் பெற, குலுங்கிக் குலுங்கி அழுதவள்... சில விநாடிக்குப் பிறகு நிமிர்ந்து,

"ஏன் அங்கிள் என்னைத் தடுத்தீங்க? நான் உயிரோடு இருந்து யாருக்கு என்ன லாபம்?" என்று கேட்டவளைப் பரிதாபமாகப் பார்த்தார்.

'இந்தப் பெண்ணின் மனசில் இருக்கிற காயத்திற்கு இந்தக் கல்யாணம் மருந்தாகணும் கடவுளே...' என்று ஆண்டவனிடம் வேண்டிக் கொண்டு, அவள் கண்ணீரைத் துடைத்து,

"சுஜி, இந்த அங்கிள் மேலே உனக்கு மரியாதை இருக்கா?" என்று கேட்க... 'ஆமாம்...' என்று தலையசைத்தவளிடம், "அப்போ நான் சொல்றதைக் கேட்பியாம்மா?" என்றார்.

தொண்டை கமற, "சொல்லுங்க அங்கிள்..." என்றவளிடம், "சுஜிம்மா... கடவுள் ஒவ்வொருத்தரையும் படைக்கும்போது ஒரு காரண காரியத்தோடுதான் உருவாக்குகிறார். அவர் என்று அழைக்கிறாரோ, அது வரை நாம் வாழ்ந்தாகணும். அதுதான் விதி. அவர் கொடுத்த உயிரை மாய்த்துக் கொள்ள நமக்கு என்ன உரிமை இருக்கிறது? உதாரணமாக உன் உயிர் இப்போதே போகணும் என்றிருந்தால் நான் ஏன் இங்கு வரணும்... ம்ம்ம்... சொல்லும்மா?" என்று கேட்க, சுஜியின் தலை தானாகக் கவிழ்ந்தது.

அவளின் தலையை நிமிர்த்தி, "பார், உனக்கே தெரிகிறது. அதனால்தான் சொல்கிறேன். கடவுள் கொடுத்த உயிரை மாய்த்துக் கொள்ள உனக்கோ எனக்கோ அதிகாரம் கிடையாது. நீ முயற்சி செய்தும் உன் உயிர் போகவில்லை என்றால் என்ன அர்த்தம்? உன்னை ஏதோ ஒரு காரணத்திற்காகப் படைத்திருக்கிறான். அந்தக் காரணத்தைத் தெரிந்து ஆண்டவனின் கட்டளையை நிறைவேற்ற வேண்டாமா?" என்று கேட்டார்.

ஆனால் அவரின் பேச்சு சுஜியின் முகத்தில் தெளிவைக் கொண்டு வராமல் ஆயாசத்தையே கொண்டு வர, "அம்மா... சுஜி! உன் எரிச்சல் எனக்குப் புரியாமல் இல்லை. எப்பவுமே அட்வைஸ் செய்யறது சுலபம்தான். அதைக் கடைப்பிடிக்கறது மிக மிகக் கஷ்டம் என்று எல்லோருக்கும் தெரிந்த ஒன்று.

"உனக்கு நான் அட்வைஸ் செய்யவில்லை. நான் கேட்பதெல்லாம் தாயே இல்லாமல் இத்தனை வருடம் உன்

சித்தியின் கொடுமையிலும் தீபமாக ஒளிர்ந்த நீ ப்ரஜித்தின் விஷயத்தில் மட்டும் ஏன் இந்த முடிவை எடுத்தாய்? இதுவரை உன் வாழ்க்கையே போராட்டமாகத்தானே இருந்திருக்கிறது. அப்படிப்பட்ட உனக்குப் புதுசாக என்ன கஷ்டங்கள் வந்து விட்டது என்று இந்த முடிவுக்கு வந்திருக்கிறாய்?

"தற்கொலை செய்து கொள்ள மனவலிமை அதிகம் வேண்டும். அதுவே உன்னிடம் இருக்கும் போது இப்போதிருக்கிற உன் கஷ்டத்தைத் தாண்டி வர உன்னால் முடியாதா? சொல்லு சுஜிம்மா... என்னிடம் மனவலிமை இல்லை. எனக்குப் போராட்ட குணம் இல்லை என்று சொல். நானே உன் முடிவுக்கு உதவி செய்கிறேன்..." என்று வேகமாக அவர் பிடுங்கிய மாத்திரைகளை மீண்டும் அவள் கையில் திணித்தார்.

விஸ்வம் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் அவள் மனதில் ஆணியடித்த மாதிரி பதிந்த நேரத்தில்... அவர் மீண்டும் தான் சொல்லியபடி மாத்திரைகளைத் தன் கையில் திணிக்க... அதைக் கீழே போட்டுவிட்டு,

"இல்லை அங்கிள்! நான் இனிமே இந்த மாதிரிச் செய்ய மாட்டேன். ஏதோ ஒரு வேகத்தில் செய்துவிட்டேன். என்னை மன்னிச்சிடுங்க அங்கிள்..." என்று தெளிந்த குரலில் பேசியவளை அன்போடு அணைத்துக் கொண்டார்.

"சரிம்மா... நீ போய் முகத்தைக் கழுவிக் கொண்டு வா. சாப்பிடப் போகலாம்..." என்று கூற... அவர் சொன்ன படியே செய்து கொண்டு அவருடன் சென்றாள்.



அதன் பிறகு மனதிலிருந்த சஞ்சலம் தீரவில்லை என்றாலும், ஏனோ விஸ்வத்தின் ஒவ்வொரு வார்த்தையும் அவளுள் ஒரு வைராக்கியத்தை உண்டாக்க, எதுவாக இருந்தாலும் ஏற்றுக் கொள்ளும் மனநிலையை வளர்த்துக் கொள்ளப் பெருமுயற்சி செய்தாள்.

அடுத்த நாள் விடியற்காலையிலே முகூர்த்த நேரத்தில் தேவதை போல அலங்காரம் செய்து மணையில் அமர்ந்த சுஜியின் சங்குக் கழுத்தில் யாதவ்வின் பொன் தாலியேற... அந்தத் தாலி சுஜிக்குக் கல்லைக் கட்டிக் கழுத்தில் தொங்கவிடப்பட்ட மாதிரி இருக்க... இறுக்கக் கண்ணை மூடிக்கொண்டாள்.

மற்ற சம்பிரதாயங்கள் எதிலும் ஈடுபாடில்லாமல் கடமையே என்று யாதவ்வுடன் சேர்ந்து செய்ய... விஸ்வத்திற்கு அவளின் சங்கடம் புரிந்து சம்பிரதாயங்களைக் குறைத்து, அவளைத் தனியறைக்கு ஓய்வெடுக்க மனைவியோடு அனுப்பி வைத்தார்.

அன்றிரவே குடும்ப முறைப்படி பெண் வீட்டிலே முதலிரவைப் பெரியவர்கள் ஏற்பாடு செய்ய... விஸ்வம் இந்த விஷயத்தில் சுஜிக்கு உதவ முடியாமல் தடுமாறினார்.

முதலிரவு அறைக்குச் செல்வதற்காக மனைவியின் கைவண்ணத்தில் ஜொலித்த சுஜியிடம், விஸ்வம், "நான் உனக்கு எதுவும் சொல்லத் தேவையில்லை. உனக்கே எல்லாம் தெரியும்..." என்று மட்டும் கூற, பிடிக்காத ஒரு இடத்திற்கு எந்த விதமான மனநிலையில் செல்வார்களோ... அப்படி அவர்களின் முதலிரவின் அறைக்குச் சென்றாள்.

**கா**லையில் இண்டர்வியூக்குச் சென்ற கணவன் மாலையாகியும் இன்னும் வீடு திரும்பவில்லையே என்று கன்னத்தில் கை வைத்தபடி, கவலையுடன் வாசலையே பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்த மகளைக் காண... தாய்க்கு வருத்தமாக இருந்தது. மதியம் சாப்பிடக் கூடச் செய்யாமல் இப்படியே அமர்ந்திருந்தால், வெளியே சென்றவர்கள் உடனேயே திரும்பி வந்துவிடுவார்களா என்று மனதினுள் அங்கலாய்த்தபடி மகளின் எதிரில் வந்தமர்ந்தாள்.

தாயைக் கண்டதும் அவளின் மடியில் ஆதரவு தேடி மடியில் படுத்துக் கொள்ள... அவளின் தலையில் ஆதரவாக வருடியபடி, "இன்னும் எத்தனை நேரம் சங்கீ... இப்படியே உட்கார்ந்திருக்கப் போறே? பிள்ளைத்தாய்ச்சிப் பெண் இந்த மாதிரிக் கொலை பட்டினி கிடக்கலாமா?

"உனக்குத் தேவையில்லை என்றாலும், உன் வயிற்றில் வளருகிற அந்த ஜீவனுக்குத் தேவையான சாப்பாட்டை வேளா வேளைக்குக் கொடுத்தால்தானே நல்லபடியாகப் பெற்றெடுக்க முடியும். ம்ம்ம்..." என்று ஒரு தாய்க்கே உரிய அக்கறையுடன் சொன்னவளை... இன்னும் நெருங்கி இடுப்போடு அணைத்துக் கொண்டாள்.

"எனக்கும் தெரியும்மா... ஆனால் காலையில் வெளியில் போனவர் இன்னும் திரும்பி வரவில்லை என்பதால் மனதினுள் ஏதேதோ குழப்பங்கள். போன இடத்தில் அவருக்கு என்ன பிரச்னையோ? இப்படி இருக்கும்போது நான் எப்படிம்மா நிம்மதியா சாப்பிட முடியும்?" என்று கவலையுடன் கூறிக் கொண்டு வந்தவள்,

"மதியம் அவர் சாப்பிட்டாரோ என்னவோ...?" என்று ஒரு மனைவிக்கே உண்டான அக்கறை தலை தூக்கப் பேசியவளைப் பார்க்கும்போது பானுவுக்கு ஒரு பெருமூச்சு எழுந்தது.

"சரி. உன் வீட்டுக்காரர்தான் கையில் செல் வைத்திருக்கிறாரே... அதில் அழைத்துப் பேசினால் தெரிந்துவிடப் போகிறது, அவர் எங்கே இருக்கிறார்ன்னு..." என்ற தாயை... 'அட, அப்பாவி அம்மாவே!' என்று பார்த்து,

"என்னம்மா இது கூட எனக்குத் தெரியாதா? காலையில் இருந்து பல முறை அழைத்து விட்டேன். ஆனால் நாட் ரீச்சபிள் என்றே வருது. அதுதான் பயமே..." என்ற மகளின் பேச்சிற்கு அடுத்து என்ன பேசுவது என்று தெரியாமல் அமைதி காத்தவள்... சில விநாடிகள் கழித்து எழுந்து உள்ளே சென்று கையில் பாலுடன் திரும்பி வந்தாள்.

மகளை வற்புறுத்திப் பாலைக் குடிக்க வைத்து விட்டுக் கணவர் வரும் நேரம் என்பதால் மாலைச் சிற்றுண்டி செய்ய வேண்டுமே என்று சமையலறைக்குச் சென்றவளின் கைகள் வேலைகளைச் செய்து கொண்டிருந்தாலும், 'காரில் போன மாப்பிள்ளைக்கு விபத்து ஏதாவது ஆகியிருக்குமோ?' என்று மனம் என்னென்னவோ நினைத்துக் குழம்பிக் கொண்டிருந்தது.

தன் மனம் போன போக்கை நினைத்து நெஞ்சம் நடுங்க... 'கடவுளே, என் மகளின் தாலியைக்

காப்பாற்றுப்பா...' என்று கன்னத்தில் போட்டுக் கொண்டு மேற்கொண்டு எதையும் நினைத்துக் குழம்பக் கூடாது என்று கந்த சஷ்டி கவசம் சொல்லிக் கொண்டே வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

வாசலில் கார் சத்தம் கேட்டதும், அதுவரை கவலையுடன் அமர்ந்திருந்த சங்கீயின் முகத்தில் ஆயிரம் வாட்ஸ் பல்ப் ஒளிர... சந்தோஷத்துடன் கணவனை வரவேற்க வாசலுக்கு ஓட... கைவேலையாக இருந்த பானு மாப்பிள்ளை வந்து விட்டாரோ என்று ஆர்வத்துடன் அங்கிருந்தே எட்டிப் பார்த்தாள்.

நண்பனின் காரிலிருந்து இறங்கிக் கொண்டு நன்றி சொல்லி விடை கொடுத்துவிட்டுத் திரும்பிய மாணிக்கம், மகளைக் கண்டதும் அதுவரை இருந்த சந்தோஷத் தருணம் கோபத் தருணமாகிவிட, அவளைப் பார்க்கப் பிடிக்காமல், எரிச்சலுடன்... முகத்தில் சோர்வுடன் நின்றிருந்த மகளைக் கூட என்ன ஏது என்று கூடக் கேட்காமல்... மனைவியைத் தேடி உள்ளே சென்றார்.

கணவரின் குரல் கேட்டு வெளியே வந்த பானுவிடம், "டிபன் எடுத்து வை. ரெஃப்ரெஷ் செய்துகிட்டு வர்றேன்..." என்று கூறிவிட்டு ரூமிற்குச் சென்ற கணவரின் அலட்சியமான போக்கு எரிச்சலை உண்டாக்க...

"என்னதான் அவளே போய்க் கல்யாணம் செய்துக் கிட்டாலும் இப்படியா அவமானப்படுத்தறது... அப்படி என்னதான் பாசம் வைத்திருந்தாரோ பொண்ணு மேல... தெரியாமல் ஒரு தவறு செய்து விட்டாள் என்பதற்காக



அவள் பெண்ணில்லை என்று ஆகிவிடுவாளா? என்னமோ எதிரியைப் பார்க்கிற மாதிரி பார்க்கிறது... ஒரு வார்த்தை கூடப் பேசாமல் எனக்கென்ன என்று ஒதுங்கிப் போறது... இதெல்லாம் நல்லாவா இருக்கு..." என்று புலம்பிக் கொண்டே டேபிளில் டிபனை வைத்த மனைவியைக் கேள்வியாய்ப் பார்த்தார்.

கணவரின் பார்வையில் இருந்த கேள்விக்கு, "பின்னே என்னங்க... காலையில் வெளியே போன மாப்பிள்ளை இன்னும் வரவில்லை. அதை நினைத்து நம்ம பொண்ணு மதியத்திலிருந்து எதுவும் சாப்பிடாமல் பட்டினியாய்க் கிடக்கிறாள்.

"இதையெல்லாம் பார்த்துக்கிட்டு எப்படி நிம்மதியாய் இருக்க முடியும்?" என்று ஆதங்கத்துடன் பொரிந்தவளை, நிதானமாகப் பார்த்து, "ஓ! அப்படியா... சரி, நான் என்ன செய்யணும்?" என்றார் எகத்தாளமான குரலில்.

"ம்க்கும்... இதுக்கொன்றும் குறைச்சல் இல்லை. கவலையா இருக்கிற அந்தப் பெண்ணிடம் ஆறுதலா ஒரு வார்த்தை பேசினால் குறைந்தா போய்விடுவீர்கள்..." என்று கோபப்பட்ட மனைவியைக் கவனிக்காமல் சூடான காபியைத் துளித் துளியாய் உறிஞ்சிக் கொண்டே மிக நிதானமாக டேபிளில் இருந்து நாளிதழைப் பிரித்து அதில் கண்களை ஓட்டியபடி,

"கல்யாணம் செய்து கொள்ளப் பெற்றவர்கள் தேவை யில்லையாம். ஆறுதலுக்கு மட்டும் வேண்டுமா...? ம்ம்ம்..." என்று உணர்ச்சியே இல்லாமல் கேட்ட

கணவருக்குப் பதில் சொல்ல முடியாமல் வாயடைத்துப் போன தருணம்... வெளியில் மகளின் அழுகைச் சத்தம் கேட்க, பானு பதறியடித்து ஓடி வந்தாள்.

## 12

கணவன் தோளில் போட்டுக் கைத்தாங்கலாக நடத்திக் கொண்டே, "என்னங்க இது புதுப் பழக்கம். காலையில் இண்டர்வியூக்குப் போறேன் என்று போனவர்... சாயங்காலம் இப்படிக் குடிச்சிட்டு வந்து நிற்கறீங்களே..." என்று அழுத மகளின் நிலைமை கண்டு அந்தத் தாய் உள்ளம் துடித்தது.

கணவரிடம் கலங்கிய கண்களுடன் முறையிட... அவரோ எனக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்கிற மாதிரி நாளிதழில் மூழ்கியிருக்க... பானுவுக்கு அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் சோர்ந்து போய்ச் சமையலறையில் தஞ்சம் புகுந்தாள்.

சிறிது நேரம் கழித்துத் தண்ணீர் எடுக்க வந்த மகளிடம் என்னவென்று கலக்கத்துடன் விசாரிக்க, "அவர் போன இண்டர்வியூவில் செலக்ட் ஆகவில்லையாம். வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கை போயிடுச்சாம். அதனால் மனசு உடைஞ்சு குடிச்சிட்டு வந்திருக்கிறார்.

"எனக்கு என்ன செய்யறதே என்று தெரியலைம்மா... எல்லாம் என் தலையெழுத்து. இதையெல்லாம் அனுபவிச்சுத்தானே ஆகணும்..." என்று அழுகை கரை



உடைக்க... தாயின் தோளில் சாய்ந்து அழுதவளின் முதுகை ஆதரவாக வருடிக் கொடுத்தாள்.

சில வினாடிகள் கழித்து விலகியவள், "உங்களை மதிக்காமல் உதாசீனப்படுத்திவிட்டு என் இஷ்டத்திற்குக் கல்யாணம் செய்து கொண்டது தெய்வத்திற்கே பொறுக்கவில்லை. அதனால்தான் என்னை இப்படியெல்லாம் சோதிக்கிறார்..." என்று மீண்டும் அழுதவளின் கண்ணீரைத் துடைத்து,

"நடந்து முடிந்தவற்றைப் பேசிப் பிரயோஜனமில்லை. இனி நடக்கப் போவதைப் பற்றிப் பார்ப்போம்..." என்றவள், "சரி. நீ போய் மாப்பிள்ளையை அழைச்சிக்கிட்டு வா. நான் அப்பாகிட்ட பேசறேன்..." என்று மகளை அனுப்பி வைத்தாள்.

கணவரிடம் சென்று, "நான் உங்களிடம் கொஞ்சம் பேசணும்..." என்று அழுத்தமாகச் சொன்ன மனைவியை நிமிர்ந்து பார்த்து விட்டு... மீண்டும் பேப்பரில் முகம் புதைத்துக் கொண்டவரைப் பார்த்து ஆத்திரத்துடன் பல்லைக் கடித்தாள் அவரின் தர்மபத்தினி.

"மாப்பிள்ளை வேலை கிடைக்கவில்லை என்கிற விரக்தியில் குடிச்சிட்டு வந்திருக்கிறார். அதைப் பார்த்து நம்ம பொண்ணு மனசுடைஞ்சு போய் அழறா. நீங்க என்னடாவென்றால் இந்தப் பேப்பரே கதி என்று இருக்கறீங்க...?" என்று கோபத்துடன் குரலை உயர்த்திக் குற்றப் பத்திரிகை வாசிக்க...

"சரி. இப்போ நான் என்ன செய்யணும்...?" நிதானமாக மீண்டும் அதே கேள்வியைக் கேட்க...

பானுவுக்குக் கடவுளே... என்றிருந்தது.

இருந்தாலும் மகளின் நிலைமையைக் கருத்தில் கொண்டு நிதானத்தை வரவழைத்துக் கொண்டு, "நீங்கள் மாப்பிள்ளையிடம் கொஞ்சம் மனம் விட்டுப் பேசினால் நன்றாக இருக்கும்..." என்று தயங்கித் தயங்கி விஷயத்தைச் சொல்ல... மாணிக்கம் மனைவியை அனல் கக்க முறைத்துவிட்டு, "எனக்கு யாரிடமும் பேச இஷ்டமில்லை..." என்று எழுந்து உள்ளே செல்ல... பானு விக்கித்து நின்றாள்.

சங்கீதாவும் அப்பா என்ன சொல்லப் போகிறார் என்று ஆவலுடன் அவரின் முகத்தைத் தூரத்தில் இருந்து கவனித்து கொண்டிருந்தவள்... அவரின் விட்டேத்தியான பேச்சு மேலும் மனதைச் சோர்வடையச் செய்தது.

கணவரின் செயலால் இரவெல்லாம் சரியான தூக்கமின்மையால்... அடுத்த நாள் காலையில் நேரங்கழித்து எழுந்தவள், மகளின் நிலைமையை மாற்றத் தன்னால் எதுவுமே செய்ய முடியாத கையாலாகாத்தனம் அவளின் மனதில் கோபத்தை விளைவித்தது.

அதன் விளைவால் உண்டான ஆத்திரத்தில் கணவரை அர்ச்சித்துக் கொண்டே வேலைகளைச் செய்து கொண்டிருந்த மனைவியின் முன் வந்து நின்றார்.

"இதோ பார் பானு... இப்போ என்ன ஆயிடுச்சு என்று வேலைக்குப் போகிற நேரத்தில் இப்படி



புலம்பிக்கிட்டு இருக்கே..." என்று அமைதியாகக் கேட்டவரிடம்,

"பின்னே என்னங்க... நீங்க செய்யறது உங்களுக்கே சரியா இருக்கா?" என்று முறையிட

"ஆரம்பிச்சிட்டா இவ...." என்று எரிச்சல் மேலிட, "சரி, சொல்லு. நான் என்னதான் செய்யணும் என்று எதிர்பார்க்கிறே...?" என்றார் நிதானத்தை இழுத்துப் பிடித்து.

முதல் நாள் இரவிலிருந்து நெஞ்சுக்குள் கனன்று கொண்டிருந்த தீ... கணவரின் இந்தப் பேச்சால் கொஞ்சம் தணிய, "மாப்பிள்ளைக்கு வேலை தேட இஷ்டமில்லையாம். என்னிடம் திறமை இருக்கும் போது அடுத்தவர்களிடம் ஏன் கைகட்டி வேலை பார்த்துக் கஷ்டப்படணும் என்று நினைக்கிறார்..." என, மாணிக்கம், "அதனால்...." என்று இடையிட்டார் கேள்வியாக.

"அவர் சொந்தமா சாஃப்ட்வேர் கம்பெனி ஆரம்பிக்கப் போகிறாராம்..." என்று வேகமாகச் சொல்லிக் கொண்டு வந்தவள், "அதனால்..." என்று தயங்கி நிறுத்தினாள்.

மாணிக்கம் கேள்வியாக நோக்க, "அவர் கம்பெனி தொடங்குவதற்குப் பண உதவி செய்ய அப்பாவிடம் சொல்லும்மா... என்று சங்கீ கேட்டாள்..." என்று சொல்லி முடித்ததும் மாணிக்கம் உதடு ஏளனமாக வளைந்தது.

"நினைச்சேன்... என்னடா இன்னும் சுரண்டவே ஆரம்பிக்கவே இல்லையே என்று... இவங்க திடீரென்று

இங்கு வந்து சேர்ந்தது பாசத்தால் என்று நினைக்கிறாயா? ம்ஹூம்... இதுக்குத்தான்..." என்று கேவலமாகப் பேச... அதெல்லாம் எதுவுமே அந்தத் தாய் உள்ளத்தில் பதியவே இல்லை.

"எதுவாக இருந்துவிட்டு போகட்டும்ங்க. அவளுக்கு முறைப்படி கல்யாணம் செய்து வைத்திருந்தால் நாம் அவளுக்குச் சீர் செனத்தி என்று கொட்டிச் செய்திருப்போம். அதை இப்போ அவள் கஷ்டத்திலிருக்கும் போது நாம் அவளுக்குச் செய்வதில் என்ன தவறு? இதைச் சுரண்டல் அது இது என்று கேவலமாகப் பேசறீங்க..." என்று கணவரை அடக்கினாள்.

"ஆமாமாம்... பிள்ளைங்க என்ன செய்தாலும் எந்தத் தாய்க்கும் பெரிசா தோணாது. கட்டின புருஷனை மட்டும் மறக்காமல் குறை சொல்ல வந்திடுங்க..." என்று குத்திக் காட்டிவிட்டு,

"உன் பொண்ணுக்கு என்னிடமிருந்து பணம் வேண்டும். அவ்வளவுதானே... கொடுக்கிறேன். ஆனால் அது அவளுக்காக இல்லை. உன்னுடைய புலம்பலுக் காக..." என்று கடுகடுத்துவிட்டு வேகமாக ரூமிற்குச் சென்றவர்... அதே வேகத்தோடு திரும்பி வந்து, மனைவியின் கையில் கையெழுத்திட்ட இருபது லட்ச ரூபாய் செக்கைக் கொடுத்தார்.

"இவ்வளவுதான் என்னால் உன் பெண்ணிற்காகச் செய்ய முடியும். இனி ஒரு தடவை என்னிடம் உன் பெண்ணிற்காகப் பேச வராதே..." என்று எரிச்சலுடன் மொழிந்துவிட்டுச் செல்ல... பானுவிற்குக் கணவரின் கோபம் எல்லாம் உறைக்கவே இல்லை. எப்படியோ பெண்ணின் கவலைக்கு ஒரு தீர்வு கிடைத்துவிட்டதே என்று சந்தோஷம் அவளை ஆட்கொள்ள... வேகமாக மகளை அழைத்து செக்கைக் கொடுத்தாள்.

பணம் கிடைத்ததும்... சங்கீயின் முகத்தில் ஒரு வினாடி சந்தோஷம் தோன்றினாலும், அடுத்த வினாடியே அப்பா இதற்காகத் தன்னை எவ்வளவு கேவலமாக நினைத்திருப்பார் என்று நினைவு எழ முகம் சுருங்கிப் போனது.

அதைத் தாயிடம் சொல்லி வருத்தப்பட, "அதை விடும்மா... நீங்கள் நல்ல நிலைக்கு வரும்போது கண்டிப்பா அப்பா புரிந்து கொள்வார்..." என்று சமாதானப் படுத்தினாள்.

கணவர், நாத்தனார் சகிதம் சென்னைப் பன்னாட்டு விமான சேவை நிலையத்தில் இமிகிரேஷன் அழைப் பிற்காகக் காத்திருந்த சுஜியிடம்... மைதிலியும் விஸ்வமும் மாறி மாறி அறிவுரைகள் சொல்லிக் கொண்டிருக்க, பிடிக்குதோ பிடிக்கலையோ அறிவுரை சொல்கிறவர்கள் தன் நலனைப் பேணுபவர்கள் என்பதால் வேண்டா வெறுப்பாகக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

இவர்களிடம் பேசிக்கொண்டே கணவர் யாதவ்வின் பக்கம் பார்வையைத் திருப்ப, அவன் தந்தை ரங்கனிடம் ஆர்வமாகப் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்தவளுக்கு...

ஏனோ தாலி கட்டிய கணவன் மீது அன்போ... புதுப் பெண்ணிற்கே உண்டான கிளுகிளுப்போ, எதுவுமே தோன்றவில்லை.

இத்தனைக்கும் ஆறடியில் மாநிறத்தில் அழகான தோற்றமும், பிரான்ஸ் நாட்டின் செழுமையும் அவனை இன்னும் அழகாக்கிக் காட்டினாலும்... ஏன் ஒரு சாதாரண ஈர்ப்பு கூட ஏற்படவில்லை என்ற ஆச்சரியமும், அதே சமயம் இந்த ஆராய்ச்சி ரொம்ப முக்கியம் இப்போ... என்று எரிச்சலும் வர, மீண்டும் தன்னிடம் பேசிக் கொண்டிருந்தவர்களிடம் கவனத்தை வைத்தாள்.

"சரிம்மா... ஃபிளைட் கால் பண்றாங்க. நீ அங்கே போய்ச் சேர்ந்ததும் எங்களுக்கு ஒரு கால் பண்ணிடு. நான் மாப்பிள்ளையிடமும் சொல்லியிருக்கிறேன். இருந்தாலும் நீயும் செய்தால் மனதுக்கு நிம்மதியாக இருக்கும்..." என, அவர்களுக்குச் சம்மதமாகத் தலை யாட்டிவிட்டு, எல்லோரிடமிருந்து கண்ணீருடன் விடை பெற்றுக் கணவருடன் உள்ளே சென்றாள்.

எல்லாச் சம்பிரதாயங்களும் முடிந்து விமானத்தின் உள்ளே மூவரும் வரிசையாக அமர, சுஜிக்கு இத்தனை வருடம் பிறந்து வளர்ந்து ஆளாகிய நாட்டை விட்டு வேறு நாட்டுக்கு யாருமே இல்லாத அனாதை மாதிரிப் போகிறோம் என்பதே பெரிய மனச்சோர்வைக் கொடுக்க... யாரிடமும் பேசாமல் சீட்டில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள்.



அவள் பக்கத்தில் அமர்ந்த யாதவ், அவளுக்கு எதுவும் தேவையா என்று அக்கறையாக விசாரிக்க... எதுவும் தேவையில்லை என்று தலையசைக்க... அதன் பிறகு அவளைத் தொல்லை செய்யாமல் தாமரையுடன் பேசிக்கொண்டு வந்தான்.

சுஜிக்கும் அப்போதைக்கு அவனின் நாசூக்கான செயல் நிம்மதியைக் கொடுத்தது. தாலி கட்டிய நேரத்திலிருந்து தன் விருப்பத்திற்கு எதிராக நடக்காமல்... தனக்காகப் பார்த்துப் பார்த்துச் செய்தாலும் எதுவுமே அவளுக்குள் எந்தவித ரசவாதத்தையும் உண்டாக்க வில்லை.

இத்தனைக்கும் முதலிரவில் என்னதான் பண்பட்ட மனிதனாக இருந்தாலும்... தன் ஆசையைத் தீர்த்துக் கொள்ளவே முயல்வார்கள். அந்த விஷயத்திலும் சிறிது நாளைக்குப் பிறகு இந்தச் சம்பிரதாயத்தை வைத்துக் கொள்ளலாம் என்ற வேண்டுகோளை வைத்த சுஜியின் விருப்பப்படியே ஒத்துக்கொண்டான்.

ஆனால் ஏன் இவனிடம் சாதாரணமாகக் கூடப் பேச முடியவில்லை என்று கடந்த மூன்று நாட்களாகத் தன்னையே கேள்விகள் கேட்டும் விடைதான் கிடைத்த பாடில்லை. ஒருவேளை என் மனம் முழுவதும் ப்ரஜித்தே வியாபித்திருப்பதால் இப்படித் தோன்றுகிறதோ... என்ற எண்ணச் சிதறல்களில் சிக்கி அதிலேயே மூழ்கிப் போனான்.

சுஜியை அனுப்பிவிட்டு மனம் முழுவதும் பாரத்துடன் வீட்டுக்கு வேனில் சென்று கொண்டிருந்த ரங்கன் கோஷ்டியினரின் முகம் வாடிப் போயிருந்தது.

ஆனால் ராணியின் முகம் மட்டும் கடுகடுவென்று இருப்பதைக் கவனித்த ரங்கன், "என்ன ராணி... மகள் உன்னை விட்டுப் பிரிந்து போன சோகத்தைத் தாங்கிக்கவே முடியலை போலிருக்கு. பாவம்... மகள் மேல் ரொம்ப பாசத்தை வைத்துவிட்டாய் அல்லவா...?" என்று படு நக்கலாகப் பேச... தமக்கை பிரிந்து போன சோகத்தில் இருந்த அஷ்விக்கும், நந்துவுக்கும் தந்தையின் பேச்சில் சிரிப்பு பொத்துக்கொண்டு வர... களுக்கென்று சிரித்தார்கள்.

விஸ்வத்திற்கும், மைதிலிக்கும் கூட அவர் பேச்சு சிரிப்பை வரவழைக்க... அதை மறைக்கப் படாதபாடு பட்டுக் கொண்டிருந்தார்கள்.

எல்லோரின் கேலிப் பார்வையும் சிரிப்பும்... ஏற்கெனவே கடுப்பில் இருந்த ராணியை உசுப்ப, சிலிர்த்துக் கொண்டு, "ஆமாம். இவர் பெரிய விகடகவி. நகைச்சுவை வள்ளல். இவர் சொன்னவுடன் அப்படியே சிரிப்பு பொத்துக்கிட்டு வருவதற்கு..." என்று முகவாய்க் கட்டையைத் தோளில் இடித்துவிட்டு,

"ஹே நிறுத்துங்கடி உங்க சிரிப்பை... நாளைக்கு நீங்க நடுத்தெருவில் நிற்கும்போது எல்லோரும் இந்த மாதிரி சிரிக்கப் போறாங்க..." என்று பெண்களின் மீது கடுவன் பூனையாய்ப் பாய்ந்தாள்.

ராணியின் பேச்சு ரங்கனுக்கு ஆத்திரத்தை ஊட்ட, "என்னடி... அறிவில்லாமல் பேசறே... என் பெண்கள் ஏன்டி தெருவில் நிற்கணும்? என் முதல் பெண்ணுக்குச் செய்தது போல மற்ற இரண்டு பெண்களுக்கும் செய்யப் போகிறேன். என்னடா செல்லங்களா... இந்த அப்பா மேல உங்களுக்கு நம்பிக்கை இருக்குல்ல..." என்று வாஞ்சையாகக் கேட்டார்.

அதைக் கேட்டதும், "ம்ம்ம்... செய்வீங்க... செய்வீங்க. கையில் மிச்சம் மீதிப் பணம் இருந்தால் தானே? அதுதான் முதல் பெண்ணுக்குத் தடபுடலா சீர் செனத்தி செய்து வெளிநாட்டுக்கு எல்லாத்தையும் அவளோடு அனுப்பி வைத்து விட்டீர்களே... அப்புறம் எங்கே இவங்களுக்குச் செய்ய முடியும்...?" என்று நொடிக்க... அதைக் கேட்டுக் கொண்டிருந்த விஸ்வம் தம்பதிக்கு ராணியின் பேச்சு வெறுப்பை உண்டாக்கியது.

'அந்தச் சிறிய பெண் யாருக்கும் தொந்தரவு தராமல் தன் சேமிப்பையும், போதாததற்கு பியூட்டி பார்லரை விற்றுக் கொடுத்த பணத்திலேதான் இந்தக் கல்யாணமே நடந்தது. அது தெரியாமல் அந்தப் பெண்ணை இப்படிக் கரிச்சுக் கொட்டுகிறாளே... ச்சே! இவள் எல்லாம் ஒரு தாய்...' என்று மனதினுள் கோபம் உண்டானது.

டைரக்ட் ஃபிளைட் என்பதால் பிரான்ஸ் நேரம் இரவு எட்டு மணிக்கே சார்லஸ் விமான நிலையத்திற்குப் போய்ச் சேர்ந்துவிட... இமிக்ரேஷன் முடிந்து லக்கேஜை

சேகரித்துக் கொண்டு வெளியே வந்தவர்களை நாற்பது வயது மதிக்கத்தக்க ஒருத்தர் வந்து யாதவ்வுக்குக் கைகொடுத்து, "போன்சுவார் (மாலை வணக்கம்) யாதவ், சவா... (நல்லா இருக்கியா?)" என்று நலம் விசாரித்தவர்,

"வாங்க மதாம்... உங்கள் வரவு நல்வரவாகட்டும். என் பெயர் ஜோஸ்!" என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு சுஜியை வரவேற்க... சுஜிக்கு அவனை முதல் பார்வையிலே பிடிக்காமல் போனது.

அவனின் பார்வை சுஜியின் முகத்தைப் பார்க்காமல்.... கழுத்துக்குக் கீழே இருக்க... சுஜி அருவருப்புடன் புடவையை இழுத்துப் போர்த்துக் கொண்டு மரியாதைக்கு உதட்டை இழுத்து வைத்துப் புன்னகைத்து, யாதவ்வின் பின்னாலே நடந்தாள்.

ஏர்போர்ட்டை விட்டு வெளியே வந்ததும்... குளிர் எலும்பைத் தாக்கியது. இதுவரை இந்தளவிற்கு மைனஸ் டிகிரி குளிர் பழக்கமில்லை என்பதால்... சுஜியால் குளிரைச் சமாளிக்க முடியாமல் தேகம் நடுங்க... புடவையை மேலும் இழுத்துப் போர்த்தியதைக் கவனித்த யாதவ், அவனின் கோட்டைக் கழற்றி அவளுக்குப் போர்த்துவிட முயல... சுஜி நாசூக்காக மறுத்துவிட்டுக் காரில் ஏறி அமர்ந்தாள்.

அவள் பக்கத்தில் அமர்ந்த தாமரை அவளைத் திரும்பிப் பார்த்து நக்கலாக ஒரு சிரிப்பை உதிர்த்து விட்டு யாதவ்விடமும், ஜோசிடமும் இயல்பாகப் பிரெஞ்சில் சிரித்துப் பேசிக்கொண்டு வர... சுஜிக்கு அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்றே புரியாமல் போனது.



வீடு வரும்வரை இதே நிலை நீடிக்க... சுஜிக்கு இவர்கள் பேசும் மொழி என்றைக்கு நமக்குப் புரியப் போகிறதோ என்று ஆயாசம் தோன்றச் சோர்வுடன் வண்டியிலிருந்து இறங்கினாள்.

எங்கு திரும்பினாலும் ஆங்கிலம் என்ற மொழி மருந்துக்குக் கூட இல்லாமல்... எங்கேயும் பிரெஞ்சிலே இருக்க, வீடு இருக்கும் பகுதியைப் படித்துக் கூடத் தெரிந்துகொள்ள முடியாமல்... வேறு வழியில்லாமல் முதல் முறையாக யாதவ்விடம் கேட்டாள்.

"இது பாரிஸ் சிட்டி... இந்த இடம் குர்நோவ். இங்கிருந்து கொஞ்ச தூரம்தான் ஈபில் டவர். அதை இங்கே துரோபில் என்பார்கள்..." என்று உபரித் தகவலைச் சொல்லிக் கொண்டிருக்க... சுஜி ஆர்வமாய்க் கேட்டுக் கொண்டிருந்தாள்.

வீட்டின் உள்ளே வராமல் வாசலிலே நின்று இருவரும் ஆர்வமாகப் பேசிக் கொண்டிருப்பதைக் கவனித்த தாமரையின் முகம் பொறாமையில் தீய, "யாதவ்... போதும், முதலில் வீட்டுக்குள் வா. அவ இங்கேதானே இருக்கப் போறா... அவளே எல்லாத்தையும் போகப் போகத் தெரிஞ்சிப்பா..." என்று அழுத்திச் சொல்லிய விதம்... சுஜிக்குள் ஏதோ ஒன்று நெருடியது.

முதல் நாளிலிருந்து பயணம் செய்த களைப்பு அவளுள் அசதியை ஏற்படுத்த... அவளுக்கு என்று கொடுத்த அறையில் தன் உடைமைகளை வைத்துவிட்டு... சுகமாக ஒரு குளியல் போட்டுவிட்டு டிரெஸ்ஸை மாற்றிக்

கொண்டு மாடியில் அமைந்திருந்த தன் அறையிலிருந்து வெளியே வந்தாள்.

இரண்டு படிதான் இறங்கி இருப்பாள். தாமரை யாதவ்விடம் பிரெஞ்சில் உச்ச ஸ்தாயியில் கத்திக் கொண்டிருக்க, அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று அனுமானிக்க முடியாமல் அந்த நேரத்தில் அவர்கள் முன்னே போய் நிற்கப் பயந்து... மீண்டும் அறைக் குள்ளே முடங்கினாள்.

அன்றிலிருந்து தன் அறையிலிருந்து ஹாலுக்குப் போக வேண்டுமென்றாலே கொஞ்சம் பயமும் சங்கட முமாகவே கழிந்தது சுஜிக்கு. சில சமயம், 'சாப்பிட வராமல் இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்? நான் என்ன உன் வீட்டு வேலைக்காரியா? உனக்கு வடித்துக் கொட்ட...' என்று அவள் மீது எகிறுவாள். அதற்காகப் பயந்து கீழே சென்று சமைக்கச் சென்றால்... 'என் அனுமதி இல்லாமல் நீ எப்படி இங்கே வந்தாய்?' என்று புலி மாதிரிப் பாய்வாள்.

அதனாலே சுஜிக்கு அந்த வீட்டில் எது செய்யவும் எங்கு போகவும் பயமாக இருந்தது. இந்த வீட்டில் என்னதான் செய்வது என்று தெரியாமல் தவிக்கும் போதெல்லாம்... தான் ஒரு தவறான இடத்தில் வந்து மாட்டிக் கொண்டோமோ என்ற பயம் அடி மனதில் எழ ஆரம்பித்தது.

இதைப் பற்றி யாதவ்விடம் கேட்கலாம் என்று நினைத்தால் அவன் காலையில் போனால் இரவுதான் தூங்கிய பிறகே வருவதால்... அவனிடமும் கேட்க முடியவில்லை. தான் சொன்னதற்காக முதலிரவைத் தள்ளி வைக்க ஒத்துக்கொண்டவன்... இங்கு வந்து ஒரு மாதமாகியும், அவளை எந்த வகையிலும் தொல்லை செய்யாமல் அவளுக்கென்று ஒரு தனியறை கொடுத்தது... ஒரு வகையில் சந்தோஷமாகவும் ஆறுதலாகவும் இருந் தாலும்... கட்டின மனைவியிடம் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் செல்வது, தாமரையின் உச்சகட்ட அதிகாரம், ஜோஸின் வழிசல் பார்வையைக் கண்டு கொள்ளாத கணவன்... இதெல்லாம் சுஜிக்கு நல்லதாகவே படவில்லை.

தாமரை ஒரு நாள் அவளை ஜோஸுடன் காரில் அழைத்துச் சென்று தேவையான குளிர்கால கோட், ஷூ, சாக்ஸ், கையுறை என்று வாங்கிக் கொடுத்ததோடு சரி. அத்துடன் தன் கடமை முடிந்து விட்டது என்று நடந்து கொள்ள... சுஜிக்கு ராணியின் கொடுமையைவிட இது பெரிய கொடுமையாக இருந்தது.

ஊரிலிருந்து வந்த அன்று போன் செய்ததுதான் தந்தைக்கும் விஸ்வம் அங்கிளுக்கும். அதன் பிறகு போன் செய்வதற்குத் தாமரை அனுமதிக்கவே இல்லை. போனின் அருகில் சென்றாலே கண்ணாலே எரித்து விடுகிற மாதிரி முறைக்கிற தாமரைக்குப் பயந்து அதன் அருகில் செல்லவும் பயம்.

அப்படியும் ஒரு நாள் விஸ்வம் அங்கிளிடம் பேசலாம் என்று நினைத்துத் தாமரையிடம் போன் செய்ய

அனுமதி கேட்க, "அதெல்லாம் அவசியம் இல்லை. வந்து இரண்டு மாதம் கூட ஆகலை. அதற்குள்ளே எத்தனை முறை போன் செய்வாய்?" என்று கேட்ட தாமரையை ஆச்சர்யமாய்ப் பார்த்தாள்.

ஞாயிற்றுக்கிழமை ஒரு நாள்தான் யாதவ் வீட்டில் இருக்கும் நாள். ஓய்வாக இருக்கிறாரே என்று கணவனிடம் பேச முயற்சி செய்தால்... நடுவில் தாமரை புகுந்து யாதவ்விடம், சுஜிக்குப் புரியாத பிரெஞ்சில் பேச ஆரம்பித்துவிடுவாள். அவர்களுக்கு இணையாகப் பேசத் தெரியாத சுஜி... தான் கேட்க வந்த கேள்வியை நெஞ்சிலே புதைத்துக்கொண்டு எழுந்து சென்றுவிடுவாள்.

அப்படியும் ஒரு ஞாயிற்றுக் கிழமை தாமரை வெளியில் சென்றிருக்கும்போது ஓய்வாக ஹாலில் அமர்ந்து டிவியில் பிரெஞ்சு நியூஸ் பார்த்துக் கொண்டிருந்த கணவனின் எதிரில் வந்தமர்ந்த சுஜி, அவனைப் பார்த்துச் சிநேகமாகச் சிரித்தாள். ஆனால் யாதவ்வால் அவளிடம் இயல்பாகச் சிரிக்க முடியாமல் அவஸ்தையாகச் சிரித்து வைத்துவிட்டு... தொடர்ந்து டிவியையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனின் கவனத்தைக் கலைக்க மனசு வரவில்லை என்றாலும் தான் இங்கு வந்து இரண்டு மாதமாகியும் ஒரு வார்த்தை கூடப் பேச முயற்சி செய்யாமல், அப்படியே சில சமயங்களில் தான் பேச முயற்சித்தாலும் தாமரை வந்து கெடுப்பதை நினைவுக்குக் கொண்டு வந்தவள்... இதுதான் சரியான தருணம் தன்



மனசில் இருக்கிற சில கேள்விகளுக்கு இன்று விடை தெரிந்தே ஆக வேண்டும் என்று முடிவு செய்தவள் "யாதவ்..." என்று மென்மையாக அழைத்தாள்.

## 13

கல்யாணமான நாளிலிருந்து சுஜி அவனைப் பெயர் சொல்லி அழைத்ததில்லை என்பதால் முதன் முறையாக அவளின் மென்மையான அழைப்பு அவனை மெழுகாய் உருக வைக்க, ஆசையாக அவள் பக்கம் திரும்பியவனிடம், "நான் உங்களிடம் ஒன்று கேட்கலாமா?" என்றாள் தயக்கமாக.

அவளின் இனிமையான பேச்சிலும், அழகிலும் மயங்கிப் போயிருந்த யாதவ், அவளுக்குச் சம்மதத்தைக் கொடுக்க, "நான் இங்கு வந்து இரண்டு மாதத்திற்கும் மேலே ஆகுது. ஆனால் இதுவரை என்னை யாருமே வெளியே அழைத்துப் போனதில்லை. நான் எது செய்தாலும் குற்றம் கண்டுபிடிக்கிறாங்க.

"அது கூடப் பரவாயில்லை. என் குடும்பத்தாரிடம் பேசக் கூட என்னை உங்கள் சகோதரி அனுமதிக்க மாட்டேங்கிறாங்க. இதை நீங்களும் கண்டு கொள்ளவே இல்லையே. ஏன்? இன்னும் எத்தனை நாளைக்கு இதை நான் அனுபவிக்கணும்...?" என்று கேட்கும்போதே கண்கள் கலங்கிவிட... அதைக் கண்டதும் யாதவ்வுக்கு அவள் மீது பரிதாபம் எழ, அவளின் கையைப் பிடித்தான்.

அவனின் முதல் ஸ்பரிசம் அவளுள் குறுகுறுப்பைத் தோற்றுவிக்காமல்... அதற்கு எதிர்மாறாகக் கம்பளிப் பூச்சி ஊருகிற மாதிரியான உணர்வு ஏற்பட... அவனிடமிருந்து தன் கையை உருவ முயற்சி செய்து கொண்டிருந்த நேரத்தில்... வேகமாக உள்ளே நுழைந்த தாமரை கண்ணில் இந்தக் காட்சி பட... "யாதவ்...!" என்று அழைத்தபடி கோபமாக அவனருகில் நெருங்கினாள்.

அதுவரை அங்கு நிலவிய சூழ்நிலை சட்டென்று மாறிவிட... சுஜியின் கையை விடுத்து சோபாவிலிருந்து எழுந்து, "ஒன்றுமில்லை தாமரை... வெ... வெறுமே பேசிக்கிட்டு இருந்தோம். வேறு ஒன்றுமில்லை..." என்று ஒருவிதப் பயத்துடன் சமாளித்தவனைப் பார்த்த போது சுஜியின் மனது அருவருத்துப் போனது.

கணவன் தொடுவதை மனது ஏற்றுக்கொள்ள வில்லை என்றாலும்... அவன் தாமரைக்குப் பயந்து இந்த மாதிரிப் பேசுவதும், தாமரை அவனை அதட்டுவதும் அவளுள் ஏற்கெனவே இருந்த சந்தேகத்திற்குத் தண்ணீர் ஊற்றி வளர்த்தது.

அதற்கு மேல் அங்கிருக்கப் பிடிக்காமல் விடுவிடுவென்று தன் அறைக்குச் சென்று கட்டிலில் விழுந்தவளுக்கு, 'இந்த வீட்டில் என்ன நடக்கிறது? இங்கு நான் யார்? எதற்காக யாதவ் என்னைக் கல்யாணம் செய்து கொண்டு அழைத்து வர வேண்டும்...? என்னைத் தொட்டால் அவரது அக்காவிற்கு ஏன் கோபம் வரவேண்டும்...? இந்த வீட்டிற்கு வந்து போகிற அந்த



ஜோஸ் யார்? தாமரையின் கணவர் யார்?' என்று ஆயிரம் கேள்விகள் மனதில் தோன்றினாலும்... எதற்குமே விடை தெரியாமல் மண்டையைப் பிளக்க அப்படியே உறங்கியும் விட்டாள்.

சுஜி மேலே போய்விட்டாளா என்று எட்டிப் பார்த்து விட்டுத் தாழ்ந்த குரலில், "உங்களுக்கு எத்தனை முறை சொல்லியிருக்கிறேன். இந்த மாதிரி அசம்பாவிதமா நடக்கக் கூடாது என்று. நான் அந்தப் பக்கம் போனதும்... நீங்க இந்தப் பக்கம் உங்க வேலையைக் காட்ட ஆரம்பிச்சிட்டீங்களா? உங்களுக்கு ஏன் இந்தச் சபல புத்தி? நாம் எதற்காக அவளை இங்கு கொண்டு வந்தோமோ, அந்தக் காரியம் நல்லபடியா நடக்கிற வரைக்கும் கொஞ்சம் அடக்கி வாசிங்க.

"இதே மாதிரிதான் ஒருத்தியை ஒரு முறை கோட்டை விட்டோம். இப்போ மறுபடியுமா?" என்று தாழ்ந்த குரலில் சீறியவள்... கொஞ்சம் நிறுத்திக் கோபத்தை அடக்கி, "உங்க ஆசைக்குத்தான் நான் இருக்கேன்ல... அப்புறமும் என்ன?" என்று தணிந்து போக... யாதவ் எதுவும் பேசாமல் தலை குனிந்தான்.

சிறிது நேரம் கழித்து... கையில் காபியுடன் வந்து, அமைதியுடன் அமர்ந்திருந்தவனின் கையில் கொடுத்து விட்டு... பக்கத்தில் நெருக்கமாக அமர்ந்தவளின் கையைத் தன் கைக்குள் அடக்கி, "பர்தோன் மோ ஷெரி... (சாரி மை டியர்) நானாக அவளிடம் போய்ப் பேசவில்லை. அவள்தான் என்னைத் தேடி வந்து என்னென்னமோ

பேசினாள்..." என்று சுஜி பேசியதை எல்லாம் சொல்லச் சொல்ல... தாமரையின் முகம் கடுகடுவென்று மாறியது.

"அப்போ நம்ம மேல அவளுக்குச் சந்தேகம் வந்துவிட்டது. ம்ம்ம்...!" என்று யோசித்தவள், சிறிது நேரத்திற்குப் பிறகு, "ஒன்று செய்யுங்க டியர்! நாளைக்கு அவளை எங்கேயாவது வெளியில் அழைச்சிக்கிட்டு போங்க. நன்றாகப் பேசுங்க... பழகுங்க..." என்று கூற, யாதவ் தாமரையை ஆச்சர்யத்துடன் நோக்கினான்.

"என்ன டியர்... இப்போ நான் ஜஸ்ட் பேசியதற்கே எகிறினாய். இப்போ நீயே வெளியே அழைச்சிக்கிட்டு போ என்கிறாய்..." என்றான் தேன் குடித்த நரியாக.

"ஹ்ம்ம்... ரொம்ப ஆசைதான்..." என்று அவன் தோளில் இடித்துவிட்டு, "அவளுக்கு நம் மேல ஏற்பட்டிருக்கிற சந்தேகத்தை முளையிலே கிள்ளிடணும். இல்லை யென்றால் ஆபத்துதான். நல்ல வேளை, இவளுக்குப் பிரெஞ்சு தெரியாதது ரொம்ப நல்லதாப் போச்சு.

"சரி, யாதவ்! நான் சொன்னதை ஞாபகத்தில் வைச்சிக்கோங்க. தப்பித் தவறிக் கூட உங்க கை அவள் மேல படக் கூடாது. ஜோஸ் சொன்னது ஞாபகம் இருக்குல்ல..." என்று எச்சரித்துவிட்டு, "அவள் வருகிற சத்தம் கேட்குது. நான் போறேன்..." என்று ரகசியக் குரலில் கூறிவிட்டு அங்கிருந்து அகன்றாள்.

இவர்களின் சதித் திட்டம் ஏதும் அறியாத சுஜி... முகத்தைக் கழுவிக் கொண்டு கீழே வந்தவள், சமையல் அறைக்குச் சென்று ஏற்கெனவே கபேடேரியாவில் ரெடி செய்து வைத்திருந்த டிகாஷனில் பாலைச் சூடு செய்து கலந்து கொண்டு வீட்டின் பின் பக்கத்தில் அமைந்துள்ள தோட்டத்திற்குச் சென்று அமர்ந்தாள்.

சூடான காபி தொண்டையில் இறங்க இறங்க... மந்தித்துப் போயிருந்த புத்தி மீண்டும் விழித்துக் கொள்ள, மதியம் நடந்த விஷயங்களை அசை போட்டது.

என்னதான் மீண்டும் மீண்டும் யோசித்துப் பார்த்தாலும்... 'ஒரு கணவன், அவன் தன் மனைவியைத் தொடுவதை ஏன் ஒரு சகோதரியால் ஏற்றுக் கொள்ள முடியாது...? அதற்கு ஏன் யாதவ் ஏதேதோ சொல்லிச் சமாளிக்கணும்...? ஏன் ஊரில் உள்ளவர்களிடம் என்னைப் பேச விடாமல் செய்கிறார்கள்...? என்னை எதற்கு இங்கே அழைத்து வந்தார்கள்...? இவர்கள் என்ன மாதிரி ஆட்கள்...?' என்று யோசிக்க யோசிக்க விடை கிடைக்காமல் மீண்டும் தலை விண்விண்ணென்று வலித்தது.

'கழனிப் பானைக்குப் பயந்து வாணலியில் விழுந்து விட்டேனோ...' என்று தோன்றியதும், நெஞ்சம் பயத்தில் அதிர... அப்படியே தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டாள்.

"சுஜி...!" என்ற யாதவ்வின் குரல் கேட்டு நிமிர்ந்தவளுக்கு, அவனைப் பார்க்கவே அருவருப்பாக இருக்க... முகத்தைத் திருப்பிக் கொண்டவளின் எதிரில் அமர்ந்து, "பர்தோன் சுஜி... அக்கா இப்படித் திடீரென்று

வந்து நிற்பாங்க என்று எதிர்பார்க்காததால்... அவன் கோபமாகப் பேசியதும் நான் கொஞ்சம் தடுமாறிவிட்டேன். அதுதான் அப்படியெல்லாம் பேசிவிட்டேன். சாரிம்மா..." என்று மீண்டும் மன்னிப்புக் கேட்டும் அவள் அவன் பக்கமே திரும்பிப் பார்க்காமல் வேறெங்கோ பார்வையைப் பதித்தாள்.

"எனக்குத் தெரியும். நீ என் மேல கொலேரா (கோபமாக) இருக்கிறாய்... நீ சொன்னதை நானும் யோசித்துப் பார்த்தேன். இதுவரை நானும் உன்னை எங்கேயும் அழைத்துப் போகவில்லை. அதுதான் உனக்கு எல்லாமே தவறாக நினைக்க வைத்திருக்கிறது.

"தக்கோர் (ஓ.கே.)... நாளைக்குக் காலையில் ரெடியாக இரு. நம்ம ஸ்டோர்க்குப் போயிட்டு அப்படியே வெளியே எங்கேயாவது போயிட்டு வரலாமா?" என்று மிக மிக மென்மையாகப் பேசப் பேச, யார்க்கும் எந்தக் கெடுதல்களையும் நினைத்துப் பார்க்காத சுஜிக்கு... யாதவ்வின் குள்ள நரித்தனம் புரியாமல் போக... மெலிதான புன்னகையுடன் சம்மதித்தாள்.

"அப்புறம் நீ வீட்டுக்குப் போன் செய்யணும் என்று சொன்னியே. இதோ போன். உன் இஷ்டப்படி பேசு..." என்று சொல்லிவிட்டு நாகரிகமாக விலகிச் சென்றவனைப் பார்க்க... அதுவரை மனதில் மையமிட்டிருந்த சந்தேகம் எல்லாம் பறந்தோட... விஸ்வத்திற்கு போன் பேச ஆரம்பித்தாள்.

குழம்பைத் தாளித்துச் சமையலை முடித்த பானுமதி, கைகளை முந்தானையால் துடைத்துக் கொண்டே, மகளைத் தேடி ஹாலுக்கு வந்தாள்.

கையில் பேபி கேர் புத்தகத்தைப் பிரித்து வைத்துக் கொண்டிருந்தாலும், அவளின் பார்வை என்னமோ விட்டத்தை நோக்கியே இருந்தது. அவள் பக்கத்தில் அமர்ந்து, "என்ன சங்கீ... கையில் புக்கை வைத்துக் கொண்டு தீவிரமாக வேறு ஏதோ யோசித்துக் கொண்டிருக்கிறாய்...? குழந்தையைக் கனவிலே எப்படியெல்லாம் நல்லபடியா வளர்ப்பது என்று யோசிக்கிறாயா?" என்றாள் சற்றுக் கேலியாக.

தாயின் கேள்வியில் எந்த விகல்பமும் இல்லையென்றாலும், சங்கீக்குச் சுருக்கென்று குத்த, அந்த வேதனையில் முகம் கசங்க, "சாரிம்மா... நான் உங்களை ரொம்ப கஷ்டப்படுத்திடேனா...? என்னால் தானே அப்பாவும் உங்களிடம் கொஞ்ச நாளா சரியாப் பேசலை..." என்றவள், மேற்கொண்டு பேச முடியாமல் தொண்டை அடைக்க நிறுத்தி,

"என்னைச் சரியாதானே வளர்த்தீங்க, பின்னே எப்படிமா இப்படி மாறினேன்...?" என்று அழுகையுடன் கேட்டவளைச் சமாதானப்படுத்தினாள்.

"சரி, கம்பெனி தொடங்குகிற விஷயம் எந்த அளவில் இருக்கிறது...? உன்னிடம் ஏதாவது சொன்னாரா மாப்பிள்ளை...?" என்று விசாரித்தாள்.

"ஹ்ம்ம்... சொன்னார்..." என்று அசுவராசியமாகப் பதில் சொன்னவளை விநோதமாகப் பார்த்த தாயிடம், "பின்னே என்னம்மா... பணம் கொடுத்து மூன்று மாதத்திற்கு மேல் ஆகுது. அது தொடர்பாகத்தான் அலைந்துகிட்டு இருக்கிறார். நேற்று கூட அந்த வேலை விஷயமாகத்தான் சென்னைக்குப் போயிருக்கிறார். கேட்டால் கம்பெனி தொடங்குவது அவ்வளவு ஈசியான விஷயமா என்று கேட்கிறார். நாம அவர் கேட்டதும் பணம் கொடுத்தது தவறோ என்று தோன்றுதும்மா..." என்று கவலைப்பட்டவளை அடக்கினார்.

"உனக்கென்ன ஆச்சு... நீயே ஆசைப்பட்டுக் கல்யாணம் செய்து கொண்டவரைப் பற்றி இப்போ எதுக்குத் தேவையில்லாமல் சந்தேகப்படுகிறாய். ஒரு வேளை மாப்பிள்ளை சொன்ன மாதிரிக் கூட இருக்கலாம். நீயேதானே இப்போ சொன்னாய். அந்த வேலை விஷயமாக மூன்று மாதமாக அலைகிறார் என்று.

"அப்புறமும் என்ன சந்தேகம் உனக்கு...? நீ வேண்டுமென்றால் பாரேன். உனக்குக் குழந்தை பிறக்கும் நேரம் மாப்பிள்ளை கம்பெனியை நல்லபடியா ஆரம்பிப்பார்..." என்று நம்பிக்கையூட்டும் விதமாகப் பேசியவள், "சரி வா. நேரமாச்சு. சாப்பிட வா..." என்று அழைத்துச் சென்றாள்.

**பி**ரான்ஸ்...

தாமரை கத்திய அந்தச் சம்பவத்திற்குப் பிறகு, யாதவ் அவளிடம் சொல்லிய மாதிரி, அடுத்த நாள் அவளை வெளியே அழைத்துச் சென்று பல இடங்களைச் சுற்றிக் காட்டினான். அதன் பிறகு தாமரையும் அவளிடம் கொஞ்சம் அன்பாகவே பழக முயற்சி செய்ய, சுஜிக்கு கொஞ்சம் நிம்மதியாக இருந்தது.

ஒரு நாள் ஹாலில் டிவியின் முன்னால் அமர்ந்து பிரெஞ்சு செய்திகளைப் புரிந்து கொள்ளப் போராடிக் கொண்டிருந்த சமயம்... அவளை யாரோ தொடுவது உணர்ந்து, தூக்கிவாரிப் போடத் திரும்பியவள்... தனக்கு நெருக்கமாக நின்று கொண்டிருந்த ஜோசைக் கண்டதும் அதிர்ச்சியில் துள்ளிக் குதித்து விலக எத்தனித்தாள்.

அதற்குள் அவளின் கையைப் பிடித்துவிட, "என்ன மதாம்... வந்தவனை வா என்று கூட கூப்பிடாமல் எழுந்து போறீங்க...?" என்று அசிங்கமான சிரிப்புடன் கேட்டதும், சுஜிக்கு ஆத்திரத்தில் உடம்பு நடுங்க, அவனை அடிக்கக் கையை ஓங்கிய அந்தச் சமயம் ஜோஸின் கன்னத்தில் பளாரென்று அறை விழ... சுஜியின் கையை விட்டு அலங்க மலங்க விழித்தான்.

"ராஸ்கல்! ஃப்ரெண்ட் என்று உன்னை வீட்டில் சேர்த்தால் என் மனைவியின் கையையே பிடிக்கிறாயா? உனக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம்...!" என்று எகிறிய கணவனின் கோபம்... அவளுள் நிம்மதியைத் தோற்றுவித்தது. அதே நேரம் தாமரையும் வந்துவிட விஷயம் கேள்விப்பட்டு, ஆத்திரத்துடன், "இன்னும் என்ன யாதவ் பேசிக்கிட்டு இருக்கே... கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளு. அந்த நாயை..." என்று கத்திவிட்டு,

"நீ மேல போம்மா, அவன் கண் முன்னால நிற்காதே..." என்று கரிசனமாகப் பேசி மேலே அனுப்ப,

"ச்சே.. தங்கமான இவர்களைப் போய்ச் சந்தேகப் பட்டேனே..." என்று தன்னையே குட்டிக் கொண் டவளுக்கு... அடுத்த மாதமே அவர்கள் தங்கம் இல்லை, பித்தளை என்று தெரிய வந்ததும் அதிர்ச்சியில் கலங்கிப் போனாள்.

சுஜி அங்கு வந்து சில மாதங்கள் ஆகிவிட்டதால்... தாமரையின் துணையோடு பக்கத்தில் நடக்கும் மர்ஷே எனப்படும் வாரச் சந்தைக்குச் செல்வாள். தாமரைக்கு வேலை இருக்கும் சமயங்களில் சுஜியே தனியாகச் செல்லும் அளவிற்குத் தேறினாள்.

அன்றும் அப்படித்தான். சனிக்கிழமை... மர்ஷே என்பதால் தாமரையிடம் என்னென்ன காய்கறி வேண்டும் என்று கேட்டுக்கொண்டு சென்றவள் மர்ஷேவில் கடைகளே அவ்வளவாக இல்லாததால், சீக்கிரமே வீட்டுக்குத் திரும்பியவள், கேட் திறந்தே இருப்பதைப் பார்த்து, 'இப்போதானே கேட்டை மூடி விட்டுப் போனேன். இப்போ திறந்திருக்கு. ம்ம்ம்... ஒரு வேளை யாதவ் வந்திருப்பாரோ...?' என்று யோசித்துக்கொண்டே உள்ளே சென்றாள்.

அங்கே யாதவ்வின் கார் இல்லாமலிருப்பதைப் பார்த்து, "சரி, யாராவது உள்ளே வந்திருப்பாங்க..." என்று தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டு மூடியிருந்த கதவைத் தட்ட... கையை ஓங்கின சமயம் உள்ளிருந்த



ஒரு ஆண்குரல் கேட்க... ஓங்கின கையைச் சட்டென்று இழுத்துக்கொண்டு... இந்தக் குரலை எங்கோ கேட்டிருக் கிறோமே... யோசித்தவளுக்கு அந்தக் குரல் யாருடையது என்று புரிந்ததும் ஷாக் அடித்த மாதிரி இருந்தது.

அப்படியே சத்தம் போடாமல் மெதுவாக வீட்டைத் தோட்டத்துப் பக்கம் சுற்றிக் கொண்டு பூனைப் பாதம் வைத்து உள்ளே சென்றவளின் கண்ணில், "என்ன ஜோஸ்... இன்னும் எத்தனை நாளைக்குத்தான் பூனையை மடியில் கட்டிக் கொண்டிருப்பது...? எப்போதுதான் அதற்கு ஒரு வழி செய்வாய்...?" என்று தாமரை அலுத்துக்கொள்ள, "என்ன செல்லம்... இப்படி அலுத்துக்கிறே, இந்த முறை அழகான ஐட்டம் கிடைச்சிருக்கு என்று சொன்னபோது கூட நான் நம்பவில்லை. ஆனால் அநியாயத்திற்கு இவ்வளவு அழகான பெண் கிடைத்திருக்கிறபோது அதற்குண்டான விலை நமக்குக் கிடைக்க வேண்டாமா?

"அதுதான் நானும் நல்ல பார்ட்டியா தேடறேன். கொஞ்சம் பொறுமையா இரு தாமரை... சீக்கிரமே இதற்கு ஒரு முடிவு கட்டறேன்..." என்று அவளை உரசிக்கொண்டு நின்று கொஞ்ச... சுஜிக்கு இவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று தெரிந்ததும்... எவ்வளவு பெரிய ஆபத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறோம் என்று புரிந்து பயத்தில் அவளின் தளிர் மேனி நடுங்கியது.

எப்போது யாதவ் வருவார்... அவரிடம் தாமரையும் ஜோஸும் பேசியதைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்று

பல நாட்களாக முயற்சி செய்தும்... அவனிடம் தனியாகப் பேச முடியாமல் போனது. தாமரையைப் பார்த்தாலே அவளுக்கு உடம்பெல்லாம் எரிய, அவளிடம் முகம் கொடுத்துப் பேசுவதையே நிறுத்திவிட, தாமரையும் அதைப் பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

இதற்கு நடுவில் கிறிஸ்மஸ் வர... அதற்குக் கோலாகலமாகக் கொண்டாடுவதற்காக சப்பன் எனப்படும் கிறிஸ்மஸ் மரத்தை ஜோடித்துக் கொண்டிருந்த யாதவ்வைத் தனியாகப் பார்த்ததும் அவனிடம் பேசியே ஆகவேண்டும் என்று கடகடவென்று கீழே இறங்கிக் கணவரின் அருகில் வந்தவள்... அங்கு அவன் பக்கத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த தாமரையைப் பார்த்ததும் சொல்ல வந்த விஷயத்தைத் தனக்குள்ளே விழுங்கிக் கொண்டு மீண்டும் மேலே சென்றாள்.

எப்பொழுது இவரிடம் உண்மையைச் சொல்லி இந்த அசிங்கத்திற்கு ஒரு முடிவு கட்டுவது என்று எப்பொழுதும் தீவிரச் சிந்தனையிலே உழன்று கொண்டிருந்தவளுக்கு... தனக்குத் தாலி கட்டியவனும் நல்லவன் இல்லை என்று புரிய வந்தது, கிறிஸ்துமஸ் அன்று.

கிறிஸ்துமசை எல்லோரும் சந்தோஷமாகக் கொண்டாட... சுஜிக்கு மட்டும் ஒவ்வொரு நிமிடமும் திக்திக்கென்று கழிந்தது.

அவளுக்கு யாதவ் கிறிஸ்மஸ் பரிசாக கோல்ட் வாட்சைக் கொடுக்க அதை வேண்டா வெறுப்பாக வாங்கிக் கொண்டவள்... அவனிடம் மெதுவாக, "யாதவ், உங்களிடம் கொஞ்சம் பேசணும்..." என,

அவன் நன்றாகக் குடித்திருந்ததால், "பேசலாம் சுஜி... இப்போ பார்ட்டியை என்ஜாய் செய்..." என்று தள்ளாடிக் கொண்டே டான்ஸ் செய்து கொண்டிருந்தவனிடம் மேற்கொண்டு பேச முடியாமல் திணறினாள்.

இரவு இரண்டு மணி வரை குடியும் கூத்தும் சிரிப்புமாகக் கழிய சுஜி நிலைகொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தாள். தாமரைக்குத் தெரியாமல் பேச வேண்டுமென்றால் இரவுதான் சரியான நேரம் என்பதை முடிவு செய்தவள்... பார்ட்டி முடிந்த பின்னும் தூங்காமல், தாமரை அவள் அறைக்குச் சென்ற பின் மாடியிலிருந்து இறங்கிக் கீழே இருந்த யாதவ்வின் அறைக்குச் சென்றாள்.

இதுவரை அவன் அறைப்பக்கம் சென்றதில்லை என்பதால்... அவள் கால்கள் தயக்கத்தில் பின்ன, மனதில் தைரியத்தை வளர்த்துக் கொண்டு அவன் அறையின் கதவைத் தட்டக் கையை வைத்ததுமே... கதவு உள் வாங்கிக் கொள்ள அங்கே யாதவ்வும் தாமரையும் இருந்த கோலத்தைப் பார்த்ததும் அதிர்ச்சியில் பூமியே அவள் காலடியில் நழுவியது.

## 14

**மா**ணிக்கம் ஆபீஸ் வந்த சில மணித் துளிகளிலே, "சங்கீதாவைப் பிரசவத்திற்காக மருத்துவ மனையில் சேர்த்திருக்கிறேன்.

சீக்கிரம் வாங்க..." என்று பதட்டத்துடன் பானு போன் செய்ய, அவருக்குப் பிடிக்கவில்லை என்றாலும் மனைவிக்காகக் கடமையே என்று மருத்துவமனையின் பெயரைக் கேட்டு கொண்டு புறப்பட்டார்.

மருத்துவ மனையின் பார்க்கிங்கில் காரை நிறுத்திவிட்டு இறங்கியவர், அதன் பக்கத்திலே அமைந்திருந்த பிள்ளையார் கோவிலில் கண்ணீருடன் வேண்டிக் கொண்டிருந்த மனைவியைப் பார்த்துவிட்டு, வேகமாக அவளருகில் வர, கணவரைக் கண்டதும் பானு அவரின் மார்பில் சாய்ந்து ஓவென்று அழுதாள்.

மனைவியின் அழுகையின் காரணம் புரியாமல் என்னவென்று விசாரித்தவரிடம், "நம்ம பெண்ணிற்கு நார்மல் டெலிவரி ஆகாதாம். அவளுக்கு இடுப்பு எலும்பு ரொம்ப வீக்கா இருக்காம். போதாததற்குக் குழந்தை எசகுபிசகாகத் திரும்பியிருக்காம்.

"ஆபரேஷன் செய்து குழந்தையை எடுக்கலாம் என்றால் அதைத் தாங்கிக் கொள்கிற சக்தி அவள் உடம்பிலே இல்லை என்கிறார்கள். எனக்கு என்ன செய்வது என்றே தெரியலைங்க. இந்தக் குழந்தை பிறப்பதற்குள் என் பெண்ணிற்கு ஏதாவது ஆகிவிடுமோ என்று பயமா இருக்குங்க..." என்று அழுகையினூடே சொல்ல... மாணிக்கம் அவளைச் சமாதானப்படுத்தி உள்ளே அழைத்துச் சென்றார்.

டாக்டரைச் சந்தித்து விசாரிக்க, மனைவி சொன்ன விஷயத்தையே திருப்பிச் சொல்லிவிட்டு, "பனிக்குடம் வேறு



உடைஞ்சிடுச்சு. அதனால் நேரத்தைக் கடத்த முடியாது. சிசேரியன் செய்துதான் குழந்தையை எடுத்தாகணும். வேறு வழியே இல்லை. அதனால் இதில் ஒரு கையெழுத்து போடுங்க..." என்று ஒரு பெரிய லெட்ஜரை அவர் முன் வைத்துவிட்டு, "நான் ரௌண்ட்ஸ் போயிட்டு வந்திடறேன்..." என்று வெளியே செல்ல, மாணிக்கம்... விஜய் எங்கே என்று மனைவியின் முகத்தைப் பார்த்தார்.

"மாப்பிள்ளை ஊரில் இல்லைங்க... கம்பெனி திறக்கிற விஷயமா அமெரிக்கா போகணும் என்று சொல்லிவிட்டுப் போன வாரம்தான் போனார். எப்போ திரும்பி வருவார் என்று தெரியலை..." என, அதற்கு மேல் பேசி நேரத்தை வீணாக்காமல் மாணிக்கமே கையெழுத்திட்டார்.

தனக்குத் தாலி கட்டியவனும், சகோதரி என்று சொல்லிக் கொண்டு இருப்பவளுமான இருவரது உண்மையான சொரூபம் தெரிந்ததும்... அவளின் நெஞ்சம் பயத்தில் உதற, எப்போது எப்படி அங்கிருந்து தன் அறைக்கு வந்தாளோ... அவள் அறியாள்.

அன்று இரவு முழுவதும் பொட்டுக் கண்மூட முடியாமல்... தான் கண்ட காட்சியே திரும்பத் திரும்ப வர... அந்த நிமிஷமே அங்கிருந்து ஓடி விட வேண்டும் என்று கை கால்கள் பரபரத்தன. ஆனால் எப்படிப் போவது? எங்கே போவது? இதென்ன இந்தியாவா... நினைத்தவுடன் ஒரு பையைத் தூக்கிக் கொண்டு பஸ் ஏறி எங்கேயாவது போவதற்கு... என்று நினைவு தோன்ற... உடம்பிலுள்ள

சக்தியெல்லாம் வடிந்தாற் போல உணர்வு எழ… அப்படியே கட்டிலில் படுத்துக் கண்ணீர் வடித்தாள்.

அடுத்துத் தான் என்ன செய்வது? தன் நிலைமையை யாரிடம் சொல்வது என்று தெரியாமல் நடுக்காட்டில் மாட்டிக்கொண்ட மாதிரி ஆகிவிட்டதே… என் நிலைமை. கடவுளே! எனக்கு ஏதாவது வழி காட்ட மாட்டாயா? அங்கிள் சொன்ன மாதிரி நான் என்ன சாதிக்க இங்கே வந்தேன்?

'இப்படி ஒரு பயங்கரத்தில் மாட்டிக்கொண்டதுதான் மிச்சம். அன்றே நான் செத்திருந்தால் இப்படி ஒரு நிலைமை எனக்கு ஏற்பட்டிருக்குமா?' என்று அந்த நேரத்தில்… தேவையில்லாத நடந்து முடிந்த விஷயங்கள் எல்லாம் பூதாகரமாக அவளுக்குத் தோன்ற, சுயபச்சாதாபத்தில் அழுகை வெடித்துக் கொண்டு வர, வாய்விட்டு அழுதாள்.

அழுது அழுது கண்ணீர் வற்றிப் போக விட்டத்தையே வெறித்துக் கொண்டு அமர்ந்திருந்தவளின் கண்கள்… அந்த அறையை இலக்கில்லாமல் அளவிட, மூலையில் சாதுவாக இருந்த போனில் பார்வை படிந்ததும்… முகத்தில் சட்டென்று ஒரு வெளிச்சம் வந்தது.

'அங்கிளுக்கு போன் செய்து தன் சிக்கலைச் சொன்னால் என்ன? அவர் என்னை இந்த இக்கட்டிலிருந்து காப்பாற்ற நிச்சயம் ஏதாவது செய்வார்…' என்று நினைத்ததுமே அதுவரை இருந்த பயம், குழப்பம், பதற்றம் எல்லாம் கொஞ்சம் குறைய, ஆவலுடன் விஸ்வத்திற்கு அழைத்தாள்.



ஆனால் ரிங் போவதற்குப் பதிலாக 'இந்தச் சேவை உங்களுக்கு இல்லை…' என்று ஒரு இனிய பெண் குரல் பிரெஞ்சில் சொல்ல… சுஜிக்கு அது என்ன சொல்கிறது என்று புரிந்து கொள்ள முடியாமல்… பல முறை முயன்று பார்த்து முடியாமல் போக… மறுபடியும் விலகியிருந்த பயம் அவளைச் சூழ்ந்துகொண்டது.

இப்படியே அவளின் இரவு கடந்து செல்ல, காலை எட்டு மணி ஆனதும்… 'இனியும் இப்படியே இருப்பதில் ஒரு பிரயோஜனமில்லை. இவர்களின் சுயரூபம் நான் தெரிந்து கொண்டதாக இவர்களுக்குக் காட்டிக் கொள்ளாமல் இருந்தால்தான் உயிரோடு இங்கிருந்து தப்பி ஊர் போய்ச் சேர முடியும். அதுவரை ஒன்றுமே தெரியாதவள் மாதிரி நடித்துத்தான் ஆக வேண்டும்…' என்று மனதில் தைரியத்தை வளர்த்துக் கொண்டு ஒரு முடிவெடுத்த பிறகு முகத்தில் கொஞ்சம் தெளிவும் பிறந்தது.

வேகமாகக் குளித்துவிட்டுக் கீழே இறங்கி வர, முதல் நாளிரவு அவர்கள் அடித்த கூத்தில் இருவரும் களைத்துப் போய் உறங்கிக் கொண்டிருக்க, கீழே வந்த அதே வேகத்திலே மேலே போய்க் குளிருக்குக் கோட்டையும், ஷூவையும் கைக்குக் கையுறையையும் அணிந்து கொண்டு வெளியே வர, ரோட்டில் நடக்க முடியாத அளவிற்குக் கால் புதையுமளவிற்குப் பனி கொட்டிக் கிடப்பதைப் பார்த்து சுஜிக்கு மலைத்துப் போனது.

அவள் முதல் முறையாக இப்படிப் பனி கொட்டிப் பார்க்கிறாள் என்பதால், அதிலே நடக்கவே பயந்தவளுக்குத்

தன் அபல நிலை ஞாபகத்திற்கு வர, எதைப் பற்றியும் யோசிக்காமல் பனியில் இறங்கி நடக்கலானாள்.

கொஞ்ச தூரம்வரை சென்றும், ரோட்டிலே ஆள் நடமாட்டமே இல்லாமல் வீதியே வெறிச்சோடிப் போய் இருக்க... எப்படித் தப்பிப்பது என்ற யோசனையிலே திரும்பி நடந்தாள்.

அன்றிலிருந்து வெளியே போகும் போதும், மார்ஷேவுக்குப் போகும் போதும் அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்களிடம் சிநேகமாகச் சிரிப்பது, போன்ஷார் சொல்வது, பாஷை சரியாகப் புரியவில்லை என்றாலும் சைகையிலே பேசுவது என்றிருந்தவளுக்குத் தன் வீட்டுப் பக்கத்திலே ஒரு இந்தியக் குடும்பம் இருப்பது தெரிய வர, அவர்களிடம் யாருக்கும் தெரியாமல் பழக ஆரம்பித்தாள்.

என்னதான் சுஜி அந்த மோசக்காரர்களுக்குச் சந்தேகம் வராத வரையில் நடந்து கொண்டாலும்... விதி சும்மா இருக்கவில்லை.

கீழே ஜோஸ், தாமரை மற்றும் யாதவ் மூவரும் ஹாலில் அமர்ந்து சுஜி அங்கில்லை என்ற தைரியத்தில் தமிழில் பேசிக் கொண்டிருந்தார்கள். தோட்டத்தில் போய் உலவிவிட்டு வரலாம் என்று மாடியிலிருந்து இறங்கியவள் பேச்சுக் குரல் கேட்டு அங்கேயே நின்று... அவர்கள் பேசியதை உன்னிப்பாகக் கேட்டதில் அந்த மோசக்காரர்கள் அவளைப் பெண்களை வைத்துத் தொழில் செய்பவர்களிடம் விலை பேசி முடித்துவிட்டதாகத் தெரிய வந்ததுமே... சுஜிக்கு உலகமே தட்டாமாலை சுற்ற... கீழே

விழாமல் இருக்க மாடிப்படியின் கம்பியை இறுக்கப் பற்றிக் கொண்டாள்.

சில நொடிகள் என்ன செய்வது என்று தெரியாமல் மூளை செயலிழந்து போக... அடுத்த வினாடி யாரோ வரும் சத்தம் கேட்டு உடம்பில் பரபரப்புத் தொற்றிக் கொள்ள... வேகமாகத் தன் ரூமிற்குச் சென்று கட்டில் அமர்ந்து கொண்டாள்.

புத்தகம் படிக்கிற மாதிரி நடித்துக் கொண்டிருந்தவளிடம் தாமரை, "நாம வெளியே போகலாம். சீக்கிரம் கிளம்பு, சுஜி..." என்றாள் கட்டளையாக.

வெளியே அழைத்துப் போகிற மாதிரி அழைத்துச் செல்வது அவர்கள் தன்னை விற்றுவிட்டு வருவதற்குத் தான் என்பதைத் தெரிந்து கொண்ட சுஜிக்கு... தன் வாழ்க்கை ஒரு முடிவுக்கு வந்துவிட்டதோ என்ற பயத்தில் நெஞ்சம் தந்தியடிக்க, பயத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல், "இல்லை. நான் வரலை. ஒரே தலைவலியா இருக்கு. நீங்க போயிட்டு வாங்க...." என்று சாதாரணமாகச் சொல்ல முயன்று அதில் ஓரளவு வெற்றியும் பெற்றாள்.

நல்லவளாக நடிப்பதில் ஆஸ்கார் விருது வாங்கும் அளவிற்கு நடிக்கும் தாமரையிடம் சுஜியின் அமெச்சூர் தனமான நடிப்பு எடுபடாமல் போனதோ என்னவோ. அவளைப் பார்வையாலே துருவி எடுக்க, சுஜியால் அவளை நேருக்கு நேர் பார்க்க முடியாமல் தடுமாறினாலும் தைரியத்தைக் கைவிடாமல் இருந்தாள்.

"தலைவலிதானே? அது ஒன்றும் பெரிய விஷயமில்லை. நான் மாத்திரை தருகிறேன். அதைப் போட்டுக் கொண்டு கிளம்பு..." என்று அதிகாரமாக கட்டளையிட, சுஜி அதைக் காதிலே வாங்காமல்... 'வர முடியாது,' என்று தன் நிலையிலே பிடிவாதமாக நின்றாள்.

சுஜியின் பிடிவாதம் தாமரைக்கு ஆத்திரத்தை உண்டு பண்ண, "என்னை எதிர்த்தா பேசறே..." என்று அவள் எதிர்பார்க்காத கணத்தில் கன்னத்தில் பளாரென்று அறை விழ... சுஜி தடுமாறிக் கீழே விழ, மீண்டும் அவளை இழுத்து அறை விடுவதற்குள் சத்தம் கேட்டு இரு மோசக்கார ஆண்களும் மேலே ஓடி வந்தார்கள்.

"பாரு யாதவ்... உன் பொண்டாட்டிக்குத் திமிரை... வெளியே வா என்று கூப்பிட்டால் தலைவலி... அது இது என்று பொய்க் காரணம் சொல்லிக்கிட்டு இருக்கா. நீயே என்னவென்று கேளு..." என்று பொரிந்தவளை அடக்கி,

"ஏன் சுஜி... அக்காவுக்குக் கோபம் வருகிற மாதிரி நடக்கிறே...? வெளியில் போகத்தானே கூப்பிடறாங்க. வாயேன்..." என்று நைச்சியமாகப் பேசியவனைப் பார்க்கப் பார்க்கப் பற்றிக் கொண்டு வந்தது.

அவனுக்கும் பதிலே கொடுக்காமல்... அழுத்தமாக நிற்க, முதலில் மெதுவாகப் பேசியவன்... ஜோஸ் 'மணியாச்சு...' என்று சைகையில் சொன்னதும், "ஏய் என்ன இது... கொஞ்சம் கூட மரியாதை இல்லாமல்... எது கேட்டாலும் ஊமைக் கேட்டான் மாதிரி நிற்கிறே...! இதுவரை நானே என் அக்கா பேச்சை மீறிப் பேசியதே



இல்லை... அவங்களையே எதிர்த்துப் பேசறே..." என்று ஆத்திரத்துடன் அவன் பங்குக்கு ஓர் அறை விட... அதையும் வாங்கிக் கொண்டு அழுத்தமாக இருவரையும் முறைத்தாள்.

இதுதான்டா உன்னுடைய உண்மையான சொரூபம். இதைத் தெரிஞ்சிக்க எனக்கு இத்தனை மாசம் தேவைப் பட்டிருக்கே... என்று மனதினுள் நொந்துகொண்டு,

"உங்க ஊரிலே சகோதரியைப் பொண்டாட்டி மாதிரி தான் நடத்துவீங்களா...?" என்று நிறுத்தி நிதானமாகக் கேட்டதும்... அங்கிருந்த மற்ற மூவருக்கும் தூக்கி வாரிப் போட.. பேய் முழி முழித்தார்கள்.

இதிலே சட்டென்று சுதாரித்துக் கொண்ட தாமரை, அவளருகில் வந்து, "அப்போ உனக்கு எல்லாமே தெரியும். தெரிஞ்சும் ஒன்றுமே தெரியாத மாதிரி நடிச்சிருக்கே... ம்ம்ம்..." என்று அவளை மேலும் கீழும் அளவெடுத்தவள்,

"ஆமாம்டி. யாதவ் என் புருஷன்தான். இப்போ நானே சொல்லிட்டேன். உன்னால் என்னடி செய்ய முடியும்...?" என்றாள், இறுமாப்பாக.

தாமரையின் எகத்தாளமான பேச்சு ஆங்காரத்தை உண்டு பண்ண,"சீ...! நீயெல்லாம் ஒரு பெண்ணா? உன் புருஷனைத் தம்பி என்று சொல்லி என்னை அவனுக்குக் கட்டி வைத்து இங்கே அழைத்து வந்து விலை பேசி... உயிரில்லாத பொருளை விற்கிற மாதிரிப் பெண்களை விற்கிறீங்களே... உங்களுக்கு அசிங்கமாக இல்லை... இதெல்லாம் ஒரு பொழைப்பா...? நீங்கள் எல்லாம்

மனுஷங்கதானா?" என்று தன் மனதில் அதுவரை பொத்தி வைத்திருந்த ரகசியத்தையும் ஆத்திரத்தையும் வெளியில் கொட்ட, மூவரும் அதிர்ந்தது என்னவோ சில விநாடிகள் தான்.

தங்கள் ரகசியத்தை இவள் எப்படி அறிந்து கொண்டாள் என்கிற ஆத்திரம் தலைக்கேற... தாமரை, "உனக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தால் நாங்கள் பேசியதை ஒட்டுக் கேட்பே...?" என்று அடிக்கக் கையை ஓங்க, யாதவ் அவளைத் தடுத்து,

"விடு தாமரை. அங்கே பார்ட்டி காத்துக்கிட்டு இருக்கும். நேரமாகுது. சீக்கிரம் இவளை ரெடி செய்து கொண்டு வா..." என்று கூறி விட்டு ஜோசை அழைத்துக் கொண்டு கீழே சென்றான்.

அரை மணி நேரம் கழித்துக் கீழே வந்த தாமரை, "ஜோஸ்... அவ ரொம்ப அடம் பிடிக்கிறா. இப்போதைக்கு அவளை அழைத்துக் கொண்டு போக முடியாது என்று நினைக்கிறேன். நீ பார்ட்டிக்குப் போன் செய்து இன்னொரு நாள் அழைச்சிக்கிட்டு வரேன்னு சொல்லிடு..." என்றாள், காரியம் நிறைவேறாத எரிச்சலுடன்.

"என்ன தாமரை இப்படி சொல்றே...? இதுவரை நாம எத்தனை பெண்களை இப்படி வித்திருப்போம். அப்படிப்பட்ட நாம இவளுக்குப் பயந்து நம்ம வியாபாரத்தைத் தள்ளி வைக்கலாமா?" என்று கேட்டான்.

அவன் முன் கோபத்துடன் அமர்ந்து, "நீ சொல்றது சரிதான். ஆனால் அந்தப் பெண்களுக்கு விஷயம் தெரிவ



தற்கு முன்னே வித்திடுவோம். ஆனால் இவளுக்குத் தான் இத்தனை மாசம் ஆகிவிட்டது. அவளும் நம்மைப் பற்றிப் புரிந்து கொண்டாள். அதுதான் அடம் பிடிக்கிறாள். இப்படியே அவளை இழுத்துப் போக முடியாதே... அப்புறம் பெரும் பிரச்னையாகி விடுமே..." என்று யோசிக்க.

அவளிடம் சுஜிக்கு யாராவது நண்பர்கள் இருக் கிறார்களா? அவளுக்கு மொழி தெரியுமா... என்றெல்லாம் கேட்டு, அதற்கெல்லாம் இல்லை என்ற பதில் வந்ததும், "அப்புறம் எதுக்குத் தாமரை யோசிக்கிறே...? பேசாமல் அவளை வீட்டை விட்டுத் துரத்து. சாப்பாடு போடாதே. பட்டினி போடு. அப்புறம் பார். குளிருக்குப் பயந்து நம்மிடம்தான் ஓடி வருவா..." என்று இறுமாந்த சிரிப்புடன் சொல்ல... மற்ற இருவரும் யோசித்தார்கள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு, "இல்லை... இவளை இரண்டு நாளில் அவள் வாயாலே, நானே வரேன் என்று சொல்ல வைக்கிறேன். நீ இப்போ போ..." என்று மேலே போனவள்... அவளைத் தரதரவென்று கீழே இழுத்து வந்து அவள் காலில் பழுக்கக் காய்ச்சிய சூட்டுக்கோலால் வைத்துச் சூடு போட... சுஜிக்கு வலியில் உயிரே போனாலும்... கண்களில் சொட்டுக் கண்ணீர் கூட விடாமல் அழுத்தமாக இருந்தாள்.

தாமரையும் சூடு போடுவது, பட்டினி போடுவது என்று முயற்சி செய்ய... சுஜியிடம் எதுவும் அவளின் எண்ணம் பலிக்காமல் போக... ஜோஸ் கொடுத்த ஐடியா

படி கட்டின புடவையோடு அவளை வெளியில் தள்ளிக் கதவை மூட... சுஜிக்குக் குளிரில் சகலமும் நடுங்கியது.

ஜனவரி மாதம் என்பதால் குளிர் மைனஸ் டிகிரியில் போக... அந்த அபலைப் பெண்ணால் தாங்க முடியாமல் தவித்துப் புடவையை இழுத்துப் போர்த்துக் கொண்டு கொஞ்ச தூரம் நடந்தவள்... அஷ்லாம் எனப்படும் அரசாங்க அடுக்குமாடிக் குடியிருப்பின் வாசற் கதவைத் திறந்து அந்த வராண்டாவில் ஒண்டிக்கொள்ள அப்படியும் குளிர் அவளை வாட்டி எடுத்தது.

குளிரில் கை கால்கள் தந்தியடித்தாலும்... ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாமல் போனாலும்... அவளின் நோக்கம் முழுவதும் எப்படியும் இங்கிருந்து யார் மூலமாவது தப்பிவிட வேண்டும் என்றிருந்ததால்... மனதில் வளர்த்துக் கொண்ட வைராக்கியத்தைக் கொஞ்சம் கூடக் கைவிடாமல் கையில் வைத்திருந்த தோல் கைப்பையை மார்போடு அணைத்தபடி இறுக்கக் கண்மூடிக் குறுக்கி அமர்ந்திருந்தவள் மீது ஒரு கைவிழத் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

## 15

ஹீட்டரின் சூடும், தொண்டையில் இதமாக இறங்கிய காபியின் சூடும் சுஜியின் நடுக்கத்தைக் கணிசமான அளவு குறைக்க, அவளின் முகமும் சற்றே தெளிந்தது.

காபி கப்பை உரியவர்களிடம் கொடுத்துவிட்டுக் கை கூப்பி வார்த்தையே வராமல் நன்றி சொல்ல, "என்னம்மா



இது? இதுக்கு எதுக்கு நன்றி எல்லாம். கடல் கடந்து வந்து வாழ்கிறோம். மனுஷனுக்கு மனுஷன் இந்த உதவி கூடச் செய்யலேன்னா எப்படி...? ம்ம்ம்...!" என்று உரிமையுடன் கூறிவிட்டு.

"அந்த ராட்சசி உன்னைக் கண்டுபிடிச்சி வந்த போது உன்னை இழுத்துக்கிட்டுப் போயிடுவாளோ என்று பயந்தோம். ஏதோ நல்ல காலம். அந்தச் சமயம் பார்த்து போலீஸ் வந்ததால் நீ தப்பிக்க முடிஞ்சது..." என்று பேசிக்கொண்டே எதிரில் அமர்ந்த அந்தப் பெண்ணைக் கண்கள் கலங்கப் பார்த்தவளுக்குக் கண்ணீர் பார்வையை மறைத்தது.

அஸ்லாம் வீட்டின் வராண்டாவில்... உறை பனிக் குளிரைச் சமாளிக்க முடியாமல் கைகால்களைக் குறுக்கிக் கண்மூடி அமர்ந்திருந்தவளின் தோளை யாரோ தொட... திடுக்கிட்டு மிரட்சியுடன் திரும்பியவள் மார்ஷேவுக்குப் போகும் பொழுது சில சமயங்களில் சிநேகமாகச் சிரித்த தமிழ்ப் பெண்ணைப் பார்த்ததும் சுஜியின் கண்கள் அவளையுமறியாமல் ஊற்றெடுத்தன.

"என்னாச்சும்மா... இந்த நேரத்தில் அதுவும் மைனஸ் டிகிரி குளிரில்... மேலே குளிர் கோட் எதுவுமில்லாமல் இருக்கே. உடம்புக்கு ஏதாவது வந்துவிடப் போகிறது..." என்று அக்கறையுடன் கேட்டதும்... சுஜிக்கு அழுகை வெடித்தது.

பொதுவாகவே அவள் யாரிடமும் தன் பிரச்னை களை மனம் விட்டுச் சொன்னதில்லை... மனதிற்

குள்ளேயே போட்டுப் புதைத்துக் கொள்வாள். சில சமயம் அப்படித் தாங்க முடியாதபொழுது விஸ்வத்திடமோ அவரின் மனைவி மைதிலியிடமோ தன் மனக் குமுறல்களைக் கொட்டித் தீர்ப்பாள். ஆனால் இன்று யாரென்று தெரியாத சரியான அறிமுகமில்லாத ஒரு பெண்ணிடம் தன் அவல நிலைகளைக் சடகடவென்று மூச்சே விடாமல் கொட்டித் தீர்த்தாள்.

அதைக் கேட்டுக்கொண்டிருந்த பொழுதே, தாமரை அவளைக் காணவில்லையே... எங்கே போயிருக்கிறாள் என்று தேடி வர... அந்தப் புதிய பெண் தாமரையைக் கண்டதும்... சுஜியைப் பக்கத்திலிருந்த பழைய சாமான்கள் போட்டு வைக்கும் காவ் எனப்படும் அறைக்குள் தள்ளி விட்டாள்.

ஒருவேளை இந்தக் குடியிருப்பின் உள்ளே சென்றிருப்பாளோ... என்று நினைத்துக் கேட்டில் கை வைக்க... அந்நேரம் வாசலில் போலீஸ் ஜீப்பிலிருந்து இறங்கிய போலீஸ்காரர்களைக் கண்டதும், தாமரை தேள் கொட்டிய திருடன் மாதிரி ஒன்றுமே தெரியாத மாதிரி அங்கிருந்து அகன்றதும், சுஜியை இழுத்துக் கொண்டு நான்காவது மாடியிலிருக்கிற தன் வீட்டிற்கு இழுத்துக் கொண்டு வந்துவிட்டாள்.

அதை நினைத்ததும்... சுஜியின் தேகம் தன்னையும் அறியாமல் சிலிர்த்து அடங்க, இவர்கள் யாரோ எவரோ ஆபத்தில் இருந்த என்னை ரிஸ்க் எடுத்துக் காப்பாற்றி இருக்கிறார்கள். இத்தனைக்கும் வெறும் சாதாரணக் குடும்பம்தான்.



எந்த விதத்திலும் சொந்தமில்லாத இவர்களுக்கிருக்கிற அக்கறை, மனிதாபிமானத்தில் ஒரு சதவிகிதம் கூடத் தாலி கட்டியவனுக்கு இல்லையே... ஈவு இரக்கமே இல்லாமல் கட்டின மனைவியையே விலை பேசி விட்டானே... பாதகன்..." என்று நினைக்க நினைக்க ரத்தம் கொதித்தது.

"என்ன சுஜிதா... நான் கேட்ட கேள்விக்குப் பதிலே சொல்லாமல் ஏதோ யோசனையில் இருக்கிறே..." என்று அந்தப் பெண் அவளுடைய நினைவைக் கலைக்க, தன் கோபத்தைத் தள்ளி வைத்துவிட்டு, "சாரி.... நீங்க என்ன கேட்டீங்க என்று கவனிக்கலை..." என்றவளிடம்,

"அடுத்து நீ என்ன செய்யப் போறே...?" என்று கேட்டார்கள்.

"எனக்குப் புரியவில்லைக்கா? இப்போ என் மனசில் இருப்பதெல்லாம் இவர்களைச் சும்மா விடக் கூடாது. இப்படியே விட்டால் இன்னும் எத்தனை பெண்களின் வாழ்க்கையை அழிப்பார்களோ...? அதனால் இவர்களைப் பற்றிப் போலீசில் கம்பளைண்ட் கொடுத்தால் என்ன?" என்று குரல் நடுங்க அவர்களிடம் யோசனை கேட்டாள்.

"ஹ்ம்ம்! உன் கோபம் நியாயமான ஒன்றுதான். ஆனால் இங்கே நம்மூர் மாதிரி சட்டென்று ஒருத்தர் மேலே கம்ப்ளைண்ட் கொடுக்க முடியாது. முதலில் நீ யார் என்னவென்று நிருபணம் வேண்டும். அப்புறம் உனக்கும் அவனுக்கும் கல்யாணமான ப்ரூஃப் வேண்டும். இதெல்லாம் இப்போது உன்னிடம் இருக்கா?" என,

"என்னிடம் பாஸ்போர்ட் இருக்கு..." என்றவள், "கல்யாணமான ப்ரூஃப் என்றால்...?" என்று புரியாமல் இழுத்தாள்.

"அதாவது நம் இந்து முறைப்படி கல்யாணம் நடப்பதற்கு முன் விசாவிற்காகப் பிரெஞ்சு கோன்சிலேட்டில் ஒரு கல்யாணம் செய்வார்கள். அப்போது உங்கள் இருவருக்கும் திருமணம் ஆகிவிட்டது என்பதற்கு அத்தாட்சியாக ஒரு சிறிய புத்தகத்தில் உங்களைப் பற்றிய விவரங்களை அச்சடித்து உங்கள் கையெழுத்துடன் கொடுப்பார்கள். அதை இங்கே லிவரே த பமி என்பார்கள். அது இருந்தால்தான் இங்கே வேலையே நடக்கும். அது உன்னிடம் இருக்கா?" என்று கேட்க, சுஜிதா பரிதாபமாக விழித்தாள்.

அவளின் நிலைமையைப் புரிந்து கொண்டு, "சரி விடு... உன்னுடைய பாஸ்போர்டை வைத்து முயற்சிக்கலாம்..." என்று சமாதானப்படுத்தி அவளுக்குச் சாப்பிடக் கொடுத்து ரெஸ்ட் எடுக்க அனுப்பினார்கள்.

அடுத்த நாள் நாலைந்து நண்பர்கள் புடைசூழ போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று நடந்த விஷயங்களைப் பற்றிக் கூறி, யாதவ்வின் மேல் புகார் கொடுக்க, கம்ப்யூட்டரில் தட்டிப் பார்த்துவிட்டு உதட்டைப் பிதுக்கினார்கள்.

"பர்தோன் மதாம்... உங்களுக்கு இந்தியாவில் முறைப்படி மேரி கல்யாணம் நடந்திருந்தால் இங்கே வந்து அதைப் பதிய வேண்டும். அப்படிப் பதிந்திருந்தால்



எங்களுக்குப் பதிவாகி இருக்கும். ஆனால் யாதவ் - சுஜிதா என்ற பெயரில் யாருமே இல்லையே...?" என்று கையை விரித்து,

"உங்க பாஸ்போர்ட்டில் உங்க தந்தையின் பெயர் தான் இருக்கிறது. கணவரின் பெயரே இதில் இல்லை. இப்படி எந்த ப்ரூஃபுமே இல்லாத இந்தக் கேசை நாங்கள் கம்ப்ளைண்டா எடுக்க முடியாது. சாரி..." என்று கூறிவிட எல்லோருக்குமே ஏமாற்றமாக இருந்தது.

அடுத்து என்ன செய்வது என்று எல்லோரும் தீவிரமாக யோசிக்க, அவளைக் காப்பாற்றின துளசி - பிரதாப் தம்பதியினர், "சுஜி, உன்னை அந்தத் திருடன் நன்றாக ப்ளான் செய்துதான் அழைத்து வந்திருக்கிறான்... உன்னிடம் எந்தவித ஆதாரமுமில்லாமல் செய்து விட்டான். அதனால் முதலில் இங்கிருந்து நீ இந்தியா போவதுதான் உனக்குப் பாதுகாப்பு, என்ன சொல்கிறாய்...?" என்று தங்கள் முடிவைத் தெரிவித்தார்கள்.

கொஞ்ச நேரம் யோசித்தவள் கடகடவென்று கையில் போட்டிருந்த இரண்டு வளையலைக் கழட்டி அவர்களிடம் கொடுத்து,

"நீங்கள் சொல்வதுதான் சரி. நான் ஊருக்கே போகிறேன், ஏற்பாடு செய்யுங்கள், ப்ளீஸ்... என்னிடம் இவ்வளவுதான் நகை இருக்கு. எல்லா நகைகளையும் அவர்கள் பிடுங்கிக் கொண்டார்கள்..." என்று பரிதாபமாகக் கூறியவளின் தோளை ஆறுதலாகத் தட்டிக் கொடுத்து,

"நீ கவலைப்படாதே. உனக்குத் தேவையான பொருட்களும், டிக்கேட்ச்சும் நாங்கள் ஏற்பாடு செய்கிறோம்.. நீ போய் ரெஸ்ட் எடு..." என... அந்த நேரத்தில் கடவுளே அவர்கள் இருவரின் உருவத்திலே வந்த மாதிரி தோன்றியது சுஜிக்கு.

அவர்கள் சொன்னபடியே... அன்றே எல்லா ஏற்பாட்டையும் செய்து, அடுத்த நாள் காலையிலே ஊருக்குப் போக ஏற்பாடு செய்தவர்களை ஆச்சர்யமாக விழி விரித்து நோக்கியவளிடம், "உன் விசா முடிய இன்னும் ஆறு நாள்தான் பாக்கி இருக்கு. சோ... விசா எடுக்க வேண்டிய வேலை இல்லை. அதனால் எல்லாமே சீக்கிரம் முடிஞ்சிருச்சு.

"அதுமட்டுமில்லை. நீ இருக்குமிடம் அவர்களுக்குத் தெரிந்துவிட்டது. உன்னைத் தேடி அவர்கள் இந்தக் குடியிருப்புக்கு வந்தார்கள். ஆனால் எந்த வீடு என்பது தான் அவர்களுக்குத் தெரியவில்லை... அது தெரிவதற்குள்... நீ இங்கிருந்து கிளம்பியாக வேண்டும்.

"அதனால்தான் உன்னை வேறு இடத்தில் தங்க வைத்தோம். தவறாக நினைக்காதே. அதிக நாள் உன்னை இங்கே வைத்திருப்பது எங்களுக்கும் ஆபத்து, உனக்கும் ஆபத்து. அதனால்தான் சொல்கிறேன். நீ இங்கிருந்து சீக்கிரமா இந்தியா செல்வது நல்லது..." என்றவர்களிடம் எதையும் பேச முடியாமல் கண்ணீருடன் தலையாட்டத் தான் முடிந்தது.



ஏர்போர்ட்டில் எல்லாச் சம்பிரதாயங்களும் முடிந்து துளசியிடம் பேசிக் கொண்டிருந்தவளின் மனம்... முதன் முதலாக ஒரு அயோக்கியனுடன் வந்திறங்கிய அந்தக் கசப்பான காட்சி கண்ணில் தோன்றி மறைய அவளின் இளந்தளிர்த் தேகம் லேசாக நடுங்கியது.

அவளின் நடுக்கத்தைத் தனியாகப் போகப் பயப் படுகிறாள் என்று புரிந்து கொண்ட துளசி... இந்தியப் பயணிகள் யாராவது தென்படுகிறார்களா என்று தேட, அவளின் கண்களில் ஒரு இந்தியக் குடும்பம் சிக்க, அவர்களிடம், "கொஞ்சம் இந்தப் பெண்ணைச் சென்னை ஏர்போர்ட் வரைக்கும் கொண்டு போய் விட முடியுமா...?

"பிகாஸ் கனெக்ட்டிங் ஃபிளைட் என்பதால் இவங்களுக்கு மிகவும் கஷ்டம். ஊருக்குப் புதுசு, மொழியும் தெரியாது..." என்று அறிமுகப்படுத்தி வேண்டுகோளை வைக்க... சுஜிக்கு அவர்கள் தன்மேல் வைத்திருந்த அக்கறையை நினைத்து ஆயாசமாக இருந்தது.

அவளிடம் இன்டர்நேஷனல் மொபைல் கொடுத்து, நாங்கள் உன் தந்தையிடம் பேசிவிடுகிறோம். உன்னைச் சென்னை ஏர்போர்ட்டில் பிக்கப் செய்துக்குவாங்க. அதனால் தைரியமாப் போயிட்டு வா. எல்லோரிடமும் கலந்து பேசி ஒரு நல்ல முடிவா எடு. உன் வாழ்க்கை உன் கையில்..." தைரியம் சொல்லி அனுப்பி வைக்க, அவர்களைப் பிரிய மனம் இல்லாமல் புதிதாக அறிமுகம் ஆன இந்தியக் குடும்பத்துடன் சென்றாள்.

அவர்களின் உதவியுடன் போர்டிங் முடிந்து, விமானத்தின் சீட்டில் அமர்ந்தவளுக்குக் கண்ணீர் கரையை உடைக்க, சத்தம் போட்டு அழ முடியாமல் மனதிலே எல்லாவற்றையும் புதைத்துக் கொண்டு கண்ணை மூடிச் சாய்ந்து கொண்டவள்... அப்படியே களைப்பில் உறங்கி விட... கனவிலே தாமரையும், யாதவ்வும் அவளைக் கண்டுபிடித்து அந்த விமானத்தில் இருந்து கீழே தள்ள முயற்சிக்க, சுஜி பயத்தில் திடுக்கென்று எழுந்தவளின் முகம் முத்து முத்தாய் வியர்த்திருந்தது.

தான் கண்டது கனவு என்று புரிய முகத்தை டிஷ்யூ பேப்பரில் துடைத்துக் கொண்டவள்... விமானம் கீழே இறங்குவதை அறிந்து தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டாள்.

எல்லாம் முடிந்து வெளியே வந்த சுஜியைக் கண்டதும் ஓடிவந்து கையைப் பிடித்து கொண்ட தந்தை, "உன் வாழ்க்கையை நானே வீணாக்கிவிட்டேனே..." என்று அழ, எதையும் பேச முடியாமல் மனம் வெதும்பிப் போயிருந்த சுஜியை... மைதிலி கண்ணீருடன் ஆதரவாக அணைத்துக் கொண்டாள்.

**கு**ழந்தையுடன் வீடு திரும்பிய சங்கீதாவின் முகத்தில் ஒரு குழந்தைக்குத் தாயான சந்தோஷமோ, பூரிப்போ எதுவுமே இல்லாமல் அதற்கு மாறாகக் கலவரத்தையே சுமந்திருந்தது.



பச்சைக் குழந்தையைக் கூடக் கவனிக்காமல் எப்பொழுதும் விட்டத்தையே வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்த மகளின் நிலை தாயாருக்குக் கவலையை அதிகரிக்க... கணவரிடம்,

"என்னங்க, நம்ம பெண்ணைப் பாருங்க, ஏதோ சித்தப் பிரமை பிடிச்ச மாதிரி உட்கார்ந்திருக்கா. நீங்களாவது போய் மாப்பிள்ளையைக் காணவில்லை என்று போலீசில் ஒரு கம்ப்ளைன்ட் கொடுங்களேன்..." என்று ஆதங்கம் தாங்க முடியாமல் அழுகையுடன் முறையிட்டவளை... 'ஹய்யோ பாவம்!' என்கிற மாதிரி பார்த்தார்.

"நீ தெரிஞ்சுதான் பேசறியா? இல்லை, தெரியாமல் பேசறியா? ம்ம்ம்... உன் மாப்பிள்ளை என்ன வாயில் விரல் வைத்தாலும் கடிக்கத் தெரியாத ஒன்றும் தெரியாத சின்னக் குழந்தை பாரு... காணவில்லை என்று போலீசில் போய் கம்ப்ளைன்ட் கொடுக்க... அப்படிக் கொடுத்தேன் என்றால் என்னை விட முட்டாள் இந்த உலகத்திலே இருக்க மாட்டான்..." என்று எரிந்து விழுந்தவர்,

"கைப் புண்ணுக்குக் கண்ணாடி எதுக்கு..." என்று தனக்குள் புலம்பினார்.

கணவரின் கோபத்தைச் சற்றும் சட்டை செய்யாமல், "இதுவரைக்கும்தான் அவள் மேல் கோபமாக இருந்தீர்கள். இப்போதும் கூடவா உங்கள் கோபத்தை அவளிடம் காட்டுவது...? அவளே நொந்து போயிருக்கா, அவளை மேலும் நோகடிக்காதீங்க..." குறைபட்டவளை... 'நீ திருந்தவே மாட்டே!' என்ற ரீதியில் பார்த்துவிட்டு,

"நான் என்னம்மா செய்யறது...? இது உன் மகளா தேடிக் கொண்டது... அதை அனுபவிச்சுத்தானே ஆகணும்...? ஹ்ம்ம்... காதலிக்கும்போது பெற்றவர்களை எப்படியெல்லாம் ஏமாற்றலாம் என்று நினைத்துச் செயல்படுகிறார்களே தவிர... தான் காதலிப்பவன் நல்லவனா, உண்மையானவனா? கடைசிவரை தன் கூட வருபவனா என்று பார்க்கத் தவறி விடுகிறார்கள்.

"உண்மையாகக் காதலித்திருந்தால் கட்டின மனைவி பிரசவத்திற்காக மருத்துவ மனையில் இருக்கிறாள் என்று தெரிந்தும் விட்டுப் போக மனசு வருமா...? பணத்திற்காகக் காதலித்தானோ, இல்லை... வேறு எதற்காகக் காதலித்தானோ...?" என்று சொல்லி முடிக்கும் முன்,

"என்னை மன்னிச்சிடுங்க டாடி..." என்று கதறிக் கொண்டு அவர் காலில் மகள் விழ, மாணிக்கத்திற்கு அதுவரை இருந்த கோபம், வைராக்கியம் எல்லாம் மகளின் அழுகையின் முன் தவிடு பொடியாகியது.

அவரைப் பார்வையால் சுட்டெரித்துக் கொண்டிருந்த பானுவுக்கு மகளின் கதறல் அவளின் நெஞ்சை உலுக்க, வேகமாக ஓடி வந்து, அவளைத் தூக்கி நெஞ்சோடு அணைத்துக் கொள்ள ஓடி வந்தாள், அதே சமயம் மாணிக்கமே அவளைத் தூக்கித் தன்னோடு அணைத்து ஆறுதல் கூறவும் பானுவுக்குச் சந்தோஷத்தில் அழுகையே வந்தது.

"அழாதே செல்லம்... பச்சை உடம்புக்கு ஆகாது. எப்படியாவது உன் புருஷனைத் தேடிக் கண்டுபிடிச்சு வந்து உன் முன் நிறுத்தறேன், போதுமா...?" என்று குரல்



பிசிறடிக்கக் கூறியவர், அவளைத் தன்னிடமிருந்து விலக்கிக் கண்களைத் துடைத்து விட, அவரின் கையைப் பிடித்துக் கொண்டு, "முதலில் என்னை மன்னிச்சிட்டேன் என்று சொல்லுங்க டாடி..." என்று பரிதாபமாக அழுதாள்.

பக்கத்திலிருந்த பானு அவள் கண்ணீரைத் தன் முந்தானையால் துடைத்து, "அழாதே சங்கீ... உன் டாடி உன்னை மன்னிச்சு ஏத்துக்கிட்டார். அப்பாவுக்கு உன் மேலே கோபம் எதுவுமில்லேம்மா. அவர்தான் கூடிய சீக்கிரமே உன் புருஷனைக் கண்டுபிடிச்சுக் கொண்டு வரேன் என்று சொன்னாரே... அப்புறமும் ஏன் அழறே...?" என்று 'அவளை அழாதே...' என்றாள் அழுகையுடன்.

"எனக்கு அவன் வேண்டாம்மா..." என்று மகள் தீர்க்கமான குரலில் உறுதியாகச் சொல்ல... கேட்டு அழுது கொண்டிருந்த பானு விக்கித்துப் போக, மாணிக்கம் அவளை விநோதமாகப் பார்த்தார்.

அவருக்கு மகள் அப்படிச் சொன்னது அதிர்ச்சியைத் தரவில்லை, மாறாக அதிசயமாக இருக்க மகளைக் கேள்வியாக நோக்கினார்.

மகளின் பதிலில் ஆடிப் போயிருந்த பானு அவளைத் தன் பக்கம் திருப்பி, தோளைப் பிடித்து உலுக்கி, "ஏய் என்னடி சொல்றே..? உனக்கு ஏதும் கிறுக்குப் பிடிச்சிடுச்சா...? தாலி கட்டிய புருஷனை வேண்டாம் என்கிறாயே...?" என்று கடிந்தவள், சட்டென்று தணிந்து, "அப்பாவுக்காக அவரை வேண்டாம் என்று சொல்றியாம்மா...?" என்று கனிவாகக் கேட்டாள்.

"இல்லேம்மா... இந்தத் தாலியைக் கட்டியவன் அயோக்கியன் என்று பல முறை அவன் செயலால் எனக்கு உணர்த்தியிருக்கிறான். அப்படி இருந்தும் நான் விட்டுக் கொடுத்து அமைதியாக இருந்ததிற்குக் காரணம், ஏற்கெனவே என் இஷ்டப்படி நான் செய்து கொண்ட கல்யாணத்தால் நொந்து போயிருந்த உங்களை மேலும் நோகடிக்க வேண்டாம் என்றுதான்.

"ஆனால் இன்று அவன் ஓடியே போய்விட்டான். இனியும் எதற்கு அவனைத் தேடி அழைத்து வர வேண்டும்..? அப்படிப்பட்ட புருஷன் எனக்குத் தேவையே இல்லை..." என்று தெள்ளத் தெளிவாக, மிக நிதானமாகப் பேசியவளை... இப்போது பானு ஆச்சர்யமாகப் பார்த்தாள்.

மகளின் பேச்சில் இருந்த பக்குவம் தாய்க்குச் சந்தோஷமாக இருந்தாலும், தன் மகள் புருஷனே இல்லாமல் வாழ்ந்தால் இந்த உலகம் அவளை வாழா வெட்டி என்று கூறுமே என்று எண்ணியதுமே... அந்த தாய் உள்ளம் கலங்கிப்போனது.

மாணிக்கத்திற்கு மகள் திருமணம் செய்து கொண்டு வந்த நாளிலிருந்தே விஜய்யைப் பிடிக்கவில்லை என்றாலும் இப்போது மகள் தனக்கு வாழ்க்கையே வேண்டாம் என்று அதைத் தொலைத்து விட்டு நிற்பதைப் பார்க்கும் சக்தியற்று எதையும் சொல்லத் தோன்றாமல் அப்படியே நாற்காலியில் சரிந்தார்.

**அடி** அண்ணாமலை கோவிலின் பிராகாரத்தில் தலையைச் சாய்த்துக் கோவிலின் முன் நிழலுக்காக வேயப்பட்டிருந்த கூரையின் வழியே சூரியக் கதிர்கள்



திட்டுத் திட்டாகக் கீழே விழுந்திருப்பதைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தவளுக்குத் தன் வாழ்க்கையும் சில்லுச் சில்லாய் இதே மாதிரி சிதறிவிட்டதே... என்று மனதில் தோன்றிய தருணம், அவள் பார்வை அங்கிருந்த அண்ணாமலையின் சன்னதியை நோக்கியது.

அழகாக அலங்கரிக்கப்பட்டுக் கருணையே வடிவாக வீற்றிருந்த சிவனிடம், "நான் ஆசைப்பட்ட வாழ்க்கை தான் எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால் மற்றவர்கள் எனக்காகப் பாடுபட்டு உருவாக்கிக் கொடுத்த வாழ்க்கையும் இப்படியாகிவிட்டதே...

"என்னை ஏன் இந்தளவிற்குச் சோதிக்கிறாய்...? நான் என்ன பாவம் செய்தேன்...? உன்னைத்தானே என் தாயாக நினைத்திருந்தேன். ஒரு தாயே மகளின் வாழ்க்கையை வீணாக்குவாளா? ஆனால் நீ என்னைப் படுபாதாளத்தில் தள்ளிவிட்டாயே...!" என்று ஆத்திரத்துடன் கடவுளிடம் தன் குறைகளை முறையிட்டுக் கொண்டிருந்தவளின் முன்னால் ஒரு உருவம் வந்து நிற்க... சுஜி, தன் புலம்பலை நிறுத்திவிட்டு எரிச்சலுடன் கண்களை மலர்த்தி யாரென்று பார்த்தாள்.

## 16

**சுஜி**யைத் தேடி வீட்டுக்குச் சென்ற விஸ்வம் அவள் கோவிலுக்குச் சென்றிருக்கிறாள் என்று தெரிய வந்ததுமே... எந்தக் கோவிலுக்குப் போயிருப்பாள் என்று புரிந்தவர் நேரே அடி அண்ணாமலை கோவிலுக்குச் சென்றார்.

அங்கே தன் குறைகளை ஆத்திரமும், அழுகையுமாகக் கொட்டிக் கொண்டிருக்க, அதைக் கேட்டதும், அவளின் மனது எந்தளவிற்கு ரணமாகி இருக்கிறது என்று புரிய... அவர் அறியாமலே அவர் கண்கள் குளம் கட்ட, அதைத் துடைத்துக் கொண்டு அவள் முன் நின்றார்.

விஸ்வத்தைக் கண்டதும், கண்ணை முந்தானையால் துடைத்துக் கொண்டு, வாங்க... என்று கூடச் சொல்லாமல் பேசாமல் தலை குனிய, அவள் முன் அமர்ந்து அவளையே பரிதாபமாகப் பார்த்தார்.

"என்னம்மா என்னைப் பார்க்கக் கூட பிடிக்கலையா? உன்னுடைய இந்த நிலைமைக்கு நான்தான் காரணம் என்று நினைக்கிறாயா?" என்று கேட்டவர்,

"உண்மைதான். எப்படியாவது உன்னை அந்த நரகத்தில் இருந்து காப்பாத்தணும் என்று நினைச்சு அதை விடக் கொடிய நரகத்தில் தள்ளிவிட்டுட்டேனே. இப்படிப் பட்ட என் மேலே நீ கோபமா இருக்கிறது நிச்சயம் தவறே இல்லை..." என்று குற்ற உணர்ச்சியோடு தான் கேட்ட கேள்விக்கு அவரே பதில் சொல்லிக் கொள்ள... சுஜி அவரை அடிபட்ட மாதிரி பார்த்தாள்.

"என்ன அங்கிள்... இந்த மாதிரியெல்லாம் பேசி என்னைக் கஷ்டப்படுத்தறீங்க. உங்களைக் குறை சொன்னால் அந்தக் கடவுள் கூட என்னை மன்னிக்க மாட்டார். நீங்க இப்படியெல்லாம் நடக்கும் என்று தெரிந்தேவா செய்தீர்கள்? இல்லையே... கல்யாணம்



செய்துகொண்ட எனக்கே தெரியாதபோது உங்களுக்கு எப்படிப் புரியும்?

"இதில் விதியைத் தவிர வேறு யாரைக் குறை சொல்ல முடியும்?" என்று விரக்தியாகப் பேச... "இந்தப் பெண்ணிற்கு ஏன்தான் இப்படியெல்லாம் நடக்கிறதோ...? ஆண்டவா... உனக்குக் கருணையே இல்லையா...?" என்று சந்நிதானத்தைப் பார்த்துத் தனக்குள்ளே புலம்பினார்.

மீண்டும் அமைதியாகத் தலை குனிந்தபடி தரையில் விரலால் மனம் போன போக்கில்... கோலம் போட்டுக் கொண்டிருந்த சுஜியை நோக்கி, "இன்னும் எத்தனை நாளைக்குத்தான் நடந்து முடிந்ததையே நினைத்து வருத்தப்படப் போகிறாய். நீ ஊரிலிருந்து வந்ததிலிருந்து வீட்டில் யாரிடமும் பேசவே இல்லையாம். சரியா சாப்பாடும் தூக்கமும் இல்லை என்று உன் தங்கை சொலலி வருத்தப் படுகிறாள்.

"ஏன்ம்மா... உன்னையே நீ இப்படி வருத்திக் கொள்கிறாய்...? இதனால் யாருக்கு என்ன லாபம்? அல்லது நஷ்டம்? நயவஞ்சகர்கள் எல்லாம் சந்தோஷமாக இருக்கும் போது எந்தப் பாவமும் செய்யாத நீ எதுக்கும்மா கஷ்டத்தை அனுபவிக்கணும்...?" என்று சற்று ஆதங்கம் கலந்து கேட்டவருக்குப் பதில் சொல்லாமல் எழுந்து குளம் இருக்கும் பகுதி நோக்கி நடந்தாள்.

விஸ்வமும் அவள் பின்னாலே செல்ல, குளத்தில் துள்ளிக் குதித்த மீன்களைச் சிறிது நேரம் வேடிக்கை

பார்த்தவள்... என்ன நினைத்தாளோ.... சட்டென்று அவர் பக்கம் திரும்பி, "அங்கிள்... எனக்கு ஏதாவது வேலை வாங்கித் தர முடியுமா? அதுவும் இங்கே வேண்டாம். எங்கேயாவது தூரத்தில், கோவில்கள் அதிகம் இருக்கிற ஏதாவது ஒரு ஊரில் வேலை வேண்டும். முடியுமா அங்கிள்...?" என்று... அழுகை இதோ வந்துவிடுவேன் என்று கட்டியம் கூற, கெஞ்சும் குரலில் கேட்டாள்.

அவளின் கெஞ்சல் விஸ்வத்தின் உள்ளே எதுவோ உடைய.. கை முஷ்டி இறுகக் கண்ணை மூடித் திறந்து தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு, "உனக்கு வேலை தானே வேண்டும். அதுக்கு ஏன்ம்மா இப்படிக் கெஞ்சிக் கேட்கிறாய். உனக்குச் செய்ய நான் என்றைக்குமே கடமைப்பட்டிருக்கேன் சுஜிம்மா. அது சரி. ஏன் வெளியூரில் வேலை வேண்டும் என்கிறாய். இங்கிருக்கப் பிடிக்கலையா?" என்று புரியாமல் கேட்டவருக்கு,

"அப்படியெல்லாம் இல்லை அங்கிள்! நான் திரும்பி இங்கேயே வந்தது சித்திக்குப் பிடிக்கவில்லை. அவர்களுடைய பெண்களின் திருமணத்திற்கு என்னால் தடங்கல் வருமோ என்று பயப்படுகிறார்கள்..." என்று சொல்லும்போதே அழுகை முட்டிக் கொண்டு வர, மேலே தொடர முடியாமல் தொண்டை அடைத்துக் கொள்ள.. முகத்தைக் குளத்தின் பக்கம் திருப்பிக் கொண்டாள்.

அவளின் தவிப்பு, அவருக்கு ராணியின் மேல் கொலை வெறியை உண்டு பண்ண, "ராட்சசி..." என்று தனக்குள் திட்டிவிட்டு, "உன் ஆசைப்படியே சீக்கிரத்திலே



நான் வேலைக்கு ரெடி பண்றேன்மா. அதுவரைக்கும் கொஞ்ச நாள் என் வீட்டிலே வந்து தங்கேன்.

"உன் ஆன்ட்டியும் உன்னை எப்படியாவது அழைச்சிக்கிட்டு வரச் சொல்லிக்கிட்டே இருக்காள்..." என்றவருக்கு மென்மையான புன்னகை மட்டுமே பதிலாக வர, அதற்கு மேல் அவளை வற்புறுத்தாமல் அவளை அழைத்துப் போய் வீட்டில் விட்டு விட்டுப் புறப்பட்டுச் சென்றார்.

எந்த ராஜ பட்டணம் போனாலும் நடக்க வேண்டியவை நடந்து கொண்டுதான் இருக்கும் என்ற பழமொழிக்கு ஏற்ப, சங்கீதாவின் கணவன் ஓடிவிட்டான் என்பதற்காக... எந்தச் சம்பிரதாயத்தையும் நிறுத்தி வைக்கவில்லை. சங்கீதாவின் விருப்பப்படியே மிகப் பிரமாண்டமாகக் குழந்தையின் பெயர் சூட்டும் விழா நடத்திக் குழந்தைக்கு ரியா என்று பேரைச் சூட்டி அவளின் காதில் மூன்று தடவை ஓதி மகிழ்ந்தார்கள்.

விழாவிற்கு வந்தவர்கள் எல்லாம் குழந்தையின் தகப்பன் எங்கே என்று கேட்டதற்கு, சங்கீதா கொஞ்சமும் அலட்டிக்கொள்ளாமல் வெளிநாட்டுக்குப் போய்விட்டார் என்று அவன் சொன்ன அதே பொய்யையே பிரயோகிக்க, பானுமதிக்குத்தான் வியர்த்துப் போனது.

யாரிடமும் அதிகம் பேச்சு வைத்துக் கொள்ளாமல் வேலையைக் கவனிப்பது போலவே நடந்து கொண்டாள். மகளின் விருப்பம் அறிந்ததிலிருந்து மாணிக்கமும் அவளின் பதிலையே தன் பதிலாகச் சொல்ல, சங்கீதாவை

யாருமே தவறாக நினைக்க வாய்ப்பில்லாமல் போய் விட்டது.

காலம் அதன் போக்கில் உருண்டு செல்ல, ரியாவின் வளர்ச்சியும் மனதைக் கொள்ளை கொண்டது. அவள் தவழ்வதும், ங்கா... என்று அழகு மொழியில் பசியைத் தெரிவிப்பதும், முன்னால் முளைத்த இரண்டு அரிசிப் பற்களைக் காட்டிச் சிரிப்பதுமாக மற்ற மூவரையும் தன் அழகில் கட்டிப் போட்டாள்.

ஆரம்பத்தில் இது அந்த அயோக்கியனின் விதை தானே என்று ஒரு வித வெறுப்போடு பார்த்தவள்... குழந்தைக்குத் தன் ரத்தத்தையே பாலாகக் கொடுக்கக் கொடுக்க... அவளையும் அறியாமல் தாய்மை உணர்வு பீறிட... அவளின் உயிர் மூச்சானாள் ரியா.

பானுமதியும் பேத்தியின் அழகில் சொக்கித் தன் கவலைகளை மறந்து, பேத்தியைக் கொஞ்சுவதற்காகவே ஜென்மம் எடுத்து வந்தது போல நடந்துகொண்டதைப் பார்த்து மாணிக்கத்திற்குச் சிரிப்பு வரும்.

அவர் ஆபீஸ் போகும் முன்னும், போய் வந்த பிறகும் பேத்தியைப் பார்க்காவிட்டால் என்னமோ அன்று நாளே நகராத மாதிரி... ஒரு பிரமை ஏற்பட்டதில் ஆச்சர்யமே இல்லை. அந்த அளவிற்கு அவரும் ரியாவின் அழகில் விளையாட்டில், குறும்பில் சொக்கிப் போயிருந்தார்.

இதற்கு நடுவில் சங்கீதா தான் விட்ட படிப்பை மீண்டும் படித்து எக்ஸாம் எழுதித் தேறி அவளின்



படிப்புக்குத் தகுந்த வேலையைத் தேடிக் கொள்ளத் தாய், தந்தை இருவருமே அவளைத் தடுக்கவில்லை. மாறாக ஊக்கமளித்தார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்...

மகள் வேலைக்குப் போய்விட்டு வரும்வரை பேத்தியைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொள்வதும், மகளும், கணவனும் ஆபீசிலிருந்து திரும்பி வந்ததும் பேத்தியின் சேட்டைகளைப் பகிர்ந்து கொள்வதும் என அவர்களின் நாட்கள் பழைய சந்தோஷத்துடன் நகர ஆரம்பித்தன.

ஆனால் அது விதிக்குப் பிடிக்கவில்லையோ என்னவோ... உடனேயே அது தன் வேலையை ஆரம்பித்தது.

**தா**ன் விற்ற அழகு நிலையத்தைப் பார்த்துவிட்டு ஏதோ நினைவாக நடந்து வந்து கொண்டிருந்தவளின் அருகே ஒரு கார் உரசிக் கொண்டு வந்து நிற்க... சுஜி கொஞ்சம் கூடப் பதறாமல் யார் என்று பார்த்தாள்.

காரிலிருந்து இறங்கிய சியாமளாவைக் கண்டதும் ஒளியிழந்து போயிருந்த கண்கள்... சிறிது ஒளி பெற... மென்மையாகப் புன்னகைத்தாள். ஆனால் அந்தப் புன்னகையில் கொஞ்சம் கூட ஜீவனே இல்லாமல் களையிழந்து கிடக்க, அவளுக்குத் தன் மேலேயே கோபம் வந்தது.

"எப்படி இருக்கே சுஜி...?" என்று கேட்டவள், அவள் பதில் சொல்லுமுன்... "வாயேன் சுஜி, வீட்டுக்கு..." என்றழைத்தாள்.

சுஜிக்கு இப்படித் திடுதிப்பென்று அழைக்கிறாளே என்று தயங்கிப் பதில் சொல்லுமுன், அவளே முந்திக் கொண்டு, "ஏன் சுஜி... எங்க வீட்டுக்கு வரக் கூடாது என்றே முடிவு பண்ணிட்டியா?" என்று லேசான மனத் தாங்கலுடன் கேட்க,

அதற்குக் கண்ணிற்கு எட்டாத சிரிப்பைப் பதிலாகக் கொடுத்து, "இல்லை... நீங்கதானே உங்க பையனைச் சந்திக்கக் கூடாது என்று சொன்னீங்க. இப்போ நீங்களே அழைக்கிறீர்களே என்றுதான் புரியவில்லை..." - மனதில் உள்ளதை அப்படியே போட்டு உடைக்க, சியாமாளாவுக்கு யாரோ கன்னத்தில் பளாரென்று அறைந்தது போல் இருந்தது.

கண்ணீர் மளுக்கென்று கோத்துக் கொள்ள, "சொல்றேன்... வா... காரில் ஏறு..." என... சுஜி அதற்கு மேல் வாதம் செய்யாமல் அவளுடன் ஏற... கார் சீறிப் பாய்ந்தது.

இருவருமே மௌனத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள அது அவர்களை ஆட்சி செய்தது.

வீடு சேர்ந்ததும் அவளைக் கைப்பிடித்து உள்ளே அழைத்துச் சென்று அமர வைத்துவிட்டு... ஜூஸ் கொடுத்து உபசரித்து எதிரில் அமர்ந்தவளுக்கு... எப்படி விஷயத்தை ஆரம்பிப்பது என்று தெரியாமல் திணறினாள்.

அவளின் திணறல் புரியாமல், "ப்ரஜித்தும் உங்கள் மருமகளும் எங்கே ஆன்ட்டி...? எங்கேயாவது வெளியே போயிருக்கிறார்களா...?" என்று விசாரிக்க, அதுவரை ஒரு



சித்த் தவிப்புடன் கையைப் பிசைந்து கொண்டிருந்தவள் சட்டென்று உடைந்தாள்.

"இல்லை சுஜி... எங்கள் மகனுக்கு இன்னும் கல்யாணமே ஆகவில்லை..." என்று அழ... சுஜி புரியாமல் கேள்வியாக நோக்கினாள்.

"எங்கள் குடும்பங்கள் ஒன்றாக இணைய வேண்டும் என்ற ஆசையில் உன்னை நாங்கள் வேண்டாம் என்றோம். அவன் உன்னை விட்டுக் கொடுக்க முடியாது என்று கெஞ்சினான், அழுதான், கதறினான். அவனின் மனதை நாங்கள் புரிந்து கொள்ளவில்லை. ஆனால் அவனுக்கு என்று நிச்சயித்த பெண் புரிந்து கொண்டாள்.

"அவனுக்காகவே தங்கள் பெறறோரிடம், ப்ரஜித் வேண்டாம், நான் வேறு ஒருத்தரைக் காதலிக்கிறேன் என்று சொல்லி அவனையே கல்யாணமும் செய்து கொண்டாள்.

"எங்கள் மகன் கல்யாணம் செய்துகொள்ளவில்லை என்றாலும்... அவரின் தங்கை குடும்பம் எங்களுடன் இணைந்து விட்டது. ஆனால் எங்கள் குடும்பம்...?" என்று மேலே தொடர முடியாமல் தொண்டை அடைக்க நிறுத் தியவள், ஒருவாறாகத் தன்னைத் தேற்றிக் கொண்டு, "உடைந்த கண்ணாடி மாதிரி சிதைந்து விட்டதும்மா..." என்று சொல்லும்போதே அவள் கண்கள் மீண்டும் கலங்கின.

"உன்னை மாதிரி நல்ல பெண்ணிற்குச் செய்த பாவம்தான் எங்கள் குடும்பத்தைச் சிதைத்துவிட்டது..."

என்று முகத்தை மூடிக் கொண்டு அழ, சுஜிக்குத் தன் வேதனையை விட... அவளின் வேதனை பெரிதாகத் தோன்ற... அவளைத் தன்னோடு ஆறுதலாக அணைத்துக் கொண்டாள்.

சில வினாடிகள் கழித்து விலகியவள்... முகத்தைத் துடைத்துக் கொள்ள, "சரி ஆன்ட்டி... என்ன நடந்தது? ப்ரஜித் இப்போ எங்கே?" என்று கண்களால் துழாவிய படியே கேட்டவளுக்கு,

"அவன் இப்பொழுது எங்களுடன் இல்லேம்மா... எங்களை வேண்டாம் என்று சொல்லிவிட்டுப் போய் விட்டான். இப்போ எங்கிருக்கிறான் என்று தெரியாது," என்று மீண்டும் கண்களில் கண்ணீர் தாரை தாரையாய் வழிய, சுஜிக்குக் கடவுளே... என்றிருந்தது.

'கொடுமை கொடுமை என்று கோவிலுக்குப் போனால் அங்கு ரெண்டு கொடுமை ஜிங்கு ஜிங்குன்னு ஆடிச்சாம். அந்தக் கதை மாதிரியே இருக்கே.

'நம் வேதனைதான் பெரிது என்று நினைத்தால் இவர்களுடையது அதை விடப் பெரிதாக அல்லவா இருக்கிறது...' என்று யோசனையில் அப்படியே அமர்ந்து விட்டாள்.

சிறிது நேரம் கழித்து அவளே தன்னைச் சுதாரித்துக் கொண்டு சியாமளாவைப் பார்க்க, அவள் இன்னும் அழுகையிலிருந்து விடுபடாமல் இருப்பதைப் பார்த்து எப்படி ஆறுதல் சொல்வது என்று தெரியாமல் அங்கிருந்து கிளம்ப எத்தனித்தவளின் கையைப்...



"என்னை மன்னிச்சிடு என்று கூடக் கேட்கத் தகுதியில்லாதவள் சுஜி நான். கணவருக்காகவும் குடும்பத்திற்காகவும் வேண்டி... என் மகனுக்கும் உனக்கும் தவறு என்று தெரிந்தே துரோகம் செய்துவிட்டேன். இதுக்கு எனக்கு மன்னிப்பே கிடையாது..." என்னும் போதே அவள் குரல் அழுகையில் குளித்தது.

"விடுங்க ஆன்ட்டி... நடந்து முடிந்து போன ஒரு விஷயத்தைப் பத்தி பேசி யாருக்கு என்ன லாபம்...? இப்போதைய பிரச்னை... ப்ரஜித் எங்கே இருக்கிறார் என்று தெரியணும். அதை ஏன் அங்கிள் ஒரு டிடெக்டிவ் மூலமா கண்டுபிடிக்கக் கூடாது?" என்று கேட்டவளுக்கு,

"அவனைக் கண்டுபிடிப்பது கூடப் பெரிய பிரச்னையாகத் தோன்றவில்லை. ஆனால் அவனைக் கண்டுபிடித்து என்ன செய்ய முடியும்? அவன் விரும்பிய பெண்ணை என்னால் அவனுக்குத் தர முடியுமா?" என்று சற்று நீண்ட இடைவெளி விட்டவள்,

"ஆனால் இப்போ எனக்கு அந்த நம்பிக்கை வந்திருக்கு. அதைக் கேட்கத்தான் உன்னை இங்கே அழைத்து வந்தேன்..." என்று பூடகமாகப் பேசப் பேச... சுஜிக்கு எதுவோ புரிந்தும் புரியாததும் போலிருக்க... அவளை அதிகம் குழம்ப விடாமல், "என் மகனைக் கல்யாணம் செய்துக்குவியா சுஜி...?" என்று யாசிக்க, அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

பிடித்திருந்த கையை ஆவேசமாக உதறிவிட்டு... ...வென்று வெளியே சென்றவளை நிறுத்த, "நீங்க

துரோகத்தைத் தெரிஞ்சே செய்த மாதிரி இந்தக் கேள்வியையும் நான் கல்யாணமானவள் என்று தெரிந்தேதான் கேட்டீர்களா?" என்றாள் கோபத்தில், முகம் சிவக்க.

அவளின் கோபத்தைக் கண்டு கொஞ்சமும் அசராமல், "எனக்கு எல்லாமே தெரியும், உன்னைப் பற்றி..." என... சுஜியின் பார்வையில் 'எப்படி?' என்ற கேள்வி தொக்கி நிற்க... "விஸ்வம் சொன்னார்..." என்றாள் மிக மிக நிதானமாக.

"என்னால்தானே உங்கள் இருவரின் வாழ்க்கையும் வீணாகியது. நானே அதற்குப் பரிகாரம் செய்கிறேன்..." என... அதற்கு மேல் சுஜிக்கு அங்கு நிற்க முடியாமல் வேகமாக வெளியேற... சியாமளா அவளைத் தடுத்து நிறுத்த முடியாமல் சோபாவில் சரிந்தாள்.

அந்த வாரத்திலே சுஜிக்கு ஏற்காட்டில் ஒரு காபி தோட்டத்தில் காரியதரிசியாக வேலைக்கு விஸ்வம் ஏற்பாடு செய்ய, உடனேயே அங்கு புறப்படுவதற்கு ஏற்பாடுகளைக் கவனித்தாள்.

மகள் வீட்டை விட்டுப் போகப் போகிறாள் என்று தெரிந்ததும், அவளிடம் மனைவியின் பேச்சிற்கு மன்னிப்புக் கேட்டு, "இனி எந்தப் பிரச்னையும் வராமல் பார்த்துக் கொள்கிறேன். எங்களை விட்டுப் போகாதே..." என்று மன்றாடிய தந்தையைச் சலனமே இல்லாமல் பார்த்தாள்.

"எனக்கும் உங்களுடன் சேர்ந்து இருக்கத்தான் ஆசை. ஆனால் அந்த ஆசையே குடும்பத்தில் விரிசலை



ஏற்படுத்துகிறது என்று தெரிந்தும், எப்படிப்பா என்னால் இங்கேயே தொடர்ந்து இருக்க முடியும்...? நீங்கள் எனக்காகச் சித்தியிடம் சண்டை போடுகிற அளவிற்கு அவர்கள் ஏதும் தவறா சொல்லிவிடவில்லையே...? ஒரு வாழாவெட்டிப் பெண்..." எனும்போதே ரங்கன் பதறிப் போய் அவளின் வாயைத் தன் கையால் மூடினார்.

"யார் சொன்னது நீ வாழாவெட்டின்னு, நீதான் வாழவே ஆரம்பிக்கவில்லையேம்மா..." என்று குற்ற உணர்வில் கண்ணீர் உகுக்க, அவர் கையை விலக்கி... ஒரு சின்னச் சிரிப்போடு பார்த்துவிட்டுப் பெட்டியில் துணிகளை அடுக்கிக் கொண்டே,

"உங்கள் மகள் என்னும் பாசத்தில் நீங்கள் வேண்டுமென்றால் அப்படிச் சொல்லாமல் இருக்கலாம். ஆனால் ஊருக்கு நான் அப்படித்தானேப்பா..." என்று அலுப்புடன் சொல்லி நிறுத்தியவள்,

"போதும்ப்பா... இதைப் பற்றி நிறையப் பேசியாச்சு. இனியும் இதைப் பற்றிப் பேசவோ, நினைத்துப் பார்க்கவோ என்னால் முடியலை..." என ஆயாசமாகக் கண்ணை மூடித் திறக்க, ரங்கனுக்குத் தன் முதல் மனைவிக்குச் செய்த துரோகம் இன்றுதான் அவரை முள்ளாய்க் குத்தியது.

சிறிது நேரத்திலே விஸ்வமும் டிரெயின் டிக்கெட்டோடு வந்துவிட, தந்தையிடம் சொல்லிவிட்டு, ராணியிடமும் விடை பெற்றுக் கொண்டு செல்ல, ராணி "அப்பாடா சனியன் ஒழிஞ்சது..." என்று வெளிப்படை

யாகவே சொல்லிப் பெருமூச்சுவிட ரங்கனுக்கும், விஸ்வத்திற்கும் ஆத்திரம் தலைக்கேறியது. ஆனால் சுஜியின் முகத்தில் ஒரு சின்னப் புன்னகை மட்டுமே வெளிப்பட்டது.

டாக்சியின் கண்ணாடியைத் திறந்து வைத்து அதன் எதிர்க்காற்றை உள்வாங்கிக்கொண்டு அமர்ந்திருந்தவள் பெரிய கோவிலின் முன்... வண்டி குலுங்கி நிற்கவும், புரியாமலே இறங்கியவளிடம், "உனக்குத் தாலி கட்டியவன் திரும்பி வந்தால் அவனை உன்னால் ஏற்றுக் கொள்ள முடியுமா சுஜி?" என்ற விஸ்வத்தின் திடீர்க் கேள்வி மற்ற இருவரையும் புருவத்தைச் சுழிக்க வைத்தது.

விஸ்வமே தொடர்ந்து, "உன் முகமே சொல்லுது. உன்னால் முடியாது என்று. அப்புறம் ஏன் அவன் கட்டிய தாலியைச் சுமந்துகிட்டு இருக்கே...? அது உன் கழுத்தைச் சுற்றின பாம்பு. என்றைக்கு இருந்தாலும் அது உனக்கு ஆபத்துதான். கழட்டி இந்த உண்டியலில் போட்டுவிட்டு நிம்மதியாக உன் எதிர்காலத்தைத் தேடிப் போ..." என்று கட்டளையிடுகிற மாதிரி சொல்ல... மகுடிக்குக் கட்டுப்பட்ட பாம்பு போல மறுப்பேதும் சொல்லாமல்... அவர் சொன்னதைச் செய்துவிட்டு வண்டியில் அமர்ந்தாள்.

ஏனோ அவளுக்குத் தன் தாலியைக் கழட்டும்போது எந்த விதமான குற்ற உணர்வு தோன்றாததும் அவளுக்கே ஆச்சர்யமான ஒன்று.

அவளை ரயிலில் ஏற்றிவிட்டு, "எனக்கு ஒரு முக்கியமான வேலை இருக்கு சுஜிம்மா. அதனால்தான் என்னால் வர முடியவில்லை. உனக்குப் பயமாக



இருந்தால் சொல். என் வேலையைத் தள்ளி வைத்துவிட்டு வருகிறேன்..." என்றவரைச் சட்டென்று மறுத்தாள்.

"அதெல்லாம் வேண்டாம் அங்கிள். இன்னும் எத்தனை காலத்திற்குத்தான் துணையைத் தேடிக்கொண்டு இருப்பது. என் எதிர்காலத்தைத் தேடிப் போகிறேன். அது எப்படி இருக்கும் என்று எனக்குத் தெரியாது. எதுவாக இருந்தாலும் அதை ஏற்றுக் கொள்கிற துணிச்சலை இப்போதிலிருந்தே வளர்த்துக் கொள்கிறேனே..." என்று அமைதியான புன்னகையுடன் கூறியவளை மன நிறைவுடன் பார்த்தார்.

## 17

சீட்டில் நன்றாகச் சாய்ந்து அமர்ந்து ரயிலை நோக்கி ஓடி வரும் மரங்களில் கண் பதிந்திருந்தாலும் மனம் என்னவோ... 'நீ ஏன் ப்ரஜித்தின் அம்மாவின் கேள்விக்குப் பதில் சொல்லாமல் வந்தே...? அதைப் பற்றி உன்னுடைய முடிவுதான் என்ன?' என்ற விஸ்வத்தின் கேள்வியைத்தான் அசைபோட்டது.

'ம்ஹூம்... இந்தக் கேள்விக்கு என்னவென்று சொல்வது...? உயிருக்குயிராய்க் காதலித்தவனுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்தேனே... அதற்குப் பதில் சொல்வதா? இல்லை... இன்று என்னால் தன் குடும்பத்தையே விட்டு விட்டு அனாதையாக வாழ்ந்து கொண்டிருக்கிறாரே... அதற்குப் பதில் சொல்வதா? இல்லை... அவருக்குச் செய்த பாவத்திற்கு என்ன பரிகாரம் செய்யப் போகிறாய் என்று மனச்சாட்சி தினமும் குத்துகிறதே.

அதற்குப் பதில் சொல்வதா? யாருக்கு என்னால் பதில் சொல்ல முடியும்...?' என்ற குற்ற உணர்வு அவளைப் போட்டு ஆட்டிப் படைக்க... மனம் அமைதியில்லாமல் தவித்தது.

அந்தத் தவிப்பைத் தாங்க முடியாமல் கண்களை மூடித் தூங்க முயற்சி செய்தவள்... அதில் கொஞ்சம் வெற்றியும் பெற்றாள்.

தூங்கியே பல மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் ரயிலில் எதையும் யோசிக்கப் பிடிக்காமல் கண்களை மூடித் தூங்க முயற்சி செய்தவள்... ஓர் இரண்டு மணி நேரம் தன்னையும் மறந்து உறங்கியவளை.. யாரோ உலுக்குவது போல தோன்ற, தூக்கத்திலிருந்து விழித்தாள்.

அவளுடன் பயணித்த ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி அவளை எழுப்பி, "நீ சேலத்தில் இறங்கணும் என்று சொன்னாயே, மறந்துட்டியாமா...? இன்னும் கொஞ்ச நேரத்தில் சேலம் ஜங்ஷன் வந்துவிடும்..." என்ற தகவலைக் கனிவுடன் கூற, அந்தப் பெண்மணிக்குப் புன்னகையுடன் நன்றி கூறிவிட்டு, பாத்ரூம் சென்று முகத்தைக் கழுவி முடியைச் சீர் செய்து கொண்டு இறங்க ஆயத்தமானாள்.

சேலத்திலிருந்து விஸ்வம் சொன்ன மாதிரி பஸ் பிடித்து ஏற்காட்டை நோக்கிப் பயணிக்க, மலை ஏற ஏற, சேர்வராயன் மலைத் தொடரின் இதமான குளிரும், மலர்களின் நறுமணமும், கண்களுக்கு விருந்தளித்த தேயிலைத் தோட்டங்களும் சுஜியின்



மாக அமைதிகொள்ள வைக்க... அதிலேயே லயித்துப் போனாள்.

இவளுக்காக ஏற்காடு பஸ் நிலையத்தில் காத்திருந்த காரில் ஏறி மாடர்ன் எஸ்டேட்ஸை அடைய மணி இரவு எட்டைத் தொட்டிருந்தது.

அங்கே இவளின் வரவுக்காக அடிக்கடி வாட்சைப் பார்த்தபடி காத்திருந்த நிர்மலா என்கிற நிம்மிக்கு... பொறுமை போய்க் காத்திருந்த எரிச்சல் மட்டுமே மிச்சமிருக்க, அதை சுஜி வந்திறங்கியதுமே... அவளை அழைத்துக் கொண்டு வந்த தந்தையின் வயதையொத்த அந்தக் கார் டிரைவரிடம் காட்டி மரியாதையில்லாமல் எரிந்து விழுந்தாள்.

"இங்கே இருக்கிற பஸ் ஸ்டாண்ட் போயிட்டு வருவதற்கு உனக்கு இவ்வளவு நேரமா? எவ்வளவு நேரம்தான் காத்திருப்பது? நான் வீட்டுக்குக் கிளம்ப வேண்டாமா? கொஞ்சம் கூடப் பொறுப்பு இல்லை. எதிலும் ஒரு அசமந்தம்...' 'என்று அவரைப் பேச விடாமல் படபடவென்று கடுகு மாதிரிப் பொரிந்துவிட்டு,

"சரி... சரி.. நீ போய் காரை ஸ்டார்ட் பண்ணு. இதோ வருகிறேன்..." என்று விரட்ட, அவர் எதுவும் பேச முடியாமல் தலை விதியை நொந்தபடி அமைதியாகக் காரை நோக்கி நடந்தார்.

உண்மையில் எஸ்டேட்டுக்கும், பஸ் நிலையத்திற்கும் ஒன்றரை மணி நேரம் ஆகும். ஆனால் இந்தப் பெண்

இதோ பக்கத்திலே இருக்கிற மாதிரி விரட்டியடிக்குதே... என்று நொந்தபடி சென்றவரைப் பாவமாகப் பார்த்துவிட்டு,

"ஐயாம் சாரி மேடம். தாமதம் ஆனதற்கு அவர் காரணம் இல்லை. வருகிற வழியில் ஒரு விபத்து. அதனால் சுற்றிக் கொண்டு வரும்படி ஆகிவிட்டது. உங்களை இவ்வளவு நேரம் காக்க வைத்ததற்கு மன்னிக்கவும்..." என்று மிக மிக மென்மையாக வருந்தி மன்னிப்புக் கேட்டவளை... அப்போதுதான் தெள்ளத் தெளிவாகப் பார்த்தாள்.

பிரம்மன் உல்லாசமாக இருக்கும்போது... சந்தனத்தைக் குழைத்துச் செய்த தங்கச் சிலை போல இருந்த சுஜியின் அழகு... நிம்மிக்குப் பொறாமைத் தீயைக் கிளறி விட, உதட்டை இழுத்து வைத்து ஒரு போலிச் சிரிப்பை உதிர்த்து, அவளின் மன்னிப்பைக் காதிலேயே வாங்காதவள் போல, "தட்ஸ் ஓகே மிஸ்..." என்று இழுத்தவளின் கண்கள், அவள் கழுத்தை ஆராய அவளின் சங்கு கழுத்தில் ஒரே ஒரு தங்கச் சங்கிலி மட்டும் தொங்கிக் கொண்டிருக்க, அந்தச் சங்கிலியின் முடிவில் இருப்பது என்ன என்று கண்டறிய முடியாமல்... அவளே ஒரு முடிவு செய்தாள்.

"இங்கே பாருங்க மிஸ் சுஜிதா, இப்போ இரவு நேரம் என்பதால் என்ன வேலை என்பதை இப்போது விலாவாரியாகச் சொல்ல முடியாது. நீங்களும் பயணம் செய்த அலுப்பில் இருப்பீர்கள். அதனால் உங்களுக்கு அலாட் செய்த வீட்டைக் காட்டுகிறேன். என்னுடன்



வாருங்கள்..." என்று அவளை அழைத்துக் கொண்டு காருக்கு வந்தவள்... அதில் ஏறி அமர்ந்ததும்,

"எம்.டி. சார் சென்னைக்குப் போயிருக்கிறார். வருவதற்கு இரண்டு நாள் ஆகும். நான் இந்த எஸ்டேட் இன்சார்ஜர். ஒரு மேனேஜர் இருக்கிறார். அவர் நாளைக் காலையில் வருவார். அப்புறம் நீ. இந்த டிரைவர். இப்போதைக்கு இது போதும். மற்றதை நாளைக் காலையில் சொல்கிறேன்..." என்று படபடவென்று சொல்லி முடித்தவள் சுஜியின் இருப்பிடத்தைக் காட்டினாள்.

"இங்கே ஒரு வயதான அம்மா இருக்கிறார்கள்..." என... சுஜிக்கு அவளின் இடைவிடாத பேச்சு... பொறுமையை ரொம்பவே சோதித்தது. அங்கே இருந்த வாட்ச்மேனிடம் சுஜியைக் காட்டி விவரங்களைக் கூறி விட்டுச் சென்றவளை, ஒரு பெருமூச்சுடன் பார்வையால் பின் தொடர்ந்தவள்... கார் கண்ணிலிருந்து மறைந்ததும் தனக்கு ஒதுக்கப்பட்ட அறைக்குச் சென்றாள்.

நிம்மி சொன்ன பெண்மணியைத் தொந்தரவு செய்யாமல் தன் உடைமைகளை வைத்துவிட்டுத் தன் அறையில் படுக்க... புது இடம் என்பதால் நித்ராதேவி அவளை அணைக்க மறுக்க... அரைத் தூக்கமும் விழிப்புமாக அன்றைய இரவு கழிந்தது.

அடுத்த நாள் காலையிலே கிளம்பி ரெடியாகி வெளியே வந்தவளிடம், காபியை நீட்டிய அவரை ஆச்சரியமும் வியப்புமாகப் பார்த்தவளிடம், "நான்

விசாலம், எஸ்டேட் முதலாளியின் தூரத்துச் சொந்தம். அத்தை முறை வேண்டும். சொந்த பந்தம் யாரும் இல்லை. அதனால் வனவாசம் போல இங்கேயே வந்து தங்கிவிட்டேன்..." என்று தன்னைப் பற்றி அறிமுகப்படுத்திக் கொண்டே... சுஜிக்குச் சாப்பாடு எடுத்து வைக்க... தயக்கத் துடன் சாப்பிட அமர்ந்தாள்.

"நேற்றே நிர்மலா சொல்லிவிட்டாள்... நீ வரப் போவதைப் பற்றி. உனக்காக இரவுவரை காத்திருந்தேன். சுகர் இருக்கு என்பதால் மாத்திரை போட்டேன். அதனால் அதிக நேரம் கண் விழிக்க முடியாமல் கண் அசந்து விட்டேன்..." என்று அவள் கேட்காமலே, பரிமாறியபடி கூறியவருக்குச் சிறு புன்னகையை மட்டும் பதிலாகத் தர, அதற்குச் சிரித்துக்கொண்டே,

"சுஜிதாவுக்கு என் பேச்சு சிரிப்பாக இருக்கிறதோ..." என்று கேட்க, அவருக்குப் பதில் சொல்லுமுன் வெளியே காரின் ஹார்ன் சத்தம் கேட்க, "சரிம்மா... நீ கிளம்பு. மீதியை மதியம் பேசிக்கொள்ளலாம்..." என்று விடை கொடுக்க, அவரிடம் தலையசைப்பில் விடைபெற்றுச் சென்றாள்.

நிர்மலா முதல் நாளிரவு சொன்ன தகவலையே மறுபடியும் ஒரு முறை சொல்லிவிட்டு, "இன்று ஒரு நாள் கார் வரும். நாளையிலிருந்து நீ நடந்து வரணும். அல்லது வண்டி வைத்துக் கொள்வது உன் வசதி..." என்று நேற்று மாதிரியே பேசிவிட்டு, என்னென்ன வேலைகள் என்று அவளுக்கு விவரித்தவள்,



"உனக்கு இதில் ஏதாவது சந்தேகம் இருந்தால் என்னைக் கேள். அனாவசியமாக எம்.டி.யின் ரூமில் வழிந்து கொண்டு நிற்காதே..." என்று எச்சரிக்க... சுஜியின் மனது மரத்துப் போனது.

அவளின் பேச்சிற்கு... சுஜிக்குச் சிரிப்பதா, அழுவதா என்று தெரியாமல் சில வினாடிகள் சிலையாக நின்று விட்டுத் தன் வேலைகளைக் கவனிக்கச் சென்றாள்.

நிர்மலாவைப் பார்க்கும்போது அவள் மனதில் அப்படியே தாமரையின் உருவம் தன் மனக்கண்ணில் தோன்றி மறைந்தது. அப்படி ஒரு எண்ணம் எழுந்ததுமே, 'கடவுளே... இந்தக் கொடுமை எத்தனை நாளைக்கு? என்னை எங்கே சென்றாலும் நிம்மதியாக இருக்க விட மாட்டியா...?' என்று மனது கசந்தது.

சுஜி ஏற்காடு வந்து ஒரு வாரம் ஓடிவிட்ட நிலையில் விசாலம் அம்மாவின் அன்பும் சமையலும் அவளை மயக்கிவிட்டிருந்தன. இதுவரை இப்படிப்பட்ட சுயநல மில்லாத அன்பை அவள் அனுபவித்ததில்லை என்பதால் மனதிற்கு மிகவும் நிம்மதியாக இருந்தது.

இதுவரை யாரிடமும் மனம் விட்டுப் பேசாத அவள் தன் தாயைப் போலிருந்த அவரிடம் மனதில் இருந்தவைகளை எல்லாம் கொட்ட, அதைக் கேட்ட அவருக்கு அவளின் மேலிருந்த அன்பு அதிகமாக... அவளைச் சொந்த மகளைப் போல் பார்த்துக் கொண்டார்.

ஒரு நாள் மதியம் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, "இங்கே வந்து தங்குபவர்களுக்கு நீங்கதான் சமைத்துப்

போடுவீர்களா அம்மா...?" என்று கேட்க, அதுக்கு அவர் அளித்த பதில் அவளை மிகவும் ஆச்சரியத்தில் ஆழ்த் தியது.

"யாரையும் பொதுவாக இங்கே தங்க நான் அனுமதி யளிக்க மாட்டேன். ஆனால் உன்னைப் பற்றித் தம்பி சொல்லிக் கொண்டிருக்கும்போது என்னையும் அறியாமல் உன்னை என் கூடத் தங்க வைக்கச் சொல்லி நானே கேட்டேன். ஏன் அப்படிச் சொன்னேன் என்று இன்றுவரை எனக்குப் புரியவில்லை...

"உன்னை முன்பின் நான் பார்த்ததே இல்லை. அதே போல் அன்று காலையில் நீ தூங்கிக் கொண் டிருந்ததைப் பார்த்துவிட்டு உன்னை எழுப்ப மனம் வராமல்... நீ கிளம்புவதற்குள் உனக்காகச் சமைக்க வேண்டும் என்று தோன்றியது. உனக்குச் செய்வதை நான் விரும்பவே செய்கிறேன்..." என்ற அவரின் பதில், சுஜிக்கு அவர் மேல் இன்னும் அதிக மரியாதையைக் கூட்டியது.

வழக்கம் போலச் சாயங்காலம் வேலை முடித்து விட்டு, இருவழிகளிலும் மலர்ந்திருந்த மலர்களை ரசித்துக் கொண்டே நடந்து கொண்டிருந்தவளுக்கு... போன வாரத்தில் ஒரு நாள் விசாலம் அம்மா கேட்ட கேள்விதான் ஞாபகம் வந்தது.

'வேலை முடித்து நடந்து வருவதால், வீடு வந்து சேர்வது நேரமாகிவிடுவதால் நிர்மலாவிடம் சொல்லிக் காரில் விடச் சொல்லிக் கேட்க வேண்டியதுதானே...' என்று. ஆனால் அவளிடம் கேட்பதை விட... இப்படி



காலாற நடப்பது மனதிற்கு நிம்மதியையும், சந்தோஷத் தையும் தருகிறது... என்று தனக்குள் நினைத்துக் கொண்டே வீடு வந்து சேர்ந்தாள்.

வீட்டின் வாசலில் பெரிய காரைக் கண்டதும், 'யாருடையதாக இருக்கும்..?' என்று யோசித்துக் கொண்டே உள்ளே செல்ல, அவளை உற்சாகமாக வரவேற்க... ஹாலில் அமர்ந்திருந்த அழகான இளைஞன் அவளைப் பார்த்ததும் எழுந்து நின்று, "ஹலோ மிஸ் சுஜிதா..." என்று புன்னகையுடன் கை குவிக்க, சுஜி குழப்பத்துடனே கை குவித்து வணக்கம் சொல்லியபடி விசாலத்தைக் கேள்வியாகப் பார்த்தாள்.

அவளின் குழப்பத்தைப் புரிந்து சிரித்துக் கொண்டே, "இவர்தான்மா உன் எம்.டி. மாதவன். இன்றுதான் சென்னையிலிருந்து திரும்பி வந்திருக்கிறார்... " என்று அறிமுகப்படுத்த, அவளின் குழப்பம் நீங்கி... அவளின் வதனத்தில் புன்னகை மலர, மாதவனுக்கு அவளின் அழகிய சிரிப்பில் இதயம் ஒரு கணம் நின்று துடித்தது.

"அத்தை உங்களைப் பற்றி நிறையவே சொன் னாங்க. இன்றுதான் சென்னையில் இருந்து வந்தேன். அதுதான் உங்களுக்கு என்னைப் பற்றித் தெரிய வில்லை..." என்று புன்னகையுடன் கூறியவன்,

"சரி, ஆபீஸ் வேலையெல்லாம் எப்படி இருக்கு...? உங்களுக்கு இங்கே வசதியாக இருக்கா?" என்று விசாரித்தான்.

அதற்கு அவள் பதில் சொல்லுமுன் விசாலம் முந்திக் கொண்டு, "எங்கே மாதவா... அவள் வேலை

முடிந்து வீடு திரும்பவே கிட்டத்தட்ட இரவாகி விடுகிறது. நானும் பல தடவை நிர்மலாவிடம் காரில் கொண்டு வந்து விடச் சொல்லிக் கேட்கச் சொல்லிவிட்டேன். ஆனால் சுஜிம்மா கேட்கவே மாட்டேன்கிறாள். நீதான் ஏதாவது பார்த்துச் செய்யணும்ப்பா..." என்று மிக உரிமையுடன் சொல்லி முடிக்கும் முன்னே, சுஜி இடையிட்டு,

"அதெல்லாம் இல்லை சார், எனக்கு வேலை முடிந்து நடந்து வருவது மிகவும் பிடிச்சிருக்கு. அம்மா என் மேலே உள்ள பாசத்தால் அப்படிச் சொல்றாங்க. வேலையும் எனக்கு மிகவும் பிடிச்சிருக்கு..." என்று மெல்லிய புன்னகையுடன் சொன்னவளை உலக அதிசயம் போல விநோதமாகப் பார்த்தான்.

சில வினாடிகள் இருவரிடமும் பேசி விட்டுப் புறப்பட்டுச் சென்றதும், "நல்ல பிள்ளைம்மா, வீட்டிற்கு ஒரே மகன். ஏகப்பட்ட சொத்து. டீ எஸ்டேட், காபி எஸ்டேட் எல்லாவற்றையும் இந்தப் பிள்ளையும் இவன் அப்பன் ரத்தினவேலும்தான் கவனித்துக் கொள்கிறார்கள்..." என்று சொல்லிக் கொண்டு வந்தவர், "ம்ம்ம்... எல்லாம் சரி. ஆனால் கல்யாணத்துக்கு மட்டும் ஏனோ பெத்தவங்களுக்குச் சம்மதம் கொடுக்க மாட்டேங்குது..." என்றார் கவலையுடன்.

"ஏன்மா...?" என்ற அவளின் கேள்விக்கு, அவளிடம் காபியுடன் சிற்றுண்டியை நீட்டியபடி, "தெரியலைமா... அவன் மனசில் யாரோ... எவரோ... அவன் அம்மா மஞ்சு என்னிடம் சொல்லிப் புலம்பும்போது கஷ்டமாக இருக்கும். நானும் எவ்வளவோ பேசிப் பார்த்துவிட்டேன். இதுவரை பிடி கொடுத்துப் பேசவில்லை..." என்று மாதவனைப் பற்றிப் பேசியே பெருமூச்சுவிட, சுஜியின் நினைவலைகள் ப்ரஜித்தை நோக்கி நழுவிச் சென்றன.

அடுத்த நாள் இவள் கிளம்பி வெளியே வரும் போதே காரோடு டிரைவர் காத்திருக்க... இவள் ஏற மறுத்தும் கேட்காமல்... எம்.டி.யின் உத்தரவு என்று காரில் அழைத்துச் சென்று இறக்கிவிட... நிர்மலாவின் முகம் வேப்பெண்ணெய் குடித்த குரங்கு போலாயிற்று.

எம்.டி.யின் பேச்சை மீறித் தான் எதுவும் செய்ய முடியாமல் போனதால், சுஜியின் மேல் அவளுக்கு இன்னும் வெறுப்பு அதிகமாக... அவளை வேண்டுமென்றே வேலை வாங்கினாள். செய்த வேலையில் தேவையில்லாமல் குறை சொல்லி மட்டம் தட்ட, சுஜிக்கு அவளின் உள்நோக்கம் புரிந்து போனதால், அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் தன் வேலையிலே கவனமாக இருந்தாள்.

எம்.டி.யைக் கவிழ்ப்பதற்கு நிர்மலா செய்யும் ஆடைக் குறைப்பும், பெருமுயற்சிகளும் சுஜிக்கு அவள் மேலே அருவருப்பை ஏற்படுத்தியது.

மாதவன் நிர்மலாவை ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ளாமல், அவளை ஒரு இன்சார்ஜராக மட்டும் பார்க்க, அதுவே அவன் மீது நிர்மலாவுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது.

என்ன இது... இவனிடம் மறைமுகமாக என் மனதைச் சொல்லியும் கண்டு கொள்ளாமல் இருக்கிறானே... ஆத்திரம் தலைக்கேறியது.

அந்தச் சமயம் அழகு தேவதையாகச் சுஜி வந்திறங்க, நிர்மலாவுக்கு அவளை மாதவனுடன் பேசாமல் தடுப்பதே பெரிய வேலையாக இருந்தது.

ஒருநாள் சுஜி மாதவனுடன் இன்ஸ்பெக்ஷனுக்காகக் காபி தோட்டத்திற்குச் சென்றிருந்தவள்... அங்குள்ள வேலையாட்களிடம் அன்பாகப் பொறுமையாகப் பேசி அவர்களின் நிறைகுறைகளைத் தெரிந்து கொண்டு, அதை மாதவனிடம் விவாதித்து கொண்டிருந்தபோது, விசாலம் அம்மாவைப் பற்றிய பேச்சு வர...

"அவர்கள் அவர்களுடைய கணவரைப் பற்றி அதிகம் சொன்னதில்லை. ஆனால் தனக்கு ஒரு பெண் இருந்ததாக அடிக்கடி சொல்வார்கள். அவள் இப்போ உயிரோடு இல்லை. அப்படி இருந்திருந்தால் உங்கள் வயதுதான் இருந்திருக்கும் என்று சொன்னார்கள்.

"எப்போதும் உங்களைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பார்கள்... உங்களைப் பார்க்கும்போதெல்லாம் தன் பெண் தனக்குத் திரும்பிக் கிடைத்து விட்டாள் என்று அவர்கள் சொல்லும்போது அவர்களின் முகத்தைப் பார்க்கணுமே... அதில் ஆயிரம் நட்சத்திரம் ஒளிரும்..." என்று சிலாகித்துப் பேசுவதை... வழக்கமான ஒரு சிறு புன்னகை... வழக்கம் போல ரசித்துக்கொண்டாள்.

என்னதான் மாதவனின் காரியதரிசியாக இருந்தாலும், கொடுத்த வேலைக்காக மட்டுமே பேசுவது, கண்ணியமாகவும் அதே சமயம் எளிமையாகவும் உடையணிவது, நிர்மலாவைப் போல ஆட்கள் அதிகமுள்ள இடத்தில் நாலு பேர் தன்னைக் கவனிக்கணுமே என்பதற்காகச் சத்தம் போட்டுப் பேசுவது, தேவையே இல்லாமல் சிரிப்பது போலில்லாமல் எப்போதுமே ஒருவித அமைதி, நாலு பேர் கூடும் இடங்களில் தன்னை அதிகம் வெளிப்படுத்திக் கொள்ளாத குணம்... இதெல்லாம் மாதவனை அவள் மேல் பித்துப் பிடிக்க வைத்தது.

## 18

சென்னை...

ஆபீசிலிருந்து திரும்பி வந்து செல்ல மகளைக் கூடக் கொஞ்சாமல்... தன் அறையில் அடைந்த மகளின் போக்குப் புரியாமல்... பேத்தியைக் கவனித்துக்கொண்டே மகளின் அறையையும் எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள் பானுமதி.

இப்படியே எவ்வளவு நேரம் சென்றதோ?

"என்ன பானு... குழந்தையைக் கையில் வைச்சுக்கிட்டு நீ எங்கேயோ பார்த்துக்கிட்டு இருக்கே...? சங்கீதா எங்கே... ஆபீசிலிருந்து வந்துவிட்டாளா?" என்று கேட்டபடி வந்த கணவரைப் பார்த்து விழித்தாள்.

"இதோ சொல்றேன். கொஞ்சம் ரியாவைப் பிடிங்க..." என்று அவரிடம் கொடுத்துவிட்டு... வேகமாக மகளின் அறைக்குச் சென்றவள், "என்ன சங்கீதா... ஆபீசிலிருந்து வந்து குழந்தையைக் கூட கவனிக்காமல் இங்கே வந்து மோட்டு வளையைப் பார்த்து உட்கார்ந்திருக்கே..." என்று அக்கறையுடன் விசாரித்தவளிடம் எரிச்சலுடன்.

"அம்மா! ப்ளீஸ்... என்னைக் கொஞ்ச நேரம் தனியா விடேன்..." என்று எரிந்து விழுந்தவளை விநோதமாகப் பார்த்தாள்.

கணவன் ஓடிப் போனதற்கே கலங்காமல்... தன் வாழ்க்கைப் பாதையை நல்ல படியாக அமைத்துக் கொண்டு, இதுவரை தன் மகளுடன் சந்தோஷமாக வாழ்ந்து வந்தவளுக்கு இன்று என்ன புதிதாக வந்து விட்டது, எதற்காக இப்படி எரிந்து விழுகிறாள் என்று புரியாத அந்தத் தாய் முகச் சுணக்கத்துடன் எழுந்து வெளியே செல்ல அவளின் கையைப் பிடித்தாள்.

திரும்பியவளிடம், "சாரிம்மா... ஏதோ எரிச்சலில் பேசி விட்டேன்..." என்று மன்னிப்புக் கேட்க, மீண்டும் அவளருகில் வந்து அமர்ந்தாள்.

அவளின் மடியில் படுத்துக் கொண்ட மகளின் செய்கைக்கான அர்த்தம் புரியாமலே அவளாகவே சொல்லட்டும் என்று பொறுமையாக அவளின் தலையை ஆதரவாகக் கோதிவிட, "எனக்குத் தாலி கட்டிய அந்த ராஸ்கல் இன்று எனக்குப் போன் செய்திருந்தான்..." என்று சொல்லும்போதே மகளின் முதுகு விரைத்துக் கொள்ள, பானுவின் கைகள் தன்னிச்சையாகத் தன் இயக்கத்தை நிறுத்தின.

அவளிடமிருந்து எழுந்து அமர்ந்தவள், "போன் செய்தவன் சும்மா செய்யவில்லை. உங்கள் வீட்டில் வந்து என்னால் தங்க முடியாது. அதனால் என் பெயரில் ஒரு வீட்டை வாங்கிக் கொடுக்கச் சொல், உன் அப்பாவை... அதன் பிறகு உன்னையும் குழந்தையையும் அழைத்துக் கொண்டு வந்து விடுகிறேன் என்றான்..." என்று சொல்லும் போதே சங்கீயின் முகம் வெறுப்பில் தோய்ந்து போக, அதற்கு மேல் சொல்ல முடியாமல் பேச்சை நிறுத்தினாள்.

அச்சமயம் உள்ளே நுழைந்த மாணிக்கம் அந்த அறையில் நிலவிய ஒருவித அமைதி... அவரைப் பாதிக்க என்னவென்று விசாரித்தவரிடம் எல்லாவற்றையும் ஒப்பித்தாள் அவரின் மனைவி.

அதைக் கேட்டதும் முகம் ரௌத்திரமாக மாற, ஆத்திரமாகப் பேச நினைத்தவர், கையில் வைத்திருந்த பேத்தியை நினைத்துத் தன் கோபத்தை அடக்கி, "சரி சங்கீதா, இதைப் பற்றி அப்புறம் பேசலாம். நீ போய் ரெஃப்ரெஷ் செய்துகிட்டு குழந்தையைக் கவனி..." என்று கட்டளை மாதிரி சொல்லிவிட்டு வெளியே செல்ல, அவரைப் பின்தொடர்ந்தாள் மனைவி.

இரவுவரை காத்திருந்து ரியா உறங்கியதும், "இப்போ சொல்லு. நீ என்ன முடிவு பண்ணியிருக்கே...?" என்று ஆத்திரத்துடன் ஆரம்பித்தவர்... இடைவெளி விட்டுக் கொஞ்சம் நிதானித்துத் தன்னை அமைதிப்படுத்திக் கொண்டு.

"ரியாவுக்குத் தகப்பன் தேவை என்று நினைத்தால் நீ தாராளமாக அவன் கூடப் போகலாம். எங்களுக்கு அதில் ஒன்றும் ஆட்சேபனை இல்லை. உனக்காகவும், என் பேத்திக்காகவும் வீடு வாங்கித் தருகிறேன். ஆனால் அவன் பெயரில் இல்லை. பேத்தியின் பெயரில்தான்

வாங்குவேன்..." என்று மகளின் வாழ்க்கையை மனதில் கொண்டு, கோபத்தை அடக்கிச் சொல்லிவிட்டு, "நீ என்ன சொல்றே பானு...?" என்று மனைவியிடமும் யோசனை கேட்டார்.

கணவரின் பேச்சிற்கு மகளின் முகத்தைப் பார்த்து விட்டுப் பதில் சொல்லுமுன், சங்கீதா அவரை ஒரு கையால் அடக்கிவிட்டு, "அப்பா... என்ன இது? நான் அவனுடன் வாழப் போறேன் என்று சொன்ன மாதிரி... நீங்களாகவே ஒரு முடிவு எடுத்துப் பேசறீங்க... முதலில்தான் தெரியாமல் தவறு செய்தேன். ஆனால் அதே தவறை மீண்டும் செய்வேன் என்று எப்படி எதிர்பார்த்தீர்கள். ஹ்ம்ம்... எனக்கு இப்படிப்பட்ட ஃப்ராட் தேவையில்லை. என் மகளுக்கும் இப்படி ஒரு கேவலமான தகப்பன் தேவையே இல்லை..." என்று வெறுப்பாகப் படபடவென்று தீர்மானமாகப் பேசிய மகளின் முடிவு தந்தைக்குப் பெருமையாக இருந்தது.

ஆனால் தாய்க்கோ மகளின் உறுதியான முடிவு சந்தோஷத்தைக் கொடுத்தாலும், இலவச இணைப்பாகக் கூடவே ஒரு பயமும் வர்த்தான் செய்தது. மகள் அவனை வேண்டாம் என்று ஒதுங்கி நின்றாலும், அவன் சும்மா இருப்பானா? அவன் ஒரு நாகப் பாம்பாச்சே.... அது என்றைக்காவது மகளையும், பேத்தியையும் கொத்தி விட்டால்..." என்று நினைக்கும்போதே அவளின் உடல் பயத்தில் குலுங்க... தன் மனதில் எழுந்த பயத்தை முற்றிலும் மகளிடம் சொல்லாமல்,



"குழந்தை வளர்ந்து அப்பா எங்கே என்று கேட்டால் எப்படிச் சமாளிப்பே...?" என்று ஒருவிதத் தடுமாற்றத் துடன் கேட்டாள்.

அவளின் கேள்வி, சங்கீதாவைக் கோபத்தில் ஆழ்த்த... கொஞ்சம் கூடத் தயங்காமல், "ம்ம்ம்... அப்படி ஒரு கேள்வி கேட்டால் அவன் செத்துப் போயிட்டதா சொல்வேனே தவிர, கண்டிப்பா அப்படி ஒருத்தன் இருக்கிறதா சொல்ல மாட்டேன்..." என்று வக்கிரமாகச் சொல்லவும் பானுமதி அதிர்ந்து போனாள்.

"பின்னே என்னம்மா... தாலி கட்டியவன் என்ன துரோகம் செய்தாலும் அவன் வந்து அழைத்தால், அவன் பின்னாலே போயிடணுமா? அவன் எனக்குச் செய்த துரோகத்தின் ரணம் என் மனசில் இருந்து என்றைக்குமே ஆறாது. ஆறவும் விட மாட்டேன்..." என்று சொல்லும்போதே ஆத்திரத்தில் அவள் உடல் நடுங்கியது.

அவளின் பேச்சு தாய்க்குப் பயத்தைக் கொடுத் தாலும், 'மகள் சொல்றதிலும் தவறு இல்லையே... முட்டையிடுற கோழிக்குத்தானே வலி தெரியும்...' என்ற நினைப்பினூடே அமைதியாக இருக்க...

"சரிம்மா... நீ என்ன பதில் சொன்னே அவனுக்கு..." என்று கணவரின் கேள்விக்கு மகளை நோக்கினாள்.

"அவனுக்கு நான் ஏன்ப்பா பதில் சொல்லணும்? அவன் பேசிக்கிட்டு இருக்கும்போதே போனைக் கட் பண்ணிட்டேன்..." என்ற மகளின் பதிலில் திருப்தி அடையாமல்,

"என்னம்மா இப்படிச் செய்துட்டே... அவனிடம் தீர்மானமா உன் முடிவைச் சொல்ல வேண்டியதுதானே... நீ இப்படி அமைதியாக இருந்தால் அவன் உன்னைச் சும்மா விடுவானா? அடிக்கடி தொல்லை செய்வானே! அப்படியும் உன்னிடமிருந்து சரியான பதிலோ அல்லது அவனுக்கு ஆதாயமோ கிடைக்கவில்லை என்றால் நேரிலே வந்து கலாட்டா பண்ணமாட்டானா?" என்றார், சற்று வேதனையுடன்.

"நீங்க சொல்றதை எல்லாம் நான் ஏற்கெனவே யோசிச்சிட்டேன் டாடி. அவன் அப்படி வந்து கலாட்டா செய்தால் அசிங்கப்படப் போவது அவன்தான். அது மட்டுமில்லை. அப்படி வந்தால் பிரச்னை அவனுக்குத் தான். பிகாஸ் அவனிடம் எங்களுக்குக் கல்யாண மானதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை," என மிகவும் அலட்சியமாகச் சொல்ல... மாணிக்கத்தை நிம்மதி சூழ்ந்தது.

இந்தத் தீர்மானத்திற்குப் பிறகு பத்து நாட்கள் சங்கீயின் வாழ்க்கையில் எந்தச் சங்கடங்களும் இல்லாமல் நகர... பதினோராவது நாள் தொல்லை, தொலைபேசியின் வழியே அழைத்தது.

அவனிடம் பேசப் பிடிக்காமல் போனைக் கட் செய்து கொண்டே வந்தவளின் முன் ஒரு நாள் பிரசன்னமான விஜய்யைக் கண்டதும், சங்கீயின் முகத்தில் அருவருப்பு கொப்புளித்தது.

அவனைப் பார்க்கப் பிடிக்காமல்... முகத்தைத் திருப்பிக் கொண்டவள், அவன்பாட்டுக்கு ஏதோ ஏதோ பேசிக் கொண்டே போக... அதற்கு மேல் தாக்குப்பிடிக்க முடியாமல், "லுக்... இதோட நிறுத்திக் கொள் உன் திருவிளையாடலை. எனக்குப் போன் செய்வதோ, நேரில் வந்து மிரட்டுவது என்று செய்தாயோ போலீசில் கம்ப்ளைண்ட் செய்து விடுவேன்.

"இதற்கு மேல் என்னை மிரட்டியோ, உருட்டியோ பணம் பிடுங்க நினைத்தால் என்னிடம் இனி செல்லுபடி யாகாது. மைண்ட் இட். கெட் லாஸ்ட் ஃப்ரம் ஹியர்..." என்று சினத்துடன் வாசலை நோக்கிக் கைகாட்டி விரட்ட... அதைக் கேட்ட விஜய்க்குக் கோபத்தில் முகம் கோரமானது.

"யாரிடம்டி உன் திமிரைக் காட்டறே... காதலுக்காகப் பெத்தவங்களையே விட்டுவிட்டு வீட்டை விட்டு ஓடி வந்தவள்தானே... என்னவோ பெரிய இவ மாதிரிப் பேசிக்கிட்டு திரியறே! மரியாதையா நான் கேட்ட மாதிரி, உங்கப்பனை என் பெயரில் ஒரு வீட்டை வாங்கித் தரச் சொல்லு. இல்லை உன்னை நாறடிச்சிடுவேன்..." என்று எகிற... அவனைப் புழு போலப் பார்த்தாள்.

ஒரு அலட்சியமான சிரிப்புடன், "ஆமாம். நீ சொன்ன மாதிரி நான் பெரிய இவள்தான். அதிருக்கட்டும். என்னமோ நீ கொடுத்து வைச்ச மாதிரி உனக்கு வீட்டை வாங்கிக் கொடு என்று அதிகாரம் பண்றே... நீ என்னதான் என்னை மிரட்டினாலும் ஒரு பைசா கிடைக்காது.

"நீ என்ன வேண்டுமானாலும் செய்துக்கோ. ஆனால் அதற்கு முன்னால் இதைக் கேட்டுக்கோ. இனி ஒரு தடவை என்னை மிரட்டவோ, தொல்லை செய்யவோ நினைச்சே...

உன்னை எங்கு கொண்டு போய் நிறுத்தணுமோ, அங்கே நிறுத்துவேன்..." என்று பதட்டமே இல்லாமல் மிக நிதானமாகச் சொல்லி விட்டுச் சென்றவளை ஆத்திரமும், குழப்பமுமாக வெறித்தான்.

ஏற்காட்டில்...

"உங்களுடன் நான் கொஞ்சம் பேசணும்..." என்ற மாதவனின் மென்மையான பேச்சு சுஜியின் உள்ளே அபாய மணியை அடித்தது. அலுவலக விஷயமாக அவனுடன் காரில் சென்றபோது... அவன் இப்படிக் கேட்டதும், அவன் என்ன கேட்கப் போகிறான் என்று ஓரளவு யூகித்தாலும் எதுவும் தெரிந்த மாதிரி காட்டிக் கொள்ளாமல், மௌனமாகத் தலையசைக்க, கார் சட்டென்று குலுங்கி நின்றது.

காரை விட்டிறங்கி... அதன் மேல் ஸ்டைலாகச் சாய்ந்து நின்றபடி சுஜியையே பார்த்துக் கொண்டிருக்க... வண்டியில் இருந்து இறங்கியவள், அது மலைப் பாதை என்பதால் கிட்டே சென்று குனிந்து கீழே பள்ளத்தாக்கைப் பார்க்க... அதல பாதாளமாகப் படு பயங்கரமாகத் தோன்றினாலும் பச்சைப் பசேலென்று மனதைக் கொள்ளை கொண்டது.

'இதுதான் அழகான ஆபத்து போலிருக்கு...' என்று எண்ணியபடியே திரும்பியவள், மாதவனின் பார்வையில் இருந்த அதிகப்படியான காதல் அவளை நெளிய வைக்க... "சொல்லுங்க சார்... ஏதோ பேசணும் என்று சொன்னீங்களே..." என்று ஞாபகப்படுத்தினாள்.

"எனக்கு எப்படி ஆரம்பிக்கிறதே என்று தெரியலை. இது நாள் வரையில் என் மனசில் எந்தவித ஆசையும் இல்லாமல் வாழ்ந்து வந்துவிட்டேன். ஆனால் உங்களைப் பார்த்த நாளிலிருந்தே எனக்குள்ளும் கல்யாண ஆசை துளிர் விட்டிருக்கு..." என்று கொஞ்ச தூரம் நடந்தவன்... அவள் பக்கம் திரும்பி, "நான்..." என்று மீண்டும் ஆரம்பிக்கும்போதே... "ஒரு நிமிஷம் சார்..." என்று நிறுத்தினாள்.

"சாரி சார்... நீங்க என்ன சொல்லப் போறீங்க என்று எனக்குத் தெரியும். அதை நீங்க என்னிடம் சொல்றதுக்கு முன்னால் நான் உங்களிடம் ஒரு விஷயத்தைச் சொல்லணும்..." என்று சற்று நிறுத்தியவள்,

"நீங்க நினைக்கிற மாதிரி நான் திருமணமாகாதவள் இல்லை. எனக்குக் கல்யாணமாயிடுச்சு..." என்று வேகத்துடன் சொல்லிக் கொண்டு வந்தவள், சற்றுக் குரலைத் தாழ்த்தி, "சாரி சார்... இந்த உண்மையை உங்களிடம் இருந்து மறைத்ததற்கு..." என்று மன்னிப்புக் கேட்க... மாதவனிடமிருந்து சிரிப்புத்தான் பதிலாக வந்தது.

அவன் கொஞ்சம் கூட அசராமல், "எனக்குத் தெரியும். விசாலம் அத்தையிடம் உங்கள் மேல் உள்ள காதலைச் சொல்லும்போதே, உங்களைப் பற்றியும் சொன்னார்கள். சோ எனக்கு உங்கள் பாஸ்ட் தேவையில்லை. இப்போதைக்கு நீங்கள் மிஸ் சுஜிதா. அது போதும். இப்போ சொல்லுங்க.... என்னைக் கல்யாணம் செய்துக்க உங்களுக்குச் சம்மதமா?" என்று

ஆசையோடு அவளை நெருங்கிக் கேட்க, சுஜிக்குக் 'கடவுளே...!' என்றிருந்தது.

அவனுக்கு உடனே பதில் சொல்ல முடியாமல் தலையைக் குனிந்து, "மறுபடியும் என்னை மன்னிக்கணும். இப்போது மட்டுமில்லை. எப்போதுமே உங்கள் விருப்பத்திற்கு என்னால் சம்மதம் சொல்ல முடியாது..." என்றவள், தன் காதலைப் பற்றிச் சொல்லி நிறுத்த... மாதவனுக்கு அவள் தன் காதலை ஏற்றுக் கொள்ளவில்லையே என்ற வேதனை இருந்தாலும், அவளின் காதலை நினைத்துப் பெருமையாக இருந்தது.

சிறிது நேரம் மௌனத்தில் கழிய, மாதவனே அந்த மௌனத்தைக் கலைத்து, "ஐ அம் சாரி மிஸ் சுஜிதா, உங்க மனசு புரியாம ஏதேதோ பேசி உங்களை ரொம்பவே தொல்லை செய்துட்டேன். அகெய்ன் சாரி. உங்க நல்ல மனசுக்கு நிச்சயம் நல்லதே நடக்கும். சரி, வாங்க போகலாம்..." எனக் காரில் ஏறினான்.

அந்தச் சம்பவத்திற்குப் பிறகு அவன் சுஜியிடம் வேறு எந்த எண்ணமும் இல்லாமல்... அவளை ஒரு நல்ல தோழியாக நினைத்துப் பழக... அவர்களிடையே உள்ள நல்ல நட்பைப் புரிந்து கொள்ளாமல் நிம்மி சுஜியை வார்த்தையால் வறுத்து எடுத்துக் கொண்டிருந்தாள்.

அன்றும் அப்படித்தான். மாதவனின் கேபின் சென்று அக்கௌண்ட்ஸ் டீடெய்ல்ஸ் கொடுத்து, அவன் கேட்ட கேள்விகளுக்கு விளக்கம் கொடுத்து விட்டு... வெளியே வந்தவளை, நிம்மி பார்வையாலே எரித்து, "என்ன வசிய மருந்து கொடுத்து எம்.டி. சாரை உன்



பின்னாலே சுற்ற வைக்கிறே? அந்த வித்தையை எனக்கும் கொஞ்சம் சொல்லிக் கொடேன்..." என்று காதே கூசுற அளவு பேச... சுஜிக்கு மனம் கூசிப் பதில் சொல்ல முடியாமல், தலையைக் குனிந்தவாறே தன் சீட்டிற்குச் சென்றாள்.

ஆனால் நிம்மி விடாமல், மாதவன் இவளால்தானே தன்னைத் திரும்பிப் பார்க்க மாட்டேன்கிறான் என்ற ஆத்திரத்தில் மேலும் மனம் நொந்து போகிற அளவிற்குப் பேசிக் கொண்டே போக... அந்த நேரம் பார்த்து வெளியே வந்த மாதவன் அங்கு நடந்ததைக் கண்டு வெகுண்டு நிம்மியை உள்ளே அழைத்தான்.

சுஜி வந்ததிலிருந்து நிம்மியை அவன் கேபினுக்கு அதிகமாக அழைத்ததில்லை. நீண்ட நாள் கழித்து, இன்று உள்ளே அழைக்கவும்... உடனேயே முடியைத் திருத்தி, உடையைச் சற்றுக் கீழிறக்கிச் சரி செய்து கொண்டு, மயக்கும் புன்னகையுடன் உள்ளே செல்ல... எடுத்த எடுப்பிலே, "சுஜியை யாரென்று நினைத்தே? அவங்களைக் கேவலமாகப் பேசுகிற அளவுக்கு உனக்கு யார் இடம் கொடுத்தது?

"அந்தத் தகுதி உனக்கிருக்கா என்று என்றாவது நினைத்துப் பார்த்திருக்கிறாயா? இதுதான் உனக்கு ஃபர்ஸ்ட் அண்ட் லாஸ்ட் வார்னிங். ஒழுங்கா டிரஸ் செய்து கொண்டு வா, ஆபீஸ்க்கு. இனி ஒரு தடவை என்னை மடக்க வேண்டும் என்று நினைத்து, இந்த மாதிரிக் கீழ்த்தரமான வேலையைச் செய்தால்... உன்னை வேலையை விட்டே டிஸ்மிஸ் செய்ய வேண்டிவரும்.

ஜாக்கிரதை..." என்று உறும, நிம்மிக்குச் சகலமும் நடுங்கிப் போனது.

அவளின் இந்த ஒரு சம்பளத்தை நம்பித்தான் அவள் குடும்பமே நடந்து வந்தது. இந்த வேலையும் போய் விட்டால்... இத்தனை வசதிகளோடு வேறு வேலை கண்டிப்பாகக் கிடைக்காது. மாதவன் அடிமடியிலே கை வைக்க... அதற்கு மேலும் தன் மேனா மினுக்கி வேலை அவனிடம் எடுபடாது என்று புரிந்து கொண்டவள், பூம் பூம் மாடு மாதிரித் தலையாட்டி விட்டு வெளியே வந்தாள்.

ஆபீசில் வேலை முடிந்து வீட்டுக்கு வந்தவளுக்கு விசாலம்மா அன்போடு சிற்றுண்டியைப் பரிமாறிக் கொண்டே, "என்னம்மா... அந்த நிம்மிக்குச் சரியான டோஸ் கிடைத்தது போலிருக்கு..." என்று கேட்டார் சிரிப்புடன்.

"பாவம்மா அவள்... என்னைக் கேவலமாகப் பேசினாலும் அந்தப் பேச்சின் பின்னால் இருப்பது அவள் மாதவன் சார் மேலே வைத்திருந்த காதல்தானே..." என்றவளை இடைமறித்து,

"நல்ல பொண்ணும்மா நீ... அவளை எல்லாம் கல்யாணம் செய்து கொண்டால் மாதவன் சந்தோஷமாகக் கௌரவமாக வாழ முடியுமா?" என்று நொடித்தார்.

அந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் சுஜியின் நினைவு அவளின் தாயை நோக்கித் தாவ, கண்களில் கண்ணீர் பூக்க... விசாலம் அம்மாவிற்குத் தெரியாமல் கண்ணீரை உள்ளுக்கிழுத்துக் கொண்டாள்.



அதன் பிறகு, நிம்மியின் தொல்லைகள் இல்லாமல் நிம்மதியாக நாட்கள் நகர, அந்த ஆண்டவனுக்கும் அவள் மேல் கொஞ்சம் கருணை பிறந்தது.

அன்று ஆபீஸ் கிளம்பும்போதே விசாலம் அம்மா, 'மாலையில் சீக்கிரம் வந்திடும்மா...' என்று சொல்லி அனுப்பியதால், மாதவனிடம் சொல்லிவிட்டு ஒரு மணி நேரம் முன்னதாகக் கிளம்பியவளை வீட்டில் விடுவதற்காக மாதவனும் கூடவே வர... அவனுடன் வீட்டிற்குள் நுழைந்தவள், அங்கே கண்ட காட்சியில் அதிர்ச்சியில் சிலையானாள்.

## 19

**ஹா**லில் தன் சிறு வயது ஃபோட்டோவிற்கு மாலை போட்டு, அதன் முன் தனக்குச் சிறு வயதில் பிடித்த பலகாரங்களைப் படையல் போட்டு வைத்திருந்ததைப் பார்த்து, அதிர்ச்சியில் வாசற்படியிலே நின்றவளைப் பார்த்து,

"என்ன சுஜி, இங்கேயே நின்னுட்டே..." என்றவர், அவள் பார்வை போன இடத்தைப் பார்த்து, "ஓ! இதுவா... என் மகளுக்கு இன்று திதி. அதனால்தான் உன்னைச் சீக்கிரம் வரச் சொன்னேன். சரி, நீ போய்க் கை கால் கழுவிகிட்டு வா... நீ வந்து உட்கார் மாதவா..." என்று சரளமாகப் பேசிக் கொண்டே உள்ளே செல்ல... சுஜிக்குத் தான் காண்பது கனவா அல்லது நினைவா என்று குழப்பமாக இருந்தது.

'இந்தப் போட்டோவில் இருப்பது நான்தான் என்றால் விசாலம் அம்மாதான் என்னைப் பெற்ற தாயா? ஆனால் அவர்கள் பெயர் சாவித்திரியாச்சே... சரி, பெயர் கூட விட்டு விடலாம். ஆனால் இவரின் முகம் ஏன் எனக்குக் கொஞ்சம் கூட ஞாபகம் இல்லை...? ஏன்... ஏன்...?' என்று யோசித்துக் கொண்டிருந்தவளை உலுக்கி...

“என்ன சுஜிம்மா... எவ்வளவு நேரம் இங்கேயே நிற்பே... உள்ளே வாம்மா!” என்று கைப் பிடித்து அழைக்க, “அம்மா...!” என்று பரவசமான குரலில் அழைத்தாள்.

அவளின் அழைப்பிற்குத் திரும்பியவரிடம், “அம்மா... என்னைத் தெரியலை... நா... நான்... நான்தான் உங்க பொண்ணு...” என்று பரவசத்துடன் கண்களில் கண்ணீர் வழிய, போட்டோவைக் காட்டிக் கூற... சற்று நேரம் தன் காதுகளையே நம்ப முடியாமல் சில வினாடிகளே சிலையாகச் சமைந்தவர்... அடுத்த வினாடி பாய்ந்து வேகத்தோடு, தன் மகளை அணைத்துக் கொண்டார்.

சில மணித் துளிகள் பாசச் சங்கமத்தில் இருவருமே கரைந்து போக... சிறிது நேரம் கழித்து மகளைத் தன்னிடமிருந்து விலக்கியவர், அவளை முகமெங்கும் முத்தமிட்டு... “என் மகள் எனக்குத் திரும்பிக் கிடைச்சிட்டா. கடவுளே! உனக்கு என் நன்றியை எப்படிச் சொல்வேன்...” என்றவரின் கன்னங்களில் கண்ணீர் வழிந்தது.

“இத்தனை நாள் நீ என்கூட இருந்தும்... நம்மாலே நாம் இருவரும் யார் என்று அடையாளம் கூடக் கண்டு பிடிக்க முடியாமல் விதி சதி செய்துடுச்சே...” என்று அவள் முகத்தை வழித்து முத்தமிட்டவர்... மீண்டும் அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டார்.

கண்கள் அகல... இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த மாதவனுக்கு... இப்படியெல்லாம் கூட நடக்குமா என்று ஆச்சரியம்தான் மிஞ்சியது. ஒருவாறாக இருவரும் சுயநிலைக்கு வர, விசாலம் ஞாபகம் வந்தவராகப் பதறிச் சென்று மகளின் போட்டோவிற்குப் போட்டு வைத்திருந்த மாலையையும் பொட்டையும் அகற்றித் துடைத்து, டேபிளின் மேல் வைத்தார்.

“கங்க்ராட்ஸ் மிஸ் சுஜிதா... எங்க ஏற்காட்டுக்கு வந்த ராசி... உங்களுக்கு உங்க அம்மா திரும்பக் கிடைச் சிட்டாங்க...” என்று சந்தோஷத்துடன் சொன்னவன்... “ஸோ, நீங்க என் அத்தை பெண்ணா?” என்று சிரித்தான்.

அதுவரை இந்த மாதிரிச் சந்தோஷத்தை அனுபவித் திராததால் எப்பொழுதையும் விட, சுஜியின் முகத்தில் புதிய சந்தோஷமும் வெட்கமும் வர, தாயைக் கட்டிக் கொண்டாள்.

அதே சந்தோஷத்தில் மகளுக்கும், மாதவனுக்கும் விசாலம் பாயசம் கொண்டு வந்து தர... அதை வாங் கியவன், சுஜியிடம், “உங்க அம்மா பெயர் சாவித்திரி என்று சொன்னதாக ஞாபகம். ஆனால் அத்தையின் பெயர் விசாலம் ஆச்சே...?” என்று சற்றுச் சந்தேகமாகக் கேட்டதும், சுஜியின் முகமும் அதே கேள்வியுடன் தாயை நோக்கித் திரும்பியது.

"அது ஒண்ணுமில்லே மாதவா... என் கணவர் செய்த துரோகத்தைத் தாங்க முடியாமல் ஒரு வேகத்தில் வீட்டை விட்டு வந்துவிட்டேனே தவிர, எங்கு போவது என்று தெரியாமல் மனநிலை சரியில்லாமல் ஊர் ஊராகச் சில மாதங்கள் சுற்றிக் கொண்டிருந்தேன்.

"அப்போதுதான் ஏற்காட்டுக்கு வந்தேன். உன் குடும்பம் எனக்குத் தூரத்துச் சொந்தம் என்பதால், உன் வீட்டில் சில நாட்கள் தங்கியிருந்தபோது, இங்கேயே தங்கிவிட்டால் என்னவென்று தோன்றியது. அப்படித்தான் நான் இங்கு வந்தது..." என்று கூறினார்.

"உங்க பெயர்..." என்று இழுத்த மாதவனுக்கு,

"இரு, சொல்கிறேன்..." என்று சுஜியின் கையை எடுத்து, தன் கையில் வைத்துக் கொண்டு, "எனக்குத் தாலி கட்டி ஒரு குழந்தையையும் கொடுத்த அந்த மனுஷன் எத்தனை முறை என் பெயரை ஆசை ஆசையாய் அழைத்திருப்பார்... ஆனால் அதே வாயால் வேறொருத்தியை ஆசையாகக் கூப்பிடுவதைத் தாங்க முடியாமல் சாவித்திரி என்று அவர் அழைத்த பெயர் மேல் ஒரு வெறுப்பு வந்து நானே எனக்கு விசாலம் என்று வைத்துக் கொண்டு என் உருவத்தை ஏறக்குறைய மாற்றிக் கொண்டு வாழ்ந்து வந்தேன்..." என்று சொல்ல... சுஜிக்குத் தன் தாயின் மனவேதனை புரிய... அவரின் கையை ஆதரவாக அழுத்திக் கொடுத்து, அவரின் தோளில் சலுகையாகச் சாய்ந்து கொண்டாள்.

அவரே தொடர்ந்து, "சில வருடங்கள் சென்ற பிறகு புருஷன் செய்த தவறுக்கு மகளை அனாதையாக விட்டு



விட்டு வந்துவிட்டோமே என்று என் மேலே வெறுப்பு ஏற்பட... மீண்டும் திருவண்ணாமலைக்குச் சென்று ராணியிடம் சுஜியைப் பற்றி விசாரித்தேன். அப்போ இவள் பெயர் லக்ஷ்மி..." என்று சொல்ல... சுஜிக்கே இந்த விஷயம் புதிதாக இருக்க, "ஓ!" என்றாள், தன்னை மறந்து ஆச்சரியமாக.

"ஆமாம்டா செல்லம், நான் உனக்குச் சுஜிதா என்று பெயர் வைக்கவே இல்லை..." என்று கூறிவிட்டு, "அந்த ராணி... 'நீ ஒரு விபத்தில் இறந்துவிட்டாய்...' என்று கூறிவிட்டாள். அதைக் கேட்டதும் என் நெஞ்சமே வெடித்துச் சிதறிவிட்டது. அன்றிலிருந்து உன்னைப் பார்க்கும்வரை நான் எதற்காக வாழ்கிறேன் என்றே தெரியாமல் இருந்தது. ஆனால் இன்று..." என்று மேலே தொடர முடியாமல் நிறுத்த... கன்னங்களில் வழிந்த நீரைத் துடைத்த சுஜி, அவர் மேலேயே ஆதரவாகச் சாய்ந்து கொள்ள, இருவரையும் தொல்லை செய்ய விரும்பாமல் அங்கிருந்து அகன்றான் மாதவன்.

அன்றிலிருந்து அவள் வாழ்க்கை என்னும் நிறம் இழந்த வானவில்லில் புதிதாக ஒரு நிறம் சேர வாழ்க்கையே ஜொலித்தது. மனமும் உடலும் சந்தோஷத்தில் மிதக்க... உலகமே புதிதாக இருந்தது. தாயின் விருப்பப்படி ஒரு வாரம் வேலைக்குச் செல்லாமல், மாதவனின் சம்மதத்தோடு விடுப்பு எடுத்துக் கொண்டு தாயோடு ஒவ்வொரு நிமிடத்தையும் சந்தோஷமாகக் கழிக்க... வாழ்க்கை இவ்வளவு சந்தோஷமான ஒன்றா என்ற ஆச்சரியம்தான் எழுந்தது.

இதன் நடுவில் ஒரு நாள் மாதவனின் வீட்டிற்குத் தாயுடன் சென்று வர, அவனின் தாய் மஞ்சு அவளை அன்புடன் உபசரித்தார். ரத்தினவேலுவும் இது நாள் வரையில் தங்கள் எஸ்டேட்டில் வேலை செய்தது விசாலத்தின் மகள் என்று தெரிந்ததுமே... அவளைத் தன் மகள் போல நடத்தினார்.

இருவருக்குமே பெண் குழந்தை மேல் கொள்ளை ஆசை. ஆனால் பிறந்ததோ ஒரே பையன் என்பதால் தங்கள் ஆசையை மனதிற்குள்ளே புதைத்துக் கொண்டார்கள். எங்கு பெண் குழந்தையைப் பார்த்தாலும், ஆசையாகக் கொஞ்சுவதும், பாசமாகப் பேசுவதுமாக இருந்தவர்களுக்குச் சுஜியைப் பார்த்ததும், தங்கள் மகளாகவே நினைத்துப் பாசத்தைப் பொழிந்தார்கள்.

இவ்வளவு நாள் தட்டுத் தடங்கலோடு ஒருவிதச் சோகத்தோடு சென்று கொண்டிருந்த சுஜியின் வாழ்க்கையில் திடீரென்று லட்சக்கணக்கான நட்சத்திரங்கள் ஒளிர, அவளின் நாட்கள் தாயுடன் ஒருவித அழகோடு தெளிந்த நீரோடை போல ஓடியது.

ஒரு நாள் தாயுடன் ஷாப்பிங் செல்வதற்காகச் சூப்பர் மார்க்கெட் செல்ல... மகளுக்குத் தேவையானதை தாய் பார்த்துப் பார்த்து வாங்குவதும், தாய்க்குத் தேவையானதை மகள் வாங்குவதுமாக இருப்பதைப் பார்த்து, அங்கு வந்த மாதவனின் பெற்றோர் சிரிக்க... வாங்கியவற்றிற்குப் பணத்தைக் கொடுத்து விட்டு வெளியில் வந்து சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள்.



மூவரிடமும் பேசியபடி எதேச்சையாகப் பார்வையைத் திருப்பியவள், பார்க்கிங்கில் வண்டியை நிறுத்திவிட்டு இறங்கிய மாதவனைக் கண்டதும் முகத்தில் புன்னகை மலரக் கையை ஆட்ட... அவனைத் தொடர்ந்து இறங்கியவனைக் கண்டதும் முகத்தில் குழப்ப மூலாம் பூசிக் கொள்ள அவளுடைய புன்னகை உதட்டிலேயே உறைந்து போனது.

கை தானாகக் கீழே இறங்க... தங்களை நோக்கி வந்து கொண்டிருந்தவர்களையே வைத்த விழி எடுக்காமல் என்னதென்று புரியாத ஒருவித உணர்வோடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஆனால் மாதவனோடு வந்து கொண்டிருந்தவன் சுஜியைக் கவனிக்காமல் வேறெங்கோ பார்த்துக் கொண்டே அவர்களின் அருகில் வந்தான்.

மகனைப் பார்த்ததும் ரத்தினம் உற்சாகமாக, அவர்களிடம் தன் கூட வந்தவனை, "டாட்... இவன் என் ஃப்ரெண்ட் ப்ரஜித். இவனும்..." என்று அறிமுகப்படுத்தும்போதே, ரத்தினவேல், "தெரியுமே. நம்ம பக்கத்து எஸ்டேட் ஓனர்தானே... நாங்க ஒரு நாள் சந்திச்சிருக்கோம்..." என்று கூறியபடி கை கொடுத்து விட்டு, மனைவியையும் விசாலத்தையும் அறிமுகப்படுத்தினார்.

ப்ரஜித் அருகில் வந்ததுமே அவனுக்கு முகத்தைக் காட்டாமல் திரும்பியபடி வேறெதையோ முக்கியமாகப் பார்த்துக் கொண்டிருக்கிற மாதிரி நடித்துக் கொண்டிருந்த சுஜியை அழைத்து, "இவள் லக்ஷ்மி. எங்க பொண்ணு

மாதிரி..." என்று அறிமுகப்படுத்த, வேறு வழியில்லாமல் திரும்பிய சுஜியைக் கண்டதும், தனக்குள் அதிர்ந்த ப்ரஜித், தன் அதிர்ச்சியை மற்றவர்களிடம் காட்டாமல், சலனமே இல்லாமல் அவளை வெறுமையாகப் பார்த்தான்.

இருவரும் பரஸ்பரம் ஒரு வணக்கம் கூடச் சொல்லிக் கொள்ளாமல் பார்த்துக் கொண்டிருக்க... "சரி, வாடா. உள்ளே போகலாம்..." என்ற மாதவனின் அழைப்பைக் கேட்டு, முதலில் தன்னிலைக்கு வந்த ப்ரஜித், "வணக்கம் மேடம்..." என்று வெறுமையான முறுவலோடு சொல்லிவிட்டு, அவனோடு நகர...

"அவங்க ஏற்கெனவே பர்சேஸ் பண்ணிட்டாங்களாம்..." என்ற மாதவனின் பேச்சு, ப்ரஜித்தின் காதில் விழவில்லை. அவனின் பார்வையும், கவனமும் சுஜியின் மேலேயே இருக்க... அவளைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றான்.

அவன் பார்வையில் இருந்த ஏக்கம் அவளைக் குற்றவாளியாக்கிக் கூண்டில் ஏற்ற... அதற்கு மேல் அங்கிருக்க முடியாமல் ரத்னம் தம்பதியிடம் விடை பெற்றுக் கொண்டு தாயுடன் வீட்டிற்குச் சென்றாள்.

ப்ரஜித்தைப் பார்த்த அதிர்ச்சியில் தாயுடன் கூடச் சரியாகப் பேச முடியாமல் தடுமாறிக் கவனத்தைச் சிதறவிட... சீக்கிரமே படுக்கச் சென்றுவிட்டாள்.

கண்ணை மூடினாலே... கண் முன்னே ப்ரஜித்தின் ஏக்கப் பார்வையே படமாக விரிய, அந்தப் பார்வை, 'எப்படி என்னை விட்டு உன்னால் பிரிந்து போக முடிந்தது...?'



என்று கேட்ட மாதிரி தோன்ற... குப்பென்று வியர்த்துப் போக, படுக்கையிலிருந்து எழுந்து அமர்ந்தாள்.

சரியான தூக்கம் இல்லாமல் சீக்கிரமே எழுந்தவள், தாய் இன்னும் உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு, அவரைத் தொந்தரவு செய்ய விரும்பாமல் தோட்டத்தில் உலவிக் கொண்டிருந்தாள்.

இளங்காலை நேரம். புற்கள் பனித் துளியில் குளிப்பதை, ரோஜாக்கள் காற்றில் தலையாட்டியபடி ரசித்துக் கொண்டிருப்பதைப் பார்க்க ரம்யமாக இருந்தாலும், அதை ரசிக்கும் மனநிலை சுஜிக்கு இருக்கவில்லை.

எதையோ பறிகொடுத்த மாதிரி இருந்த ப்ரஜித்தின் முகமே அவள் முன் வந்து வந்து போக... தன்னை நினைத்துக் கோபம்தான் வந்தது. 'எதற்காக அவரை வலுக்கட்டாயமாகப் பிரிந்து சென்றேனோ, அதற்குப் புண்ணியமே இல்லாமல் போய்விட்டதே...' என்று மனம் மீண்டும் ரணமானதே தவிர, 'எதை யோசிக்கிறேன்... எதற்காக இப்படி நிலை கொள்ளாமல் தவித்துக் கொண்டிருக்கிறேன்...' என்று தெரியாமலே நடந்து கொண்டிருந்தவள்... தாயின் குரல் கேட்டு உள்ளே சென்றாள்.

ப்ரஜித்தின் நினைவுகளால் மனம் சோர்வடைந்து விட, ஆபீஸ் வர விருப்பம் இல்லாமலே வந்தவள், தன் சீட்டில் அமர்ந்து மனதை ஒருமுகப்படுத்தி வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தாள்.

கொஞ்ச நேரத்திலே மாதவன் டெலிபோனில் அவளை அழைக்க... எழுந்து அவனுடைய கேபினுக்குச் சென்றவள், அங்கே ப்ரஜித்தைக் கண்டதும்... மறுபடியும் அவனை அந்த இடத்தில் எதிர்பார்க்காததால், தன்னை மறந்து அங்கேயே பிரேக் போட்ட மாதிரி நின்றுவிட்டாள்.

இருவரும் ஒருவரை ஒருவர் வைத்த விழி எடுக்காமல் பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்து, தனக்குள் சிரித்துக் கொண்டே, சுஜியிடம், "ப்ரஜித் எல்லாவற்றையும் சொன்னான். நீங்களும் அவனுக்காகத்தானே இதுவரை காத்திருக்கிறீர்கள்..." என்று மென்மையாகச் சொன்ன மாதவனை விழிகள் விரியப் பார்த்தாள்.

"என்ன அப்படிப் பார்க்கறீங்க சுஜிதா... ப்ரஜித்துக்கு உங்களைப் பற்றி எல்லாமே தெரியும். எதுக்காக, யாருக்காக நீங்கள் இருவரும் இப்படித் தனித் தனியாகப் பிரிந்து தவித்துக் கொண்டிருக்கிறீர்கள்? இதனால் யாருக்கு என்ன லாபம்? ம்ம்ம்... அதனால்தான் இப்படி ஒரு ஏற்பாடு செய்தேன். இன்றாவது இரண்டு பேரும் மனம் விட்டுப் பேசி ஒரு நல்ல முடிவா எடுங்கள்..." என்று கூறியவன், சுஜிக்கு பெஸ்ட் ஆஃப் லக் சொல்லியவன், ப்ரஜித்தைப் பார்த்துக் கண் சிமிட்டிக் கட்டை விரலை உயர்த்திக் காட்டி விட்டுக் கதவைச் சாத்திக் கொண்டு வெளியே சென்றான்.

மாதவன் சென்ற சில நிமிடங்கள் வரை இருவருமே அவரவர் இடத்தை விட்டு நகராமல், அப்படியே பார்த்துக் கொண்டு நின்றிருக்க... மௌனத்தை யார் கலைப்பார்கள்



என்று பட்டிமன்றமே நடத்தலாம் போல... இருவருமே மௌனத்தின் பிடியில் இருந்தார்கள்.

எவ்வளவு நேரம் சென்றதோ, அந்த அறையில் சூழ்ந்திருந்த அசாதாரணமான அமைதி சுஜியைப் பாதிக்க, "ஐயாம் சாரி. அம்மா சொன்னாங்க. நீங்க கல்யாணமே செய்துக்கலை என்று..." என்று அவளே மென்மையான குரலில் அந்த அமைதியைக் கலைத்தாள்.

அவளின் பேச்சிற்கு எவ்விதப் பதிலும் சொல்லாமல், மெல்ல அடியெடுத்து அவளை நெருங்கி வர வர... சுஜியின் நெஞ்சத்திற்குள் ஆயிரம் பட்டாம்பூச்சிகள் பறக்க இதயம் இனிதாகப் படபடத்தது. அவளை நெருங்கியவன், இப்போதும் எதுவும் பேசாமல் அமைதியாக அவளைப் பார்த்துக் கொண்டிருப்பதே பெரிய பாக்கியம் என்பது மாதிரி... அவளை விழுங்கி விடுகிற மாதிரி பார்த்துக் கொண்டிருக்க... சுஜிக்கே அவள் இதயம் துடிப்பது காதில் கேட்டது.

மீண்டும் அவளே, "ப்ரஜித்... நான்..." என்று ஆரம்பிக்க... அவளின் இதழில் ஒரு விரலை வைத்து, அவள் பேச்சை நிறுத்த... அவனின் ஸ்பரிசத்தில் சுஜியின் தேகம் இனிதாகச் சிலிர்க்க... அடைக்கலம் தேடி அவனின் மார்பில் சாய்ந்தவளை, இதற்காகவே காத்திருந்தவன் மாதிரி, இத்தனை நாள் பிரிவை ஈடுகட்டுவது போலத் தன்னோடு இறுக அணைத்துக் கொண்டான்.

இதுவரை அவர்கள் அனுபவித்த பிரிவு, துன்பம், சோகம் எல்லாம் இந்த அணைப்பில் கரைத்துவிடுவது

போன்று இருவருமே உலகத்தை மறந்து அணைப்பிலே கட்டுண்டு இருந்தார்கள்.

ஏற்காட்டுக்கு வருவதற்கு முன் சுஜி எதற்கும் இருக்கட்டும் என்று பிரெஞ்சு எம்பசியில் பிரான்சில் தனக்கு நடந்த கொடுமைகளைப் பற்றி எழுதி கம்ப்ளைண்ட் செய்திருந்தாள்.

அந்த விசாரணைக்காக... அவர்களுக்கு அங்கு நடந்த கல்யாணப் பதிவின் நகலை வைத்து பிரான்ஸ் அரசுக்கு அனுப்பி வைக்க, அதைப் பதிவு செய்து விசாரணையைத் தொடங்கினார்கள். அப்படிச் செய்யும் போது யாதவ்வைப் பற்றிய ஃபைல்களை ரெஃபர் செய்ய... அவனுக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை என்றே பதிவாகி இருந்தது.

ஆனால் இந்தியாவிலிருந்து வந்த புகாரில் அவன் கல்யாணமானவன் என்ற ஃப்ரூப் இருக்க, ஜாண்டார் மேரி (கிரைம் பிராஞ்ச்) போலீஸ் வந்து விசாரிக்க, தனக்குக் கல்யாணமே ஆகவில்லை. என் பெண் நண்பியோடுதான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்று வாக்குமூலம் கொடுத்தான்.

அதைக் கேட்ட அவர்கள், தங்கள் கையில் இருந்த கல்யாணப் பதிவைக் காட்டி, அதைப் பற்றி விசாரிக்க... என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் இருவரும் திருதிருவென்று விழித்தார்கள்.

மீண்டும் அவர்களின் முறைப்படி விசாரித்ததில், தனக்குக் கல்யாணமானதை ஒப்புக் கொள்ள வேண்டிவர,



கோன்சிலாவின் விதிப்படி யாதவ்வின் பிரெஞ்சு குடியுரிமையைப் பறித்து, அவன் தவறுக்கு உறுதுணையாக இருந்த தாமரையின் குடியுரிமையையும் பறித்து இருவரையும் இந்தியாவிற்கு ஃபிளைட் ஏற்றிவிட்டு, இந்திய அரசின் காவல் துறைக்கும், பிரெஞ்சு எம்பசிக்கும் தகவல் கொடுத்து விட்டார்கள்.

ஒரே நாளில் இருவரும் சுஜியின் புகாரால் நடுத்தெருவுக்கு வர... இருவருக்குமே அவள் மேல் கடும் கோபம் வந்தது. சுஜியைத் தங்கள் வழிக்குக் கொண்டு வரத்தான் அவளைக் கடுமையான குளிரில் வெளியே தள்ளிக் கதவைச் சாத்தினார்கள். ஆனால் அதுவே அவர்களுக்கு எதிராக ஆனதை நினைத்துக் கடும் கோபத்திற்குள்ளானார்கள்.

இதற்கு நடுவில் போலீசின் கெடுபிடியும், எம்பசியின் கிடுக்கிப் பிடியையும் சமாளிப்பதற்குள் போதும் போதும் என்றாகிவிட, சுஜியைக் கண்டுபிடித்து அவளைக் கொன்றால்தான் ஆத்திரம் தீரும் என்ற கொலை வெறி இருவருக்குமே அதிகமானது.

அதே சமயம் சுஜியைத் திருமணம் செய்வதற்கு முன் சங்கீயிடம் இருபது லட்ச ரூபாய் வாங்கிக் கொண்டு எஸ்கேப்பான விஜய் என்ற யாதவ் சுஜியைத் திருமணம் செய்து அவள் மூலம் பல லட்ச ரூபாய் கொள்ளை யடித்தான்.

அதனால் கொஞ்ச காலமாகச் சங்கீயை மறந் திருந்த அந்த திருட்டுக் கும்பல் கையில் பணமில்லாமல்

பிச்சைக்காரர்கள் போலத் திரிந்து கொண்டிருக்கிற அவர்களுக்கு இப்போதைக்குச் சங்கீயிடம் மிரட்டி உருட்டி மீண்டும் பணம் பறிக்கலாம் என்ற எண்ணம் உதிக்க... மீண்டும் அவளை மிரட்ட ஆரம்பித்தார்கள்.

ஆனால் அவள் கொஞ்சம் கூடப் பயப்படாமல்... மதிக்காமல் உதாசீனப்படுத்த, அவளை நேரடியாக எதிர்க்க முடியாமல் அவளையும் சுஜியுடன் சேர்த்துக் கொல்வதென அந்தக் கும்பல் முடிவு செய்தது.

அதன் முதல் வேலையாக சுஜி எங்கிருக்கிறாள் என்று ரகசியமாக விசாரித்துத் தெரிந்து கொள்ள, அவளைக் கொல்வதற்கு யாதவ் ஏற்காட்டிற்குச் செல்ல... சங்கீயைக் கண்காணிக்கத் தாமரையை நியமித்தான்.

## 20

ப்ரஜித்தும், சுஜியும் மீண்டும் சந்தித்த வேளையில் அங்கு பேச்சிற்கு இடமில்லாமல் போக... இருவரின் மனது மட்டுமே சத்தமாகப் பேசிக் கொண்டது. சிறிது நேரம் கழித்து டெலிபோனின் அழைப்பின் சத்தம் கேட்டு இருவரும் விலக, சுஜியின் முகம் வெட்கத்தில் குங்குமமாகச் சிவந்து போயிருந்ததை ரசனையுடன் வருடி, அவளின் சிவந்த இதழ்களில் தன்னுடைய இதழைப் பதிக்க இருவருமே தங்கள் முதல் முத்தத்தில் நிறையவே உணர்ச்சிவசப்பட்டுப் போனார்கள்.

தன் மனம் கவர்ந்தவனின் அருகில் தான் வசமிழந்து போவதை அறிந்த அவளின் பெண்மை சட்டென்று விழித்துக் கொள்ள... அவனிடமிருந்து விலக,



ப்ரஜித்துக்கும் அவளின் எச்சரிக்கை உணர்வு பெருமையையே கொடுத்தது. நின்ற இடத்திலேயே கையைக் கட்டிக் கொண்டு கண்ணாலே அருகில் அழைக்க, "ப்ளீஸ் ப்ரஜித்..." என்று சிணுங்கிச் சிவந்தவளைப் பார்த்து, உல்லாசமாகச் சிரித்தான்.

நீண்ட நாளைக்குப் பிறகு அவனின் சந்தோஷமான சிரிப்பு அவளுள் நிறைவைத் தர, "தேங்க்ஸ் ப்ரஜு..." என அவள் முதல் முதலாகத் தன் பெயரைச் செல்லமாகச் சுருக்கி அழைத்ததும், அதில் உருகிப் போனவன் அவனுக்குப் பிடித்த வகையில் நன்றி கூறினான்.

அவனின் நன்றிக்கு முகம் சிவந்துவிட, சுஜி வெட்கப்பட்டு வெளியில் செல்ல முயலும்போது மாதவனே கதவைத் தட்டிவிட்டு உள்ளே வந்தான்.

இருவரின் முகத்தில் நிறைந்திருந்த சந்தோஷமே ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டார்கள் என்று கட்டியம் கூற... இந்த நல்ல விஷயத்தை அத்தையிடம் தெரிவிக்க... சுஜியுடன் ப்ரஜித்தை அனுப்பி வைத்தான்.

வீட்டிற்குப் போகும் வழியில் காரைக் கையாண்டு கொண்டே, "இரண்டு நாள் முன்பு அறிமுகப்படுத்தும் போது உன்னை லக்ஷ்மி என்று சொன்னார்களே... உனக்கு இன்னொரு பெயர் லக்ஷ்மியா?" என்று புரியாமல் கேட்டவனுக்கு, சுஜி ஆதியிலிருந்து அந்தம் வரை நடந்ததைக் கூறிவிட்டு,

"ஏன் ராணி சித்தி அம்மாவுடன் என்னை அனுப்பி வைக்கவில்லை? லக்ஷ்மி என்ற பேரை எதற்காக மாற்றி

சுஜிதா என்று வைத்தார்கள்... என்று அம்மா கிடைத்ததிலிருந்து யோசித்துக் கொண்டிருக்கிறேன் ப்ரஜு..." என்று குழப்பத்துடன் கூற... அங்கு சில வினாடிகள் அமைதி நிலவியது.

சிறிது நேரம் கழித்து ப்ரஜித்தே அந்த அமைதியைக் கலைத்து வேறு ஏதேதோ பேசி... அவள் மூடை மாற்றிக் கலகலப்பாகப் பேசிக் கொண்டே வீட்டை அடைய, மாதவன் ஏற்கெனவே போன் செய்து சொல்லிவிட்டதால்... இவர்களுக்காகக் காத்துக் கொண்டிருந்தார் விசாலம் அம்மா.

இருவரும் ஜோடியாக வண்டியிலிருந்து சிரித்துப் பேசிக் கொண்டே இறங்குவதைக் கண்ட தாயிற்கு இருவரின் ஜோடிப் பொருத்தமும் அழகும் பூரிப்பைக் கொடுக்க ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

தன்னுடைய காபி தோட்டத்திற்கு விசிட் செய்து விட்டுக் காரை நோக்கி வந்து கொண்டிருந்த மாதவன்... எதிரே வந்து கொண்டிருந்த காருக்கு வழி விட்டு ஒதுங்கித் தன் காருக்குச் சென்று கொண்டிருந்தவன் திடீரென்று ஏதோ பெரிய சத்தம் கேட்டு அவசரமாகத் திரும்பிப் பார்த்தான்.

சில விநாடிகள் முன்னால் தன்னைக் கடந்து சென்ற கார் சிறிது தூரத்தில் அலங்கோலமாகப் பள்ளத்தில் கவிழ்ந்து கிடக்க... அதனருகில் ஒரு இளம் பெண் ரத்த வெள்ளத்தில் முனகிக் கொண்டிருப்பதைப் பார்த்துப் பதறியடித்துக் கொண்டு அருகில் சென்றான்.



போர்க்கால நடவடிக்கையாக போலீசிற்குத் தகவல் கொடுத்துவிட்டு, அந்தப் பெண்ணைத் தூக்கித் தன் வண்டியில் போட்டுக் கொண்டு மருத்துவ மனையில் சேர்த்த பிறகுதான் மூச்சே வந்தது.

அந்தப் பெண் யார்? அவளின் பெயர் என்ன? என்று அவளைப் பற்றித் தெரிந்து கொள்வதற்காக... அந்தப் பெண்ணின் கைப்பையைச் சோதிக்க... அவளின் விசிட்டிங் கார்டில் சங்கீதா டாட்டர் ஆஃப் மாணிக்கம் என்றிருக்க... அதில் அவளுடைய மொபைல் நம்பர்தான் இருந்தது. மீண்டும் அவள் கைப்பையைக் குடைந்து அவளுடைய மொபைலை எடுத்து அதில் மாணிக்கம் என்ற பெயரில் இருந்த நம்பருக்குக் கால் செய்து விவரத்தைக் கூற... ஹாஸ்பிடலுக்கு ரியாவுடன் பதறியடித்துக் கொண்டு வந்தார்கள்.

அவர்கள் வந்து சேர இரண்டு மணி நேரமாக... அதுவரை அங்கிருந்து செல்லாமல் அவர்களுக்காகக் காத்திருந்தான்.

மகளின் நிலைமையைப் பார்த்து அழுத பாட்டியின் அழுகை எதற்காக என்று புரியாமலே குழந்தையும் அழ... மாதவனுக்கு வேதனையாகிப் போக, குழந்தையை எடுத்துக் கொண்டு வெளியே வந்தான்.

சங்கீதா சீரியசான நிலையில் இருந்ததால்... இப்போதைக்கு எதுவும் சொல்ல முடியாது என்று காலங்காலமாகச் சொல்லி வரும் வசனத்தையே அவளுக்குச் சிகிச்சை பார்த்த மருத்துவரும் வழிமொழிய, பெற்றவர்கள் தளர்ந்து போனார்கள்.

தாங்கள் வருவதற்கு இரண்டு மணி நேரம் ஆனபோதும், அதுவரை காத்திருந்த மாதவனுக்கு நன்றி சொன்னதும்... அவர்கள் எங்கே தங்கியிருக்கிறார்கள் என்று கேட்டு அவர்கள் இருக்கும் இடம் தூரம் என்பதால்... அவர்களின் நிலைமை புரிந்து குழந்தையைக் கவனித்துக் கொள்ளவும், அவர்களுக்கு ஆறுதல் கூறவும், தன் வீட்டிற்குப் போன் செய்து பெற்றோரை வரச் சொல்லிவிட்டு, சுஜிக்கும் போன் செய்து விவரத்தைக் கூறினான்.

அவர்கள் வந்ததும் மாணிக்கம் தம்பதிக்கு ஆறுதல் கூறி மகள் சரியாகும்வரை தங்கள் கூடவே தங்க வைத்துக் கொள்வது என்று முடிவானது. அவனின் மனிதாபிமானத்தையும், பொறுப்பையும் கண்டு தழுதழுத்த குரலில் நன்றி கூற... முறுவலோடு ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு ஆறுதல் கூறினான்.

மஞ்சுவிற்கு ரியாவின் துறுதுறுப்பும், அழகும் அவரைக் கவர்ந்துவிட... அவரின் மடியே ரியாவிற்கு மெத்தையானது. அந்த அளவிற்கு எப்போதுமே அவளைத் தன் கூடவே வைத்துக் கொண்டார்.

சுஜியும் மாணிக்கம் தம்பதிக்கு உதவியாகச் சங்கீதாவைக் கவனித்துக் கொள்ள... இவர்களின் சுயநலமில்லாத அன்பிற்கு அடிமையாகித் தங்கள் செல்ல மகளின் வாழ்க்கையைப் பற்றிக் கூறி, அவளின் மன அமைதிக்காக இங்கே வந்ததைப் பற்றிக் கூற... அங்கிருந்த எல்லோருக்குமே மனதில் கல்லை வைத்த மாதிரி இருந்தது.



தன் மகளின் வாழ்க்கையும், சங்கீதாவின் வாழ்க்கையும் ஒரே மாதிரி இருப்பதை மனதில் குறித்துக் கொண்ட விசாலம், மாதவனை அழைத்து எதையோ சொல்ல... அவனும் தலையாட்டிவிட்டு வெளியே சென்றான்.

ஒரு சில வாரங்களிலே சங்கீதா ஓரளவிற்குக் குணமாகிவிட, எப்படி விபத்து நடந்தது என்று போலீஸ் விசாரணையை மாதவனின் செல்வாக்கால் முடுக்கிவிட்டது.

காலையில் ஆபீஸ் போகும் முன் சங்கீதாவைத் தவறாமல் வந்து பார்த்துப் பேசிவிட்டுச் செல்வதும், அவன் சென்றதும் தாய் தந்தை இருவரும் வருவதும், மாலை நேரத்தில் மஞ்சு ரியாவுடன் வந்து பேசிக் கொண்டிருப்பதும்... அவ்வப்போது சுஜியும் அவளை வந்து கவனித்துக் கொள்வதும் என்றாகிவிட, சங்கீதா முற்றிலும் குணமான பிறகு அவளால் அவர்களைப் பிரிந்து போக முடியாமல் தடுமாறினாள்.

ரத்தினவேல் தம்பதிக்கும் ரியாவைப் பிரிவது முடியாத காரியமாகி விட... ஏற்காட்டை விட்டுப் போகும் வரை மாதவன் வீட்டிலேயே தங்க ஏற்பாடானது.

இதுநாள் வரையிலும் மகனும், கணவரும் எஸ்டேட்டிற்குச் சென்றுவிட்டால் தனிமையில் கழிந்த மஞ்சுவின் வாழ்க்கை... இவர்களின் வருகையால் கலகலப்பாக மாற, சந்தோஷத்தில் மிதந்தார்.

மாதவனும் மாலை வீட்டிற்கு வந்தால் ரியாவுடன் விளையாடுவதும், சங்கீதாவுடன் அரட்டை அடிப்பதுமாக அவன் பொழுதும் ஓடியது.

சங்கீதாவைப் பற்றித் தெரிந்ததிலிருந்து அவளின் அதிரடி முடிவுகளும், துணிச்சலும் அவனைக் கவர்ந்துவிட அவள் மேல் மரியாதை அதிகமானது.

ஒரு நாள் மாலை ஆபீஸ் விட்டு வந்த மாதவன் வீடே வெறிச்சென்று இருப்பதைக் கண்டு தாயிடம் விசாரிக்க... அவர்கள் ஊருக்குப் போய் விட்டார்கள் என்றதும் அவனின் முகம் வாடிப் போக, மஞ்சுவுக்கு உள்ளூர சந்தோஷத்தில் துள்ளியது.

இரண்டு மூன்று நாள் பொறுத்துப் பார்த்தவன் சங்கீதா இல்லாமல் வாழ்க்கையே வெறுத்துப் போன மாதிரி இருக்க... அவளைத் தேடித் திருச்சிக்குச் செல்வ தென்று முடிவு செய்து, தாயிடம் கூற, அவர் வாய்விட்டுச் சிரித்தார்.

தாயின் சிரிப்பிற்கு அர்த்தம் புரியாமல் விழித்தவனிடம், சங்கீதா சுஜியின் வீட்டில் இருக்கும் விஷயத்தைக் கூறி முடிப்பதற்குள் அவன் சிட்டாகப் பறந்து விட்டிருந்தான், சுஜியின் வீட்டிற்கு.

மஞ்சுவிற்கும் மகனின் விருப்பம் சம்மதமே. அதனால் அவனின் தவிப்பும், அவசரமும் அவருக்கு மகிழ்ச்சியையே கொடுத்தது.

சுஜியின் வீட்டிற்குச் சென்றவன் இரண்டு பெண்கள் தவிர, மற்ற எல்லோரும் இருப்பதைக் கண்டு அத்தையிடம் விசாரிக்க... ப்ரஜித்துடன் ஷாப்பிங் சென்றிருப்பதாகச் சொன்னதும் அங்கே விரைந்தான்.



அரட்டையும் சிரிப்புமாக இரு பெண்களும் பேசிக் கொண்டு வர, அதை ரசித்துக் கொண்டே வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தவன்... ஷாப்பிங் மால் வர இரு பெண்களையும் இறக்கி விட்டுவிட்டு வண்டியைப் பார்க் செய்யப் போனான்.

ப்ரஜித் வரட்டும் என்று அதே இடத்தில் நின்றபடி பேசிக் கொண்டிருந்தவர்களைக் கண்டு நான்கு கண்கள் வஞ்சகத்துடன் நோக்கின. அந்தக் கண்களுக்குச் சொந்தக் காரர்கள் யாதவ்வும், தாமரையும்தான்.

அன்று மலைப் பாதையில் சங்கீதாவின் காரை இடித்துப் பள்ளத்தில் தள்ளிவிட்டு சென்றது யாதவ்வின் கார்தான்.

முதலில் சுஜியைத் தேடித்தான் ஏற்காடு வந்தான். அவளைத் தேடிக் கொண்டிருக்கும்போது சங்கீதாவும் ஏற்காடு வந்திருக்கிறாள் என்ற செய்தி தாமரையிடம் வர, அவள் எங்கு தங்குகிறாள்... எங்கு போகிறாள் என்று பணம் கொடுத்துச் சில பேரின் உதவியால் தெரிந்து கொண்டு, சரியாகப் பிளான் செய்து, அவளை மாதவனின் காபி எஸ்டேட் அருகில் அவள் காரை இடித்துத் தள்ளி விட்டுச் சென்றான்.

விழுந்த வேகத்தில் அவள் கதை முடிந்துவிட்டது என்ற குரூரச் சிரிப்புடன் மாதவன் கவனிக்கு முன் தப்பித்தவன்.... இன்னும் சுஜியை மட்டுமே போட்டுத் தள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் அவளை மட்டுமே குறி வைத்திருந்தான்.

அதனால் பல நாள் குறி வைத்து இன்று யாருமில்லாமல் தனியாக வருகிறாள் என்று நினைத்து, அவளைப் பின் தொடர்ந்து வந்த இருவரும் வண்டியிலிருந்து சுஜியுடன் இறங்கிய சங்கீதாவைக் கண்டதும்... ஒருவரை ஒருவர் குழப்பத்துடன் பார்த்துக் கொள்ள... இவள் இன்னும் சாகவில்லையா என்ற வெறிதான் அதிகமாகியது.

பக்கத்தில் யாருமில்லை. இதுவும் நல்ல தருணம்தான். ஒரே கல்லில் இரண்டு மாங்காய். இருவரையும் ஒரே நேரத்தில் பரலோகத்திற்கு அனுப்பிவிட வேண்டியதுதான் என்ற மிக மிக நல்ல எண்ணத்தில் வண்டியின் ஆக்சிலேட்டரை வேகமாக அழுத்தினான்.

தங்களை நோக்கி ஒரு கார் வருவதைக் கூட அறியாமல் இரு பெண்களும் உலகத்தையே மறந்து சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஆனால் காரைப் பார்க் செய்துவிட்டு அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்த ப்ரஜித் கணப்பொழுதில் நிலைமை புரிந்து கொண்டு நாலு கால் பாய்ச்சலில் ஓடி வந்து இருவரையும் கார் வருகிற பாதையிலிருந்து தள்ளிவிட்டான்.

இவர்களைக் குறிவைத்தே வேகமாக வந்த கார் சட்டென்று இருவரும் விலகியதால், தன் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் எதிரே இருந்த கரண்ட் கம்பத்தில் அதே வேகத்துடன் மோத... அந்தச் சத்தம் அந்த இடத்தையே கிடுகிடுக்க வைத்தது.

ஏற்கெனவே ப்ரஜித் தள்ளியதால் என்னவென்று புரியாமல் கீழே விழுந்தவர்களுக்குத் திடீரென்று கேட்ட



பெரும் சத்தமும் அதைத் தொடர்ந்து கேட்ட கூச்சலும் இருவரையுமே நடுநடுங்க வைத்துவிட்டது.

இருவரும் பயத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு எழ... அதற்குள் அங்கு வந்து சேர்ந்த மாதவன்... சங்கீதாவை நோக்கி ஓட, ப்ரஜித் சுஜியிடம் ஓடி வந்தான்.

கண நேரத்தில் அங்கு நடந்த விபரீதத்தைப் புரிந்து கொண்ட இருவருமே பயத்தில் நடுங்கிக் கொண்டிருந்த இரு பெண்களையும் ஆறுதலாக அணைத்துக் கொண்டார்கள். சிறிது நேரத்திலே விபத்து நடந்த இடத்தில் கூட்டம் கூடிவிட... இரு பெண்களையும் அழைத்துக் கொண்டு அங்கே சென்றார்கள்.

விபத்துக்குள்ளான காரில் இருந்தவர்களைப் பார்த்த இரு பெண்களுமே அதிர்ந்து ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அதிலிருந்தது தாமரையும் யாதவ்வும் என்பது தெரிய வந்ததுமே சுஜியின் தேகம் தன்னிச்சையாகப் பயத்தில் நடுங்கியது. அதுவும் தாமரையின் மண்டை உடைந்து ரத்த வெள்ளத்தில் மிதக்க... யாதவ்வின் இரண்டு கால்களும் திறந்திருந்த காரின் கதவில் மாட்டித் துண்டாகிப் போயிருந்ததைப் பார்த்ததும்... சுஜி மயக்கத்தில் ஆழ்ந்தாள்.

பொதுவாகவே விபத்து என்றாலே சுஜிக்குக் கை கால் உதறும். ஆனால் சங்கீதாவோ எதையும் தைரியமாக எதிர்நோக்குபவள் என்பதால் அவளுக்கு யாதவ்வின் கோரமான நிலையைக் கண்டு உள்ளூர ரசிக்கவே செய்தாள்.

ஆனால் அவளுக்குப் பக்கத்தில் இருந்த பெண் யார் என்று தெரியாமல் குழப்பமாக யோசித்துக் கொண்டிருக்கும்போது, மாதவன் அவளைப் பதற்றமாகக் காரில் ஏறச் சொன்னதும்தான் சுஜியின் நிலைமையைக் கவனித்தாள்.

மூவரும் அவளை மருத்துவ மனையில் சேர்த்து விட்டுப் பதட்டத்தோடு வெளியில் காத்திருக்க... அந்த நேரத்தில் ப்ரஜித்தின் வேதனையை எழுத்தில் சொல்லிப் புரியவைக்க முடியாது.

சோர்ந்து போய் அங்கிருந்த சேரில் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்தவனை ஒருவாறாகத் தேற்ற... அதே நேரம் மருத்துவரே நோயாளியைப் பார்க்கலாம் என்று அனுமதி கொடுத்ததும் ப்ரஜித்தை உள்ளே அனுப்பி விட்டு இருவரும் வெளியே காத்திருந்தார்கள்.

சங்கீதாவும் எதையோ யோசித்தபடி அமர்ந்திருப்பதைக் கவனித்தவன் அவளிடம் விசாரிக்க... "அந்த விபத்தில் இறந்த ஒருத்தன் என்னை ஏமாற்றியவன். கூட இருக்கிற அந்தப் பெண் யார் என்று தெரியவில்லை. ஆனால் இவர்களைப் பார்த்து சுஜியும் அதிர்ந்து போனாள். அது ஏன் என்று தெரியவில்லை, மாதவ்..." என, மாதவனுக்கு எல்லாமே தெளிவாகப் புரிய... அதைச் சங்கீதாவுக்கு விளக்கியதும்... அவளுக்கு அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

'இந்த மாதிரி எத்தனை அப்பாவிப் பெண்களை ஏமாற்றினானோ.... அவனுக்குக் கடவுள் சரியான



தண்டனைதான் கொடுத்திருக்கிறார். இரண்டு காலும் இல்லாமல் அனாதையாக ரோட்டில் கிடந்த அவனது நிலை சங்கீதாவிற்குத் திருப்தியைக் கொடுக்க... இனி எங்கள் இருவருக்குமே தொல்லையே இல்லை...' என்ற நினைப்பினூடே தன்னையும் அறியாமல் தன் பக்கத்தில் அமர்ந்திருந்த மாதவனின் கையின் மேல் தன் கையை வைத்தாள்.

சங்கீதாவிடம் காதலைச் சொல்ல ஓடோடி வந்தவன்... அங்கு நடந்த பயங்கரத்தில் தன்னோட ப்ரோபோசலைத் தற்காலிகமாக மறந்திருந்தவன், சங்கீதா அவனின் கையைப் பிடித்ததுமே அவளின் கையோடு தன் கையைக் கோத்துக் கொண்டான்.

மாதவனின் இந்தச் செயலைச் சற்றும் எதிர்பார்க்காத அவள் வியப்பாக அவன் கண்களோடு உறவாட, அவளின் வியப்பிற்குப் பதில் சொல்லும் விதமாகக் கையை மென்மையாக அழுத்தி, "ஐ லவ் யூம்மா..." என, அவள் காதுகளையே அவளால் நம்ப முடியாமல் போனது.

ஏற்கெனவே மாதவனின் அன்பிலும் அரவணைப்பிலும் மனதைப் பறிகொடுத்திருந்தவள்... தன் மோசமான நிலையை எண்ணித் தன் காதலை மனதிற்குள்ளே புதைத்துக் கொண்டாள். ஆனால் இன்று மாதவனே, அவனுடைய காதலை வெளிப்படுத்தவும்... சந்தோஷத்தில் சங்கீதாவின் கண்களில் இருந்து தரதரவெனக் கண்ணீர் வழிய மாதவனின் தோளில் சாய்ந்தாள்.

மயக்கம் தெளிந்து சுஜியுடன் வெளியே வந்த ப்ரஜித், இருவரின் ஏகாந்த நிலையைப் பார்த்துச் சுஜிக்குக் காட்ட... இருவரும் குறும்பு கொப்புளிக்க... சிறிது நேரம் தள்ளி நின்று ரசித்துவிட்டு, புன்னகையுடன் இருவரின் அருகில் வந்து நண்பனுக்குக் கைகொடுத்து வாழ்த்துச் சொல்ல... மாதவன் வெட்கத்தில் சிரித்தான்.

சங்கீதாவிற்கு வெட்கத்தில் இருவரையும் நிமிர்ந்து பார்க்க முடியாமல், மாதவனின் தோளில் முகம் புதைக்க... அதைக் கண்டு சிரித்துக் கொண்டே ஒற்றைப் புருவத்தை வில்லாக வளைத்துச் சுஜியைப் பார்த்ததும்... அவளின் முகமும் நாணத்தில் சிவந்து போக, தத்தம் காதலிகளை ஒரு கையால் அணைத்துக் கொண்டு இரண்டு ஆண் களும் மனம் விட்டுச் சிரித்தார்கள்.